யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 87 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 டிசம்பர் 2024






முன்னர்
எமது தாயகத்துக்கு,
ஆடைகட்டி அழகுபார்க்க வந்தசிலர்,
இருந்த கோமணத்தையும் கொண்டு போயினர்.
பின்னர்,
சத்திரசிகிச்சையே சரியெனச் சொன்னவர்கள்
கத்தரிக்கோலையே களவாடிச் சென்றனர்.
“தம்பி” மட்டும் தளராதிருந்தான்.
தன்னுயிர் தாயக விடுதலையென்றான்.
ஒன்று பத்தாக உயிர்ப்புகள் பிறந்தன.
ஒரு தலைமுறையே உணர்வுகொண்டெழுந்தது.
விடுதலைக்காக...
சக்திக்கு மீறிய விலைகொடுத்துவிட்டோம்.
இன்னும், இன்னும் கொடுப்போம்.
வேலிகட்டிய மண்ணுக்காகவா
இந்த விலைகொடுப்பு?
இல்லை....
விலங்குகளற்று,
கைகள் வீசி நடப்பதற்கும்,
எஜமானர்களின் கட்டளையற்று;
வேலை செய்வதற்கும்,
‘எழும்பு’ என்று யாரும் சொல்லாது
குந்த ஒரு குடிநிலம் வேண்டும்.
அது

## தமிழீழம்.


**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**


























# விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203





# www.sangathamil.ca




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆககவேண்டும்.






# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.ca



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# தமிழீழமெங்கும் விடுதலைக்காய் களமாடிய வீரத்தளபதி பிரிகேடியர் பானு

நீண்ட வரலாற்றையும், காலத்திற் குக்காலம் எழுச்சிகொண்டு அரசாட்சி உரிமையையும் தன்னகத்தே கொண்டுள்ள தமிழினம், தமிழீழத்தில் எழுச்சி கொண்டபோது தாய்மண்ணின் விடுதலைக்காக எழுந்த மாபெரும் விடுதலைப்போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் உறுதியான வழி நடத்தலில் இலக்குத்தவறாத இலட்சியப் பாதையில் முள்ளிவாய்க்கால் வரை பயணித்தது.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராளியாகப் பிறந்தவர் எமது தேசியத் தலைவர். அவரினால் உருவாக்கப்பட்ட போராளிகளில் இணைந்த காலம்முதல் இறுதிவரை பயணித்த தளபதிகளில் பிரிகேடியர் பானு அவர்களும் ஒருவராக விருந்தார்.

உலகில் அடக்கப்பட்டு, அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போர் பற்றிய வரலாறு என்பது காலம் குறித்து எழுதி முடிக்கப்படக்கூடிய ஒன்றல்ல, விரிவாக ஒவ்வொரு கால கட்டத்தையும் வைத்து எழுதப்பட வேண்டிய ஒன்றாகும். தளபதி பானு அவர்களைப் பற்றி எழுதுகின்றபோது, முழு வரலாறும் எழுத வேண்டிய நிலை இருந்தும் இத் தொடரில் அதனை எழுத முடியாது என்பதனால் அவருடைய விடுதலை சார்ந்த சில நிகழ்வுகளை இங்கு பதிவாக வைப்பதற்கு விரும்புகின்றோம். இணைந்த காலம் முதல் இறுதி வரை பயணித்த தளபதிகளில் ஒருவரான பானு அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்றபொழுது மாபெரும் விடுதலை இயக்கத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளிலும் அவருடைய பங்களிப்பு இருந்திருக்கின்றது.

தமிழீழத்தின் யாழ் மண்ணின் பெருமைக்குரிய தளபதிகளில் ஒருவரான பானு அரியாலை என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தபோது 1983ம் ஆண்டு யூலை மாதத்தில் இடம்பெற்ற தமிழின அழிப்பின் கோரத்தைக்கண்டு சினந்தெழுந்த இளைஞர்களில் ஒருவராக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அரியாலை என்கின்ற ஊர் போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்து அழியாத பதிவைக் கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் ஆரம்ப மறைவிடங்களில் ஒன்றாகவும் பதியப்பட்டுள்ளது. மூத்த மாவீரர்களான லெப். சீலன், லெப். கேணல் புலேந்திரன் போன்ற முன்னணிப் போராளிகள் விடுதலைக்கான செயல்பாடுகளுக்காக இங்கு தங்கியிருந்து செயல்பட்டனர்.

யாழ்ப்பணத்தில் ஏனைய பகுதிகளில் தாக்குதல்களை நடத்திய போதும், போராளிகளின் மறைந்த வாழ்விடம் அரியாலையிலும் அமைந்திருந்தது. இந்தவகையில் போராட்ட வரலாற்றில் முக்கிய இடத்தையும் அரியாலை பெற்றுள்ளது. தமிழ்மக்களின் விடுதலைக்காக முழு மூச்சாக எழுந்த மூத்த போராளிகளான லெப்.கேணல் சந்தோசம், தளபதி பொட்டம்மான் போன்றவர்கள் அரியாலை மண்ணில்தான் பிறந்தார்கள் என்பதில் இந்த மண்ணுக்கு மேலும் சிறப்பான ஓர் இடம் வரலாற்றில்



கிடைத்திருக்கின்றது.

இந்தியாவில் விடுதலைப் புலிகளின் இரண்டாவது பாசறையில் படைத்துறைப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட தளபதி பானு மன்னார் மாவட்டத்தளபதி லெப். கேணல் விக்டர் அவர்களின் குழுவில் இணைக்கப்பட்டார். லெப். கேணல் விக்டர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பணியை மேற்கொண்டிருந்த வேளையில் தேசியத் தலைவர் அவரகளின் ஆணையின்படி மன்னார் மாவட்டத் தளபதியாக விக்டர் நியமனம் பெற்றார்.

அந்த வேளையில் தளபதி பானு லெப். கேணல் விக்டர் அவர்களுடன் மன்னார் மாவட்டத்திற்குச் சென்று விடுதலைக்கான பணியை மேற்கொண்டிருந்த வேளையில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கான பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு விவசாயப் பண்ணைகள், நெற்செய்கை, வியாபாரம் சிறு கைத்தொழில் போன்றவைகளை தனது இளம் வயதில் மிகுந்த திட்டமிடலில் மேற்கொண்டு ஏனைய மாவட்டப் போராளிகளுக்கு முன் மாதிரியாகவிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழீழத்தில் யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு - அம்பாறை ஆகிய ஐந்து பெரும்பிரிவுகளுக்கும் பொறுப்பாக தளபதிகள் பணிநியமனம் செய்தபோது மன்னார் மாவட்டத்திற்குத் தளபதியாக லெப். கேணல் விக்டர் பொறுப்பேற்றுக் கொண்டார். தேசியத்தலைவர் அவர்களின் மிகவும் நம்பிக்கைக்குரிய தளபதிகளில் லெப். கேணல் விக்டர் அவர்களும் ஒருவர் என்பதில் மன்னார் மண் பெருமிதம் கொள்ளுகின்றது.

இக் காலத்தில் மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகள் என்றால் அவர்களுக்கு ஒரு அதிரடி அடையாளத்தை பெற்றுக்கொடுத்ததற்கு தளபதி விக்டர் அவர்களின் விடுதலையிலிருந்த பற்றும், தீவிர தாக்குதல் நடவடிக்கைகளும், தேசியத் தலைவர் மீது வைத்திருந்த மதிப்பும் காரணமாக அமைந்திருந்தன. விடுதலை புலிகள் இயக்கத்தின் முதல் லெப். கேணல் என்ற நிலையிலும் தளபதி விக்டர் போராட்ட வரலாற்றில் முக்கிய பதிவாகவும் இடம்பெற்றார்.





தளபதி விக்டர் உடன் களமாடிய பானு அன்று ஒவ்வொரு தாக்குதல்களிலும் விக்டருக்கு பாதுகாப்பு அரணாகவே பங்கெடுப்பார். தளபதி விக்டர் அவர்களைப் பாதுகாப்பதற்காக முன்னேறிய நிலையிலே தனது தாக்குதலை மேற்கொள்ளுவார் என்பதை அக் காலத்தில் போர்ப் பணியிலிருந்த போராளிகள் மூலமாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

தமிழீழத்தில் தாய்த் தமிழகத்துக்கு மிக நெருக்கமாக அமைந்துள்ள மன்னார் தமிழர்களுடைய வரலாற்றில் எல்லோராலும் அறியப்பட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் விளங்குகின்றது. தாய்த் தமிழகத்திற்கும், தமிழீழத்திற்குமான போக்குவரவுத்துறை முகமாக இருக்கவேண்டிய நிலையிலுள்ள மன்னார் பல உலக நாடுகளின் எதிர் பார்ப்பில் எண்ணை வள





முள்ள இடமாகவும் மன்னார் வளைகுடா இருப்பதும், இதற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

லெப். கேணல் விக்டர் அவர்களின் வீரச்சாவினைத் தொடர்ந்து லெப். கேணல் ராதா மன்னார் மாவட்டத் தளபதியாக பணிநியமனம் பெற்றார். இக் காலத்தில் பானு தளபதி ராதா அவர்களின் தலைமையில் நடந்த பல தாக்குதல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

நேர்த்தியான திட்டமிடலிலும், நிருவாகத்திறமையிலும் சிறந்து விளங்கிய தளபதி ராதா தேசியத் தலைவரினால் இனங்காணப்பட்ட மற்றுமொரு சிறந்த தளபதியாகும், விடுதலைப் புலிகளின் ஐந்தாவது பாசறையில் பயிற்றுனராக பணியாற்றிய தளபதி ராதா தேசியத் தலைவரினால் மிகவும் விரும்பப்பட்டவர்களில் ஒருவராகவிருந்தார். மன்னார் மாவட்டத்தில் தளபதி ராதா அவர்களின் தாக்குதல் பணிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மேலும் ஒரு பலமான நிலையை உருவாக்கிக் கொடுத்தன. அமைதியும், ஆற்றலும் நிறைந்த தளபதி ராதா அவர்களிடமிருந்து பல விடயங்களைக் கற்றுக்கொண்ட தளபதி பானு அவர்கள், தளபதி ராதா அவர்கள் யாழ்மாவட்ட தளபதியாக தேசியத் தலைவரால் நியமிக்கப்பட்ட வேளையில் அவருடன் தான் பிறந்த மண்ணுக்கு பயணமானார். அங்கும் தளபதி ராதா அவர்களின் தலைமையில் சிங்கள இராணுவத்தினருக்கெதிரான தாக்குதல்களில் பங்குகொண்டார்.

முகாமுக்குள் முடக்கி வைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவத்தினரின் முன்னேற்ற நடவடிக்கைகளை தளபதி ராதா அவர்களின் தலைமையில் முன்னின்று தடுத்து ராதா அவர்களின் தாக்குதல் போராளிகளில் முதன்மைப் போராளியாக மாறியிருந்தார். யாழ்ப்பாணம் கட்டுவன் என்ற ஊரில் முன்னேறிய சிங்களப் படையினரை தடுத்து தாக்கும் பணியில் நடந்த சண்டையில் போராளிகளை தளத்திற்கு அனுப்பிவிட்டு திரும்பும் வேளையில் தளபதி ராதா தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

வரலாற்றுக் கடமையைச் செய்வதற்காக, வரலாறு உருவாக்கிய தளபதிகள், தங்கள் வீரச்சாவு வரை விழி மூடாது விடுதலைக்காக உழைத்தனர். தங்கள் பாதம் பதிந்த தாய் மண்ணில் இறுதிவரை பயணித்தனர்.

1987ம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினருடனான போர் மூண்டது. தேசியத் தலைவர் அவர்கள் மணலாறு சென்றார். தேசியத் தலைவரின் அழைப்பின் பேரில் மணலாறு சென்ற தளபதி பானு தலைவர் அவர்களின் பாதுகாப்புப் படைப்பிரிவில் பணியாற்றினார். மணலாற்றில் நடந்த பல தாக்குதல்களில் ஈடுபட்டு தலைவர் அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட தளபதிகளில் ஒருவரானார்.

மன்னார் மாவட்டத் தளபதியாக பானு தலைவரின் கட்டளைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார். இக் காலத்தில் மன்னார் மாவட்ட போராளிகள் குழம்பிப் போயிருந்தனர். வழிநடத்தல் ஒழுங்கின்றி சிதறிப் போயிருந்தனர். தளபதி பானு அவர்களின் மன்னார் வருகையைத் தொடர்ந்து மன்னாரில் போர் எழுச்சி மீண்டும் புத்துயிர் பெற்றது. போராளிகளை ஒன்றுபடுத்தினார். புதிய போராளிகளை இணைத்து பயிற்சிப் பாசறையை ஆரம்பித்தார்.

நூற்றுக்கு மேற்பட்டவர்களை போராளிகளாக உருவாக்கி தலைவரின் பாதுகாப்புப் படைப்பிரிவுக்கும் அனுப்பி வைத்தார். பானு அவர்கள் முதலில் தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் விடுதலைக்காக முதல் களமாடிய மன்னார் மாவட்டத்தில் தான் என்பதை நினைவு கூர்வது பொருத்தமானது. ஏனெனில் மன்னார் போராளிகளையும், மக்களையும் மிகவும் நெஞ்சார நேசித்தார். அக்காலத்தில் தான் பிறந்த யாழ் மண்ணை விட மன்னார் மண் தளபதி பானுவுக்கு மிகவும் பரீட்சியமானது.

களத்தில் அனைத்தும் தெரிந்த தளபதியாக பானு காணப்பட்டார். இயக்கத்தின் பாசறைகளில் தேவையான அனைத்து உபகரண அமைப்புக்களையும், மின்சார இணைப்புக்களையும் முன்னின்று செய்து தளபதிக்குரிய முன்மாதிரியை வெளிப்படுத்தினர். தளத்தில், களத்தில் தளபதி பானு தலைசிறந்த போராளியாக தென்பட்டார். ஆரம்ப காலத்தில் நீண்ட காலம் மன்னாரில் பணியாற்றி மன்னார் மக்களின் பாசத்திற்



குரியவரானார்.

மன்னார் மாவட்டத்தின் தெற்குப் புறமாக அமைந்துள்ள வயலும், காடும், கடலும் ஒன்றாக பிணைந்து இருக்கின்ற வட்டமாக முள்ளிக்குளம் இருக்கின்றது.

மன்னார் மாவட்டத் தளபதியாக பானு பணியிலிருந்த வேளையில் இந்தியப் படையினரின் ஆதரவோடு இயங்கிய தமிழ்த் தேசத் துரோகக்கும்பல் (PLOT) முள்ளிக்குளத்தில் தங்கியிருந்தனர். இங்கு 25.11.1984 அன்று யாழ்ப்பாணம் சுழிபுரம் என்னுமிடத்தில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக சென்றிருந்த விடுதலைப் புலிகளான புவி, தேவன், ஈஸ்வரன், சின்னச்சிவா, சிவா, சிவம், சீலன் ஆகியோரை படுகொலை செய்த சங்கிலி தலைமையிலான குழுவினர் தங்கி மேலும் கொலைகள், காசு பறிப்பு கொள்ளை, என்பவற்றில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களை தாக்கியழிப்பதற்காக 1990.01.01 அன்று கடல் வழியாக தரையிறங்கிய விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு தளபதி பானு தலைமை தாங்கியிருந்தார். இத் தாக்குதலில் தேசத்துரோகக் கும்பல் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் 10 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தளபதி பானு விழுப்புண் அடைந்த நிலையில் தேசியத் தலைவர் அவர்களின் ஆணையின்படி தாய்த் தமிழகத்துக்கு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்று குணமடைந்து திரும்பியிருந்தார்.

சுபன் மன்னார் மாவட்ட தளபதியாக பொறுப்பேற்றவுடன் தளபதி பானு அவர்கள் யாழ் மணியம் தோட்டத்தில் தங்கியிருந்த விடுதலைக்கான எதிர்ப்பாளர் குழுவினரை விரட்டியடிக்கும் நோக்கோடு தான் பிறந்த மண்ணில் மீண்டும் கால் பதித்து குறிப்பிட்ட பணியை நிறைவு செய்து 1990ம் ஆண்டு தான் பிறந்த மண்ணின் தளபதியாக தேசியத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

பலம் பொருந்திய அமைப்பாகவும், படைத்துறை விரிவாக்கம் பெற்ற நிலையிலும், நிருவாக்கக் கட்டுமானங்கள் உருவாக்கம் பெற்ற காலத்திலும் மக்கள் போராட்டமாக தேசிய விடுதலைப் போராட்டம் மாற்றியமைக்கப்பட்ட காலத்திலும் தளபதி பானு யாழ் மாவட்டத்தில் தளபதியாக பணியிலிருந்ததனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் யாழ் மாவட்ட செயலகத்தை திறம்பட, சிறப்பாக, தேசியத் தலைவர் பாராட்டுமளவுக்கு செய்து காட்டினார்.

யாழ் மண்ணின் மூலைமுடுக்கெல்லாம் தமிழ்ப் படையின் தேசிய சீருடையில் பவனிவந்த பானு மக்கள், போராளிகள் எல்லோரிடமும் அன்பாகப் பழகி எல்லோருடைய அபிமானத்தையும் பெற்றிருந்தார். படைத்துறையில் நிருவாகச் செயல்பாட்டில் சிறந்து விளங்கியவர், போராளிகள் தங்குகின்ற முகாம்கள், பயிற்சி பெறுகின்ற பாசறைகள், எதிரியை தடுத்து நிறுத்தும் தடை முகாம் அமைப்புக்கள் என்பவற்றில் தனித்திறமையை வெளிக்காட்டி தலைவரின் பலமான தளபதிகளில் ஒருவரானார்.

மூத்த போராளிகளை மதிக்கும் திறன் அவர்களுக்குரிய பணியை பகிர்ந்தளித்து சிறப்பான பயன்பாட்டை பெற்றுக் கொள்ளும் முறை என்பவற்றில் தளபதி பானு அவர்களின் நிருவாகத்திறன் வெளிப்படுத்தப்பட்டதை போராளிகளின் கருத்துக்களிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

யாழ் மாவட்டம், தமிழீழத்தில் மக்கள் தொகை கூடிய மாவட்டமாகும் தமிழர்களின் தனிச் சிறப்புக்கு அடையாளமாகவும், மண்வாசனையோடு தமிழரின் பண்பாடு மேலோங்கிய இடமாகும் இருக்கின்றது ஆனால் இம் மண்ணில் எம்மை ஆண்டாண்டு காலமாக அடிமைநிலையில் வைத்திருந்த அன்னிய ஆதிக்கத்தின் அடையாளமான யாழ் கோட்டை தீவுகளோடு இணைந்ததாக யாழ் தீபகற்பத்தில் அழிக்க முடியாதவாறு அமைக்கப்பட்டிருந்தன. இக் கோட்டை தமிழர்களின் தனித்துவத்தைப் பொறுத்தமட்டில் அவமானச் சின்னமாகும். எம்மை அடக்கி ஒடுக்கியவர்கள் வாழ்ந்த இடமாகவும் இருப்பதனால் தமிழரின் அடிமை வரலாற்றிலிருந்து இது அழிக்கப்படவேண்டும் என்பதுதான் விடுதலை வீரர்களின் நினைவாகவுமிருந்தது.

ஆக்கிரமிப்பு முகமூடியை அகிம்சைப் போர்மூலம் கிழித்தெறிந்த தற்கொடைப் போராளி லெப். கேணல் திலீபன் 1987 ம் ஆண்டு அகிம்சைப் போர் மேடையில் கூறிய கருத்துக்களின் போது இக் கோட்டையைப் பற்றி பின்வருமாறு கூறினார். அன்னியர்கள் மாறி மாறி நிலை கொண்டிருந்த யாழ் கோட்டையில் தமிழரின் தேசியக் கொடியான புலிக்கொடி பறக்கின்ற நாள்,







www.sangathamil.ca



தமிழ் மக்களின் விடுதலையின் ஆரம்ப நாள் என்று குறிப்பிட்டார்.

தீர்க்கதரிசனமாக திலீபன் கூறியவைகள் அமைந்ததுபோல் 1990ம் ஆண்டு யூனி மாதம் யாழ் கோட்டை மீதான தாக்குதல் போர் தொடுக்கப்பட்டது. தேசியத் தலைவர் அவர்களின் திட்டமிடலில், தளபதி பானு அவர்களின் வழிநடத்தலில், மட்டு - அம்பாறைத் தளபதி லெப். கேணல் யோய் அவர்கள் ஆர்.பி.ஜி உந்துகணைத் தாக்குதலைத் தொடுத்து யாழ் கோட்டை அழிப்பிற்கான விடுதலைப்போர் ஆரம்பிக்கப்பட்டது.

உத்வேகத்துடன் போராளிகள் எழுச்சியுடன் தாக்குதலில் ஈடுபட்டனர் தமிழ் மக்களின் குரல்கள் போர்ப் பறையாக மாறி போராளிகளுக்கு புதுத்தென்பைக் கொடுத்தன. 107 நாள்கள் நடந்த கோட்டை அழிப்பிற்கான வரலாற்றுச் சமரைத் தொடந்து அடிமைச் சின்னமான யாழ் கோட்டை 1990ம் ஆண்டு 09ம் மாதம் 26ம் நாள் தமிழர் படையிடம் வீழ்ந்தது, தமிழரின் வீரம் தரணியில் எழுந்தது. விடுதலை ஒளி எங்கும் பரவியது.

தேசியத் தலைவரின் ஆணையில் தளபதி பானு தமிழீழத் தேசியக் கொடியை யாழ் கோட்டையில் ஏற்றி, வரலாற்றுத் தளபதிகளில் ஒருவராக யாழ் மண்ணில் உயர்ந்து நின்றார். அதற்குப் பிறகு யாழ் கோட்டையை அழித்து அகற்றும் பணியை தமிழ் மக்கள் ஆரம்பித்தனர்.

1985ம் ஆண்டு காலப் பகுதியில் கோட்டையில் நிலைகொண்டிருந்த சிங்களப்படை தமிழர் ஊருக்குள் முன்னேறுவதை முதன்முதலில் தடுத்து நிறுத்தி கோட்டைக்குள் முடக்கி வைத்தவர் தளபதி கேணல் கிட்டு, இதே கோட்டையை விடுதலைப் புலிகள் வீழ்த்திக் கைப்பற்றியபோது கோட்டையில் புலிக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டவர் தளபதி பானு என்பது தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் அழிக்கமுடியாத வரலாற்றுப் பதிவாகும்.

தேசியத் தலைவர் அவர்களின் ஆணையின்படி,1991ம் ஆண்டு காலப்பகுதியில் தேசியத் தலைவர் அவர்களின் பாதுகாப்புப் படைப் பிரிவில் பணியிலிருந்த லெப். கேணல் ஜோய், மேஜர் வினோத், லெப். கேணல் விஜயகாந்த் போன்றவர்கள் மட்டு - அம்பாறை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட வேளையில் இவர்களுடைய படைத்துறை ஆலோசகராக தளபதி பானு அவர்களும் உடன் சென்றார்.
இவர்களுடைய வருகையைத் தொடர்ந்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் சிங்கள இராணுவத்தினருக்கெதிரான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. ஒரு நாள் ஒரு சிங்கள இராணுவத்தினன் என்ற ரீதியில் தொடராக சிங்களப் படையினர் அழிக்கப்படுமளவுக்கு தாக்குதல்கள் உக்கிமடைந்தன. தளபதி பானு மட்டக்களப்பு மாவட்டத்தில் 49 மாவடி முன்மாரிக் கோட்டத்தில் (படுவான்கரை பிரதேசம்) என்றழைக்கப்பட்ட தனது விடுதலைப் பணியை தொடந்தார்.

எப்போதும் எங்கும் சிறந்த ஒரு போராளியாக தன்னை நிலை நிறுத்தும் பானு வயலும், வயல் சார்ந்த காடும் அமைந்துள்ள ஊர்களை உள்ளடக்கிய இக் கோட்டத்தில் மக்களோடு மக்களாக, போராளிகள் வேறுபட்டவர்கள் இல்லை, அவர்கள் மக்களிலிருந்து உருவானவர்கள் என்பதற்கமைய வேலைத்திட்டங்களை திட்டமிட்டு மேற்கொண்டார்.

எங்கு சென்றாலும் மக்களுடன் அன்பாகப் பழகி ஆதரவோடு செயல்படும் தளபதி பானுவுக்கு மக்களின் அபிமானம் விரைவில் கிடைத்துவிடும். மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு அம்பாறை என கால்பதித்த இடங்கள் எல்லாம் தமிழ் மக்கள் தங்கள் தோள் கொடுத்து விடுதலைக்கு பலம் கொடுத்தனர். ஒரு போராளியின் புனிதத் தன்மையே மக்கள் பானு அவர்களிடம் கண்டு கொண்டதனால் மக்களினால் மறக்க முடியாத தளபதிகளில் பானு அவர்களும் ஒருவரானார்.

மட்டக்களப்பின் வடபுலத்தில் 46 என அழைக்கப்பட்ட ஆண்டான்குளம் (வாகரை) கோட்டத்திற்கு பானு அவர்களின் அடுத்த பயணம் அமைந்திருந்தது. இயற்கை எழில் கொஞ்சும், மகாவலி கங்கை ஊடறுத்து ஓடுகின்ற, தேனும், பாலும் பழமும் மலிந்து கிடக்கின்ற, ஆறும் கடலும் தொட்டு நிற்கின்ற அழகிய ஊர்கள் அடுத்து, அடுத்ததாக நீண்ட நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ளடங்கியிருக்கின்ற இக்கோட்டம் தமிழரின் பாரம்பரிய தாயகத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஒன்றாகும்.

பானு அவர்கள் ஆண்டான்குளம் கோட்டத்தில் விடுதலைக்கான பணியிலிருந்த போது அவ்வூர்களில் வாழ்ந்த மக்களுடன் மிகுந்த பாசப்பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டார். மிகக் குறுகிய காலத்தில் அம்மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட தளபதிகளில் உள்ளடங்கப்பட்டிருந்தார்.

தமிழரின் பூர்வீகக் குடிகளான இம்மக்கள் தாங்கள் வாழ்ந்த பாரம்பரியத் தாயகப் பூமியை ஆழமாக நேசித்தனர். இதனால் என்றும் இம் மண்ணை விட்டு வெளியேறி வாழ்வதற்கு விருப்பமில்லாமல் இருந்தனர். இம் மக்களின் இவ்வாறான பற்று தளபதி பானு அவர்களை மிகவும் கவர்ந்திருந்தது. இதனால் மக்களோடு மக்களாக இக் கோட்டத்தில் தனது விடுதலைக்கான பணியை மிகவும் மகிழ்ச்சிகரமாக மேற்கொண்டார். தமிழீழத்தில் வளர்ச்சியடைந்த ஊர்கள் பொருண்மிய மேம்பாடடைந்த மக்கள் இருந்த போதும் வாகரையண்டிய ஊர்களில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு ஒன்றித்து தமிழர் பண்பாட்டோடு வாழ்ந்தது, தளபதி பானு அவர்களின் மனதில் உயர்ந்த இடத்தில் இம் மக்களை வைத்து பார்க்கமுடிந்தது.

தனது இறுதிக்காலம் வரையும் இவ்வுறவுகளை எண்ணி தனது போராளி நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டதை குறிப்பிட்ட போராளிகள் மூலமாக அறிய முடிந்தது. போராளி என்பவன் எதற்காக தான் போராளியானான் என்பதைப் பொறுத்து வாழ்க்கை அமைந்து விடுகின்றது. உண்மையான போராளி தான்சார்ந்த இனத்தின் விடுதலையை கையில் எடுத்தபின் இனத்தின் மீது கொண்ட பற்றுக்காரணமாக உறவுகளோடு பிரிக்கமுடியாத உறவினை உணர்த்தும் உன்னதமான போராளியாக தன்னை மாற்றிக் கொள்ளுகின்றான். இறுதி வரை இனப்பற்றோடு வாழ்ந்து தனது இறுதிக்காலத்தை நிறைவு செய்கின்றான். இவ்வாறானவர்களில் ஒருவராகத் தான் தளபதி பானு அவர்களை வரலாற்றில் பதிவு செய்கின்றோம்.

1992ம் ஆண்டு காலப்பகுதில் சிங்கள இராணுவத்தினருக்கான முக்கிய இரண்டு தாக்குதல்களை வாகரை கோட்டத்தில் தங்கியிருந்த தளபதி பானு மிகவும் திட்டமிட்டு, உணர்வுமிக்க போராளிகளுடன் இணைந்து வெற்றிகரமாக மேற்கொண்டார். தமிழீழத்தின் தலைநகர், தமிழரின் பாரம்பரியத்தை, நிலைநிறுத்தி கொண்டிருக்கின்ற, இயற்கைத் துறைமுகத்தோடு இணைந்ததாக தமிழீழத்தின் பெருமையை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் கோட்டத்தில் கல்லாறு என்ற ஊரின் அருகாமையில் சிங்கள இராணுவத்தினரை வழிமறித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும், போர்க் கருவிகளும் கைப்பற்றப்பட்டன. போராளிகளும் வீரச் சாவடைந்தனர்.

அடுத்த தாக்குதல் நாவலடி வெருகல் நெடுஞ்சாலையில் பால் சேனை என்ற கடற்கரை ஊரில் குறுகியகால இடைவெளியில் போராளிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, பானு அவர்களின் கட்டளையில் வீரத்துடன் எழுந்த விடுதலைப் புலிப்போராளிகள் ஏழு மைல்களுக்கு அப்பால் அமைந்திருந்த வாகரை சிங்களப் படைமுகாம் வரை படையினரை விரட்டியடித்தனர். தமிழர் படை சீற்றத்தால் சிங்களப் படை சிதறி ஓடிய வரலாற்று நிகழ்வை எமது தாய் மண்ணில் அன்று நாம் பார்த்தோம்.

வன்னியிலிருந்து கடல் வழியாக வந்த விடுதலைப் புலிப் போராளிகள் அதிகாலை வேளை தரையிறங்கி பால்சேனைக் கடற்கரையில் இருந்தபோது வாகரை ஊரில் நிலை கொண்டிருந்த சிங்கள இராணுவத்தினர் நடு இரவு நேரத்திலிருந்து முன்னேறி




குறிப்பிட்ட கடற்கரையில் போராளிகள் மீது தாக்குதல் நடத்திய வேளையில் தளபதி பானு அவர்கள் கதிரவெளி ஊரையண்டிய காட்டுப்பகுதியில் போராளிகளின் தளத்தில் தங்கியிருந்தார்.

செய்தியறிந்து படையணியுடன் குறித்த இடம் விரைந்து சிங்கள இராணுவத்தினர் மீது ஓட ஓட விரட்டியடித்து வாகரை வரை தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலில் 20க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு போர்க் கருவிகளும் கைப்பற்றப்பட்டன. லெப். கேணல் பாலேந்திரா உட்பட்ட முன்னணி இளந் தளபதிகள், தளபதி பானு அவர்களுக்கு துணையாக நின்று களமாடினர்.

மடடக்களப்பு மண்ணில், மண்ணின் வாசனையோடு, மக்களோடு ஒன்றித்து, உறவாடி விடுதலைக்காய் களமாடிய தளபதி பானு தேசியத் தலைவரின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு - அம்பாறை படையணி வட தமிழீழம் சென்ற போது அவர்களோடு இணைந்ததாக மீண்டும் யாழ் மண்ணில் கால் ஊன்றினார்.

மட்டக்களப்பு மக்களையும் போராளிகளையும் அன்பாக நேசித்தவர் அந்தப் போராளிகளோடு இணைந்திருந்து யாழ் மண்ணில் போர் நடவடிக்கையில் ஈடுபட விரும்பி தேசியத் தலைவர் அவர்களுக்கு விரிவான கடிதமொன்றை அனுப்பி இருந்தார். மக்களையும், அவர்களுடைய இனப்பற்று, விடுதலைப்பற்று, மண்பற்று போராளிகளின் தன்னலமற்ற தமிழீழத் தாய் நாட்டுப் பற்று என்பவற்றையும், வயலோடு சார்ந்த ஊர்களில் வாழ்கின்றமக்களின் வாழ்க்கைத் தரம் பற்றியும் தனது மடலில் குறிப்பிட்டியிருந்தார்.

ஒரு சிறந்த போராளியின் எண்ணங்களில் நிறைந்திருக்க வேண்டிய மக்களின் விடுதலை சார்ந்த அனைத்தும் தளபதி பானு அவர்களிடம் இருந்ததை தலைவர் அவர்கள் உள்வாங்கி மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட படையணியோடு செயலாற்ற அனுமதித்தார். போராளிகளோடு, போராளியாக இருந்து அவர்களுக்கான வசதிகளை மேம் படுத்தி மிகவும் தீவிரமாக படையணி மாற்றமடைவதற்கும், எதிர் காலத்தில் சாதிப்பதற்கும் பானு அவர்கள் காரணமாக விருந்தார் என்பதை மாவட்ட போராளிகள் கூறக்கேட்டிருக்கின்றோம்.

எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு இனத்திலும் விடுதலைப் போராட்ட காலத்தில் நடத்தப்படாத சமர்கள் தமிழீழத்தில் நடந்தேறியுள்ளன. இந்த வகையில் தமிழீழத்தில் முதல் யாழ் கோட்டைத்தளம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த வரலாற்றுச் சமரைத் தொடர்ந்து 1991.11.12 அன்று ஆகாயம், கடல் வெளிச்சமர் ஆனையிறவில் எமது தேசியவிடுதலை இயக்கத்தினால் மேற்கொள்ளபட்டது. அடுத்தசமர் வட தமிழீழத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த எமது வரலாற்றை நிலை நிறுத்துகின்ற பூநகரி சிங்களப்படைத்தளம் மீது மேற் கொள்ளப்பட்டது.

இந்த வரலாற்றுச்சமருக்கு “தவளைப் பாய்ச்சல்” எனத் தேசியத் தலைவரால் பெயர் சூட்டப்பட்டது. இச் சமரில் தமிழீழத்தில் எல்லாப் பகுதிகளிலிருந்தும் படையணிகள் வரவழைக்கப்பட்டிருந்தன. மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட பெரியதோர் படையணி, மன்னார் படையணி, மணலாறு படையணி, யாழ்ப் படையணி, வன்னிப் படையணி, மகளிர் படையணி, இதனோடு இணைந்ததாக கடல் புலிகள் மற்றும் பின்தள வேலைகளுக்காக அரசியல் போராளிகள், நிதித்துறைப் போராளிகள் என அனைவரும் அணிதிரண்டு தேசியத் தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலில் தளபதி பொட்டம்மான் அவர்களின் ஒருங்கிணைப்பில், கடல் புலிகளை தளபதி சூசை வழிநடத்த, தரைப்





புலிகளை தளபதி சொர்ணம் வழி நடத்த, முன்னணித் தளபதிகள் இணைப்புடன் இச்சமர் வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டது.
மடக்களப்பு - அம்பாறை பெரியதோர் படையணியின் நிருவாக ஒழுங்கமைப்பை மேற் கொண்டவாறு தளபதி பானு தாக்குதல் நடவடிக்கைகளில் முழு வீச்சாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இச் சமரின் மூலம் மரபுவழிப் போர் முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு படி மேலுயுயர்ந்து தமிழரின் போர் ஆற்றலுக்கு ஒரு முகவரியை உலகத்தில் பதிவு செய்தனர்.

இச் சமரில் பங்கெடுத்த ஒவ்வொரு தளபதியும் தலைவரினால் போரியலில் வார்த்தெடுக்கப்பட்ட வல்லமையுள்ளவர்களாக இருந்தனர். இச் சமரில் களமாடிய மணலாற்று மாவட்டத் தளபதி லெப். கேணல் அன்பு, லெப். கேணல் குணா உட்பட பல போராளிகள் வீரச்சாவடைந்தனர். பெறுமதி மிக்க போர் உபகரணங்கள் உட்பட போர்க் கருவிகள் தமிழர் மண்ணில் ஆக்கிரமிப்புப் படையாக நிலை கொண்டிருந்த சிங்களப் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

இச்சமரினைத் தொடர்ந்து தளபதி பானு தேசியத் தலைவர் அவர்களினால் படைத்துறை அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது படைத்துறை அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரி தேசியத் தலைவரால், ஆரம்பிக்கப்பட்டபோது அதன் பொறுப்பாளராக லெப். கேணல் ராஜன் நியமிக்கப்பட்டார்.

தேசியத் தலைவரின் மிகவும் நம்பிக்கைக்குரிய தளபதியாகவும், இயக்கத்தின் மீதும் விடுதலையின் மீதும் அளவற்ற பற்று வைத்திருந்த லெப். கேணல் ராஜன் படைத்துறை அதிகாரிகளாக போராளிகளை பயிற்றுவிப்பதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டது பொருத்தமான ஒன்றாக அன்று கருதப்பட்டது. நிருவாகத்திலும், திட்டமிடலிலும் அதிக ஆற்றலை தேசியத் தலைவரினால் பெற்றுக்கொண்ட தளபதி பானு சிறந்த முறையில் அப்பணியை நிறைவு செய்து ஆற்றல் மிக்க இளந் தளபதிகளை போர்க் களத்திற்குப் பெற்றுக்கொடுத்தார்.

யாழ் தீபகற்பத்துடன் இணைக்கப்பட்டதாக தீவுகள் பல அமைந்ததுதான் யாழ் மாவட்டம். பாக்கு நீரிணைக்குள் அமைந்துள்ள இத்தீவுகள் பார்பதற்கு மிக அழகாக காட்சியளித்து தமிழீழத்தின் இயற்கை வனப்புக்கு மேலும் சிறப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. சிங்களத்தின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுக் கிடக்கும் இத் தீவுகளில் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்ந்ததாக இன்றைய வரலாறு சொல்லவில்லை. தமிழீழத்தின் பிற பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டபோதும் இத் தீவுகள் சிங்களத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருந்துவந்தன.

யாழ் கோட்டையை தொட்டதான நிலையில் அமைத்திருக்கின்ற மண்டைதீவில் தமிழர் வாழ்விடத்தில் சிங்களத்தின் படைத்தளமொன்று சிங்களக் கடல்படையின் உதவியோடு அமைக்கப்பட்டு இத் தீவு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. யாழ் கோட்டையைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் அடுத்த இலக்கில் மண்டைதீவு சிங்களப் படைத்தளம் வீழ்த்தப்படுவதன் மூலம் தீவுகளை படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்று விடுதலைப் புலிகளின் எதிர்கால எண்ணமாகவிருந்தது.

படைத்துறை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி தளபதியாக பானு பணியிலிருந்த வேளையில் தேசியத்தலைவரின் நெறிப்படுத்தலில் தளபதி சொர்ணம், தளபதி சூசை ஆகியோரின் இணைப்புடன் தளபதி பானு அவர்களின் கட்டளையில் 1995.06.28 அன்று அதிகாலை வேளையில் மண்டைதீவு படைத்தளம் கடற்புலிகளின் உதவியோடு தாக்கியளிக்கப்பட்டது. இத் தாக்குதலில் கடல் புலிகளின் அதிரடிப் பிரிவு ஒன்றுக்கு லெப். கேணல் சூட்டி தலைமையேற்றிருந்தார். கடல் புலிகளின் தளபதி சூசை அவர்கள் இந்த அதிரடித் தாக்குதலுக்குரிய ஆலோசனைகளை வழங்கியிருந்தார். படைக்கருவிகள் பல அள்ளப்பட்ட இத் தாக்குதல் வெற்றிகரமாக அமைந்தபோதும் இத் தாக்குதலில் லெப். கேணல் சூட்டி உட்பட எட்டு போராளிகள் வீரச் சாவடைந்தனர்.

ஒவ்வொரு தாக்குதலிலும், தனிமுகவரி ஒன்றைப் பதிவு செய்த தளபதி பானு தேசியத் தலைவர் அவர்களுக்குப் பக்கபலமாகவும், தமிழரின் படைத்துறை விரிவாக்கத்துக்கு வலுச்சேர்த்தவராகவும் தனது விடுதலைப் பயணத்தைத் தொடந்தார். வரலாற்றில் இடம்பெற வேண்டுமென்றால் வரலாறு படைக்க வேண்டும். இவ்வாறு வரலாறு படைத்தவர்கள்தான் எமது வீரமிகு தளபதிகள் என்பதுவும் அழிக்க முடியாத வரலாற்றுப் பதிவாகும்.

வன்னிப் பெரு நிலத்தை நோக்கிய சிங்களப்படையின் ஜெயசிக்குரு தாக்குதலின் எதிர் சமரின்போது தலைவரின் ஒழுங்கமைப்புக்கு ஏற்றவாறு கிட்டு பிரங்கி படையணி உருவாக்கப்பட்டு அதற்கு பொறுப்பான தளபதியாக பானு அவர்கள்



களத்தில் பணியாற்றினார். ஒவ்வொரு பணியிலும், உயர்ந்த நிலையில் சிறப்பாக செயலாற்றிய தளபதி பானு தமிழீழமெங்கும் களமாடிய காவிய நாயகர்களில் ஒருவராக தமிழர் வரலாற்றின் சிறப்பு மிக்க போர்க் காவிய படைப்புகளில் பதிவாகியுள்ளார்.

எமது தேசியத் தலைவர் சமர்களுக்கும், தொடர் போர்களுக்கும் பெயர் சூட்டும் போது அதற்குள் பொதிந்துள்ள அர்த்தம் ஆயிரம் பலத்தை போராளிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும். தமிழனின் பெருமையை தமிழோடு பறைசாற்றும், இந்தவகையில் ஆகாயம் கடல் வெளிச்சமர், புலிப் பாய்ச்சல், தவளைப் பாய்ச்சல், இதய பூமி, ஓயாத அலைகள் 1,2, 3 போன்றவைகளை குறிப்பாகச் சொல்ல முடியும் ஓயாத அலைகள் 3ன் ஒரு கட்டத்தின் போது கட்டளைத் தளபதியாக தேசியத் தலைவரால் நியமிக்கப்பட்ட தளபதி பானு தேசியத் தலைவரின் நெறிப்படுத்தலில், 40 ஆண்டுகளைக் கடந்தும் சிங்கள ஆக்கிரமிப்புக்குள் இருந்த ஆனையிறவு மண்ணை போராளிகளுடன் இணைந்து களமாடி, மீட்டெடுத்து சாதனை படைத்தார். பல போராளிகள் சிந்திய செங்குருதியினால் நனைந்து சிவந்து கிடந்த மண்ணை மீட்டெடுத்த தளபதி பானு ஒவ்வொரு வரலாற்று நிகழ்வுகளிலும் ஒவ்வொரு வரலாற்றைப் பதிவு செய்தார்.

தமிழீழத்தின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த ஆனையிறவு ஆக்கிரமிப்புத்தளம் எமது நிலத் தொடர்பை மறித்து வைத்திருந்தது. இத்தளம் கைப்பற்றப்பட்டதிலிருந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மிகப் பெரிய வரலாற்று வெற்றியை எமது தேசிய விடுதலை இயக்கம் பெற்றிருந்தது.

2000.04.02ம் நாள் அன்று ஓயாத அலைகள் மூன்றின் வெற்றிநாளாக அமைந்தது. ஆனையிறவு மீட்கப்பட்டு எமது தேசியக் கொடியை தளபதி பானு ஏற்றிவைத்தார். எண்ணற்ற எமது போராளிகளின் அர்பணிப்புக்களுக்கு மத்தியில் 19ம் நூற்றாண்டின் இறுதியில் தமிழரின் இழந்த தாயாக மீட்பில் இன்னோர் அத்தியாயத்தை எமது தேசிய விடுதலை இயக்கம் உருவாக்கியது.

யாழ் கோட்டையைக் கைப்பற்றி புலிக்கொடியை ஏற்றியவன். ஆனையிறவுச் சமரில் பல ஆண்டு காலம் சிங்களவன் காலில் மிதிபட்டுக் கிடந்த தமிழீழ மண்ணை மீட்டெடுத்து புலிக் கொடியை ஏற்றினான். இவன் சாதனை வீரன், எமது முப்பாட்டன் சோழனின் தளபதிகள் போல் காலம் எமக்குத் தந்த தலைவன் கரிகாலன் தளபதிகளில் ஒருவன் தளபதி பானு எமது வரலாற்றை எம்மால் நினைத்துப் பார்க்க வைத்தவர்களில் ஒருவர் என்பது எமது விடுதலை வரலாற்றில் பதிவான ஒன்றாகும்.

2001ம் ஆண்டு நான்காம் மாதம் 25ம், 26ம், 27ம் நாட்கள் தீச்சுவாலை முறியடிப்புச் சமரை முன்னின்று எதிர்கொண்ட தளபதிகளில் பானு அவர்களும் களமிறங்கினார். போராளிகளின் முன்னேறிய பாய்ச்சல் எதிரியை புறமுதுகிட்டு ஓட வைத்தன. மீட்கப்படும் தமிழர் நிலங்களில் புலிக்கொடியை ஏற்றி, பறக்கவிடும் தளபதியாக பானு அவர்களை வரலாறு எமக்கு ஏற்படுத்தித் தந்தது.

என்றும் பழைய நினைவுகளோடு தான் நேசித்த இடங்களையும், மக்களையும் நினைவு கூருவது இறுதிவரை பானுவிடம் காணப்பட்ட பற்றோடு அமைந்த குணங்களில் ஒன்றாகவிருந்தது.

2004ம் ஆண்டு காலப் பகுதியில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் சிறப்பு தளபதியாக பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் ஆழிப் பேரலையின் அனத்தத்தினால் மட்டக்களப்பு கடற்கரை ஊர்கள் மிகவும் பாதிப்புக்கு உட்பட்டிருந்தது. தளபதி பானு தனது பாதுகாப்பையும் கருத்தில் கொள்ளாது போராளிகளுடன் இணைந்து மக்களுக்கான சேவைகளை தன்னால் இயன்ற வரை செய்து அந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கையிலும், சிதைந்து போன பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் முன்னின்று பணியாற்றினார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் வாகரை கோட்டத்தில் பானு அவர்கள் பணியிலிருந்த வேளையில் மக்களோடு பழகிய நினைவுகளை பகிர்ந்து கொள்ளும்போது கண்கள் பனிக்க கதை சொல்வதை போராளிகள் எம்மிடம் கூறக்கேட்டிருக்கின்றோம். அங்கு இருந்த போது தான் பாவித்த சவர்காரப் பெட்டியை உடைந்த போதும் காலம் கடந்தும் நினைவுக்காக பாதுகாத்து வைத்திருந்ததை போராளி ஒருவர் எம்மிடம் கூறிய போது அந்த மண்ணையும், மக்களையும் இறுதிவரை அவரால் மறக்க முடியவில்லை என்பதற்கு அடையாளம்தான் இந்த பெட்டி என்றார்.

உண்மையான ஒரு போராளிக்கு உணர்வான உறுதியான மக்களை என்றும் மறக்கமுடியாது என்பதற்கு தளபதி பானு அவர்கள் ஒரு உதரணமாகும். இதே போல் இன்றும் அம் மக்கள் தளபதி பானு அவர்களை நினைவு கூர்ந்து கதைப்பதை எண்ணி எமது மனம் நிறைவாக இருக்கின்றது. உண்மையான போராளிகளை மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள்.

தமிழீழத்தின் இதய பூமியில் தனியரசு அமைத்து தமிழர்கள் தங்களை ஆட்சி செய்து வாழ்ந்த வேளையில் உலகத்தின் சில நாடுகளின் உதவியோடு தமிழீழ மண்ணை முழுமையாக ஆக்கிரமிக்க சிங்கள அரசு தொடுத்த போரை மன்னார் பகுதியில் தடுத்து களமாடிய பானு இரண்டு வருடங்களாக நடந்த வரலாற்றுப் போரில் களமாடி எதிரியை அழித்தொழிப்பதில் முன்னணி தளபதிகளுடன், தலைவரின் வழிநடத்தலில் முள்ளிவாய்க்கால் வரைத் தொடந்தார். சிங்கள அரசின் தகவலின்படி 40 ஆயிரத்திக்கு மேற்பட்ட சிங்கள இராணுவத்தினரை இழந்து தமிழர் தாயகத்தை முழுமையாக ஆக்கிரமித்த சிங்கள அரசின் உண்மையான தமிழின அழிப்பு நடவடிக்கையை உலகத்திற்கு வெளிப்படுத்து வண்ணமாக இப்போர் அமைந்திருந்தது.

சில நாட்டின் ஆதரவோடும், படைக்கல விநியோகத்தோடும் தமிழீழ மண் இறங்கிய சிங்கள ஆக்கிரமிப்புப் படையை எந்த நாட்டின் ஆதரவு மில்லாமல், நீண்ட காலம் எதிர்த்துக் களமாடிய முதல் விடுதலை இயக்கம் என்ற வரலாற்றுப் பெருமையையும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் பெற்று தமிழரின் வரலாற்றில் உயர்ந்து நிற்கின்றார்கள்.

தளபதி பானு இறுதிக்களமாடிய முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற பழந்தமிழ் வரலாற்று ஊர். இக்காலத்தில் எழுச்சி கொண்ட தமிழினம் தாய்நாட்டை மீட்டெடுக்கும் புனிதப்போரில் இறுதிப்போர் கண்ட வரலாற்று மண், இந்தமண்ணில் சிங்கள எதிரியின் படைகள் சிதறடிக்கப்பட்டு, முற்றாக அழிக்கப்பட்ட சிறப்பான வரலாற்றுச் சமரைச் சந்தித்த எமது மூதாதையர்கள் குடிகொண்டிருந்த முல்லை மண்ணின் கடற்கரை ஊர். சோழன் கொண்டகப்பல்படை தேசியத் தலைவர் பிரபாகரன் கண்ட கடல் புலிகள் ஆண்ட எங்கள் கடலின் ஓரத்தில் அமைந்துள்ள சிவந்த மண்.

எமது தளபதிகள் நிமிர்ந்து நின்று, நேருக்குநேர், எதிரியுடன் களமாடி நிமிர்ந்து விழ்ந்து தமிழரின் புறநானுற்று வீரத்தை மீண்டும் நினைவுபடுத்திய தமிழரின் பாரம்பரியமண். தமிழ் உறவுகள் அழிக்கப்பட்டு, சிந்திய செங்குருதியால் நனைந்த மண். இந்த மண்ணில் எமது வீரத்தளபதி பிரிகேடியர் பானு அவர்களும் களமாடி விழ்ந்தார்.

நிமிர்ந்து நெஞ்சினை உயர்த்தி தாய்மண்ணின் வீரத்தை சிங்களத்திற்கும், உலகத்திற்கும் தெரியப்படுத்தினார். தமிழர்கள் கோழைகள் அல்ல, வீரம் செறிந்தவர்கள், என்பதை ஒவ்வொரு தமிழனையும் உணரவைத்தனர்.

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைகளுக்கு செயல்பாட்டு வடிவம் கொடுத்த தளபதிகளில் பானு அவர்களும் ஒருவராகவுள்ளார். தேசியத் தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலில் தளபதி பானு கண்ட களங்கள், வீரமிகு தாக்குதல்கள், சாதனை மிகுந்த செயல்பாடுகள் என அடுக்கிக்கொண்டே போகமுடியும். ஏனெனில் முள்ளிவாய்க்கால்வரை தனது விடுதலைக்கான பயணத்தைத் தொடர்ந்த தளபதி பானு தமிழர்களின் வரலாற்றில் வீரமிகு தளபதிகளில் ஒருவராக என்றும் தமிழர்களின் வாழ்க்கை வட்டத்தில் வலம் வந்து கொண்டிருப்பார்.

தளபதி பானு அவர்களை பெற்றதிலிருந்து பெற்றோர்கள் பெருமை கொள்ளுகின்றனர். இவரை பெற்றதிலிருந்து யாழ் அரியாலைமண் போராட்டவரலாற்றில் மேலும் சிறப்பான இடத்தில் உயர்ந்து நிற்கின்றது. தமிழீழத்தில் விடுதலைப் பற்றோடு வாழ்கின்ற மக்களின் நெஞ்சங்களில் இவருடைய நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

நினைவுப்பகிர்வு:- என்றும் எழுகதிர்.







**முள்ளிவாய்க்கால் முடிவல்ல அது ஒரு தொடக்கம்!**




# தமிழீழம் எங்கும் மாவீரர் நாள் மிகவும் எழுச்சிகரமாகவும், உணர்வுபூர்வமாகவும், கொட்டும் மழைக்கும் மத்தியில் நினைவேந்தப்பட்டது!

27.11. 2024



தமிழீழ நிலப்பரப்பு எங்கும் மாவீரர் நாள் மிகவும் எழுச்சிபூர்வமாகவும், உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நினைவுகூரப்பட்டது.

நாடளாவிய ரீதியில் சீரற்ற வானிலை நிலவுகின்றபோதிலும் கொட்டும் மழைக்கும் மத்தியில் மிகவும் எழுச்சிபூர்வமாக இடம்பெற்றது.

தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வருடந் தோறும் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவுகூரப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த வருடமும் மாவீரர் நாள் நினைவேந்தல் நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் நினைவுகூரப் படுகின்றது..

## முல்லைத்தீவு

**முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில்...**





முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தினர்.

அந்தவகையில் முள்ளிவாய்க்கால் துயிலுமில்ல வளாகத்தில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடர் மாவீரரின் தாயாரான வள்ளிபுரம் புஷ்பமலரினால் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலிபரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்ததுடன் பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு அஞ்சலியினை செலுத்தி இருந்தனர்.

## யாழ்ப்பாணம்

**கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில்...**





மாவீரர் தின நிகழ்வு யாழ்ப்பாணம் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று (27) மாலை இடம் பெற்றது.

பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தந்தை கந்தசாமி ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஏனைய தீபங்கள் ஏற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தி மலர் தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

## வவுனியா

**வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில்...**





வவுனியா ஈச்சங்குளத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள் இன்று இடம்பெற்றது.

இதன்போது பிரதான ஈகைச்சுடர் இரண்டு மாவீரர்களின் தாயாரான பாக்கியத்தினால் ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டன.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள நிலையில் அதற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் குறித்த மாவீரர்தின நிகழ்வு நினைவுகூரப்பட்டது.

கடும் மழைக்கு மத்தியிலும் ஆயிரணக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்டு தமது உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தியிருந்தனர்.

**வவுனியா நகரசபை மண்டபத்தில் மாவீரர் நாள்...**

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினால் மாவீரர் தின நினைவேந்தல் இன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.





இதன்போது மாவீரர்களின் தாயார் இருவரினால் ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் மாவீரர்களின் நினைவுருவ படத்திற்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

## கிளிநொச்சி

**சமத்துவக் கட்சி அலுவலகத்தில் மாவீரர் நாள்...**





2024 மாவீரர் நாள் நிகழ்வை முன்னிட்டு கிளிநொச்சி சமத்துவக் கட்சி அலுவலகத்தில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களால் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் போராளி வேங்கை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர்களின் கப்டன் சிவரூபன், விரவேங்கை சிவரூபன், விரவேங்கை இளமயில் ஆகியோரின் தாயார் நடராசா சீலாவதி பொதுச் சுடரினை ஏற்றி வைத்தார்.

ஏனைய ஈகை சுடர்கள் மாவீரர் இரண்டாம் லெப்டினன் பாபுவின் தந்தை இராமையாவும் கப்டன் வண்ணனின் தந்தை விஜயசேகரமும் ஏற்றி வைத்தனர் இதனை தொடர்ந்து மலர் மாலையை முன்னால் போராளிகளான வேந்தன் மற்றும் பாலன் அவர்கியோர்கள் அணிவித்தனர். தொடர்ந்து ஏனைய சுடர்களும், மலர் வணக்கம் இடம்பெற்றது.

### மட்டக்களப்பு

**மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில்...**



தமிழர்கள் இந்த நாட்டில் சுயநிர்ணய உரிமையுடன் ஏனைய இனங்கள்போன்று சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக தன்னுயிர்களை ஈகம் செய்த விடுதலை வீரர்களை நினைவு கூரும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் கொட்டும் மழையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வுபூர்வமாக நரடைபெற்றது.

மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வ



மாக நடைபெற்றது.

பெருமளவான மாவீரர்களின் உறவினர்களின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சரியாக 6.10 மணியளவில் பிரதான சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் இசை இசைக்கப்பட்டதுடன் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

**மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில்...**







மாவீரர் நினைவு நாள் இன்றயதினம் தமிழர் தயாகத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் மிகவும் உணர்வுபூர்வமான முறையில் நடைபெற்றன.

தற்போது நிலவி வருகின்ற வெள்ள அனர்த்த நிலமைக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள், உள்ளிட்ட பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு ஈகைச் சுடர் ஏற்றி அக வணக்கம் செலுத்தினர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் அதிகளவான மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டு மலர் வணக்கம் செலுத்தினர்.

மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் 2ஆம் லெப்பினட் தங்க நிலா என்பவரின் தாயார் கிருஷ்ணபிள்ளை புண்ணியவதி பொதுச்சுடர் ஏற்றினார். தொடர்ந்து இரண்டாயித்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் மாவீர்ரகளின் பெற்றோர் கலந்துகொண்டு தீபங்களை ஏற்றி மலர் வணக்கம் செய்தனர்.

# வல்வெட்டித்துறை தீருவிலில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வு!





**இந்த உலகில் அநீதியும் அடிமைதனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...ஒளிப்படப் பதிவுகள்!


## முல்லைத்தீவு தேராவில் மாவீரர் துயிலுமில்லம்




## மட்டு. தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம்




## முல்லை. முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வு!




# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...ஒளிப்படப் பதிவுகள்!

## வடமராட்சி உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம்





## மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம்





## அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம்





# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...ஒளிப்படப் பதிவுகள்!

## மன்னார் ஆள்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம்




## வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம்




## வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம்




## திருமலை ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம்




# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...ஒளிப்படப் பதிவுகள்!

## முல்லைத்தீவு தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லம்





## யாழ். கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்





## யாழ். தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லம்





## மட்டக்களப்பு வாகரை மாவீரர் துயிலுமில்லம்





# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...ஒளிப்படப் பதிவுகள்!

## முல்லைத்தீவு இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லம்





## கிளிநொச்சி கனகபுரத்தில் மாவீரர் துயிலுமில்லம்







## யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வு!




**விடுதலைப் புலிகள் மக்களிலிருந்து வேறுவட்டவர்கள் அல்ல.**
**விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம்.**
**புலிகள் தான் மக்கள் மக்கள்தான் புலிகள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...ஒளிப்படப் பதிவுகள்!

## முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்





## முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் மேற்கு மாவீரர் துயிலுமில்லம்




**சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம், பொருளாதார வாழ்வில் தன் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் அத்தகைய இனத்தால்தான் சுதந்திரத்தை அனுபவிக்க இயலுமென்பது நியதியாகும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# தென் தமிழீழம் மட்டக்களப்பில் வெள்ளத்தால் 15 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு!

28.11. 2024



மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழக்கிழமையும் (28) மழை சற்ற ஓய்ந்துள்ள நிலையில் மாவட்டத்தின் பிரதான தரை வழிப்போக்குவரத்துக்கள் தற்போது வரையிலும் முற்றாகத் தடைப்பட்டுள்ளன. இதனால் மாவட்ட மக்களின் இயல்பு வாழ்வில் தழம்பல் ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

மண்டூர் – குருமண்வெளி படகுப்பாதை, அம்பிளாந்துறை குரக்கள்மடம் படகுப்பாதைப் போக்குவரத்துக்கள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன.

பட்டிருப்பு பெரியபோரதீவு பிரதான வீதி, மண்முனை கொக்கட்டிச்சோலை பிரதான வீதி, வவுணதீவு மட்டக்களப்பு நகர் பிரதான வீதி, உள்ளிட்ட பிரதான வீதிகளை ஊடறுத்து வெள்ள நீர் பாய்ந்துவருவதானல் அவ்வீதிகளுடனான தரைவழிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

எனினும் மிக அவசரத் தேவைகளுக்காக மாத்திரம் ஒருசில இயந்திரப் படகுகள் சேவையிலீடுபடுவதையும், உழவு இயந்திரங்களில் மக்கள் பயணம் செய்து நகர்புறங்களுக்கு சென்றுதமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதையும் காண முடிகின்றது.

இந்நிலையில் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தினால் 15900 குடும்பங்களைச் சேர்ந்த 49123 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவற்றில் 11890 குடும்பங்களைச் சேர்ந்த 37541 பேர் நணபர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். தற்போது வரையில் 56 பொது இடங்களில் 2558 குடும்பங்களைச் சேர்ந்த 7241 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், வெள்ளத்தினால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

“வாழைச்சேனைப் பிரதேசத்திலே மீன்பிடிக்கச் சென்றுள்ளதாக கருதப்படும் 3 பேரை மீட்டுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்காக எமது உத்தியோகஸ்த்தர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தினால் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றதாகவும், உதவி தவிர்ந்த ஏனைய பொருட்களையும் வழங்குவதற்கு அரச சார்பற்ற அமைப்புக்கள் தயாராகவுள்ளதாகவும், மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மாவட்ட அரசாங்க அதிபர், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட ஏனைய அரச உத்தியோகஸ்த்தர்கள் ஒன்றிணைந்து பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்கி வருவதோடு மக்கள் பிரதிநிதிகளும் பொது அமைப்புக்களும் வெள்ள அனர்த்த நிலமைகள் தொடர்பில் நேரில் கிராமங்களுக்குள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

தொடர்ந்தும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நவகிரி, உன்னிச்சை, கித்துள்வெவ, வெலிக்காக்கண்டிய, உறுகாமம், உள்ளிட்ட குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதோடு, ஏனைய சிறிய குளங்களும் நிரம்பி வழிவதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளத்தினால் ஆயிரக்கணக்கான  நெற்பயிர்கள் வெள்ளத்தில் அள்ளுண்டுபோயுள்ளதுடன், பலத்த காற்று வீசிவருகின்றது. இதனால் மரங்களும் முறிந்து விழுந்துள்ளதுடன், தோட்டங்களும் பாதிக்கப்பட்டுளன.

# தமிழ் தேசிய விடுதலையை வென்றெடுப்பதற்கு முடிந்தவரை தொடர்ந்தும் பயணிப்போம்!

## யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மனோகரன் சோமபாலன்

29.11. 2024




தமிழ் மக்கள் தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் தொடர்ந்தும் எமது உரிமைகளை காக்கப் போராடிவரும் இனமாகவே தமிழினம் காணப்படுவதாக யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சோமபாலன் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த சீன தூதவர் தமிழ் மக்கள் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து மாற்றத்துக்காக பயணிப்பதாகவும் இனப் பிரச்சனை தொடர்பில் ஒன்று இணைந்து பயணிப்பார்கள் எனத் தெரிவித்த கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எந்த ஒரு நாட்டினையும் நட்பு நாடாகவோ அல்லது எதிரி நாடாகவோ பார்ப்பது கிடையாது.

இவ்வாறான நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சீன தூதுவர் தெரிவித்த கருத்து தொடர்பில் சில விளக்கத்தை தெரிவிக்கலாம் என நினைக்கிறேன்.

தமிழ் மக்கள் வாழ்வியல் நீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தொடர்ந்து இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் விவகாரம், சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கி பயணித்த நிலையில் அதற்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

அண்மையில இடம் பெற்ற பாராளுமன்றத் முடிவுகளை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாது. ஏனெனில் அதையும் தாண்டி பயணிக்க வேண்டிய தேவை இருக்கிறது.


அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் உடைய அமைச்சர் ஒருவர் காணாமல் போனவர்களை 15 வருடங்களாக காண வில்லை என்றால் காணவில்லை தான் என்ற கருத்துப்பட கருத்து தெரிவித்திருந்தார்.

அவருடைய கருத்தை பார்த்தால் 2009க்கு முன்னர் அவர்களுடைய கட்சி பலரை காணாமல் ஆக்கியது. அது தொடர்பில் கருத்து தெரிவிக்க வேண்டும் என்பதற்காக இதை அவர் அவ்வாறு காணாமல் போனது காணாமல் போனது தான் என்ற கருத்து படத் தெரிவித்திருக்கிறார்

ஆகவே, தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைக்காக போராடி வரும் ஒரு இனமாக காணப்படுகின்ற நிலையில் அதனை வென்றெடுப்பதற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் எங்களால் முடிந்தவரை தொடர்ந்தும் பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

**உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# வடிகாலமைப்புகள் சீரின்மையே வெள்ள அனர்த்ததிற்கு காரணம்!

## வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

28.11. 2024

வடிகாலமைப்பு சீரின்மையாலேயே அதிகளவான இடங்களில் வெள்ள நீர் தேங்கிய, பாரிய அளவில் வெள்ள அனர்த்தம் ஏற் படக் காரணமாக அமைந்ததாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தொடர்ந்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், உரிய திணைக்களங்கள் வடிகாலமைப்பு விடயத்தில் அதிக கவனத் துடன் செயற்படவேண்டும்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்குதல், நிவாரணங்கள் வழங்குதலுடன், தறப்பாள் வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் இதன்போது தெரிவித்திருந்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அனர்த்த நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். போதனா வைத்தியசாலை!

28.11. 2024

வெள்ளப்பெருக்கு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையின் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் எவ்வித பாதிப்புகளையும் பொருட்படுத்தாமல் பல ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பதாக வைத்தியசாலை யின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.



அனர்த்தம் தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் நிலைமைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால், சாதாரண வைத்திய சேவைகளை வழங் குவதில் சிக்கல்கள் இருக்கக்கூடும் என அறிவித்திருந்தோம்.

இருப்பினும் பெரும்பாலான ஊழியர்கள் மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கட மைக்கு வந்துள்ளார்கள். ஆகையால் அனைத்து சேவைகளும் வழமை போல நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சில விடுதிகளுக் கும் வெள்ளம் புகுந்துள்ளது. அந்த வெள்ளத்தை வெளியேற் றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

அனர்த்தம் காரணமாக விபத்துக்களால் பாதிக்கப்பட்ட அல்லது தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இனிமேல்தான் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் எதிர்காலத்தில் டெங்கு தாக்கத்தினால் பாதிக்கப்பட் டவர்களும் வைத்தியசாலைக்கு வருகை தரக்கூடும் என எதிர்பார்க்கின்றோம். ஆகையால் அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

வைத்தியசாலை ஊழியர்களின் வீடுகளுக்குள் தண்ணீர்



புகுந்து அவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்களது வரவு குறைவாக இருக்கும் என்ற அடிப்படையில் தியேட்டர்களின் சேவைகள் அல்லது சத்திரசிகிச்சைகள் இடம்பெறாது என அறிவித்திருந்தோம்.

இருப்பினும் அவர்கள் கடமைகளுக்கு வந்துள்ளதால் சேவைகள் அனைத்தும் வழமைபோல இடம்பெறும்.

பிரதான சத்திர சிகிச்சை கூடத்தில் எட்டு சத்திர சிகிச்சை பிரிவுகள் உள்ளன. அந்த அனைத்து பிரிவுகளிலும் வழமை போல சத்திர சிகிச்சைகள் இடம்பெறுகின்றன. எனவே மக்கள் வழமை போல சேவைகளை பெற்றுக் கொள்ளலாம் என்றார்.


# வடதமிழீழம் யாழில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 44 ஆயிரம் பேர் பாதிப்பு!

28.11. 2024

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக, இன்று வியாழக்கிழமை (28) காலை 09.00 மணி நிலவரப் படி 13,117 குடும்பங்களைச் சேர்ந்த 44,346 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர்.

03 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 131 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் 68 பாதுகாப்பு நிலையங்களில் 1,700 குடும்பங்களைச் சேர்ந்த 6,031 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



# வடதமிழீழம் மன்னாரில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 61 ஆயிரம் பேர் பாதிப்பு!

28.11. 2024

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நேற்று புதன்கிழமை (27) மாலை 6 மணி வரை 16 ஆயிரத்து 774 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 674 நபர்கள் பாதிக் கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு (DMC) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 73 தாற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளதுடன் குறித்த நிலையங்களில் 2 ஆயிரத்து 845 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 156 நபர்கள் தங்க வைக் கப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை மழை வெள்ளம் காரணமாக கடுமையாக பாதிக் கப்பட்டும், நலன்புரி நிலையங்களுக்கு செல்லாது வீடுகளிலும், உறவினர்களின் வீடுகளிலும் உள்ள மக்களுக்கு எவ்வித உதவிகள் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரி வித்தனர்.



நலன்புரி நிலையங்களுக்கு வருகிறவர்களுக்கு மாத்திரம் உதவிகள் வழங்கப்படும் என உரிய அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

எனினும் நலன்புரி நிலையங்களில் காணப்படும் இட நெருக்கடி மற்றும் மல சல கூட பிரச்சனைகளை கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட பலர் நலன்புரி நிலையங்களுக்கு செல்லாமல் தமது வீடுகளிலும் நண்பர்கள் வீடுகளிலும் பல்வேறு இடர்க ளுடன் வசித்து வருகின்றனர்.

எனவே இந்த மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் என்ற போர்வையில் அனைவருக்கும் நிவாரணம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# மாவீரர் நாளில் முகப்புத்தக பிரசாரம்: கைதில் இறங்கிய சிறீலங்கா காவல்துறை!

30.11. 2024

வடக்கு - கிழக்கில் பெரும் உணர்வெளிச்சியுடன் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளை ஊக்குவித்துப் முகப்புத்தகத்தில் பிரசாரம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேகநபர்களைக் சிறீலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும், அவர் நேற்றைய நாள் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேலும் கைதான ஏனைய இருவரில் ஒருவர் பத்தேகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனத் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்தோடு, குறித்த சந்தேகநபர் இன்றைய நாள் கைதுசெய்யப்பட்டதாகக் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர், மாவீரர் தின நிகழ்வுகளை ஊக்குவித்ததாகக் கூறப்படும் முகப்புத்தக கணக்கிற்கு உரித்துடையவர் எனவும் சிறீலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் மூன்னறாவதாக கைது செய்யப்பட்டவரும், மாவீரர் தின நிகழ்வுகளை ஊக்குவிப்பு முகப்புத்தக பதிவு காரணமாக கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.



# சிறீலங்கா விமான நிலையத்தில் வைத்து பிரித்தானியக் குடியுரிமை பெற்ற தமிழர் சிறீலங்கா பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரினால் கைது!

01.12. 2024

பயங்கரவாதக் குழுவொன்றிற்கு நிதி சேகரித்து அனுப்பியதற்கான குற்றச்சாட்டின் பேரில் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த 43 வயதான பிரித்தானியக் குடிமகன் ஒருவரை இலங்கைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சந்தேக நபர் 2009 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி பிரித்தானிய குடியுரிமையைப் பெற்றுள்ளார்.

நவம்பர் 30, 2024 அன்று கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தவுடன் அவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடைக்கு அமைய குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் குறித்த நபரை கைது செய்திருந்தனர். இதனையடுத்து சந்தேக நபர் விமான நிலைய காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

ஐக்கிய இராச்சியத்தில் தங்கியிருந்து நிதி திரட்டியதாகவும், கொழும்பு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் உள்ள நபர்களுக்கு பணம் அனுப்பியதாகவும் சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகக் காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு - வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினருடன் இணைந்து




விமான நிலைய பொலிஸார் தற்போது மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் நாள் பதிவு: யாழில் கைதான இளைஞனிடம் 48 மணி நேர விசாரணை!

01.12. 2024

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞனை எதிர்வரும் 04ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாவீரர் நாட்கள் தொடர்பான பதிவுகள், விடுதலைப்புலிகளின் தலைவர், புலிகளின் சீருடையில் உள்ள புகைப்படங்களை தனது முகநூலில் பகிர்ந்த குற்றச்சாட்டில் இணுவில் பகுதியை சேர்ந்த 36 வயதுடைய குடும்பஸ்தரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை யாழில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அலுவலகத்தில் சுமார் 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர், இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ். நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

அதனை அடுத்து நீதவான் சந்தேக நபரை எதிர்வரும் 04ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை யாழ் நகர் பகுதி மற்றும் பருத்தித்துறை பகுதிகளை சேர்ந்த இருவரிடமும், அவர்களது முகநூல் பதிவுகள் தொடர்பில் பங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, பயங்கரவாத தடை சட்டத்தை முற்றாக ஒழிப்பேன் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருந்த நிலையில் மாவீரர் நாட்கள் தொடர்பில் முகநூலில் பதிவிட்டவர்களிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதுடன் , யாழ் இளைஞன் உள்ளிட்ட மூவரை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். வல்வெட்டித்துறையில் தமிழீழத் தேசியத் தலைவரது பிறந்தநாள் விழா தொடர்பில் சிறீலங்கா பொலிசார் விசாரணை!

01.12.2024

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் அண்மையில் நடைபெற்ற தமிழீழ தேசியத் தலைவர் தலைவரது 70ஆவது பிறந்த தின விழா தொடர்பாக வல்வெட்டித்துறையில் சிறீலங்கா பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பிறந்தநாள் விழாவில் பங்கேற்ற ஐந்து பேரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் தமிழீழ தேசியத் தலைவரது குடம்பத்தின் பூர்வீக இல்லத்தில் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக தமிழீழ தேசியத்தலைவரது புகைப்படத்தினை கொண்ட பதாகை ஒன்றும் அங்கு அச்சிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது அங்கு வந்திருந்த சிறீலங்கா பொலிசார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடைய புகைப்படத்தினை பயன்படுத்த முடியாது என்றும், அதற்கு சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து அந்த புகைப்படத்தினை மறைத்துவிட்டு பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவரது புகைப்படத்தை முகநூலில் பதிவிட்டதாக இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவு காவல் துறையால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் யாழில் நடந்த பிறந்தநாள் கொண்டாட்டம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.








# இலங்கையில் மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டுவர சிறீலங்கா அரசங்கம் தீர்மானம்: இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின்படி இந்தியாவுக்கு ஆப்பு!

01.12.2024

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டு வரவும், புதிய அரசியலமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

சுமார் 37 வருடகாலமாக நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையால் நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான பலனும் இதுவரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்சினைகளை தோற்றவிக்கும் வகையிலான நிலைமையே காணப்படுகிறது. எனவே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை தோற்றவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத்திட்டத்தை எமது அரசாங்கம் முன்வைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெளிவுப்படுத்துகையில்,

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாக கூறிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை ஆரம்பகாலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பின் ஊடாக நாட்டில் நடைமறைப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகிறது.

எனவே பயனற்ற மாகாண சபை முறைமைக்கு பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறக்கூடியதும் அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையை பெற்றக் கொள்ளும் வகையிலுமான புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்படுகின்றது.

இதற்காக இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் கேட்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து குறுகிய காலங்களே ஆகின்ற நிலையில்,



நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து செயல்பட்டாலும், நிரந்தர தீர்வுகளுக்கான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

நடைமுறையில் உள்ள பழைமைவாய்ந்த அரசியலமைப்பிற்கு பதிலாக புதிய அரசியலமைப்பு உருவாக்குவது முக்கிய பொறுப்பாக நாங்கள் கருதுகின்றோம்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கம். அப்போது 13ஆவது அரசியலமைப்பு திருத்தமோ அல்லது  மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது என்றார்.


# திருகோணமலையைச் சேர்ந்த 60 வயதுப் பெண் பயங்கரவாத குற்றத் தடுப்பினரால் அழைப்பு!

02.12.2024

திருகோணமலையைச் சேர்ந்த 60 வயதுப் பெண் ஒருவர் பயங்கரவாத குற்றத் தடுப்பினரால் வரும் 4ம் திகதி விசாரணக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார். எந்தவிதக் காரணங்களும் குறிப்பிடப்படாமல் விசாரணைக்கென அழைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதனிடையே சிறீலங்கா பொலிசார் செய்ய வேண்டிய விசாரனையை பயங்கரவாதப் பிரிவைக் கொண்டு நடத்துவது ஒரு அச்சுறுத்தும் செயல் என்பதை அரசுக்கு சொல்லிக் கொள்கின்றோம் என பொது அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

வழங்கப்பட்டுள்ள அறிவித்தல் தமிழில் உள்ளது ஆனால் சிறீலங்கா பொலிசாரின் அச்சடிக்கப்பட்ட விணப்பத்தில் எங்குமே தமிழ் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.



SRI LANKA POLICE

MESSAGE FORM

POLICE

| Date 2024/12/02 | Time of Receipt | From Station | To Station |
|---|---|---|---|
| Sending Operator | Receiving Operator | | |

From | To | No.

Distribution

H 059790 — 5,000 (2024/04)P

# திருச்சி முகாமில் உள்ள அனலைதீவு கடற்தொழிலாளர்களை படகுடன் கடல் வழியாக விடுவிக்க கோரிக்கை!

03.12.2024

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனலைதீவு கடற்தொழிலாளர்களை விடுவிக்க வேண்டும் என அவர்களின் உறவினர்கள் கோரியுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி அனலைதீவு பகுதியில் இருந்து கடற்தொழிலுக்கு படகொன்றில் சென்ற இரு கடற்தொழிலாளர்களும், கடற்சீற்றம் காரணமாக தமிழக கடற்பரப்பினுள் தத்தளித்த நிலையில், தமிழக கடற்தொழிலாளர்களால் மீட்கப்பட்டு தமிழக கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கபப்ட்டிருந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நோக்குடன் திருச்சி சிறப்பு முகாமில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் உறவினர்கள், ஊர்காவற்துறை பகுதியில் ஊடகவியலாளர்களை சந்தித்த போது,

கடற்சீற்றம் காரணமாக தமிழக கடற்பரப்பினுள் சென்ற அனலைதீவை சேர்ந்த திருச்செல்வம் மைக்கல் பெர்னாண்டோ மற்றும் நாகலிங்கம் விஜயகுமார் ஆகிய இருவரும் தற்போது நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரையும், அவர்களின் படகு மற்றும் அதன் வெளியிணைப்பு இயந்திரத்துடன் கடல் வழியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.



# ஒதியமலை படுகொலையின் 40 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

02.12.2024

முல்லைத்தீவு, ஒதியமலை கிராமத்தில் கடந்த 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி சிறீலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் 40ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றைய நாள் திங்கட்கிழமை உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.




ஒதியமலைக் கிராமத்தில் படுகொலைசெய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில குறித்த நினைவேந்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தவகையில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு ஈகைச் சுடரேற்றப்பட்டதுடன், நினைவுத் தூபிகளுக்கு மலர்தூவி, மலர் மாலை அணிவிக்கப்பட்டு உறவுகளால் உணர்வுபூர்வமாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த நினைவிட வளாகத்தில் நினை வேந்தல் கூட்டமொன்று இடம்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு விசேட ஆத்மசாந்தி வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.








# ஏழு ஆண்டுகள் கடந்தும் ஓர் உண்மை கூட கண்டறியப்படவில்லை!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்

04.12.2024

ஏழு வருடங்கள் கடந்தும் ஓர் உண்மை கூட கண்டறியப்பட வில்லை. எனவே, செயல்திறனற்ற ஓ. எம். பி. உடனடியாக கலைக்கப்பட வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்தி யுள்ளனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் 15 வருடங்களாக எமது உறவுகளைத் தேடி வருவதுடன் 20. 02. 2017 இலிருந்து தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றோம். தொடர்ந்து வந்த அரச தலைமைகளால் காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்டு வந்ததால் சர்வதேச நீதியை வலியுறுத்தி இன்னும் போராடி வருகின்றோம் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய (ஓ.எம்.பி.) அலுவலகத்துக்கு புதிய நியமன கோரிக்கை தொடர்பில் காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஓ.எம்.பி. சட்டம் வரையப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பாதிக்கப்பட்டவர்களின் அபிப்பிராயங்களுக்கோ அல்லது அவர் களின் வேண்டுகோள்களுக்கோ செவிசாய்க்காது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சர்வாதிகாரத்துடன் பாரபட்ச மாகவே நடத்தப்பட்டு வந்தார்கள்.



பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடியோ அவர்களின் பங்குபற்றலுடனோ அப்பொறிமுறையைச் செயல்படுத்த முனைப்புக்காட்டப்படுவதில்லை. மாறாக நாங்கள் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சர்வாதிகாரப் போக்கும் வெளிப்படைத்தன்மையற்ற நிலையுமே காணப்படுகிறது.

எந்தப் பொறிமுறையும் சம்பந்தப்பட்டவர்களின் பங்களிப்போ, விருப்போ இல்லாவிட்டால் வெற்றியளிக்காது என்ற கூற்றை ஏற்றுக்கொள்ள எவரும் தயாரில்லை.

# தமிழீழத் தேசியத் தலைவரை முகநூலில் பதிவிட்ட இளைஞருக்குப் பிணை!

04.12.2024





முகநூலில் தமிழீழத் தேசியத் தலைவரின் புகைப்படத்தை பதிவிட்ட குற்றச்சாட்டில் யாழ். இணுவிலில் கடந்த 29 ஆம் திகதி சிறீலங்கா காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட கஜந்தரூபன் என்ற இளைஞர் இன்று புதன் கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தேசியத்தலைவரது படத்தை பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் இனவாதப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக் கப்பட்ட கஜந்தரூபனினை விடுவிக்க அவருக்காக உழைத்த சிரேஸ்ட சட்டத்தரணி சுகாஸ், கனிஸ்ட சட்டத்தரணிகள் மகிந்தன், சட்டத்தரணி நீதன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேலும் பல இளைஞர்களிடம் இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் ஆங்காங்கே கைதுகளும் இடம்பெற்று வரு கின்றன.

# பிள்ளைகளுக்காக உணவு கோரிய வேளை முரண்பாடு: இரு இளைஞர்களுக்குப் பிணை!

04.12. 2024

யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் கிராமசேவகர் உணவு நிவாரணம் வழங்கியபோது பொதுமக்களுடன் ஏற்பட்ட தகராறு தொடர்பாக பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் கடந்த 01ஆம் திகதி கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களுக்கும் புதன்கிழமை (04) பருத்தித்துறை நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது.

கடந்த 01ஆம் திகதி கைது செய்யப்பட்டு திங்கட்கிழமை (02) நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் இன்று (04) வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இன்று (04) மீண்டும் இந்த வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்குக்கு சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றுக்கு முன்வைத்த விவாதத்தின் அடிப்படையில் கைதான இருவருக்கும் பருத்தித்துறை நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த நவம்பர் 30ஆம் திகதி கற்கோவளம் பகுதியில் உணவு நிவாரணம் வழங்கச் சென்ற கிராம சேவகரிடம் பிள்ளைகளுக் காக உணவு கோரிய வேளை முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த கிராமசேவகர் பருத்தித்துறை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்ததன் அடிப்படையிலேயே இந்த இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சுழிபுரத்தில் விபத்து; மாணவன் உயிரிப்பு: காலதாமதமாக வந்த நோயளர் காவு வண்டி!

05.12. 2024

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் இன்றைய நாள் வியாழக் கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரு மாணவன் உயிரிழந்துள்ள நிலையில் மற்றுமொரு மாணவன் படுகாயமடைந்த நிலையில், யாழ் . போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியை சேர்ந்த, சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி மாண வனான முருகசோதி ஸ்ரீபானுசன் (வயது 17) எனும் மாண வனே உயிரிழந்துள்ளார். அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணிந்த 15 வயதுடைய மற்றுமொரு மாணவனே படுகாய மடைந்துள்ளனர்.

சுழிபுரம் பகுதியில் இருந்து மூளாய் பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை, சுழிபுரம் சந்தியில் மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத் துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மோட்டார் சைக்கிள் உரிமையாளர் மோட்டார் சைக்கிளை அவ்விடத்தில் இருந்து எடுத்து சென்றுள்ளார்.

மாணவர்கள் இருவரும் இரத்த வெள்ளத்தில் வீதியில் கிடந்த நிலையில், வீதியால் பயணித்தவர்கள், நோயாளர் காவு வண டிக்கும், வட்டுக்கோட்டை பொலிசாருக்கும் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு மாணவர் களின் பெற்றோர்கள், உறவினர்களும் வருகை தந்திருந்தனர். சுமார் 20 நிமிடங்களுக்கு மேலாகவும், நோயாளர் காவு வண்டி வராத சூழலில், வீதியில் சென்ற வேறு வாகனங்களும் மாண வர்களை ஏற்ற பின்னடித்த நிலையில், பட்டா ரக வாகனம் ஒன்றில் மாணவர்களை ஏற்றி , மூளாய் வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற நிலையில், ஒரு மாணவன் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர். மற்றைய மாண வனை மேலதிக சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்திய சாலைக்கு மாற்றினார்.

அதேவேளை, விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்றிருந்த மாணவனின் தாய் ஒருவர் அவ்விடத்தில் மயங்கி சரிந்திருந் தார். மாணவர்களை பட்டா வாகனத்தில் ஏற்றி சென்ற பின்னர் அவ்விடத்திற்கு வந்த நோயாளர் காவு வண்டியில், மயங்கி சரிந்த தாயை ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல கேட்ட போதும், தாம் அவ்வாறு ஏற்றி செல்ல முடியாது என கூறி , நோயாளர் வண்டியில் வந்தவர்கள் திரும்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




# திருகோணமலை மூதூர் பகுதி விவசாயிகள் இழப்பீடு கோரி போராட்டம்!

09.12. 2024

அழிவடைந்த வேளான்மைக்கு இழப்பீடு வழங்குமாறும், அனுமதியின்றி வெட்டப்பட்ட வாய்க்காலை மூடுமாறும் கோரி திருகோணமலை மூதூர் - பச்சனூர் சந்தியில் இன்று திங்கட் கிழமை (09) விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் கமநல சேவைப் பிரிவில் உள்ள சம்மேளனங்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக மூதூர் கங்குவேலி திருக்கரைசை விவசாய சம்மேளனப் பிரிவில் எவருடைய அனுமதியுமின்றி புதிய வாய்க்கால் தோண்டப் பட்டது.

இதனால் கங்குவேலி குளத்திலிருந்தும், மேட்டுநில பரப் பிலிருந்தும் மேலதிக நீர் தமது வேளாண்மை நிலங்களுக்குள் புகுந்தது.



இதன் காரணமாக மூதூர் கமநல சேவை பிரிவில் சுமார் 2000 ஏக்கருக்கு மேற்பட்ட வேளாண்மை அழிவடைந்துள்ளதாகவும் இதற்கு அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் வெள்ளத்தினால் தோண்டப்பட்ட வாய்க்காலை மூடுமாறும் ஆர்ப்பாட்டத்தின்போது விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

www.sangathamil.ca

# தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி என்பது தமிழர்களின் அரசியலுக்கு எதிரான அரசியல் போர்க்காலமாக இருக்கும்!

### சமூக நீதிக்கான செயற்பாட்டாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

04.12.2024

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் என்பது வட கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட தொடங்கியுள்ளன என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இன்று புதன்கிழமை (04) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் என்பது வட கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. அரசியல் களச் சூழ்நிலை அறிந்து எமக்கிடையிலான பலமான அரசியல் கூட்டு கட்டமைப்பு உருவாக்கினால் மட்டுமே நாம் எதிர்நோக்கும் அரசியல் போரினை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட அரசியல் பிரேரணைகளை மையப்படுத்தி பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஆயத்த பேச்சுவார்த்தையினை தமிழ் தேசிய முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் தமிழரசு கட்சி தலைவர் சிறீதரனுக்கும் இடையில் ஆரம்பித்திருக்கும் பேச்சுவார்த்தையை வரவேற்பதோடு இக்கூட்டு செயற்பாடு நாடாளுமன்றத்துக்குள்ளும் அதற்கு வெளியிலும் கொள்கை ரீதியில் பலமடைய வேண்டும்.

விரிவடைய வேண்டும். புலம்பெயர்ந்தோர் அமைப்புக்களும் தடம் மாறாது களத்திலும் புலத்திலும் அரசியல் கடப்பாட்டினை நிறைவேற்ற துணை நிற்க வேண்டும்.

அன்று பொங்கு தமிழாக அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையாக திரண்டது போன்று மீண்டும் மக்கள் அரசியலும் அதற்கான கூட்டு செயல்பாடும் கொள்கை ரீதியில் விட்டுக் கொடுப்புக்கள் இன்றி பலமடைய அனைவரும் அரசியல் முதிர்ச்சியோடு தம் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தமிழர் தாயக விடுதலை போராட்டத்தை தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் பயணத்தை சிதைத்த சக்திகளுக்கு மத்தியில் நேற்று முளைத்த சில அரசியல் காளான்களுக்கும் எம் தாயக அரசிற்கான கூட்டு தடையாக இருக்கலாம். நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் கெட்ட தேசமாக அமையட்டும். அது எல்லாவற்றையும் பாடமாக கொண்டு அரசியல் பயணத்தில் விரைவாக பலமடைய வேண்டும் என்பதே தமிழ் தேச மக்களின் அரசியல் விருப்பம்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்றில் 2/3 அதிகமான பெரும்பான்மை கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அடுத்து வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும், மாகாண சபை தேர்தலிலும் முழு நாட்டையும் தமதாக்கிய பின்னர் யாப்பு சீர்திருத்தம் எனும் போர்வையில் தமிழர்களுக்கு எதிரான அரசியல் போரை தீவிரப்படுத்தும்.

சூடு கண்டவர்களாக நாம் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் கட்சிகளாகவும் சமூக அமைப்புகளாகவும் தனித்தனியாகவும் கூட்டாகவும் எம் தாயக அரசியலை மையப்படுத்தி கூட்டு செயற்பாட்டு சூழலை அவசரமாக தமிழர் தாயக பிரதேசங்களில் உயிர்ப்பித்தல் அவசியம்.

உயிர்ப்பிக்கப்படும் கூட்டு தமிழ் மக்கள் பேரவை முன் வைத்த அரசியல் முன்மொழிவுகளோடு ஆரம்பிக்கலாம். பல்வேறு விதமான கருத்து மோதல்கள், தலைமைத்துவம் தொடர்பான சிக்கல்கள், அமைப்பு ரீதியில் நிர்வாக சிக்கல்களும் வரலாம். கொள்கை அரசியலில் விட்டுக்கொடுப்புகள் இன்றி பலமான தேச அரசியலை கருத்தினை முதன்மைபடுத்தி சகிப்புத்தன்மையுடன் பயணத்தை தொடருவது சாலச் சிறந்தது.

மக்கள் விடுதலை முன்னணி செயலாளர் ரில்வின் சில்வா அவர்கள் அண்மைய ஊடக பேட்டியில் மக்கள் விடுதலை முன்னணியும் தேசிய மக்கள் சக்தியும் ஒன்று என்று கூறியதில் இருந்து மக்கள் முன்னணியில் அரசியல் முகம் வெளிப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாதவர்கள் தேசிய மக்கள் சக்தி என முகம் கொண்டு வெளியில் வந்துள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளருடைய கூற்றுக்கு தேசிய மக்கள் சக்தி இதுவரைக்கும் எந்த பதிலையும் அளிக்கவில்லை. எனவே தேசிய மக்கள் சக்தி என்பது மக்கள் விடுதலை முன்னணியே. எனவே தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அதன் கோரமுகம் அவ்வாறே உள்ளது என்பதிலே மாற்று கருத்து கிடையாது.

தமிழர் தேசத்தில் அரசு படைகளை பலப்படுத்தியதும், படைத்தளங்களை விரிவுபடுத்தியதும், அரச காணி மற்றும் பொது மக்கள் காணிகளையும் கையகப்படுத்தியதும், மகாவலி அதிகாரி சபையை முன்னோக்கி நகர்த்துவதும் சிங்கள பௌத்த



திணைக்களங்களை சுதந்திரமாக செயல்பட இடமளித்ததும் தெற்கின் சிங்கள பௌத்த பேரின வாத அரசியலின் தேவை கருதியே.

தற்போதும் அதே அரசியல் கருத்தியல் கொண்டவர்கள் பாதைகள் திறந்து விடுகின்றனர், படைத்தளங்களை கூடுகின்றனர் (படைகளை குறைக்கவில்லை) மாவீரர் தினத்தை நினைவு கூற அனுமதிக்கின்றனர் கைதும் செய்கின்றனர்). இது போன்ற கவர்ச்சி செயல்கள் மேலும் தொடரலாம்.

இதுவும் அவர்களின் அரசியல் தேவை கருதியே அன்றி தமிழர்களின் தேவை கருதி அல்ல. இதனை தமிழ் தேச மக்களும் நன்கு உணர்வார்கள். இந்நிலையில் மாற்றம் அடையலாம். எதிர்த்தரப்பு கோஷங்களுக்கு மத்தியில் மேலும் இறுக்கமடையலாம். ஆட்சி அதிகாரமும் பெரும்பான்மையையும் அவர்களிடத்தில் இருக்கின்றது என்பதை நாம் மறக்கவில்லை.

தமிழர் எதிர்கால அரசியல் நலன் கருதி கடந்த கால அரசியல் குரோதங்கள், போட்டியை அரசியல், காட்டிக் கொடுப்புக்கள், சலுகை அரசியல் என்பவருக்கு இடம் கொடுக்காது பெரும் தேசிய வாதத்தினை தேசமாக மக்களோடு சேர்ந்து எதிர்கொள்ள கொடுக்கவும் பேச்சு வார்த்தை தொய்வும் தோல்வியையும் சந்திக்காது முன்னோக்கி நகர்ந்து செல்லும் பொறுப்பும் கடப்பாடும் தமிழ் தேச உணர்வாளர்களுக்கு அவசியம்.

மாவீரர்கள் சிந்திய குருதி எம் மண்ணிலிருந்து இன்னும் காயவில்லை. அவர்களின் எழுச்சி குரலும் தாகமும் இன்னும் அடங்கவில்லை. முள்ளிவாய்க்கால் அவலக் குரலும் தினந்தினம் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. நாம் ஏற்றிய தீபங்கள் எம் மனசாட்சியின் தீபங்களாக இருக்கட்டும். அது கூட்டு அரசியலில் சுடராக வியாபிக்கட்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வட்டுவாகல் பாலம் புதிதாக நிர்மாணிக்கப்படவேண்டும் வெள்ளப்பாதிப்புக்கு உள்ளான அனைவருக்கும் நிவாரணம் வழங்குக!

### வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

05.12.2024

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் புதிதாக அமைக்கப்படவேண்டுமெனவும், எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் அதனை உள்வாங்குமாறும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாரளுமன்றில் அவரது கன்னியுரையில் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் தனது கன்னியுரையில் மேலும் தெரிவித்ததாவது,

எனக்கு வாக்களித்த முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச்சேர்ந்த மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் பலத்த அழிவுகள் ஏற்பட்டன. அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களின் துன்பங்களை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பலத்த வெள்ள அனர்த்தம் காரணமாக பல வீதிகள் பாதிக்கப்பட்டதுடன், பல ஆயிரக்கணக்கான வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்து பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூடி நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளன. மக்கள் துன்பத்தில் மூழ்கியுள்ளனர். மீனவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியாமல் காற்று, தொடர் மழை, பலத்த கடல்சீற்றம் போன்ற இந்த மிக மோசமான அனர்த்தம் காரணமாக மிகவும் நொந்து போயுள்ளன. எனவே விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு, கால்நடைவளர்ப் பாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மூன்று மாவட்ட செயலகங்களிலும் விசேட அனர்த்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களை நடாத்தி, அனர்த்தப் பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் அறிந்து கொண்டார். குறித்த கூட்டங்களில் ஏனைய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள். துன்பங்களில் பங்கேற்றனர். அதிகாரிகளும் இடர்காலத்தின் போது தீவிரமாக உதவினர். அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த விடயங்களுடன் ஒரு முக்கியமான விடயம், முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமஅலுவலர்பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் கடந்த 1955ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதாகச் சொல்கின்றனர்.

பலத்த துன்பத்தை முல்லைத்தீவில் இருக்கும் இந்தப் பாலமும் அனுபவித்துவருகின்றது.

கடந்த 2009இறுதி யுத்தத்தின்போது பாரிய சேதங்களுக்கு உள்ளானது. அதற்கு முன்பும்சரி, பின்பும் சரி பாலத்தின் இரு ஓரங்களிலும் பாதுகாப்பு கற்கள்கூட இல்லாமல் காணப்படுகின்றது.

மழைக்காலங்களில் நீரில் மூழ்கும் இந்தப் பாலத்தால் பயணிக்கும் மக்களும் துன்பத்தை சொல்லில் வடிக்கமுடியாது.

சமார் 600மீற்றர்தான் இந்தப் பாலத்தின் நீளம். சுமார் 40,000 இற்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் பாலத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

முல்லைத்தீவு பலத்த அழிவுளை எதிர்நோக்கிய ஒரு மாவட்ட



மாகும். வேறெங்காவது குறிப்பாக தென்பகுதிகளில் இதுபொன்றதொரு பாலம் இருந்திருந்தால் எப்போதோ புதிய பாலம் அமைக்கப்பட்டிருக்கும்.

தொடர்ச்சியாக பலத்த இடர்பாடுகளைச் சந்தித்துவரும் முல்லைத்தீவு மக்களைப்போல் இந்தப் பாலமும் மக்களோடு சேர்ந்து துன்பத்தை அனுபவித்தே வருகின்றது.

இந்தப் பாலத்தையும் அதன் சேதங்களையும் கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் உபாலி சமரசிங்கவும் பார்வையிட்டார். அத்தோடு வன்னிப் பாராளுமன்றஉறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன், வைத்தியர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும் பார்வையிட்டிருந்தனர்.

மேலும் பாரளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதின், காதர் மஸ்தான் ஆகியோரும் இந்தப் பாலம் புதிதாக அமைக்கப்படவேண்டும் என ஆதரவு தெரிவித்தனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிகாரிகளைக் கேளுங்கள், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேளுங்கள் இந்த வட்டுவாகல் பாலத்தின் தேவையை, அவசியத்தைப்பற்றிச் சொல்வார்கள்.

தயவு செய்து நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாரளுமன்ற ஆளுங்கட்சி மற்று, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் இந்த வட்டுவாகல் பாலத்தை புதிதாக நிர்மானிப்பதற்கு ஆதரவுதாருங்கள்.

இந்த வட்டுவாகல் பாலத்தை புதிதாக நிர்மாணிக்க, அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் உள்வாங்குகள் - என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்: சாட்சியங்களை ஆராயுமாறு கோரிக்கை!

### மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன்

06.12.2024

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆசாத் மௌலானா என்பவர் தெரிவித்த சாட்சியங்கள் ஆராயப்படு மானால் உண்மைக் குற்றவாளிகளை, சூத்திரதாரிகளை கண்டுகொள்ள முடியும் எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன், மயிலத்தனை, மாதவனையில் அத்துமீறிய குடி யேற்றங்கள் தொடர்பில் நீதிமன்றம் 3 தடவைகள் அளித்த தீர்ப்புகள் அமுல்படுத்தப்படாத நிலையில் இந்த ஆட்சியில் அங்கு சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத் தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) இடம்பெற்ற கணக்கு வாக்குப்பதிவு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் சட்டவாட் சியை பலப்படுத்த வேண்டும் என கூறியுள்ளார்.

ஆகவே சட்டவாட்சி இங்கு பலவீனமாக இருக்கிறது என்பதனை அவர் உணர்ந்துள்ளார். சட்டவாட்சி பலவீனமாக இருந்த காரணத்தினால் பல குற்றச்செயல்கள் நடந்துள்ளன உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் கூட சட்டவாட்சியின் பலவீனத் தினால்தான் நடந்தது.

கடந்த காலத்தை எடுத்துக்கொண்டால் அதாவது மஹிந்த ராஜபக்ச ஆட்சி செய்த 2005 க்கும் 2015 க்கும் இடைப்பட்ட காலத்தை எடுத்துக்கொண்டால் அக்காலத்திற்குள் நடந்த படுகொலைகளைப்பற்றி சொல்லுவதாக இருந்தால் ஒருநாள் போதாது. 40 க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். தமிழ் தேசியக்கூட்டமைப்பை அழிப் பதற்காக ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைசெய்யப்பட்டார் ரவிராஜ், சந்திரநேரு சிவநேசன் போன்ற எமது எம்.பி.க்கள் படு கொலைசெய்யப்பட்டனர். கிழக்குப்பல்கலைக்கழக உபவேந் தரான் ரவீந்திரநாத் படுகொலைசெய்யப்பட்டார் சிவராம் நடேசன் ஏக்னலிகொட, லசந்த என்ற ஊடகவியலார்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆனால் இவற்றுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் கைது செய் யப்படவில்லை. தண்டனைவழங்கப்படவில்லை. இதனால் நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றதா என்ற கேள்வி காணப் பட்டது. பணநாயகமே நாட்டை ஆட்சி செய்தது. வீதிகள் எல்லாம் பிணங்கள் குவிந்து காணப்பட்டன.

எனவே பாரிய குற்றங்களை இழைத்து விட்டு கௌரவர்களாக, தண்டிக்கப்படாதவர்களாக உலாவிவந்த அந்தக் குற்றவாளிகள் இந்த ஆட்சியில் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு முறையான தண்டனைகள் வழங்கப்படுவதன் மூலம் சட்டவாட்சியையோ பலப்படுத்த வேண்டும் .இவ்வாறு குற்றங்கள் புரிந்தவர்கள் ஒரு காலத்தில் இந்த பாராளுமன்றத் தைக்கூட அலங்கரித்திருந்தனர்.



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக ஆசாத் மௌலானா என்பவர் மிகவும் விபரமாக பல சாட்சியங்களை கூறியுள்ளார். அந்த சாட்சியங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அது சரியாக ஆராயப்படுமாக இருந்தால் குண்டுத் தாக்குதலுக்குரிய சூத்திரதாரிகள் யார் என்பதனை கண்டு கொள்ள முடியும்.

மயிலத்தமனை, மாதவனை போன்ற பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள் காணப்படுகின்றன, மாவட்டம் கடந்து அவர்கள் குடியேறியுள்ளனர். அத்துமீறிகுடியேறிய அந்தக் குடியேறிகளை, காணிகளை ஆக்கிரமித்தவர்களை வெளியேற்றுமாறு நீதிமன்றம் 3 தடவைகள் தீர்ப்பளித்துள்ளது. ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் அந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இந்த ஆட்சியில் சட்டவாட்சி அங்கு உறுதிப் படுத்தப்பட வேண்டும் என்றார்.

# யாழ். வலி வடக்கு மீள்குடியமர்வு பூரணமடையவில்லை மக்கள் அவதி!

08.12.2024

வலி.வடக்கு மீள்குடியேற்றம் பூரணமாக இன்னமும் 2500 ஏக்கர் நிலப்பகுதி விடுவிக்க வேண்டும் என வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளரும் சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இன்னும் 16 கிராமசேவையாளர் பிரிவு பகுதியளவிலும் மூன்று கிராம சேவையாளர் பிரிவு முழுமையாகவும் விடுவிக்கப்பட வேண்டி யுள்ளது.

அதாவது ஜே/226 நகுலேஸ்வரம், ஜே/233 காங்கேசன்துறை மேற்கு, ஜே/234 காங்கேசன்துறை மத்தி, ஜே/238 கட்டுவன், ஜே/240 தென்மயிலை, ஜே/242 குரம்பசிட்டி, ஜே/243 குரும்ப சிட்டி கிழக்கு, ஜே/244 வயாவிளான் கிழக்கு, ஜே/245 வயா விளான் மேற்கு, ஜே/246 மயிலிட்டி வடக்கு, ஜெ/249 தையிட்டி வடக்கு, ஜே/250 தையீட்டி தெற்கு, ஜே/251 மயிலிட்டி துறை வடக்கு, ஜே/252 பலாலி தெற்கு, ஜே/253 பலாலி கிழக்கு, ஜே/254 பலாலி வடக்கு ஆகிய கிராமசேவகர் பிரிவு பகுதியள விலும் ஜே/248 மயிலிட்டி தெற்கு, ஜே /255, பலாலி வடமேற்கு, ஜே/256 பலாலி மேற்கு ஆகிய கிராமசேவகர் பிரிவு முழுமை யாகவும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

இதன் பிரகாரம் கிட்டத்தட்ட 2500 ஏக்கர் நிலப்பகுதி விடுவிக் கப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் வலி.வடக்கையும் வலி.கிழக்கையும் இணைக் கின்றதும்,

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு செல்லும் பிரதான பாதையான வல்லை - அராலி வீதியில் வசாவிளான் சந்தியிலிருந்து கட்டுவன் சந்தி வரையான 2- 1/2 கிலோமீற்றர் பிரதான பாதை விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும் பலாலி மக்களின் பிரதான போக்குவரத்து மார்க்கமான பலாலி வீதியானது வயாவிளான் சந்தியிலிருந்து பலாலி சந்தி வரையான 3- 1/2 கிலோமீற்றர் விடுவிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளதோடு மக்களின் யாழ்ப்பாணத்தின் பிரதான மார்க்கமாக இருக்கின்ற பருத்தித்துறை - பொன்னாலை வீதியின் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கீரிமலை கிருஷ்ணன் கோவில் வரையான ஒரு கிலோமீற்றர் தூரம் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் கடந்த மார்ச் 22 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விடுவிக்கப்பட பலாலி வீதியின் கிழக்கு பகுதியான ஒரு பகுதி 235 ஏக்கர் விடுவிக்கப் பட்ட போதும் கடந்த மே முதல் அப்பகுதிக்கு மக்கள் சென்று வரக் கூடிய நிலைமை ஏற்பட்டது.

எனினும் இன்று வரை குறிப்பாக புதிய ஜனாதிபதி பதவியேற்று மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் கூட இராணுவ உயர் பாதுகாப்பு வேலி அகற்றப்படாதுள்ளது. இதற்கு காரணம் இராணும் அவ்வேலியை அகற்றுவதற்கு அரச நிர்வாகத்திடம் 18 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியினை கோரி நிற் கின்றது. இதனால் குறித்த பகுதி விடுவிக்கப்பட்டு இருந்த போதிலும் மக்கள் அக்காணிகளில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது இருக்கின்றனர்.

அதாவது அக்காணிகளில் அபிவிருத்தி மற்றும் விவசாய செயற் பாடுகளில் ஈடுபட முடியாது பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். இதனால் மக்களுக்கு கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத நிலைமையே காணப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க 2013 அம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி 6371 ஏக்கர் இராணுவ தேவைக்கு சுவிகரிப்பதற்காக வர்த்தமானி வெளியிடப்பட்ட போதும் அவற்றுக்கு எதிராக வலி. வடக்கு மக்கள் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் 2176 காணி உரிமை யாளர்களின் பேரில் வழக்கு தாக்கல் மேற்கொண்டிருந்தார். அவ்வழக்கு தற்போதும் இடம்பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் 3000 ஏக்கருக்கு மேல் காணி விடுவிக் கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் ஏற்கனவே, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 2023 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் நடத்திய கூட்டத்தில் இந்த வர்த் தமானி அறிவித்தலை ரத்துச் செய்யுமாறு காணி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். அறிவித்தல் வழங்கியும் அது ரத்துச் செய்யப்படாமலுள்ளது. எனவே, புதிய அரசாங்கம் இந்த வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்வதற் கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென வலி. வடக்கு மக்கள் சார்பில் கோருகின்றேன்.

அத்துடன், மீள்குடியேற்றத்துக்கு தேவையான நிதிகள் போது மானதாக விடுவிக்கப்படாத நிலையில் மீள்குடியேற்ற நடவடிக் கைகள் தேக்க நிலையை அடைந்துள்ளது.

குறிப்பாக மீள்குடியேற்றப்பட்ட பலாலி வடக்கு மக்கள் (கிறிஸ்தவ நகர்) தங்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான கடற் இறங்குதுறை இல்லாமல் பெரும் அவதிகளை சந்தித்து வருகின்றனர்.அது போன்று மீள்குடியேற்ற மக்களின் வாழ் வாதாரத்தை கட்டியெழுப்பு கூடிய துறைகளுக்கு கூடிய நிதி ஒதுக்கீடுகளை புதிய அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.



புதிய அரசாங்கம் மக்களுடைய காணிகளை கடந்த கால அர சாங்கம் போல் தேர்தல் வாக்குறுதியாக காணிவிக்கப்படுமென கூறிய போதும் அண்மையில், தேர்தல் முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணம் வந்த பாதுகாப்பு செயலாளர் இக்காணிகள் தமது அரசாங்கத்தின் 5 வருட ஆட்சிக் காலப்பகுதிக்குள் விடுவிக்கப் படுமென கூறி மக்களின் நம்பிக்கையை சிதைவடையச் செய்துள்ளார்.

இதனை நம்பி தாங்கள் மீள்குடியேற்றப்படுவோம் என்ற நம்பிக் கையில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்கள் தொடர்ந்து தமது அல்லல்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டிய நிர்ப்பந் தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

ஏனவே அம்மக்களுடைய வாழ்வில் ஒளிக்கீற்று வீசுவதற்காக இராணு முகாம்கள் அல்லாத பல ஏக்கர் காணிகளில் இரா ணுவத்தால் விவசாயம், வர்த்தக நடவடிக்கைகளுக்கு பயன் படுத்தும் நிலங்களை உடனடியாக விடுவித்து மக்களின் மீள்குடியேற்றத்தை துரிப்படுத்து வேண்டும்.

குறிப்பாக தையிட்டி வடக்கில் மக்கள் தொடர்ச்சியாக 35 ஆண்டுகளுக்கு மேல் இடம்பெயர்ந்து வாழும் நிலையில் உள்ளனர். அங்கிருந்த பெண்கள் இராணுவ முகாம் அகற்றப் பட்ட போதும் இராணுவம் வர்த்தக கடைகளை நடத்தி வருகின்றது.

இக்காணிகள் முன்னர் விடுவிக்கப்படும் என கூறப்பட்ட நிலை யில் இப்போதும் இராணுவம் வர்த்தக நவக்கையில் ஈடு படுவதால் தையீட்டி மக்கள் விரக்தியுற்று காணப்படுகின்றனர்.

www.sangathamil.ca

# 40 வருடங்கள் கடந்தும் விடிவில்லை!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறப்பினர் ரவிகரன் துரைராசா

09.12.2024

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக கிராமங்களான தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராமங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டுமெனவும், அதற்காக உரியதரப்பினருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது தண்ணிமுறிப்பு கிராமத்தை பூர்வீகமாக கொண்ட மக்கள் சிலருடன் கலந்துரையாடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த 1984ஆம் ஆண்டு ஆண்டான்குளம் மற்றும், தண்ணிமுறிப்பில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் இராணுவகெடுபிடிகள் காரணமாக அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஆண்டான்குளம் மற்றும், தண்ணிமுறிப்பு பகுதிகளைச் சேர்ந்த மக்கள், தமது இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து 40வருடங்களாகியுள்ள போதிலும் இதுவரை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இந் நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதற்காக உரியதரப்பினருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் குருந்தூர் மலை வழிபாடுகளைத் தொடர்ந்து, தொல்லியல் திணைக்களத்தின் இடையூறால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குருந்தூர்க்குளத்தின் அபிவிருத்தி வேலைகள் தொடர்பிலும் நாடளுமன்ற உறுப்பினர் அவதானம் செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மன்னாரில் போராட்டம்!

10.12.2024

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு இன்று 10.12.2024 செவ்வாய்க்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வடக்கு கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் மன்னாரில் ஏற்பாடுசெய்யப்பட்ட போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் கொள்கைபரப்புச் செயலாளரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான காண்டீபன், மன்னார் மாவட்ட செயலாளர் விக்ரர் தற்குரூஸ். பிரசாத் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.










# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் - 10.12.2024







# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்!

10.12. 2024

திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ஊடாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இன்று இடம்பெற்றது.

'நாங்கள் உண்மை மற்றும் நீதிக்காக தொடர்ந்தும் போராடுகிறோம், நாங்கள் கேட்பது இழப்பீடையோ மரண சான்றிதழையோ அல்ல, முறையான நீதி விசாரணையே' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

'வேண்டாம் வேண்டாம் OMP வேண்டாம், மனித உரிமைகள் இல்லாத நேரத்தில் மனித உரிமைகள் தினம் எதற்கு, சர்வதேச நீதி வேண்டும், வெள்ளைவானில் கடத்திய எங்கள் பிள்ளைகள் எங்கே, வேலைக்கு சென்ற பாடசாலை சென்ற எங்கள் பிள்ளைகள் எங்கே?' போன்ற கோசங்களையும் இதன்போது எழுப்பினர்.










# சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்ட் போராட்டம்!

10.12.2024

சர்வதேச மனித உரிமை நாளை கறுப்பு நாளாக நினைவு கூர்ந்து அம்பாறை மாவட்ட மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் 150க்கு மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவு கலந்துகொண்டு தமது கோரிக்கைகளை உணர்வெழுச்சியோடு முன்வைத்திருந்தனர்.










# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழ். பொதுசன நூலக முன்றலில் கவனயீர்ப்புப போராட்டம்!

10.12.2024

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.






யாழ்ப்பாணம் பொதுசன நூலக முன்றலில் குறித்த போராட்டமானது இடம்பெற்றது.

இதன் போது வழிந்து காணாமல் ஆக்கப்பட்டவருடைய உறவினர்கள், சிவில் அமைப்பினர், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு போராட்டத்தை மேற்கொண்டனர்.

# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்!

10.12. 2024

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை (10) காலை 10.30 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் இலங்கை அரசிடம் நீதி கோரியபோதும், தீர்வுகள் கிடைக்காத நிலையில் தற்போது சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், இதுவரை தீர்வு கிடைக்காததினால் சர்வதேச மனித உரிமைகள் நாளாம் இன்றையநாள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.




போராட்டத்தின் போது வலிந்து காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தின் போது வன்னி பாராளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலரும் கலந்து கொண்டனர்.







# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்!

10.12.2024

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்று (10) வடக்கு கிழக்கில் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் சர்வதேச நீதிக்கான அவசர கோரிக்கையாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அவர்களது அறிக்கையில் முழு வடிவம் வருமாறு:-

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்.

வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்துவிட்டன.

அவர்களுக்குரிய நீதியை கேட்டு போராடி வரும் எங்களுக்கும் எமது பிள்ளைகளின் தற்போதைய நிலையறியும் உரிமையும் அதைக்கேட்டுப் போராடும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது.

தடையுத்தரவு, பயங்கரவாதத்தடுப்பு பிரிவினரின் விசாரணை, வழக்குத்தாக்கல் செய்தல் என்ற தடைகள் மூலமாக வயோதிபத் தாய்மார்களாகிய எங்களை போராட்டத்திலிருந்து அகற்ற முயற்சிக்கப்படுகிறது.

இலங்கையில் 75 ஆண்டுகளாக தமிழர்கள் இரண்டாந்தர பிரஜைகளாக நடாத்தப்பட்டு வந்திருக்கிறார்கள்.

கல்வி, பல்கலைக்கழக அனுமதி, தொழில் வாய்ப்பு, மொழி, பண்பாட்டிற்கான உரிமை என்பவற்றில் காட்டப்பட்ட பாரபட்சம், புறக்கணிப்பு என்பவற்றால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.

அதன் நியாயத்தன்மையை உணர்ந்த தமிழ் அரசியல் தரப்பினரும், பொதுமக்களும் தமது ஆதரவைக் கொடுத்து அவர்களை ஊக்குவித்தார்கள்.

மக்களது ஆதரவு இன்றி போராட்டம் இந்தளவு வளர்ந்திருக்க முடியாது என்ற உண்மை போராட்டத்தில் இணைந்திருந்த தரப்புக்கு நன்கு புரியும்.

உரிமைக்கான போராட்டம் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தி சர்வதேசத்தின் உதவியுடன் 2009 மே மாதத்தில் மௌனிக்கச் செய்யப்பட்டது..

அதற்கு பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் உயிர்கள் பலியாக்கப்பட்டன.

சுமார் 20,000 மக்கள் வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டனர்.

அரச பயங்கரவாதம் இந்தளவையும் செய்துவிட்டு "கிரிபத்" கொடுத்து தமது வெற்றியைக் கொண்டாடியது.

ஆனால் சிங்கள அரசையும் அதன்வாக்குறுதியையும் வேறு வழியின்றி நம்பி சரணடைந்த, ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் அரசியல் கைதிகளாக சிறையிலும், அடிமைகளாக இரகசிய வதை முகாம்களிலும் வாடுகின்றார்கள்.

இவர்களிற்கான நீதிக்காக 2,850 நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நாம் மன அழுத்தத்திற்குள்ளாகி இறந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனால் பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் அனைவரும் தமக்கு வாக்களித்தவர்களைத் திருப்திப்படுத்துவதிலேயே குறியாய் இருக்கிறார்கள்.

எம்மையும், சர்வதேசத்தையும் ஏமாற்றி கால இழுத்தடிப்புகளை மேற்கோண்டு தமது பதவிக்காலத்தை காப்பாற்றிக் கொள்கின்றனர்.

நாம் தற்போது சுதாகரித்துக் கொண்டுள்ளோம்.

ஆனால் சர்வதேசத்திற்கு அரசின் கபடத்தனம் புரியவில்லை.

தற்போது "மாற்றம்" என்ற கோஷத்துடன் புதியவர்கள் ஆட்சியமைத்துள்ளனர்.

அவர்களும் போராட்ட வழியில் வந்தவர்கள் என்ற பரிந்துரையை சில நாட்டின் பிரதிநிதிகள் எம்மிடம் தெரிவிக்கின்றார்கள்.

அவர்களுக்கும் அதே கருத்துடைய அனைவருக்கும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

15 வருடங்களாக பல்வேறுபட்ட பெயர்களில் கொண்டுவரப்பட்ட பொறிமுறைகளில் எம் ஈடுபாடு, அங்கு காட்டப்பட்ட உண்மைத்தன்மையின்மை, உதாசீனங்கள் என்பன எமக்கு பலத்த ஏமாற்றத்தையும் விரக்தியையும் தந்ததால் நாம் உள்ளகப் பொறிமுறைகளை நிராகரித்து சர்வதேசப் பொறிமுறையை மட்டும் கோரி நிற்கின்றோம்.




எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்தை நம்பி எம்மை அணுகுபவர்களுக்கே உண்டு.

பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்ற உண்மைத்தனத்துடனும், எம்மை அக்கறையுடனும் அணுகுவதாயின் எமக்கு நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்காக பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எமது உறவுகள் சரணடைந்த, கையளிக்கப்பட்ட, கைது செய்யப்பட்ட, முக்கியமான நான்கு காவலரண்களுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு உண்மை அறியப்பட வேண்டும், அவர்கள் அனைவரும் உயிருடனும், நல்ல பதவிகளிலும் தற்போதும் உள்ளார்கள். அதுவே காலம் காலமாக ஏமாற்றம்பட்டு வந்த எமக்கு நல்லெண்ண சமிக்ஞையாக இருக்கும்.

எம்மால் செயலற்றது என்று நிரூபிக்கப்பட்ட ஓ.எம்.பி அலுவலகம் கலைக்கப்படவேண்டும்.

ஆணையாளர் அவர்களே!

உள்நாட்டு பொறிமுறைகளிலும், சிறீலங்கா அரசிலும் நம்பிக்கை இழந்த நாம் சர்வதேச பொறிமுறையை கோரி 2,850 நாட்களாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். சர்வதேசப் பொறிமுறைக்குத் தேவையான சாட்சிகள் ஐ.நா இன் ஆவணம் திரட்டும் பொறிமுறை மூலம் திரட்டப்பட்டுள்ளது.

எனவே ஆவணத்திரட்டல் தொடரும் அதேநேரம், அதற்குச் சமாந்தரமாக சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றின் கீழும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் வயோதிபத் தாய்மாராகிய நாமும் இறப்பதற்கு முன் நீதியைப் பெற்றிட உதவுங்கள். - என்றுள்ளது .

# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் தீச்சட்டி ஏந்திப் பேரணி!

10.12. 2024

சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

வவுனியா கந்தசாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய இந்தப் பேரணி பழைய பேருந்து நிலையப்பகுதியில் முடிவடைந்தது.







## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# "நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ, மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதியை"

## சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்!

10.12.2024

இழப்பீட்டையோ, மரணச் சான்றிதழையோ நாம் கேட்கவில்லை. எமது உறவுகள் எங்கே? அவர்களுக்கான நீதி எங்கே? என்று தான் கேட்கின்றோம்"- இவ்வாறு பல கோஷங்களை எழுப்பியவாறும் வாசகங்களை தங்கியவாறும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மட்டக்களப்பில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினரால் நீதிகோரி மட்டக்களப்பு காந்திபூங்காவில் இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத், ஞா. சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நடராசா உட்பட பலர் கலந்துகொண்டனர்.





"நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ, மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதியை", "எமது உரிமை?, எமது எதிர்காலம் ? இப்போது, எமது உறவுகள் எங்கே?, ஓ. எம். பி. ஒரு கண்துடைப்பு நாடகம் என பல வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அனுரவின் ஆட்சியிலாவது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கவேண்டும்!

### வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

10.12.2024

இந்த நாட்டில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தை கண்டுகொள்ளாத நிலையில், புதிதாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள அனுர குமார திசாநாயக்கவின் ஆட்சியிலாவது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச மனித உரிமை நாளான டிசெம்பர் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமாக்கப்பட்ட உறவுகள் நடத்திய கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கை தமிழ் அரசு கட்சி பாராளுமன்ற உறுபபினர்கள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பிலும் அவரின் கவனத்துக்கு கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மிக நீண்ட நாட்களாக இந்த வீதிகளில் இறங்கி தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களுடைய உறவுகளை வட்டுவாகல் பகுதியிலும் ஓமந்தையிலும் முகாம்களிலும் இன்னும் பல இடங்களிலும் கைதுசெய்த இராணுவத்தினர், கைதுசெய்தவர்களை திருப்பி ஒப்படைக்கவில்லை.

அத்தோடு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டவர்கள் எங்கே எனவும் இராணுவத்தினர் சொல்லவில்லை.

இந்நிலையில் வட, கிழக்கில் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் தொடர் போராட்டத்துடன், கண்ணீரோடு தமது நாட்களை நகர்த்தி வருகின்றனர்.

இவர்களை மாறி மாறி வரும் அரசாங்கங்களும் கண்டுகொள்ளாத நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

இந்நிலையில் கடந்த 04ஆம் திகதி தமிழ் அரசு கட்சியின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியை சந்திக்கும் போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாகவும் அவரிடம் பேசினோம்.

அவர் இந்த விடயம் தொடர்பில் பரிசீலனை செய்வதாகவும், கூடிய விரைவில் இதற்கான ஒரு வழியை ஏற்படுத்தித் தருவதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் இந்த ஜனாதிபதியினுடைய ஆட்சியிலாவது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும்.

குறிப்பாக இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி கண்ணீரோடு இந்த வீதிகளில் தொடர் போராட்டத்நில் ஈடுபட்டிருந்த பெற்றோர்கள் பலர் இறந்துபோன அவலங்களும் இங்கே நிகழ்ந்திருக்கிறது.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கண்ணீருக்கு முன்னைய மகிந்த அரசாங்கமானது பதில் சொல்லியே ஆகவேண்டும்.

தற்போது இந்த நாட்டைப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசாங்கம் பலத்த பெரும்பாண்மை பலத்தோடு இருக்கின்றனர்.

இந்த அரசாங்கத்தைச் சார்ந்தவர்களும் இந்த நாட்டில் ஒரு காலத்தில் போராட்டங்களில் ஈடுபட்டனர். அந்த வகையில் எமது போராட்ட வலியையும் அவர்களும் உணர்வார்கள் என நம்புகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீள ஒப்படையுங்கள் அல்லது அதற்கான பதிலைச் சொல்லுங்கள் என்றுதான் நாம் கேட்கின்றோம்.

இந்த உறவுகள் இன்னும் எவ்வளவு காலத்துக்கு உறவுகளைத் தேடி அலைவது!

இந்த உறவுகளுக்கான தீர்வினை காலம் தாழ்த்தாமல் உடனடியாக வழங்கவேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றார்.

# யாழில் காய்ச்சலினால் 06 பேர் உயிரிழப்பு; காய்ச்சல் ஏற்பட்டால் வைத்தியசாலைக்கு செல்லவும்!

### யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்

11.12.2024

யாழ்ப்பாண மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் நோய் பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.



யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்றைய நாள் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்கு பின்னர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது. இக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த இறப்புக்களில் இரண்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இரண்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஒன்று கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஏற்பட்டுள்ளன. யாழ் போதனா வைத்தியசாலையில் இறந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராக காணப்படுகின்றனர். இறந்தவர்கள் எல்லா இறப்புக்களும் சுவாசத் தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் பன்னிரெண்டு நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் இருபத்தொரு நோயாளர்களுமாக மொத்தமாக இதுவரை முப்பத்து மூன்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சலுடன் இருபது நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக் காய்ச்சலானது எலிக் காய்ச்சலாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இக் காய்ச்சல் எந்த வகையானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் குருதி மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சலானது மழை வெள்ளத்தில் எலி, ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எச்சங்கள் கலப்பதன் மூலம் இந் நோய்க்கிருமிகள் வெள்ள நீரினில் கலக்கின்றன. பொதுமக்கள் இந்த வெள்ளநீருடன் தொடுகை ஏற்படும் போது அவர்களது தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் மூலம் உடலின் குருதிச் சுற்றோட்ட தொகுதியை சென்றடைந்து எலிக்காய்ச்சல் நோய் உண்டாகிறது. மேலும் இக்கிருமிகள் கலந்த அசுத்தமான நீரைப் பருகுவதனாலும் எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.

இக்காய்ச்சலிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் விடயங்களை பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

காய்ச்சல் ஏற்பட்டால் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடவும். காய்ச்சல் ஏற்பட்டு தாமதமாக அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தந்தமையினாலேயே பெரும்பாலான இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

www.sangathamil.ca

# இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறில் குறித்து இந்திய உயர்ஸ்தானிகரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது!

### வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

12.12.2024

கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகருக்கும், இலங்கைத் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பின் போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் குறித்து தம்மால், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

அதேவேளை இந்திய உயர்ஸ்தானிகர் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்துவதாகத் தெரிவித்ததுடன், ஜனவரியில் முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொள்வதாகத் தெரிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக மீனவதின நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த நவம்பர்மாதம் 21ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு இந்தச் சந்திப்பில் இந்திய இழுவைப்படகுகள் எமது கடல் பகுதிகளுக்குள் அத்துமீறி வருகைதந்து, எமது மீனவ மக்களின் வாழ்வாதாரங்களைச் சூறையாடிச் செல்கின்ற விடயத்தினையும் முன்வைத்திருந்தேன்.

நாம் கரையில் இருந்து பார்க்கும்போது தெரியக்கூடிய அளவில் வெளிச்சமிட்டவாறு இந்திய இழுவைப் படகுகள் செய்கின்ற அட்டகாசமான செயற்பாடுகளைப் பற்றி அவரிடம் மிக அழுத்தமாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்தவகையில் இந்திய மீனவர்களால் எமது மீனவர்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் தொடர்பில் அவரிடம் மிக விரிவாக எடுத்துக்கூறியிருந்தேன்.

இவ்வாறு அவரிடம் இந்த விடயத்தை முன்வைத்து நான் பேசும்போது ஏனைய தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாகப் பேசியிருந்தனர்.

இதன்போது உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இதற்குப் பதிலளிக்கும்போது,

இந்த இழுவைப் படகுகள் அத்துமீறி நுழையும் விடயத்தில் கவனம் செலுத்துவதாகவும், எதிர்வரும் ஜனவரியில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் தாம் வருகைதரவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக இந்த விடயங்களில் நாம் தொடர்ந்தும் அவதானம் செலுத்திக்கொண்டேயிருக்கின்றோம்.

இதுமாத்திரமின்றி பாராளுமன்றத்தில் பேசக்கிடைக்கின்ற நேரங்களிலும் இந்த விடயம் தொடர்பில் பேசுவோம்.

இந்திய இழுவைப்படகுகள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தினைச் சூறையாடுவதற்கு எதிராக இதற்கு முன்னர் எவ்வாறு குரல்கொடுத்துவந்தோமோ அதேபோல் தொடர்ந்தும் இந்த விடயத்தில் குரல்கொடுப்போம்.

அதேபோல் தென்னிலங்கைமீனவர்களின் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும் தொடர்ந்தும் நாம் குரல்கொடுப்போம்.

இந்த விடயங்கள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடனும் பேசியிருக்கின்றேன்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம்செலுத்துவதாக கடற்றொழில் அமைச்சரும் உறுதியளித்திருக்கின்றார்.

அதேவேளை இந்த காற்றாலைத் திட்டம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த நாட்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது மன்னாருக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராயும்போது, அங்குள்ள மக்கள் கூடுதலாக இந்த காற்றாலைத் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் தெரிவித்திருந்தனர். அந்தவிடயம் தொடர்பிலும் பேசியுள்ளோம். காற்றாலைத் திட்டத்தால் மன்னாரில் உள்ள பாதிப்பு நிலைமைகள் குறித்தும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.



அத்தோடு யாழ்ப்பாணத்திற்கும் இந்த காற்றாலைத் திட்டத்தைக் கொண்டுவரப்போவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே யாழ்ப்பாணம் காற்றாலை தொடர்பான விடயங்களையும், மன்னார் காற்றாலை தொடர்பானவிடயங்களையும் உரியவர்கள் விரிவாக எம்மிடம் கையளியுங்கள்.

இதேவேளை மன்னாரில் கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினையும் காணப்படுகின்றது. முல்லைத்தீவில் மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்த காலத்தில், கொக்கிளாயில் கனியமணல் அகழ்விற்கென மக்களின் காணிகள் சுமார் 44ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதன்பிற்பாடு கனிய மணல் அகழ்விற்காக அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் எமது போராட்டங்களினால் கைவிடப்பட்டிருக்கின்றது.

மேலும் சட்டவிரோத கடற்றொழில்கள் என அரசால் அறிவிக்கப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகள் அனைத்தையும் முற்றாகத் தடைசெய்து, எமது மீனவர்களின் முறையான கடற்றொழில் செயற்பாடுகளுக்கு உதவவேண்டும். இந்திய இழுவைப்படகுகளால் எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும். இந்த விடயங்களுக்காக நாம் தொடர்ந்தும் குரல் கொடும்போம் – என்றார்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு!

12.12.2024

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு, விசாரணைக்காக இன்று வியாழக்கிழமை (12)எடுத்துக்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் காணாமல் போனோர் அலுவலகம் (ஓ எம் பி ) சார்பில் அலுவலகத்தின் சட்டத்தரணி, ஓஎம்பி அலுவலகத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய இணைப்பாளர் கிருஷாந்தி ரத்நாயக்க, சட்ட வைத்திய அதிகாரி சார்பாக மருத்துவ அதிகாரி, மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணிகளான கணபதிப்பிள்ளை கணேஸ்வரன், அனித்தா சிவனேஸ்வரன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இன்றைய வழக்கின் பின்னர் சட்டத்தரணி கணபதிப்பிள்ளை கணேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான AR 804/23 வழக்கானது, இன்று (12) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்ட போது சட்ட வைத்திய அதிகாரி சார்பாக இன்றையதினம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு போதுமான கால அவகாசம் இல்லை என்றும் இன்னும் இரண்டு மாத கால அவகாசம் வேண்டும் என்ற அடிப்படையில் மன்றில் திகதியினை கோரியிருந்தனர்.

அதன் அடிப்படையில் மன்றானது சட்ட அதிகாரியின் விண்ணப்பத்தினை ஏற்று குறித்த வழக்கானது மீண்டும் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதிக்கு தவணையிடப்படுள்ளது எனக் கூறியிருந்தார்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற கடந்த வழக்கின் பின்னர் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், இதுவரை காலமும் மனித புதைகுழியில் இருந்தும் மற்றும் மனித எலும்பு கூட்டு தொகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட இலக்க தகடு சம்பந்தமான முழு விபரங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அகழ்வில் ஈடுபட்டிருந்த தொல்லியல் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் இறுதி அறிக்கை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் , இதுவரை காலமும் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 20 வரையான எலும்புக்கூடுகள் முற்றாக பகுப்பாய்வுக்கு உட்பட்ட நிலையில் மிகுதி எலும்புக்கூடுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதிதாக புத்தர் சிலை!


12.12.2024

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சி பாடசாலை வளாகத்தில் புத்தர் சிலையொன்றை வைத்துள்ளமை தொடர்பில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையின் தாதியர் பயிற்சி பாடசாலைக்குள் சரஸ்வதி சிலைக்கு முன்பாகவே புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே பௌத்த மாணவர்கள, தாதியர்கள், வைத்தியர்களின் வழிபாட்டுக்காக பௌத்த விகாரையொன்று உள்ள நிலையில் தாதியர் பாடசாலைக்கு முன்பாகவும் புத்தர் சிலையொன்றை நிறுவியுள்ளமை தொடர்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.



குறித்த புத்தர் சிலை தொடர்பில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு முன்பாக அது தொடர்பிலான நடவடிக்கைகளை வைத்தியசாலை நிர்வாகம் முன்னெடுக்கவேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களது போராட்டத்தை அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுத்த சிறீலங்கா புலனாய்வாளர்!

12.12.2024

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று (10.11.2024) காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட போது சிவில் உடை தரித்த சிறீலங்கா புலனாய்வாளர் போராட்டகாரர்களினை அருகே சென்று ஒவ்வொருவராக புகைப்படம் எடுத்த போது, இவ்விடத்தில் ஒவ்வொரு உறவுகளையும் புகைப்படம் எடுக்க வேண்டிய தேவை என்ன என கூறி துரத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த நாள்முதல் தமது உறவுகளுக்கான நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து



காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் போராட்டங்களை இராணுவத்தினர், பொலிசார், சிவில் உடை தரித்த புலனாய்வாளர்கள் போன்றோர் போராட்டத்தில் கலந்து கொண்ட



வர்களை புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்றையதினம் இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்றவர்களை சிவில் உடை தரித்த புலனாய்வாளர் வீடியோ எடுத்து அச்சுறுத்தும் விதமாக செய்யப்பட்டிருந்தார்.

# யாழ். தையிட்டியில் சட்ட விரோதமாக பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்ட வபிகாரையை அகற்றக் கோரி போராட்டம்!

13.12.2024

யாழ். தையிட்டியில் தமிழ் மக்களது காணிகளை இராணுவம் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து உரிய அனுமதிகள் எதுவுமின்றி சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றிக் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்க வலியுறுத்தி 18 ஆவது மாதத்தில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



# யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பட்டதாரிகள் போராட்டம்!

13.12.2024

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தாங்கள் பட்டப் படிப்பினை நிறைவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்ற போதிலும் அரச வேலைவாய்ப்பு தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

எனவே புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் அரசாங்கம் தமக்கான அரச நியமனத்தை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





இப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் கனிய மணல் அகழ்வு முயற்சி துரைராசா ரவிகரன் எம்.பியின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது!

12.12.2024

முல்லைத்தீவு - செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் எனும் நிறுவனம் இல்மனைட் அகழ்விற்கு எடுத்த முயற்சி, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், அப்பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பால் 13.12.2024 இன்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.



அதேவேளை மக்களுடைய அனுமதியின்றி, அத்துமீறி எமது இடங்களில் கனியமணல் அகழ்வு மேற்கொள்ள முடியாதெனவும். உடனடியாக இந்த அகழ்வு முயற்சிகளைக் கைவிட்டு அங்கிருந்து வெளியேறுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மற்றும், பொதுமக்கள் தமது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

ஏற்கனவே கொக்கிளாய் பகுதியில், அப்பகுதி மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்தபோது, மக்களுக்குரிய சுமார் 44 ஏக்கர் வயல் காணிகளை அத்துமீறி அபகரித்து அங்கு கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டியதுடன், அந்த இடங்கள் மீள் நிரப்பப்படாமல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்,



அங்கு கடலரிப்பு அபாயம் ஏற்பட்டிருப்பதாக மக்கள் தம்மிடம் முறையீடு செய்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில் தற்போது செம்மலை நாயாறு உள்ளிட்ட இடங்களில் கனியமணல் அகழ்வதாலும், செம்மலையில் அமைக்கப்பட்டுள்ள உவர்நீர் தடுப்பணை பாதிக்கப்பட்டு பாரிய அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதையும், மக்களின் வயல் நிலங்கள், குடியிருப்புக்கள் இதனால் பாதிக்கப்படும் என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.



எனவே மக்களுக்கு பாதகமாகன இந்த கனியமணல் அகழ்வை ஏற்றுக்கொள்ளமுடியாதெனவும் தனது கடுமையான எதிர்ப்பினைவெளியிட்டார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியில்லாமல், இப்பகுதி மக்களின் அனுமதியில்லாமல் எவ்வாறு இங்கு கனியமணல் அகழ்வதற்கு வருகை தரமுடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது கேள்வி எழுப்பியதுடன், உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், அப்பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பினைத்



தொடர்ந்து கனியமணல் அகழ்விற்குரிய முதற்கட்ட செயற்பாடுகளுக்கு வருகைதந்த மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் நிறுவனத்தினர் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிங்கராசா பிரதாஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் இளையதம்பி தணிகாசலம், நாயாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள், அப்பகுதி பொதுமக்கள் என பலரும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்காவினால் வரி விதிக்கப்பட்டால் ஒன்ராரியோவை கடுமையாக பாதிக்கும்!

01.12. 2024

அமெரிக்காவினால் வரி விதிக்கப்பட்டால் ஒன்ராரியோ மாகாணம் கடுமையாக பாதிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மெக்சிகோ மற்றும் கனடிய ஏற்றுமதிகள் மீது வரி விதிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இவ்வாறு வரி விதிக்கப்பட்டால் அதில் அதிக அளவில் ஒன்ராரியோ மாகாணம் பாதிப்புகளை எதிர்நோக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பிலான எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

கனடாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 வீதம் வரையில் வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார். Canadian real estate investments வரி விதிக்கப்பட்டால் அது ஒன்ராரியோ பொருளாதாரத்தை மிக மோசமாக பாதிக்கும் என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ஒன்ராரியோவின் வாகன கைத்தொழில்துறை மோசமாக பாதிக்கும் எனவும் அதிக அளவான பணியாளர்கள் பணி



நீக்கப்படுவார்கள் எனவும் பொருளியல் நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

# கனடாவின் கியூபிக் மாகாண மருத்துவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

04.12. 2024

கனடாவின் கியூபிக் மாகாணத்தில் மருத்துவர்களுக்கு தங்களது சேவை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய கியூபெக் மாகாண சுகாதார அமைச்சர் கிறிஸ்டியன் டுபே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மாகாணத்தினால் பயிற்றுவிக்கப்படும் மருத்துவர்கள் தங்களது முதல் ஐந்து ஆண்டு கால பகுதி சேவையை, கியூபிக் பொதுச் சுகாதார வலயமைப்பில் வழங்கத் தவறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த நிபந்தனையை பூர்த்தி செய்யத் தவறும் மருத்துவர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் டாலர் அபராதத்தை செலுத்த நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கால நிபந்தனையை பூர்த்தி செய்ய முன்னதாக தனியார் துறையில் அல்லது மாகாணத்திற்கு வெளியில் மருத்துவ சேவையை வழங்கினால் அவர்களுக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவர் ஒருவரை பயிற்றுவிப்பதற்காக மாகாண அரசாங்கம் சுமார் நான்கரை இலட்சம் டாலர்களை செலவிடுவதாகவும் வதிவிடத்திற்காக சுமார் 8 இலட்சம் டாலர்களை செலவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மக்களின் பணத்தை கொண்டு கற்றவர்கள் அவர்களுக்கு சேவை வழங்க வேண்டியது அத்தியாவசியமானது என தெரிவிக்கப்படுகிறது.



# ஒரே மாதத்தில் 2 மில்லியன் முறை உணவு வாங்கியை நாடிய கனேடியர்கள்!

04.12. 2024

கனடாவில், கனடாவில் உணவு வங்கிகளை நாடுவோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ள நிலையில், ஒரே மாதத்தில் 2 மில்லியன் முறை உணவு வங்கிகளை மக்கள் நாடியுள்ளது தெரியவந்துள்ளது.

கனடாவில் உணவு வங்கிகளை நாடுவோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. 2024ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் மட்டும், 2 மில்லியன் மக்கள் உணவு வங்கிகளை நாடியுள்ளதாக Food Banks Canada அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை, முந்தைய ஆண்டைவிட ஆறு சதவிகிதமும், 2019ஐ விட 90 சதவிகிதமும் அதிகமாகும்.

மாதம்தோறும் உணவு வங்கிகளை பயன்படுத்தும் 12,000 பேரில் 50 சதவிகிதம் பேர் முழு நேர வேலை செய்பவர்கள் ஆவர். அத்துடன், 60 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் நன்கு கற்றவர்கள், வேலையிலிருப்பவர்கள்.

அதாவது, வேலைக்குச் சென்றும் அவர்களால் குடும்பத்தின் செலவுகளை சமாளிக்க முடியாத நிலை நாட்டில் காணப்படுகிறது.

ஆக, வேலையிலிருப்பவர்கள் கூட மீண்டும் மீண்டும் மாதம் தோறும் உணவு வங்கிகளை நாடிவருவதால், அவர்கள் அனைவருக்கும் உணவளிக்க இயலாத நிலை தொண்டு நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

30 சதவிகிதத்துக்கும் அதிகமான உணவு வங்கிகளில் உணவுப்பொருட்கள் இல்லாத நிலை உருவாகிவிடுகிறது.

இப்படி கஷ்டப்படும் மக்களின் தேவைகளை சந்திக்கவேண்டியது அரசாங்கம், ஆனால், அந்த சுமை முழுவதும் உணவு வங்கிகளின் தோள்களில் விழுந்துள்ளது.

ஆக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளை நேருக்கு நேர் பார்க்கும்போது எனக்குக் கோபம் வருகிறது என்கிறார் உணவு வங்கி ஒன்றை நடத்தும் Matt Noble.

நாட்டில் என்ன நடக்கிறது, மக்களுக்கு எவ்வளவு தேவைகள் உள்ளன என்பதை இந்த அரசியல்வாதிகளிடம் சொன்னால், பதிலுக்கு முதுகை தட்டிக்கொடுத்து, நீங்கள் செய்யும் சேவைக்காக நன்றி என்று மட்டும் கூறிச்சென்றுவிடுகிறார்கள் என்கிறார்




Matt Noble.

உணவு வங்கிகள் அமைக்கப்பட்டதற்கான நோக்கமே மாறி, மக்களுக்கு மாதா மாதம், ஆண்டு முழுவதும் உணவளிக்கும் அமைப்புகளாக அவை மாறிவிட்டன.

இதற்காக உணவு வங்கிகள் உருவாக்கப்படவில்லை, மக்களுடைய தேவைகளை அரசு சந்தித்து, உணவு வங்கிகளே இல்லாத ஒரு நிலை உருவாகவேண்டும் என்கிறார் மற்றொரு உணவு வங்கியின் தலைவரான Josh Smee.

# எயார் கனடா நிறுவனம் பயணிகளுக்காகன விசேட அறிவிப்பு!

05.12. 2024

எயார் கனடா விமான சேவை நிறுவனம் விமானத்தில், கையில் சுமந்து செல்லும் பொதிகள் தொடர்பில் புதிய நடைமுறையை அறிமுகம் செய்ய உள்ளது.

இதன்படி எயார் கனடா விமான சேவை நிறுவனம் பயணிகள் கையில் பொதிகளை சுமந்து செல்வதை தடை செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.

குறைந்த கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர்கள், ஆசனங்களை ஒதுக்கீடு செய்வதற்கு விசேட கட்டணம் ஒன்றை அறவீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புத்தாண்டில் இந்த புதிய கட்டண நடைமுறை அமல்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 3ம் திகதி முதல் இந்த கட்டண அறவீட்டு முறைமை நடைமுறைக்கு கொண்டு வரப்பட உள்ளது.

இதன்படி பயணிகள் கையில் சுமந்து செல்லும் பயண பொதிகளுக்கும் கட்டணம் அறவீடு செய்யப்பட உள்ளது.

பணப்பை, மடிக்கணினி போன்ற சிறிய பொருட்கள் கட்டணம் என்று எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட உள்ளது.




www.sangathamil.ca

# ரொரான்ரோவில் களவாடப்பட்ட பெருந்தொகை வாகனங்கள் மீட்பு!

06.12. 2024

ரொரான்ரோ பெரும்பாக பகுதியில் களவாடப்பட்ட பெருந்தகை வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் நான்கு மில்லியன் டொலர் பெறுமதியான வாகனங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரொரான்ரோவின் வாட்டர் லூ தொகுதியில் இந்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகன கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளன.

களவாடப்பட்ட வாகனங்கள் உதிரிபாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 52 அதி சொகுசு வாகனங்களை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.



# அடுத்த ஆண்டில் நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று 800 டாலர்கள் மேலதிகமாக உணவிற்காக செலவழிக்க நேரிடும்!

**பிரிட்டிஷ் கொலம்பியா, டெல் ஹோஸ், சஸ்கெட்ஸ்வான் மற்றும் குயில்ப் பல்கலைக்கழகம்**

07.12. 2024

கனடாவில் நான்கு பேரை கொண்ட குடும்பம் ஒன்று அடுத்த ஆண்டில் உணவிற்காக கூடுதல் செலவை மேற்கொள்ள நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் நாளுக்கு நாள் உணவு பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன.

அந்த வகையில் இந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அடுத்த ஆண்டில் நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று 800 டாலர்கள் மேலதிகமாக உணவிற்காக செலவழிக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம், டெல் ஹோஸ் பல்கலைக்கழகம், குயில்ப் பல்கலைக்கழகம் மற்றும் சஸ்கெட்ஸ்வான் பல்கலைக்கழகம் என்பன கூட்டாக இணைந்து இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளன.

இதன்படி நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் 16,833 டாலர்களை செலவிட நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆண்டில் சராசரியாக 3 முதல் 5 வீதம் வரையில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உணவு பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் எனவும் இறைச்சி, மரக்கறி மற்றும் உணவு விடுதிகளில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகள் என்பனவற்றின் விலைகள் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# ரொரான்ரோ காவல்துறையால் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

08.12.2024

ஒன்ராரியோவின் ரொறன்ரோ நகரில் தொலைபேசி வழியான மோசடிகள் இடம் பெறுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று போலியாக தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தி மோசடிகள் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ரொரான்ரோ பொலிசார் ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களை போன்று தொலைபேசியில் உரையாடி நபர்களின் தனிப்பட்ட விபரங்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிலைய இலக்கத்திலிருந்து அழைப்பு ஏற்படுத்துவது போன்று ஏற்படுத்தப்படுவதாகவும் உண்மையில் அவ்வாறு அழைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல் கிடைக்க பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி தகவல்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மோசடிகளில் ஈடுபடும் நோக்கில் இவ்வாறு தகவல்கள் திரட்டப்படுவதாகவும் இது குறித்து மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




# இறக்குமதி செய்யும் பொருட்கள் மீது வரி விதித்தால் ட்ரம்புக்கு தக்க பதிலடி: கனேடியப் பிரதமர் ட்ரூடோ!

10.12. 2024

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப்பட இருக்கும் வரியால், அந்தப் பொருட்களின் விலை அதிகரிக்கும் என்பதை அமெரிக்கர்கள் உணரத் துவங்கியுள்ளார்கள் என்று கூறியுள்ளார் ட்ரூடோ.

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்கள் மீது அமெரிக்கா வரி விதிக்குமானால், அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ட்ரம்ப், தான் ஜனாதிபதியாக பதவியேற்றதும், கையெழுத்திடும் முதல் ஆவணங்களில் ஒன்று, கனடா, மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவிகித வரி விதிப்பது தொடர்பானதுதான் என்று கூறியிருக்கிறார்.

இந்நிலையில், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது 25 சதவிகித வரி விதிக்கப்படுமானால், அது கனடாவின் பொருளாதாரத்தைக் கடுமையாக பாதிக்கும் என்பதை மறுக்கமுடியாது என்று கூறியுள்ளார் கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ.

அதே நேரத்தில், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது ட்ரம்ப் வரி விதிப்பாரானால், அந்தப் பொருட்களின் விலை கணிசமாக அதிகரிக்கும் என்னும் உண்மையை அமெரிக்கர்கள் உணரத்துவங்கியுள்ளதாக ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஸ்டீல் மற்றும் அலுமினியத்துக்காக கனடாவைத்தான் சார்ந்துள்ளது.

அத்துடன், அமெரிக்கா தனது கச்சா எண்ணெய் தேவையில் 65 சதவிகிதத்தையும், குறிப்பிடத்தக்க அளவிலான மின்சாரத்தையும், கனடாவிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது.

கனடாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மொத்த இயற்கை எரிவாயுவும் அமெரிக்காவுக்குத்தான் செல்கிறது.



வேளாண்மைக்கான பொருட்களையும் கனடா அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறது.

ஆக, கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இத்தனை பொருட்கள் மீதும் அமெரிக்கா 25 சதவிகித வரி விதிக்குமானால், அமெரிக்காவில், அவை அனைத்தின் விலையும் கணிசமாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# அதிகரித்து வரும் குற்றங்களால் ஸ்கார்பரோ குடியிருப்பாளர்கள் பீதியடைந்துள்ளனர்!

11.12.2024

ஸ்கார்பரோ மற்றும் மார்க்கமில் உள்ள தமிழ் நகைக் கடைகளை குறிவைத்து வாகனத் திருட்டுகள் மற்றும் பகல் நேரக் கொள்ளைகள் சமீபத்தில் அதிகரித்திருப்பது குடியிருப் பாளர்கள் மற்றும் வணிக உரிமையாளர்களிடையே கவ லையை ஏற்படுத்தியுள்ளது. டிசம்பர் 6, 2024 அன்று கனேடிய தமிழ் வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்தில் பேசிய ஸ்கார்பரோ - ரூஜ் பார்க்கின் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள், கடுமையான பிணைமீட்புச் சட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தினார், "மீண்டும் மீண்டும் குற்றவாளிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு, அடுத்த நாள் அதே குற்றங்களைச் செய்கிறார்கள். இது நிறுத்தப் பட வேண்டும்" என அவர் தெரிவித்தார்.

இந்த அழுத்தமான பாதுகாப்புச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக, அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் எதிர்வரும், செவ்வாய் கிழமை டிசம்பர் 17 ஆம் திகதியன்று மாலை 7:30 மணிக்கு மால்வெர்ன் குடும்ப வள மையத்தில் சமூகப் பாதுகாப்பு பொதுக் கூட்டமொன்றை நடத்துகிறார். குடியிருப்பாளர்கள் கலந்துரை யாடலில் கலந்துகொண்டு தங்கள் கவலைகளைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். இப்பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக வாகனத் திருட்டு மற்றும் பிணை சீர்திருத்த இணை அமைச்சர், கிராஹம் மக்கிரெகர் மற்றும் 42



பிரிவின் பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள்.

# ரொரான்ரோவில் நீர் கட்டணங்கள் அதிகரிக்கும் சாத்தியம்!

11.12.2024

ரொரான்ரோவில் நீர் மற்றும் கழிவு சேகரிப்பிற்கான கட்ட ணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு இந்த கட்டண அதிகரிப்பை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக தெரி விக்கப்படுகிறது.

ரொறன்ரோ வீட்டு உரிமையாளர்கள் மீது இவ்வாறு கட்டண அதிகரிப்பு விதிக்கப்பட உள்ளது.

நீர் மற்றும் கழிவு நீர் என்பனவற்றிற்காக கட்டணங்களை 3.7 வீதத்தினால் அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இவ்வாறு கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன் மூலம் இந்த கட்டண அதிகரிப்பு மூலம் சுமார் 53 மில்லியன் டொலர்களை மேல் அதிகமாக ஈட்ட முடியும் என நகராட்சி நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.



# கனடாவில் வட்டி 0.5 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது!

11.12. 2024

கனடாவில் வட்டி வீதம் தொடர்பில் மத்திய வங்கி அறி வித்துள்ளது.

ஐந்தாவது தடவையாகவும் மத்திய வங்கி வட்டி வீதம் குறைக் கப்பட்டுள்ளது.

இதன்படி இன்றைய தினம் 0.5 வீதத்தினால் இவ்வாறு வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு பகுதியில் ஒரு வீதமாக பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

எவ்வாறெனினும் கனடாவில் தொழில் வாய்ப்பு இல்லாதவர் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.




# ஒன்ராரியோ அரசாங்கம் பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் பாதுகாப்பை மீட்டமைக்கின்றது!

12.12.2024


இன்று ஒன்ராரியோ அரசாங்கம் ஒரு சட்டத்தை அறிமுகப் படுத்துகிறது, அது நிறைவேற்றப்பட்டால், நகராட்சிகள் மற்றும் உள்ளூர் காவல்துறையினருக்கு புதிய வளங்கள் மற்றும் அமலாக்கக் கருவிகளை வழங்குவதன் மூலம் சமூகப் பாது காப்பை சிறப்பாகப் பாதுகாக்கவும், வீடற்ற முகாம்களின் வளர்ந்து வரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் சட்டவிரோத போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கும் பயன்பெறும்.

இது தொடர்பாக அமைச்சர் விஜய் தணிகாசலம் கருத்துத் தெரிவிக்கையில், "எங்கள் அரசாங்கம் $75.5 மில்லியான் டொலர்களை முதலீடு செய்து வீடற்றவர்களின் நிலைமையைத் தடுப்பதற்கும், முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு நியாயமான மாற்றுத் தங்குமிடத்திற்கான அணுகலை வழங்குவதற்கும் மேலும் முதலீடு செய்கிறது" என்றார். இது ஒவ்வொரு ஆண்டும் வீடற்றோர் தடுப்பு திட்டங்களில் மாகாணத்தின் தற்போதைய $700 மில்லியன் முதலீட்டிற்கும், அத்துடன் 19 வீடின்மை மற்றும் போதைக்கு அடிமையானோர் மீள்வாழ்வு மேம்பாட்டு



இணைப்பு மையங்களுக்கான (HART) மாகாணம் முதலீடு செய்யும் $378 மில்லியனுக்கும் கூடுதலாகும் என்பது குறிப் பிடத்தக்கது.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## தமிழ்நாடு மதுரையில் பாலச்சந்திரன் நினைவு கல்வெட்டு உடைப்பு!

30.11. 2024




மதுரையில் தமிழீழத் தேசியத்தலைவர்பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் நினைவு கல்வெட்டு உடைக்கப்பட்டது. மதுரை பைபாஸ் சாலையில் உள்ள கேஎஃப்சி உணவகம் அருகே கடந்த வருடம் ஜனவரி மாதம் நாம் தமிழர் கட்சியின் சார்பாக கொடிக்கம்பம் அமைக்கப்பட்டது. அதில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கொடியேற்றினார். கொடி கம்பத்தில் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் நினைவாக கல்வெட்டும் அமைக்கப்பட்டது.

நேற்று இரவு திடீரென மர்ம நபர்களால் கல்வெட்டு உடைக்கப்பட்டு கொடிகள் அகற்றப்பட்டு இருந்தது. இதனை அறிந்த நாம் தமிழர் கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் அப்பகுதியில் திரண்டனர். மேலும் இச்சம்பவம் குறித்து மதுரை மாவட்ட நாம் தமிழர் கட்சி சார்பாக எஸ்எஸ் காலனி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த இடத்தில் பலத்த காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## நூலகங்களுகக்கிடையே புத்தகங்கள் உள்ளிட்ட வளங்களை பரிமாறி கொள்ள வேண்டும்!

### அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

05.12.2024

நூலகங்களுக்கு இடையே புத்தகங்கள் உள்ளிட்ட வளங்களை பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வேல்ராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தெற்காசிய பல்கலைக்கழகம் மற்றும் நூலக தகவல் அறிவியல் கழகம் சார்பில் சர்வதேச நூலக உச்சி மாநாடு-2025 டெல்லியில் வரும் பிப்ரவரி 5 முதல் 7-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த மாநாட்டுக்கான முன்னோட்ட அறிமுக நிகழ்ச்சி சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் மாநாட்டின் இணையதள முகவரி அறிமுகம் செய்யப்பட்டு, அது சார்ந்த சிறப்பு கையேடும் வெளியிடப்பட்டது. மேலும், இந்த விழாவில் சமூக சேவகர் பாலம் கல்யாணசுந்தரத்துக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஆர்.வேல்ராஜ் பேசும்போது, "கல்வியறிவால் மட்டுமே நாம் உலகை ஒருங்கிணைக்க முடியும். இதற்கு நூலகங்கள் பெரிதும் உதவி செய்கின்றன. நூலகங்களே நாட்டின் வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றுகின்றன. இங்கு அறிவு என்பது பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

அதற்கு ஏராளமான தொழில்நுட்பங்கள் வந்துவிட்டன. அவற்றை நூலகர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நூலகங்களுக்கு இடையே புத்தகங்கள் உள்ளிட்ட வளங்களை பரிமாறிக் கொள்ள வேண்டும். ஆய்வுப் பணியில் ஈடுபடுவோர் நிச்சயம் நூலகத்துக்கு வருவார்கள். அப்போதுதான் அவர்கள் கற்றது கை மண் அளவு என்பதை உணர்கின்றனர். எனவே, அனைவரும் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் தெற்காசிய பல்கலைக்கழகத் தலைவர் கே.கே. அகர்வால், துணைத் தலைவர் பங்கஜ் ஜெயின், இந்திய தேசிய நூலக முன்னாள் தலைமை இயக்குநர் பி.ஒய்.ராஜேந்திர




குமார், நூலக தகவல் அறிவியல் கழகத்தின் தலைவர் பி.வி. கொன்னூர், செயலாளர் பி.எஸ்.சிவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சர்வதேச உச்சி மாநாடு தொடர்பான விவரங்கள் மற்றும் கட்டணம் உள்ளிட்ட கூடுதல் தகவல்களை https://gls25.org/ எனும் வலைத்தளத்தில் அறிந்து கொள்ளலாம் என்பது

## மருந்துவர்களின் பரிந்துரையின்றி மருந்து விற்பனை: 266 மருந்தகங்களின் உரிமம் தற்காலிகத் தடை!

07.12.2024

மருத்துவர்களின் பரிந்துரையின்றி மருந்துகளை விற்பனை செய்த 266 மருந்தகங்களின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்தகங்கள் உள்ளன. நூற்றுக்கணக்கான மருந்து உற்பத்தி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

அவற்றின் செயல்பாடுகளையும், வர்த்தக நடவடிக்கைகளையும் மாநில மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரகம் கண்காணித்து வருகிறது. குறிப்பாக, மருத்துவரின் பரிந்துரையின்றி சில மருந்துகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்தும் சோதனை மேற்கொள்ளப்படுகிறது. முறைகேடுகள், விதிமீறல்கள் கண்டறியப்படும்போது, விசாரணை நடத்தி, வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

இந்நிலையில், சில மருந்தகங்களில் மன நல மாத்திரைகள், வலி நிவாரண மருந்துகள், தூக்க மாத்திரைகள், கருத்தடை மற்றும் கருக்கலைப்பு மாத்திரைகள் மருத்துவரின் பரிந்துரையில்லாமல் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டது. 200-க்கும் மேற்பட்ட மருந்து கடைகளில் சட்ட விரோத விற்பனை நடந்திருப்பதை மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் கண்டறிந்தனர்.

அடிமைப்படுத்தும் மருந்துகளை தொடர்ந்து விற்பனை செய்து வருபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுக்க விழுப்புரம், திருப்பூர், சேலம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் தொடர் சோதனைகள் நடத்தப்பட்டன. முழுமையாக விசாரணை நடத்தி முதல்கட்டமாக மருந்தகங்கள், மொத்த விற்பனை நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாநில மருந்து உரிமம் வழங்குதல், கட்டுப்பாட்டு அதிகாரி எம்.என்.ஸ்ரீதர் கூறுகையில், "மருந்து கடைகளில் மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் மருந்துகளை விற்பனை செய்வது தவறானது. சில முக்கிய மருந்துகளை அதுபோல் விற்பனை செய்வது சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும். கடந்த ஜனவரி 1-ம் தேதி முதல் தற்போது வரை ரசீது இல்லாமல் மருந்து விற்பனையில் ஈடுபட்ட 266 மருந்



தகங்களின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

மருத்துவர்களின் பரிந்துரையின்றி கருத்தடை மாத்திரை, தூக்க மாத்திரை விற்பனையில் தொடர்ந்து ஈடுபட்ட 31 மருந்தகங்களின் உரிமம் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது. விதிகளுக்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்ட 56 மொத்த விற்பனை நிறுவனங்களின் உரிமமும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன" என்றார்.

# பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை தீவிரமாக செயல்படுத்துக!

## பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

09.12.2024

தமிழகத்தில் பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை மிகக் கடுமையாக செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பெரும்பான்மையான மாவட்டங்களில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்து வருவதாக ஆய்வில் தெரியவந்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. இதற்கு பொது இடங்களில் புகைப் பிடிப்பது தான் காரணம் என்று மருத்துவர்கள் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், பொது இடங்களில் புகைப்பதைத் தடுக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

சென்னை அடையாறு புற்றுநோய் நிறுவனம் வெளியிட்டுள்ள 2019ஆம் ஆண்டின் தமிழ்நாடு புற்றுநோய் பதிவேட்டுத் திட்டத்திற்கான அறிக்கையில் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 3500 முதல் 4000 பேருக்கு நுரையீரல் புற்றுநோய் கண்டறியப்படுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதில் அதிர்ச்சியளிக்கும் உண்மை என்னவென்றால், புகைப் பழக்கம் உள்ளவர்களை மட்டும் தான் நுரையீரல் புற்றுநோய் தாக்கும் என்ற பொதுவான எண்ணத்திற்கு மாறாக, வாழ்நாளில் இதுவரை ஒருமுறை கூட புகைப் பிடிக்காதவர்களும், பெண்களும் கூட நுரையீரல் புற்றுநோய் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது தான் என்று அந்த ஆராய்ச்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நுரையீரல் புற்றுநோய் பாதிப்பு சென்னை மாவட்டத்தில் தான் மிக அதிகமாக இருக்கிறது. சென்னையில் வாழும் ஒரு இலட்சம் பேரில் 8.1 பேர் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர். இந்த வரிசையில் கன்னியாகுமரி மாவட்டம் இலட்சத்திற்கு 7.3 பேர் என்ற அளவுடன் இரண்டாவது இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் 6.5 பேருடன் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ள நிலையில், சென்னையை ஒட்டியுள்ள திருவள்ளூர் மாவட்டம் 6.4 பேருடனும், காஞ்சிபுரம் மாவட்டம் (இப்போதைய செங்கல்பட்டு மாவட்டத்தையும் உள்ளடக்கியது) 6.1 பேருடனும் முறையே 4 மற்றும் 5 ஆம் இடத்தை பிடித்திருக்கின்றன.

சுற்றுச்சூழல் பாதிப்புகள், வேதித் தொழிற்சாலைகளில் வெளிவரும் நச்சுப் பொருட்கள் காற்றில் கலப்பது என பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் முதன்மைக் காரணம் பொது இடங்களில் புகைப்பிடிப்பதை தடை செய்யும் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாதது தான் என்று அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் புகையிலை கட்டுப்பாட்டு வள மையத் தலைவரும், புற்றுநோய் மருத்துவருமான சுரேந்திரன் தெரிவித்திருக்கிறார்.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சராக நான் பதவி வகித்த போது, பொது இடங்களில் புகைப் பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை கடுமையான எதிர்ப்புகளையும் மீறி 2008ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி முதல், எந்த நோக்கத்திற்காக செயல்படுத்தினேனோ, அந்த நோக்கம் முற்றிலும் சிதைக்கப்பட்டிருப்பது வேதனையளிக்கிறது. சமூக அக்கறை சிறிதும் இல்லாமல் பொது இடங்களில் புகைப்பிடிப்பவர் விடும் புகையை சுவாசிப்பதால் அப்பாவி மக்கள், குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத் தான், பல ஆண்டுகள் போராடி அந்த சட்டத்தைக் கொண்டு வந்தேன்.

அந்த சட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளுக்குத் தான் உள்ளது. ஆனால், தமிழ்நாடு உள்ளிட்ட எந்த மாநில அரசும் அந்த சட்டத்தை முறையாக பயன்படுத்தத் தவறியதன் விளைவு தான் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பலர் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்நாட்டில் அதிர்ச்சியளிக்கும் வகையில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்திருப்பதற்கு 2008ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அரசுகள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

பொது இடங்களில் புகைப்பிடிப்பதை தடை செய்யும் சட்டம் 2008ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், அன்றிலிருந்து கடந்த மார்ச் 31ஆம் நாள் வரையிலான பதினைந்தரை ஆண்டுகளில் 3.89 இலட்சம் பேர் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.6.83 கோடி அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. அதாவது தமிழ்நாட்டில் ஒரு




நாளைக்கு வெறும் 68 பேர் மட்டும் தான் பொது இடங்களில் புகைப்பிடித்ததாகக் கூறி அவர்கள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது; அவர்களில் ஒவ்வொருவரிடமிருந்து சராசரியாக ரூ.177 மட்டும் தான் தண்டமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதில் இருந்தே இச்சட்டம் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு அலட்சியமாக செயல்படுத்தப்படுகிறது என்பதை உணரலாம்.

இந்தியாவில் புகை பிடிப்பதால் ஆண்டுக்கு 13.20 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். பிறர் பிடித்து விடும் புகையை சுவாசிப்பதால் ஆண்டுக்கு 2.20 இலட்சம் பேர் இறக்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்படுபவர்களில் பெரும்பான்மையினர் பெண்கள். பொது இடங்களில் புகைப்பதை அனுமதிப்பதால் ஏற்படும் பெருங்கேடு இது என்பதால் தான் அதைத் தடுக்கும் வகையில் 2008-ஆம் ஆண்டு சட்டத்தைக் கொண்டு வந்தேன். ஆனால், அதை செயல்படுத்துவதில் தமிழக அரசு படுதோல்வி அடைந்திருப்பதை மன்னிக்கவே முடியாது.

பொது இடங்களில் புகைப் பிடிப்பதை தமிழக அரசு தடுக்கத் தவறியதால் தான், பெண்களும், குழந்தைகளும் நுரையீரல் புற்று நோய்க்கு ஆளாகின்றனர். அலட்சியம், செயலற்ற தன்மை போன்ற தமிழ்நாடு அரசின் குற்றத்திற்கு அப்பாவி மக்கள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்? இனியும் இந்தக் கொடுமை நீடிக்கக் கூடாது. எனவே, தமிழ்நாட்டின் பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை மிகக் கடுமையாக செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

# “என் நாட்டுக்கு அனுப்பி வையுங்கள்…” – இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகத்தில் ஈழத் தமிழர் மண்டியிட்டு போராட்டம்!

25.11.2024

இந்தியா வந்து பல ஆண்டுகள் ஆகியும் அடையாள அட்டை வழங்காமல், சொந்த நாட்டுக்கும் அனுப்பாமல் அலைக்கழிக்கப்படுவதாக இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகத்தில் ஈழத் தமிழர் மண்டியிட்டு கண்ணீர் விட்டு கதறியவாறு போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஈழத் தமிழரான ஜாய் (37), தனக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும், இலங்கைச் செல்ல அனுமதி வழங்க வேண்டும். பல ஆண்டுகளாக தமிழக அரசு அலைக்கழிப்பதாகக் கூறி, இன்று (டிச.11) இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தரையில் மண்டியிட்டு கண்ணீர் மல்க போராட்டத்தில் ஈடுபட்டார்.

இது குறித்து அவர் கூறியது “தலைமன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நான் மீனவர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இலங்கையில் உள்நாட்டு போர் நடந்தபோது, கடந்த 1997-ம் ஆண்டு படகில் தூங்கிக் கொண்டிருந்தபோது, யாரோ எங்களது படகை எடுத்து வந்து தனுஷ்கோடி பகுதியில் இறக்கிவிட்டனர். அதன்பின் என்னை தனுஷ்கோடி பொலிசார் வழக்கு பதிவு செய்து, சிறையில் அடைத்தனர். நான் மூன்று முறை பொலிசாரால் கைது செய்யப்பட்டு 6 ஆண்டுகள் புழல் சிறையில் இருந்துள்ளேன்.

தற்போது மண்டபம் முகாமில் எனக்கு இலங்கை தமிழருக்கான பதிவு, அடையாள அட்டை, சலுகைகள் இன்றி தங்க வைத்துள்ளனர். எனது தாய், தந்தையைப் பார்க்க இலங்கைக்கும் செல்ல முடியவில்லை. பல நேரம் கோயில்களில் போடும் அன்னதானம் வாங்கி சாப்பிட்டுவிட்டு எங்காவது உறங்குகின்றேன். இலங்கைக்கு அனுப்பி வைக்கும்படி பலமுறை இலங்கை அகதிகள் முகாம் நிர்வாகத்திடம் மனு கொடுத்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை” என தெரிவித்தார்.

அதனையடுத்து, இராமநாதபுரம் கேணிக்கரை பொலிசார் இளைஞர் ஜாயை அழைத்துச் சென்று அறிவுரைகள் கூறி, கியூ பிரிவு பொலிசாரை அணுகுமாறு அனுப்பி வைத்தனர். இலங்கை தமிழர் ஜாய் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தனது உடலில் பெட்ரோல் ஊற்றி தற்கொலைக்கு முயன்றார். அப்போது அவர் மீது நாகர்கோவில் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்தனர். இந்நிலையில் அங்குள்ள நீதிமன்றம் உடனடியாக ஜாயை இலங்கையில் இருக்கும் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளனர்.



மேலும், இவர் கடந்த ஆண்டு பிப்ரவரியில் தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும், இல்லை என்றால் உரிய அடையாள அட்டை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கண்ணாடியை உடைத்து தனது கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முயன்றது குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# உலக செய்திகள்

## லெபனானில் முடிவுக்கு வந்தமோதல்: இசுரவேல் – ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம்!

27.11.2024

இசுரவேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் இந்திய நேரப்படி இன்று காலை 7.30 மணி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான லெபனானில் ஓராண்டுக்கும் மேலாக இருதரப்புக்கும் இடையே நீடித்து வந்த மோதல் முடிவுக்கு வந்துள்ளது.

இதன் பலனாக லெபனான் நாட்டில் முகாமிட்டுள்ள இசுரவேல் படைகள், படிப்படியாக வெளியேறும் என்றும், மீண்டும் ஹிஸ் புல்லா அமைப்பின் மறுகட்டமைப்பை தடுக்கும் வகையில் அந்த நாட்டின் தெற்கு பகுதி பாதுகாப்பினை இராணுவம் உறுதி செய்யும் என்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித் துள்ளார்.

போர்நிறுத்தம் அமலுக்கு வந்துள்ள நிலையில் லெபனான் நாட்டு இராணுவம் தெற்கு பகுதிக்கு செல்லவும், ஐ.நா-வின் 1701 தீர்மானத்தின் கீழ் அதன் பணியை மேற்கொள்ள தயாராகி வருவதாக கூறியுள்ளது. போர் நிறுத்தம் காரணமாக தெற்கு லெபனான் பகுதியை சேர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர். கார்கள் அந்த நாட்டின் தெற்கு பகுதியை நோக்கி அணிவகுத்தவாறு உள்ளன. இருப்பினும் எல்லை பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில் இசுரவேல் படைகள் உள்ளனர். அந்த கிராமங்களுக்கு மக்கள் திரும்ப முடியாத சூழல் நிலவுகிறது.

இசுரவேல் - ஹிஸ்புல்லா இடையிலான போர் நிறுத்தத்தை ஈரான் உட்பட பல்வேறு நாடுகள் வரவேற்றுள்ளன. அதே நேரத்தில் அமெரிக்காவில் நிகழ்ந்த ஆட்சி மாற்றம் இதில் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரியவில்லை என்று சிலர் கவலை தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா மீறி செயல்பட்டால் தகுந்த பதிலடி கொடுப்போம் என இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

இசுரவேல் - லெபனான் இடையே ஏன் இந்த மோதல்? சுதந் திரப் போரின் தொடக்கத்தில் (1948), இசுரவேலுக்கு லெபனான் ஒரு பிரச்சினையை உருவாக்கியது. இந்தப் போரில் லெபனான் இராணுவம் அரபுப் படைகளுக்கு ஆதரவளித்தது. பாலஸ்தீன விடுதலை அமைப்பு (பிஎல்ஓ) உருவாக்கப்பட்டு லெபனானில் போராளிகளை பணியில் அமர்த்தியதும் பிரச்சினை மேலும் தீவிரமானது. தொடர்ச்சியாக இசுரவேலுக்கு இன்னொரு அச் சுறுத்தலாக 1982-ல் ஈரானின் புரட்சிகரக் காவலர்களால் ஹிஸ் புல்லா படை லெபனான் மண்ணில் நிறுவப்பட்டது. கடந்த 2000-மாவது ஆண்டு தெற்கு லெபனானில் இருந்து இசுரவேல் வெளியேற இந்தப் படை வழிவகுத்தது.

ஹிஸ்புல்லாக்களின் கொரில்லா தாக்குதல்கள் உலகமே கண்டு அஞ்சிய தாக்குதல் உத்தியாக பிரபலமானது. அப்போது தொடங்கி இசுரவேலுக்கு பெரும் சவாலாகவே இந்த ஹிஸ்புல் லாக்கள் இருக்கின்றனர். “பாலஸ்தீனிய நிலங்களை ஆக்கிர மித்து இசுரவேல் தன்னை ஒரு நாடாக நிறுவிக்கொண்டது. அது ஒரு சட்டவிரோத நாடு. இசுரவேல் இல்லாத அரபு பிராந் தியம் வேண்டும்” என ஹிஸ்புல்லா விரும்புகிறது. இதனால் அவ்வப்போது இசுரவேல் - ஹிஸ்புல்லாக்களுக்கு இடையே மோதல்கள், தாக்குதல்கள் நடப்பது தொடர்கதையாகவே இருக் கிறது.

இசுரவேல் நீண்ட காலமாக ஹிஸ்புல்லாவை அதன் எல்லை களில் மிகப்பெரிய அச்சுறுத்தலாகக் கருதுகிறது. நாளுக்கு நாள் அது வளர்ந்து பயங்கர ஆயுதக் குழுவாக உருவாகி வருவது இசுரவேலுக்கு கவலையளிப்பதாக இருக்கிறது. மேலும், சிரியா



வில் அது வலுவாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதை இசுரவேல் தனக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகக் கருதுகிறது.

இசுரவேல் - பாலஸ்தீனம் இடையே பல ஆண்டுகளாக பிரச் சினை நீடித்து வரும் நிலையில், கடந்த ஆண்டு அக்டோபரில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் செயல்பட்டு வரும் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலுக்கு பதிலாக இசுரவேல் போர் நடவடிக்கையை தொடங்கி தீவிரப்படுத்தி உள்ளது. இந்த போரை இசுரவேல் நிறுத்த வேண்டும் என்று ஈரான் தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால், ஈரானின் கோரிக்கையை இசுரவேல் ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து இசுரவேலுடன் எல்லையை பகிர்ந்து வரும் லெபனான் நாட்டில் செயல்பட்டு வரும் ஹிஸ் புல்லா கிளர்ச்சி அமைப்பு மூலம் ஈரான், இசுரவேல் மீது தாக் குதல் மேற்கொண்டது. இதற்கு இசுரவேல் தரப்பும் பதிலடி கொடுத்தது. அதில் கடந்த செப்டம்பர் மாதம் பேஜர், வாக்கி-டாக்கி வெடிப்புத் தாக்குதலை இசுரவேல், லெபனானில் நடத் தியது. ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய நிர்வாகிகளையும் குறிவைத்து தாக்குதல் நடத்தியது.

## நிரந்தரமான நல்லிணக்கத்திற்கு நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம்!

### பிரிட்டிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன்

27.11. 2024

நிரந்தரமான நல்லிணக்கத்திற்கு நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் இதனை கோருவதில் நாங்கள் உலகெங்கிலும் உள்ள தமிழர்களுடன் உறுதியாக உள்ளேன் என பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் தெரிவித்துள்ளார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைகூரும் உலகம் முழுவதி லும் உள்ள தமிழர்களுடன் நானும் இணைந்துகொள் கின்றேன்.

தமிழ் தேசிய நினைவுதினம் சுயநிர்ணய உரிமைக்காக தங்கள் உயிர்களை இழந்தவர்களையும்,தங்கள் நேசத்திற் குரியவர்களை இழந்தவர்களையும் நினைவுகூருகின்றது.

அமைதி நீதி பொறுப்புக்கூறலிற்கான போராட்டமும் தங்கள் நேசத்திற்குரியவர்கள் எங்கிருக்கின்றார்கள் என அறிவதற் கான எண்ணற்ற குடும்பங்களின் போராட்டமும் இன்றுவரை தொடர்கின்றது.

தசாப்தங்கள் ஆன போதிலும் இதுவரை எவரும் சர்வதேச குற்றங்களிற்காக பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தப்படவில்லை. குற்றங்கள் காரணமாக பலர் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களிற்கு எதிராக இனப்படுகொலையில் ஈடுபட்டது என குற் றம்சாட்டுகின்றனர்.

இலங்கையின் வடக்குகிழக்கு பகுதிகளில் நினைவுகூருவதை பெரும் ஆபத்துடனேயே பலர் முன்னெடுக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

நவம்பர் 27ம் திகதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கான உரிமை தமிழர்களிற்குள்ளது என ஐநா மிகத் தெளிவாக தெரிவித்துள்ளது.

கடந்த பல வருடங்களாக பலவந்தமாக காணாமல்போனவர் களின் நிலை மற்றும் அவர்கள் இருக்குமிடம் குறித்து கண்டு பிடிப்பதற்காக இலங்கை அரசாங்கம் தீர்க்கமான நடவடிக் கையை எடுக்கவேண்டும் என இந்த வருடம் ஐக்கிய நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் புதிய அரசாங்கமொன்று தெரிவு செய்யப்பட் டுள்ளது எனினும் அவர்களும் யுத்த குற்றங்களிற்கான சர்வ தேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை நிராகரித்துள்ளனர்.



தமிழ் மக்களிற்கு அமைதிவழியிலான அரசியல் தீர்வொன்றை கண்டுபிடிப்பதில் பிரிட்டன் தொடர்ந்தும் தலைமைத்துவத்தை வழங்கவேண்டும்.

நிரந்தரமான நல்லிணக்கத்திற்கு நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் இதனை கோருவதில் நாங்கள் உலகெங்கிலும் உள்ள தமிழர்களுடன் உறுதியாக உள்ளேன் என தெரிவித் துள்ளார்.

## காசாவில் பஞ்சம் நெருங்கிவிட்டது: ஐ.நா. எச்சரிக்கை!

29.11.2024

இசுரவேல் - ஹமாஸ் மோதல் ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்து வரும் நிலையில் காசாவில் பஞ்சம் நெருங்கிவிட்டது என ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் எச்சரித்துள்ளது.

அங்கு இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவு மற்றும் சுத்தமான குடிநீரின்றி சிரமத்தை எதிர்கொண்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் அமைப்பு தாக் குதல் மேற்கொண்டது. இதன்போது எல்லை பகுதியில் இசை கச்சேரியில் பங்கேற்றிருந்த இசுரவேல் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் நூற் றுக்கணக்கானோர் பணய கைதிகளாக சிறை பிடிக்கப் பட்டனர்.

பெண்களில் சிலர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தப்பட்ட செய்திகளும் வெளியாகின. சில பெண்கள் நிர்வாண மாக வாகனத்தில் இழுத்து செல்லப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

அன்று ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என இசுரவேல் பிரதமர் நெதன்யாகு சபதம் செய்தார். இந்நிலை யில் ஒரு வருடமாகியும் போர் தொடர்கின்றது.

இசுரவேல் - ஹமாஸ் மோதலால் காசாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 45 ஆயிரத்தை அண்மித்துள்ளதுடன் காய மடைந்தோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்தது.

எவ்வாறாயினும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கமைய, இசுரவேல் பணய கைதிகள் சிலரை மீட்டுள்ளதுடன் தொடர்ந்தும் அந்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.



பணயக் கைதிகள் தொடர்பில் அறியத்தருவபர்களுக்கு சன்மானங்களையும் அறிவுத்துள்ளது.

# 16 வயதுக்குட்பட்ட சிறார்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கும் மசோதா: ஆவுஸ்திரேலியாவில் நிறைவேற்றம்!

29.11. 2024

16 வயதுக்குட்பட்ட சிறார்கள் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கும் புதிய சட்ட மசோதாவை ஆஸ்திரேலியா அரசு வியாழக்கிழமை (நவ.28) நிறைவேற்றியுள்ளது.

உலகத்திலேயே முதல் முறையாக 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டாக் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கும் இந்த சட்ட மசோதா ஆவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. சிறுவர்கள் லாக் இன் செய்வதை தடுக்காவிட்டால் சம்பந்தப்பட்ட சமூக வலைதளங்களுக்கு 32 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் சோதனை முறையில் வரும் ஜனவரி மாதம் அமல்படுத்தப்பட உள்ளது. இது முழுமையாக நடைமுறைக்கு வர ஒரு வருடம் ஆகலாம் என்று கூறப்படுகிறது. பிரான்ஸ், அமெரிக்காவின் சில மாகாணங்களில் பெற்றோரின் அனுமதியின்றி சிறார்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் உலகிலேயே முதல் முறையாக ஆவுஸ்திரேலிய அரசு இதனை முழுமையாக தடை செய்யும் மசோதாவை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த மசோதாவுக்கு சில குழந்தைகள் உரிமை அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தாலும் 77 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக கருத்துகணிப்புகள் தெரிவிக்கின்றன. முன்னதாக இந்த சட்டம் குறித்து பேசிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் "இது பெற்றோருகளுக்கானது. சமூக வலைதளத்தில் மூழ்கி இருக்கும் குழந்தைகளை எண்ணி வாட்டம் கொண்டுள்ள என்னைப் போலவே உள்ள பெரும்பாலான பெற்றோர்களுக்கானது இது. ஆவுஸ்திரேலிய குடும்பங்களின் பக்கம் அரசு எப்



போதும் நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்தார்.

# பிரான்ஸ் நாடளுமன்றத்தில் தமிழ் இளையோர், ஈழத்தமிழரின் இன்றைய அரசியல் நிலைமை பற்றியும், தமது அரசியல் சமூக முன்னெடுப்புகளுக்கு உள்ள தடைகள் பற்றியும் பிரஞ்சு நாடாளுமன்ற பிரதிநிதிக்கு எடுத்துரைப்பு!

01.12.2024

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் 29.11.2024 வெள்ளியன்று மாலை பிரான்ஸ் நாடாளுமன்ற பிரதிநி கார்லோஸ் மாட்டீன் பிலோங்கோ மற்றும் நா.க.த.அரசாங்கத்தின் துணைப்பிரதர் மகிந்தன் சிவசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் எம் இனம், LUTS. அமைப்புகளைச் சேர்ந்த 40 இற்கு மேற்பட்ட அடுத்த தலைமுறையினர் கலந்து கொண்டனர்.

கார்லோஸ் பிலோங்கோ தனது உரையில், தனது தொகுதியில் உள்ள ஈழத்தமிழர்களோடு சிறுவயதில் இருந்து தான் பழகி வருவதால் அவர்களுடைய இன்றைய அரசியல் நிலமை தொடர்பாக தான் கவனம் செலுத்துவதாகவும் கூறியிருந்தார்.

இந்திகழ்வில் உரையாற்றிய பிரதமர் விஸ்வநாதன் ருத்திர குமாரன் நா.க.த.அரசாங்கம் முன்னெடுக்கும் போராட்ட வழிமுறைகள் தொடர்பாக குறிப்பாக சட்டப்போராட்ட முன்னைடுப்புகள் பற்றி விளக்கியிருந்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய இளையோர்கள் தமிழர்களின் இன்றைய அரசியல் நிலமைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்து விளக்குவதற்கு இருக்கின்ற தடைகள் பற்றி விரிவாக எடுத்து விளக்கியிருந்தனர்.

விடுதலைப்புலிகள் மீதான தடை தம்முடைய சந்திப்புகள், அரசியல் கருத்துரைப்புகளுக்கு தடையாக இருப்பதனை விளக்கியிருந்தனர். தமது ஆர்ப்பாட்டங்கள்,சந்திப்புகள் பிரச்சாரங்களின் போது தமது அடையாளத்தை வெளிப்படுத்தும் தமிழீழ தேசியக்கொடியை முன்னிறுத்த முடியாதிருப்பதை எடுத்துக் கூறியிரிந்தனர். சுவிஸ் LUTS அமைப்பினர் நாட்டுக்கு நாடு தடைகள் வேறுபட்டிருப்பதையும், தமது நாட்டில் ஓரளவு தளர்வு இருப்பதையும் கூறியிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டசட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற சாருகா தேவகுமார் தமிழர்களுக்கான மாறுகால நீதிபற்றியும், அது தொடர்பாக மேற்கொள்ளும் ஆய்வுகள் பற்றியும் விபரித்திருந்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட சட்டவாளர் எய்சே சூய்டி சிறீலங்கா அரசிடம் இருந்து நீதியையோ, தீர்வுகளையோ பெற்றுக்கொள்ள முடியாது என வேறு நாடுகளின் ஆதாரங்களோடு எடுத்து விளக்கினார்.

இந்த உரைகளையும் கேள்விகளையும் செவிமடுத்த. கார்லோஸ் பிலோங்கோ அவர்கள் தமிழர்களின் அரசியல்



நிலமைகளை தமது கடசியினருக்கு எடுத்து விளக்கி, அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்வதாக கூறியிருந்தார். இறுதியாக இளையோர்கள் தம்மை சிறீலங்கா என அழைக்காது, தமிழர் என அழைக்குமாறும் அவரிடம் கேட்டருந்தனர்.

தொடர்புகளுக்கு pmo@tgte.org


# உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு எற்பாட்டில் கேணல் பரிதி (மதீந்திரன் நடராசா) அவர்களின் நினைவாக அஞ்சல் முத்திரை பொபினி நகரசபையில் 01.12.2024 அன்று அஞ்சல் முத்திரை வெளியீடப்பட்டது!

01.12.2024

தமிழ் பாரம்பரிய வலையமைப்பு - பிரான்ஸ் (The Tamil Traditional Network- France), பிரான்ஸ் தபால் சேவையான La Poste உடன் இணைந்து, 08 நவம்பர் 2012 அன்று பாரிஸில் சிறீலங்கா அரச துணைக்குழுவால் படுகொலை செய்யப்பப்பட்ட CCTF இன் தலைவர் கேணல் பரிதி என்று அழைக்கப்படும் நடராஜா மதீந்திரனுக்கு வணக்கம் செலுத்தும் வகையில் ஒரு நினைவு முத்திரையை வெளியிட்டுள்ளது.






பிரெஞ்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் (CCTF) தலைவராக கேணல் பரிதி அவர்கள் உலகெங்கிலும் உள்ள பிரெஞ்சு தமிழர்கள் மற்றும் TCC உறுப்பினர்களால் தூண்டுதலாகவும் வழிகாட்டியாகவும் விளங்கினார். பாரிஸில் உள்ள அமைப்பின் அலுவலகத்தில் இருந்து வெளிநடப்பு செய்த மதீந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலைச் சம்பவம் தொடர்பில் பிரான்ஸ் பொலிசாரால் சில நாட்களுக்குப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் 50,000 யூரோ பரிசையும் இலங்கைக் கடவுச்சீட்டையும் பிரான்சில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் கூட்டாளியொருவர் கொலைக்காக வழங்கியதாகக் கூறியதாக பிரெஞ்சு செய்தித்தாள் லீ செய்தி வெளியிட்டுள்ளது. பாரிசியன். இதுவரை யாரும் தண்டனை பெற்றதில்லை.






விழாவிற்கு பொபினி நகரசபையின் (Bobigny) மேயர் மற்றும் Seine-Saint-Denis துறைசார்புக் கவுன்சிலர் M. Abdel Sadi தலைமை தாங்கினார், அவர் பல முக்கிய அரசியல் மற்றும் பொது பிரமுகர்கள் முன்னிலையில் முத்திரையை வெளியிட்டார். நடராஜா மதீந்திரனின் தாயார் தர்மத்தி நடராஜா கமலாம்பிகை மற்றும் எம்.அப்தெல் சாடி ஆகியோரால் இந்த முத்திரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. முத்திரை யின் முதல் பிரதியானது, des Commer - çants Tamouls de France சங்கத்தின் தலைவர் ஆ. சு. சிறீதரனிடம் கையளிக் கப்பட்டது

# டியாகோகார்சியாவில் சிக்குண்டிருந்த இலங்கைத் தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்கள் பிரிட்டன் அழைத்து செல்லப்பட்டனர்!

03.12.2024

டியாகோகார்சியாவில் சிக்குண்டிருந்த இலங்கையை சேர்ந்த தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களை அதிகாரிகள் பிரிட்டனிற்கு அழைத்து சென்றுள்ளனர்.

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சின் நிதி உதவியுடன் அவர்கள் ஆறு மாதங்களிற்கு பிரிட்டனில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என தான் பார்வையிட்ட ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளதாக பிபிசி தெரிவித்துள்ளது.

பிரிட்டனிற்கான அவர்களின் பயணத்துடன் அவர்களது தலைவிதியை தீர்மானிப்பதற்காக கடல்கடந்து இடம்பெற்ற சட்ட போராட்டங்கள் முடிவிற்கு வந்துள்ளன என தெரிவித்துள்ள பிபிசி எனினும் அவர்களின் எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்த 60 புகலிடக்கோரிக்கையாளர்கள் கடந்த மூன்று வருடகாலமாக இங்கிலாந்து அமெரிக்காவின் மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவம் தளம் அமைந்துள்ள டியாகோ கார்சியா தீவில் சிக்குண்டிருந்தனர், தற்காலிக முகாமில் வசித்துவந்தனர்.

டியாகோ கார்சியாவிலிருந்து புகலிடக்கோரிக்கையை சமர்ப்பித்த முதல் புகலிடக்கோரிக்கையாளர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.






புகலிடக்கோரிக்கையாளர்களை பிரிட்டனிற்கு அழைத்து சென்றுள்ளமை குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரிட்டன் அரசாங்கத்தின் பேச்சாளர் இந்த விவகாரத்தில் விதிவிலக்கான தன்மை காரணமாக இந்த முடிவை எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் ஒரு ஆழமான சிக்கலான முன்னைய அரசதாங்கத்தின் கீழ் தீர்வுகாணப்படாமலிருந்த சூழ்நிலையை சுவீகரித்துக்கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டியாகோர் கார்சியா தீவில் காணப்பட்ட மனிதாபிமான நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு இது ஒரு அர்த்தபூர்வமான தீர்வு என புகலிடக்கோரிக்கையாளர்கள் சிலரை பிரதிநிதித்துவம் செய்த லெய்டே என்ற பிரிட்டனின் சட்டநிறுவனத்தின் டெசா கிரெகரி தெரிவித்துள்ளார்.

16 சிறுவர்களை உள்ளடக்கிய இந்த பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள குழுவினர் 38 மாதங்களாக மிக மோசமான நிலையில் சிக்குண்டிருந்தனர்,என தெரிவித்துள்ள அவர் எங்கள் கட்சிக்காரர்கள் தற்போது பாதுகாப்பான புகலிடக்கோரிக்கையை முன்வைக்க முடியும், தங்கள் வாழ்க்கைய மீள கட்டியெழுப்ப முடியும் என எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

# சுயநிர்ணயம் – பொதுவாக்கொடுப்பு: உலகிற்கு முதலில் முரசறைந்த பிரான்சில் இடம்பெற்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வு!

03.12.2024

பிரெஞ்சு புரட்சியின் பின்னர் பொதுவாக்கெடுப்பொன்றின் மூலமே எந்தவொரு பிராந்தியத்தினையும் இணைத்துக் கொள்ள முடியும் என பிரான்சின் அரசியல் நிர்ணயசபை எடுத்திருந்த தீர்மானத்தினை சுட்டிக்காட்டி, சுயநிர்ணய உரிமையினையும் பொதுவாக்கெடுப்பையும் உலகிற்கு முதலில் முரசறைந்தது பிரெஞ்சு மண்ணில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வு நடைபெறுவது பொருத்தமானதாக கருதுகின்றோம் என நா.தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.



தாயகம், தேசியம், அரசியல் இறைமை என்ற தமிழர் தேசத்தின் அரசியல் பெருவிருப்பின் ஜனநாயக வடிவமாக சர்வதேச அரங்கில் இயங்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நான்காவது தவணைக்காலத்தின் முதலாவது அமர்வு அமெரிக்காவின் நியூ யோர்க்கில் இடம்பெற்றிருந்தது. நா.தமிழீழ அரசாங்கத்தின் நான்காவது தவணைக்காலத்தின் 2வது நேரடி அரசவை அமர்வு கடந்த நொவெம்பர் 29-30 டிசெம்பர் 1 ஆகிய நாட்கள் இடம்பெற்றிருந்தன.

அரசவை அமர்வு, மக்கள் அரங்கம், இராஜதந்திர பட்டறை, கருத்தரங்கம் என நான்கு நிகழ்வுகளை மையப்படுத்தி இடம்பெற்றிருந்த இம்மூன்று நாள் நிகழ்வுகளிலும் அமெரிக்கா, கனடா, ஒஸ்றேலியா, ஜேர்மனி, சுவிஸ், பிரித்தானியா என புலம்பெயர் நாடுகளில் அரசவை உறுப்பினர்கள் பங்கெடுத்திருந்தனர்.

**தொடக்க நிகழ்வு :**

நா.தமிழீழ அரசாங்கத்தின் துணைப் பிரதமர் மகிந்தன் சிவசுப்ரமணியம் அவர்களது தலைமை உரையுடன் நிகழ்வுகள் தொடங்கியிருந்தன. சிறப்பு அதிதிகளாக பிரெஞ்சு அரசியல் பிரநிதிகள் திரு. அந்தோனி றூசல், திருமதி சுகுர்ணா சிறிநிகணேசன், திரு.பொன்னுத்துரை சிவகுமார் மற்றும் தமிழ் சமூக அரசியல் பிரதிநிதி கனகராஜன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கியிருந்தனர்.

**அமர்வு :**

பிரான்ஸ் உறுப்பினரும் அரசவைத் தலைவருமாகிய கலையழகன் கார்த் திகேசு தலைமையில் அமர்வு இடம்பெற்றிருந்தது. பிரதமர் உரை, உறுப்பினர்கள் அறிமுகம், அமைச்சர்கள் செயற்பாட்டறிக்கை, கேள்வி-பதில், தீர்மானங்கள் என அரசவை அறநெறிக்கு அமைய அமர்வு இடம்பெற்றிருந்தது.

குறிப்பாக தமிழர் தாயகத்தில் கடும்மழை காரணமாக வெள்ளப் பெருக்கினால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள தாயக உறவுகளுக்கான உடனடி நிவராண உதவிக்கான செயற்திட்டவரைபு நிறைவேற்றப்பட்டிருந்தது.

பரிசின் புறநகர் பகுதியான புளோன் மெனில் நகர சபை மண்டபத்தில் அமர்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





ஈழத்தமிழரின் இன்றைய அரசியல் நிலைமை தொடர்பிலும் தமது அரசியல் சமூக முன்னெடுப்புகளுக்கு உள்ள தடைகள் தொடர்பாகவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரான்ஸ் நாடாளுமன்ற பிரதிநிதி கார்லோஸ் மாட்டீன் பிலோங் கோவிற்கு எடுத்துரைத்துள்ளது.

**கருத்தமர்வு :**

பிரான்சின் நாடாளுமன்ற கட்டிட தொகுதியில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் "சிறீலங்காவின் தற்போதைய நிலைவரம்" "தமிழர்களின் இனப்பிரச்சனை விவகாரத்தில் பிராங்கோ தமிழ் இளையவர்களின் வகிபாகம்" "தமிழர்களின் இனச்சிக்கலுக்கான சர்வதேச நீதிப்பொறிமுறை" ஆகிய கருப்பொருட்களில் உரையாடல் இடம்பெற்றிருந்தது.

**இராஜதந்திர பட்டறை :**

ஆபிரிக்காவின் புறுக்கினா பசே நாட்டில் இருந்து இந்நிகழ்வுக்கென பிரத்தியேகமாக வருகை தந்திருந்த விரிவுரையாளர் பொல் அவர்கள் இராஜீக வழிச்செயற்பாட்டு முறைமைகள் குறித்து பட்டறையினை நடாத்தியிருந்தார்.

**மக்கள் அரங்கம் :**

பரிசின் புறநகர் பகுதியான செவ்ரோன் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றிருந்த இந்நிகழ்வில், மாமனிதர், துணைவேந்தர் அழகையா துரைராஜா நினைவு விருதாக, வேதியல் துறையில், ஆய்வியல் ஊடக முனைவர் பட்டம் பெற்றவரான செல்வி. சுவஸ்திகா இந்திரஜித், இளம் தலைமைத்துவ விருதாக, சட்டத்தில் முனைவராக, விரிவுரையாளராக இருக்கின்ற செல்வி. சாருகா தேவகுமார் ஆகியோருக்கு துறைசார் இளையோர்களுக்கான மாண்பேற்றமும், தமிழீழ உதைபந்தாட்ட அணிக்கான மதிப்பளித்தலும் பிரதானமாக இடம்பெற்றிருந்தன.














# சிறீலங்கா மனித உரிமைகள், பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் உலகளாவிய சட்ட அதிகார வரையறைக்கு உட்பட்டு தடைசெய்யுமாறு மேற்கொள்ளப்பட்ட 60 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்! – ITJP

05.12.2024

பாரிய மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையின் இலங்கையின் அரச அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் மீது தடைகளை விதிக்க கோரிக்கை விடுத்துள்ளது.

உண்மை, நீதிக்கான செயற்திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜொஹனஸ்பர்க்கை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்றிட்டம் (ITJP), அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியவற்றிடம் 'உலகளாவிய அதிகார வரையறை' என்ற கோட்பாட்டின் கீழ் 60க்கும் மேற்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி ஆவணங்களை சமர்பித்துள்ளது.

மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டு, இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிசார் மீது ஊழல் குற்றச்சாட்டுகளையும் ஆவணப்படுத்தி ஐக்கிய நடுபகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்பி வைத்துள்ளது

புலனாய்வு அதிகாரிகள், தமிழ் துணை இராணுவக் குழுக்கள் மற்றும் நீதிபதிகள் உட்பட அரச அதிகாரிகள், முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

"பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் சட்டவிரோத கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல், சித்திரவதை, பல விதமான பாலியல் வன்செயல்கள் உள்ளிட்ட குற்றங்கள் உள்நாட்டுப் போர்க் காலம் மற்றும் அதற்கு பிந்தைய காலங்களில் இழைக்கபப்ட்டன".

ITJPஇன் இந்த அறிக்கையில் இலங்கையின் ஆட்சி மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் கட்டமைக்கப்பட்ட வகையில் கணிசமான ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் குற்றஞ்சாட்டி ஆவணப்படுத்தியுள்ளது. "மனித உரிமை மீறல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை குறைத்து மதிப்பிட்டு, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறல் இடம்பெறுவதற்கு பின்னடைவை ஏற்படுத்தும் வகையில், தேவையற்ற வகையில் அளவுக்கு அதிகமான சட்ட வழி முறைகளில் தலையீடுகளை உள்ளடக்கியிருந்துள்ளது"

அவர்களின் சமீபத்திய சமர்ப்பிப்பில், இலங்கையின் ஆட்சி மற்றும் பொது நிறுவனங்களில் கட்டமைப்பு ரீதியாக உட்பொதிக்கப்பட்ட கணிசமான ஊழல்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது.

தமது ஆவணங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நபர்கள் பொது மக்களுக்கு எதிரான தாக்குதல்களை முன்னெடுத்தவர்கள், அவை போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் உட்பட பாரிய சர்வதேச குற்றங்களாக கருதப்படலாம் என ITJP கூறுகிறது.

அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் ஊழல்கள் மற்றும் அரசின் பொது நிதி சூறையாடப்பட்டது ஆகியவை நாடு முழுவதிற்கும் மாபெரும் நிதியிழப்புகளை ஏற்படுத்தியது என்றும், அது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு வழி வகுத்தது எனவும் ஐவுதீ தெரிவித்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு படையினர், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சில பொதுமக்கள் ஆகியோர் மட்டுமின்றி, இந்திய அமைதி காக்கும் படையின் (IPKF) பல முன்னாள் அதிகார்கள் மீதும் பாரிய மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள ITJP அவர்கள் மீது சர்வதேச பயணத் தடையும் விதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

கடந்த 1980களில், இலங்கையில் நிலைநிறுத்தப்பட்டிருந்த காலத்தில், இந்த பட்டியலில் பெயரிடப்படுள்ள இந்திய அமைதி காக்கும் படையின் அதிகாரிகள் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் பரந்துபட்டளவில் அட்டூழியங்களை இழைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்திய அமைதி காக்கும் படைகள் கடந்த 1987-89ஆம் ஆண்டுவரை இலங்கையில் நிலை கொண்டிருந்தது. அந்த படைகளை இலங்கைக்கு அனுப்பியதே, இந்திய விடுதலையடைந்த பிறகு ஏற்பட்ட மிகப்பெரும் வெளியுறவு கொள்கை தோல்வியாக இன்றளவும் உள்ளது. அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி வலிந்து இந்த முன்னெடுப்பைச் செய்தார். இதற்கு தமிழ் மக்கள் முற்றும் எதிராக இருந்தாலும், இந்திய-இலங்கை உடன்பாடு என்ற பெயரிலான அமைதி உடன்படிக்கையை இந்தியா வலிந்து முன்னெடுத்து. அதில் விடுதலைப் புலிகள் பலவந்தமாக கைச்சாத்திட வைக்கப்பட்டனர்.

'இன்றுவரை எந்தவொரு குற்றவியல் பொறுப்புக்கூறல்களும் ஏற்படுத்தப்படாத நிலையில், கடந்தகால மற்றும் தற்போது நடைபெறும் குற்றச்செயல்களை தொடர்ச்சியாக ஆவணப்படுத்தி, சான்றுகளைப் பகுப்பாய்வு செய்து, உண்மையைக் கண்டறிவதற்கு இயலுமான அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்திக்கொள்வது மிக முக்கியமானதாகும்.

சிறீலங்காவில் போரின் முடிவின்போது போர்க்குற்றங்கள் புரிந்தார்கள் என்று குற்றச்சாட்டப்பட்டுள்ள இலங்கையர்கள்மீது பிரித்தானியாவின் புதிய அரசாங்கம் இந்த ஆண்டின் மனித உரிமைகள் தினத்தன்று (டிசம்பர் 10) தடைகளை மேற்கொள்ளும் என நாம் நம்புகின்றோம்" என்று ITJPஇன் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியும், தற்போது கூட்டுப்படைகளின் பிரதானியுமாக இருக்கும் ஜெனரல் ஷவேந்திர சில்வா மீது கடந்த 2021இல் ITJP தடைகளை விதிக்க வேண்டும் என்று கோரும் ஆவணம் ஒன்றை சமர்ப்பித்திருந்தது. அதே போன்று கடந்த 2022ஆம் ஆண்டு மற்றொரு தளபதியான ஜெனரல் ஜகத் ஜயசூரிய மீதும் பிரித்தானிய அரசுக்கு குற்றச்சாட்டு ஆவணங்களை அளித்திருந்தது. பிரித்தானிய அரசுக்கு அப்பாற்பட்டு அந்த ஆவணங்கள் கனடா, அவுஸ்திரேலிய அரசுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் மீது தடைகளை விதிக்குமாறு அந்த ஆவணத்தில் கோரப்பட்டிருந்தது.

இதே போன்று கடந்த 2020இல் ஷவேந்திர சில்வா பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்காக அமெரிக்க அரசு தனது தமது சட்டமூலம் 7031உ இன் கீழ் அவருக்கு தடை விதித்தது. அதேவேளை வெளிப்படையாகத் தெரிவிக்காவிட்டாலும்கூட, ஜகத் ஜயசூரியாவிற்கும் அமெரிக்க நுழைவனுமதி மறுக்கப்பட்டாகவும் நம்பப்படுகின்றது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்காக அனைத்துலக நீதி அதிகார வரயறையை ITJP பயன்படுத்தியுள்ளது.

சிறீலங்காவின் மிக மோசமான இராணுவ முகாம் என்று அறியப்பட்ட 'ஜோசப் முகாமில்' ஜயசூரிய கொண்டிருந்த வகிபாகம் தொடர்பில் இச்சட்டத்தினைப் பயன்படுத்தி பிறேசிலிலும் சிலி நாட்டிலும் அவருக்கு எதிராக 2017ஆம் ஆண்டு வழக்குகள ITJP தாக்கல் செய்தது. இதனைத் தொடர்ந்து, அவுஸ்ரேலியாவிலும் குற்றவியல் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் அவுஸ்ரேலிய மத்திய பொலிஸ் அதனை விசாரணை செய்யவில்லை.

2019ஆம் ஆண்டு சித்திரவதையால் பாதிக்கப்பட்டடோர் பாதுகாப்புச் சட்ட வழக்கொன்றும் குற்றவியல் வழக்கொன்றும் முன்னாள் ஜனாதிபதியும், போர்க் காலத்தில் அதிவல்லமை பொருந்திய பாதுகாப்புச் செயலராகவும் இருந்த கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்காவில் தொடரப்பட்டது. அதே போன்று 2022 ஆம் ஆண்டு சிங்கப்பூரிலும் குற்றச்சாட்டு ஒன்று அளிக்கப்பட்டது.

மேலும் சிறீலங்கா இராணுவத்தின் ஓய்வுபெற்ற மூத்த அதிகாரிக்கு எதிராக அனைத்துலக சட்ட அதிகார வரையறையின் கீழ் ஒரு நாட்டில் வழக்குத் தொடரப்பட்டு, அது இப்போது விசாரணையில் உள்ளது.

இவை தவிர, சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தமிழ் துணை இராணுவக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்ற வழக்குகளுடன் தொடர்புபட்ட இருவர் தொடர்பாக பிரித்தானிய மெற்ரோபொலிட்டன் பொலிசாரிடம் பரிந்துரைக்கப்பட்டதுடன். இருவரையும் கைது செய்ய பொலிசார், பொதுமக்களிடமிருந்து மேலதிக தகவல்களையும் அண்மையில் கோரியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் ஒரு வழக்கு பிபிசி ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பானது என அறியப்படுகிறது. கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

https://itjpsl.com/assets/Tamil-ITJP_Sanctions_60_Submissions_for_Sri_Lankan_Human_Rights_and_Economic_Crimes_Tamil.pdf

# காசாவில் இசுரவேல் இன அழிப்பை நடத்தி வருகிறது; அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பு குற்றச்சாட்டு!

07.12.2024

காசாவில் இசுரவேல் இன அழிப்பில் ஈடுபடுவதாக சர்வதேச மனித உரிமை அமைப்பான ஆம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.



இசுரவேல் – ஹமாஸ் அமைப்பினருக்கு இடையே காசாவில் ஏறக்குறைய ஒருவருடத்திற்கு மேலாகப் போர் நடைபெற்று வருகிறது. இதனால், இலட்சக்கணக்கான மக்கள் காசா பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தனர். இப்போரில் இதுவரை 44,600 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு இலட்சத்திற்கும் அதிகாமானோர் காயமடைந்துள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் என்பது அதிகமாக உள்ளதாக சர்வதேச சேவை அமைப்புகள் அறிவித்துள்ளன.

ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக் கட்டப் போவதாக சூளுரைத்த இசுரவேல், காசா பகுதியை முற்றுகையிட்டு அங்கு வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக ஹமாஸின் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை ஈரானில் வைத்து இசுரவேல் கொலை செய்தது. இதனைத் தொடர்ந்து ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹஸன் நஸ்ரல்லாஹ் வீட்டின் மீது ஏவுகணை தாக்குதலை நடத்திய இசுரவேல் அவரையும் கொலை செய்தது. மேலும் சமீபத்தில் இசுரவேல் தாக்குதலில் ஹமாஸின் அடுத்த தலைவரான யஹ்யா சின்வாரும் கொல்லப்பட்டார்.

கடந்த வாரம் காசா சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் 1000க்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இதேபோல இந்த ஒரு வருடம் மட்டுமே பாலஸ்தீனத்தில் கொல்லப்பட்டுள்ள பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை இதுவரை நடைபெற்ற உலகப் போர்களில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் எண்ணிக்கையை விட இருமடங்கு அதிகம் என்று பல சர்வதேச பத்திரிகையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் அமைப்பு (Committee to Protect Journalists ) வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 180க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் இவர்களில் அதிகமானோர் பாலஸ்தீனியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் காசாவில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பாக ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் மனித உரிமை அமைப்பு ஒரு விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது…


" இசுரவேல் இராணுவம் பாலஸ்தீனத்தில் நடத்தும் தாக்குதலை ஆய்வு செய்ததில் பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இசுரவேல் இராணுவம் இன அழிப்பில் ஈடுபடுவது தெரியவருகிறது. இது சர்வதேச சமுதாயத்துக்கு ஓர் எச்சரிக்கை மணியாகும். இந்த இன இழிப்பு இப்போதே தடுத்து நிறுத்தப்படவேண்டும். இசுரவேல் மீது ஹமாஸ் படையினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி நடத்திய தாக்குதலை நியாயப்படுத்த முடியாது தான். அதே போல், காசாவில் பொதுமக்களிடையே ஆயுதக் குழுவினர் கலந்திருப்பதையும் மறுப்பதிற்கில்லை. ஆனால், அந்தப் பகுதியில் இசுரவேல் நடத்திவருவது இன அழிப்பே ஆகும். இந்தக் குற்றத்துக்கு அமெரிக்காவும் இசுரவேலின் பிற நட்பு நாடுகளும் துணை போவதாகவே கருத முடியும்." என ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பின் இந்த ஆய்வறிக்கை கூட உண்மைகளைத் திரித்து பொய்யாகப் புனையப்பட்டது என்று இசுரவேல் வெளியுறவுத் துறை அமைச்சகம் விமர்சித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரான்சு Bobigny நகரில் ஈழத் தமிழர் இன அழிப்பு நினைவாக நினைவுக்கல் திரைநீக்கம்!

07.12.2024

பிரான்சு தேசத்தில் பாரிசின் புறநகரில் ஒன்றான Bobigny நகரில் தமிழீழ தாயகத்தில் 1948 முதல் 2009 வரை இன அழிப்புக்குள்ளான மக்களின் நினைவாக நினைவுக்கல் இன்று 07.12.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு திரை








நீக்கம் செய்யப்பட்டு வைக்கப்பட்டது.

தமிழ்மக்கள் அதிகமாக வாழும் 93 மாவட்டம் Bobigny மாநகரத்தில் மாநகரசபைக்குரிய நிலத்தில் Parvis de L' Hotel de Ville de Bobigny இடத்தில் மாநகரசபை முதல்வர் Monsieur Abdel Sadi, துணை முதல்வர் Monsieur Ranjit SINGH மற்றும் சென் சென்டெனி மாநகர சபை, லாக்கூர்நோவ் மாநகரசபையின் ஆலோசகர் உறுப்பினர் சுகுனா, பொபினி பிராங்கோ தமிழ்ச்சங்கம், பிரான்சு தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு இணைந்து இதனை ஏற்பாடுசெய்திருந்தனர்.

கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்கள் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப் பட்டனர்.

நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள், பிரெஞ்சு மக்கள் மற்றும் பல்லின மக்கள் கலந்துகொண்டதோடு உரைகளையும் ஆற்றியிருந்தனர்.









# விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும், 6வது திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்படவேண்டும: அனுரவுக்கு வலியுறுத்துல்!

10.12.2024

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவும், சிறிலங்கா அரசியலமைப்பின் 6 வது திருத்தத்தை இரத்து செய்யவும் மற்றும் ஈழத் தமிழர்கள் கருத்துச் சுதந்திரத்துடன் அரசியல் களத்தில் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்ரகுமாரன் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

மாவீரர் நாள் செய்தியில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். உருத்ரகுமாரன் மேலும் தெரிவித்ததாவது,

நீங்கள் ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி.) ஆயுதப் போராட்டத்தை ஒன்றல்ல, இரண்டு தடவைகள் முன்னெடுத்தது. இருந்தும் உங்கள் மீதான தடை நீக்கப்பட்டு சுதந்திரமாக அரசியலில் ஈடுபட அனுமதி அளிக்கப்படவில்லையா? உங்களுக்கு ஒரு நியாயமும், தமிழ் விடுதலைப் போராளிகளுக்கு இன்னொரு நியாயமும் இருக்கும் போது இதை நாம் எப்படி இனப் பாகுபாடாக பார்க்காமல் இருக்க முடியும்?

உங்கள் ஆட்சியிலும் அணுகு முறையிலும் தமிழ் மக்களுக்கு போராட வேண்டிய அவசியம் இருக்காது என்று நீங்கள் கூறுகிறீர்கள். நீங்கள் கூறுவதில் உண்மை இருப்பதாக நீங்கள் நம்பினால், 6வது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு சுதந்திரமான அரசியல் நடவடிக்கைக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நீங்கள் ஏன் அஞ்ச வேண்டும்?

தமிழர் தாயகத்தில் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்த ஏற்பாடு செய்யுங்கள்-தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மற்றைய தெரிவுகளில் ஒரு சுதந்திரமான தமிழீழ நாடு என்ற விருப்பத்தையும் உள்ளடக்குங்கள். தேவைப்பட்டால், நீங்கள் ஒற்றையாட்சியையும் ஒரு தெரிவாக சேர்க்கலாம்.

தமிழ் மக்கள் ஒற்றையாட்சித் தெரிவை ஏற்றுக்கொண்டால், தமிழ் மக்கள் உங்கள் மீது உண்மையாக நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

மேலும், உருத்ரகுமாரன் கூறியதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அரசியல் தலைமையை வகித்த போது, சிறீலங்கா அரசாங்கமும் சர்வதேச சமூகமும் தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாமல் இருப்பதற்கு புலிகளே காரணம் என புலிகள் மீது பழி சுமத்தியது.

தற்போது 15 வருடங்கள் கடந்தும், தமிழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகள் உச்சக்கட்டத்தில் இருந்த போது சிறீலங்கா அரசாங்கத்தின் மீது சர்வதேசசக்திகளால் பிரயோகிக்கப்பட்ட கடுமையான அரசியல் அழுத்தங்கள் தற்போது குறைபாடடைந்து தமிழ்த் தேசியப் பிரச்சினையை முற்றாகப் புறக்கணிக்கும் அளவிற்கு மங்கிப் போய்விட்டது.

சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையால் சிங்கள அரசியல் இறுகியிருப்பதால் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் வெளி இல்லாமல் போய்விட்டது என்பதே உண்மை. அத்துடன் தீர்வு காணும் அரசியல் கலாசாரம் சிங்கள அரசியலில் இல்லை. இதற்கான அரசியல் விருப்பமும் சிங்கள அரசியலில் இல்லை.

மகாவம்ச சிந்தனையிலிருந்து இத்தகைய கலாச்சாரம் மற்றும் மனப்போக்கு (தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு எதிரானது) வளர்ந்துள்ளது என்பது பல ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். எமது மாவீர தியாகிகளை தமிழ் ஈழத் தனிநாடு கோரி போராட வற்புறுத்திய சிறீலங்காவின் அதே அரச அமைப்புதான் இன்றுவரை தொடர்கிறது.

வெவ்வேறு ஆட்சியாளர்கள் காலத்திற்கு காலம் மாறி வந்தாலும் சிங்கள பௌத்த ஆதிக்க அரச கட்டமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை. மாறாக, எந்தச் சீர்திருத்தத்தையும் அனுமதிக்க முடியாத அளவுக்கு சிறீலங்கா அரச கட்டமைப்பு மிகவும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் நிலையும் இதுதான். நீதித்துறையின் நிலையும் இதுதான்.

பல தேசிய சமூகங்களைக் கொண்ட எந்தவொரு நாட்டிலும், எண்ணிக்கையில் பெரும்பான்மையைக் கொண்ட ஒரு தேசம் தன் விருப்பத்தை ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் மற்ற தேசங்கள் மீது திணிக்க முடிந்தால், அது ஜனநாயகம் அல்ல மாறாக அது இனநாயகம்.

இலங்கைத் தீவில் தற்போது நிலவுவது ஜனநாயகம் அல்ல, இனநாயகமே 2009ஆம் ஆண்டு முதல் தேர்தல் மற்றும் ஆட்சி மாற்றம் ஏற்படும் போதெல்லாம் புதிய அரசியலமைப்பின் மூலம் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்று கூறப்படும். இந்த விஷயத்தில் உரத்த ஆரவாரங்களும் இருக்கும்.

எமது தமிழ்த் தலைவர்கள் பலர் இந்த புதிய அரசியலமைப்பு வாக்குறுதியின் பின்னால் ஓடி மக்களுக்கு பொய்யான நம்பிக்கையை வழங்குவார்கள். தமிழ்த் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு காரணம், தமிழ் தேசத்தின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் அரசியலமைப்பில் இடம் பெறவில்லை என்பதல்ல, மாறாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் வெளி - அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டிருந்தாலும் - இல்லாததுதான். கடுமையான சிங்கள - பௌத்த அரச கட்டமைப்பு காரணமாக. அரசியலமைப்பின் 13வது திருத்தம் கடந்த 30 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஒரு எடுத்துக்காட்டு.

தமிழரின் தேசிய அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் பலவீனம் காரணமாக தேசிய மக்கள் சக்தி (NPP) யாழ்ப்பாணத்தில் ஆசனங்களைப் பெற்றது. இந்தச் சூழலில், NPPயின் "ஊழல் ஒழிப்பு" என்பது தமிழ் மக்களை கவர்ந்த சுருதியாக இருந்தது.

உருத்ரகுமாரன் தனது மாவீரர் நாள் செய்தியின் முடிவுரையில், மாவீரர்களின் நினைவுகள் இருக்கும் வரை, தமிழ்த் தேசத்தை எவராலும் கபளீகரம் செய்ய முடியாது எனக் கூறினார்.

# மத்திய கிழக்கில் இடம்பெற்ற பார்சானி இனப்படுகொலை மாநாட்டில் துவாரகாவின் வழிகாட்டலில் இயங்கும் WTCC பிரதிநிதி உரை: தென் தமிழீழப் படுகொலைகள் முதற்தடவையாக சர்வதேச அரங்கில் முன்னிறுத்தல்!

10.11. 2024

மத்திய கிழக்கில் இடம்பெற்ற மிக மோசமான இனப்படுகொலைகளில் ஒன்றான பார்சானி இனவழிப்பு நினைவு மாநாட்டில் தேசத்தின் புதல்வி மருத்துவர் துவாரகா பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில் இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் (WTCC) பிரதிநிதி பங்கேற்று ஆலோசனை உரை ஆற்றியுள்ளார்.



பூகம்ப அரசியல் மாற்றங்களை மத்திய கிழக்குப் பிராந்தியம் எதிர்கொண்டிருக்கும் இன்றைய சூழமைவில் 1983ஆம் ஆண்டு நிகழ்ந்தேறிய பார்சானி இனப்படுகொலைகளுக்கு நீதி பெறுவது பற்றிய மாநாடு 09.12.2024 திங்கட்கிழமை பார்சான் பிராந்தியத்தில் இடம்பெற்றது.

இம் மாநாட்டிற்கு ஆலோசனை வழங்கும் சர்வதேச அரசறிவியலாளர்கள் அணியில் தேசத்தின் புதல்வி துவாரகா பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில் இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அரசியல் பிரிவைச் சேர்ந்த கலாநிதி A.R.சிறீஸ்கந்தராஜா இடம்பெற்றிருந்தார்.

இந் நிகழ்வில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி உரையாற்றுகையில், பார்சானி படுகொலைகளுக்கு நிகராகத் தென்தமிழீழத்தில் 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சிறீலங்கா ஆயுதப் படைகளாலும், அதன் துணைப்படைகளாலும் அரங்கேற்றப்பட்ட 3,000 தொடக்கம் 6,000 வரையான தமிழர்களின் படுகொலைகளை ஒப்பிட்டிருந்தார்.

அக்காலப் பகுதியில் தென்தமிழீழத்தில் தமிழ்க் கிராமங்கள் பூண்டோடு அழிக்கப்பட்டமை, வேரோடு தமிழ்க் குடும்பங்கள் கொன்று குவிக்கப்பட்டமை மற்றும் ஆயிரக்கணக்கான தமிழ் ஆண்களைத் தெரிவு செய்து அவர்களை சிறீலங்கா ஆயுதப் படைகளும் அதன் துணைப்படைகளும் படுகொலை செய்தமை பற்றியும் தனது உரையில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி சுட்டிக் காட்டியிருந்தார்.





மேலும், அரசியல் சுதந்திரம் பெறாத ஒடுக்கப்படும் தேசங்கள் தொடர்ந்தும் இனப்படுகொலைகளில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கான சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறைகளைக் கூட்டாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் தேசத்தின் புதல்வி துவாரகா பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில் இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி கலாநிதி A.R.சிறீஸ்கந்தராஜா இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

கொதிநிலையில் உள்ள மத்திய கிழக்கில் இனப்படுகொலை பற்றிய சர்வதேச மாநாடு ஒன்றில் பிரத்தியேகமாகவும், முதற்தடவையாகவும் தென்தமிழீழப் படுகொலைகள் பற்றிய விழிப்பூட்டல், தேசத்தின் புதல்வியின் வழிகாட்டலில் இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் (WTCC) ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2024 இல் 104 ஊடகவியலாளர்கள் படுகொலை!

## சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம்

11.12.2024

இந்த ஆண்டு முழுவதும் உலகின் பல பகுதிகளில் 104 செய்தியாளர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் காஸாவில் உயிரிழந்ததாக சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம்தெரிவித்துள்ளது.

இருப்பினும் செய்தியாளர்களின் மரண ஆண்டாக வரலாற்றில் பதிவான 2023ஆம் ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு கொல்லப்பட்டசெய்தியாளர்களின் எண்ணிக்கை குறைவு என சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம்தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு 129 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் என சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அந்தோணி பெல்லங்கர் ஏஎஃப்பி செய்தி நிறுனத்திடம் கூறினார்.

இவ்வாண்டு கொல்லப்பட்ட 55 பேர் பாலஸ்தீன ஊடகவியலாளர்கள். காஸாவில் இசுரவேல் மேற்கொண்ட மோசமான தாக்குதல்களின் விளைவாக அந்த மரணங்கள் நிகழ்ந்ததாக சம்மேளனம் குறிப்பிட்டது.

2023 அக்டோபர் 7ல் இசுரவேல்-காஸா போர் தொடங்கியது முதல் இதுவரை 138 பாலஸ்தீன செய்தியாளர்கள் கொல்லப்பட்டனர் என சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது

மத்திய கிழக்கிற்குப் பிறகு செய்தியாளர்களுக்கு மிக மோசமான வட்டாரமாக ஆசியா அமைந்திருப்பதாக அது கூறியது.




ஆசியாவில் இவ்வாண்டு 20 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானில் ஆறு பேரும் பங்ளாதேஷில் ஐவரும் இந்தியாவில் மூவரும் கொல்லப்பட்டதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது

# விடை தேட பலகோடி வருடம் எடுக்கும் கணித சிக்கலை 6 நிமிடத்தில் தீர்க்கும் குவாண்டம் சிப்: கூகுள் சாதனை!

## கூகுள் நிறுவன சிஇஓ சுந்தர் பிச்சை

12.12.2024

“குவாண்டம் கம்ப்யூட்டிங் என்பது குவாண்டம் கோட்பாட்டின் கொள்கைகளின் அடிப்படையில் கணினிகளின் வளர்ச்சியை மேம்படுத்தும் கணினி அறிவியலின் ஒரு பகுதியாகும். இயற்பியலின் கூறுகளை பயனப்டுத்தி மிகவும் சிக்கலான சிக்கல்களைத் தீர்க்க குவாண்டம் கம்ப்யூட்டிங் பயன்படுத்துகிறது.

குவாண்டம் கம்ப்யூட்டிங் ஒரு வளர்ந்து வரும் அறிவியல் துறையாக உள்ள நிலையில் தற்போது அதில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக கூகுள் நிறுவன சிஇஓ சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார். கூகிள் நிறுவனம் சார்பில் புதிய குவாண்டம் கம்பியூட்டிங் சிப் [CHIP] ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவின் சாண்டா பார்பராவில் உள்ள கூகுள் நிறுவனத்தின் ஏஐ தொழில்நுட்பத்துடன் கூடிய குவாண்டம் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட இந்த புதிய சிப்-க்கு வில்லோ [WILLOW] என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஒரு சிக்கலான கணித பிராப்லம்-ஐ இன்றைய சூப்பர் கம்ப்யூட்டர்கள் தீர்க்க 10 செப்டில்லியன் ஆண்டுகள் எடுத்துக்கொண்டால், அதே சிக்கலை ‘வில்லோ’ 5 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் தீர்க்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

[1 (24 சைபர்கள்) = 1 செப்டில்லியன்] எங்கள் புதிய அதிநவீன குவாண்டம் கம்ப்யூட்டிங் சிப் 30 ஆண்டுகால சவாலை முறியடித்து ஒரு புதிய திருப்புமுனையாக அமையும் சுந்தர் பிச்சை தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



# உலகப்பரப்பில் மாவீரர் நாள்

27.11.2024


பிரித்தானியா


பிரான்ஸ்



சுவிற்சர்லாந்து


நியூசிலாந்து



யேர்மனி


டென்மார்க்


நெதர்லாந்து


பெல்ஜியம்


சுவீடன்


தஞ்சாவூர், தமிழ்நாடு




அரசபாளையமம, தமிழ்நாடு


கனடா – மொன்றியல்


# உலகப்பரப்பில் மாவீரர் நாள்

27.11.2024












## சுவிற்சர்லாந்தில் தமிழீழத் தேசியத் தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் (WTCC) மாவீரர் நாள்!

27.11. 2024

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ், தேசத்தின் புதல்வி செல்வி துவாரகா பிரபாகரன் அவர்களின் அரசியல் வழிகாட்டலில் இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வு சுவிற்சர்லாந்து சூரிச் மாநிலத்தில் எழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.











தமிழீழத் தேசியக் கொடியை உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் முக்கிய உறுப்பினரான வாசன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மணியொலி எழுப்பித் துயிலும் இல்லப் பாடல் இசைக்க, முதன்மைச் சுடரினை மாவீரன் கப்டன் அருண் (ஏரம்பு பாலச்சந்திரன்) அவர்களின் சகோதரியும், தமிழீழத் தேசியத் தலைவரின் மைத்துனியும் ஆகிய அருணா ஏரம்பு அவர்கள் ஏற்றி வைக்க, சமநேரத்தில் மண்டபத்தில் திரண்டிருந்த செயற்பாட்டாளர்கள், மாவீரர் குடும்ப உறுப்பினர்கள், உற்றார், உரித்துடையோர் மற்றும் தமிழீழத் தேசாபிமானிகளால் ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தேசத்தின் புதல்வி செல்வி துவாரகா பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் கொள்கைப் பிரகடன உரையினை உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் ப.யோகச்சந்திரன் அவர்கள் படித்தளித்தார்.

சிறப்புரையினைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை 2024 ஆவணி மாதம் சந்தித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிற்சர்லாந்து கிளைப் பொறுப்பாளர் ரகுபதி அவர்கள் ஆற்றினார்.

இதன்போது தமிழீழத் தேசியத் தலைவரின் இருப்பை மறுதலித்து சுவிற்சர்லாந்திலும், ஏனைய புலம்பெயர் தேசங்களிலும் தேசவிரோதிகளால் முன்னெடுக்கப்படும் சதி நடவடிக்கைகள் பற்றியும், 2024ஆம் ஆண்டு ஆவணி மாதம் தமிழீழத் தேசியத் தலைவரைத் தான் சந்தித்த போது தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் தன்னுடன் தமிழீழத் தேசியத் தலைவர் கலந்துரையாடிய விடயங்கள் குறித்தும் தனது உரையில் ரகுபதி அவர்கள் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவரால் மாமனிதராக மதிப்பளிக்கப்பட்ட கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் “விலங்கை உடைத்து” என்ற வரலாற்று நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சுவிற்சர்லாந்திலும், புலம்பெயர் தேசங்களிலும் இயங்கும் தமிழ்த் தேசியக் கட்டமைப்புகளின் தாய் அமைப்பாக விளங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் நடத்தப்பட்ட முதலாவது தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.








AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
Arasan
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்தபடி மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

**தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி, நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர, சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற்றுக் கொள்ளலாம் என நாம் என்றுமே கருதியதில்லை. இதுவே, அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்து வருகிறது.**

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரின் உணர்வுகளை, அவர்களது வாழ்நிலை அவலங்களை, அவர்களது தேசிய அபிலாசைகளைச் சிங்களப் பெரும்பான்மை இனம் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ள எத்தனிக்கவுமில்லை. புரிந்து கொள்ளும் ஆற்றலும் அறிவுத் திறனும் ஆன்ம பக்குவமும் அவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

சிங்கள தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்ட கிடக்கிறார்கள்.

அடிமனத்தில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப் போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்கள தேசம் விடுபடப்போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கைத் தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக் கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்துகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. தமிழரது இருப்பு நிலைபற்றிய உண்மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்கள தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர்வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துலகில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள – பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்துபோகவில்லை. மாறாக அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது.

தென்னிலங்கை அரசியற் களத்தில் அதன் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இப்படியான புறநிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நாம் என்றுமே கருதியதில்லை. இதுவெ அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியாக இலட்சியமாக இருந்து வருகிறது.

குறிப்பு: தமிழீழ தேசியத் தலைவரின் அவர்களின், 1995ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையிலிருந்து.


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
Kurinchi
Beauty Creations
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித வைபவங்களுக்கான தலை, முக அலங்காரங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்ப சிறந்த முறையில் ...
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# ஆழத்துயர் புதைத்து மீளல்

வானக்கூரையின் கீழேயொரு வாழ்வுசமைத்து
வாசலெங்கும் பூவாய் மலர்ந்திருந்தோம்.
காற்றுக்கு கையசைத்து
குயிலுக்கு குரல் வழங்கி
மழையின் பாதங்களுக்கு கொலுசு மாட்டி
சின்ன ஜீவிதமெனினும் சிரித்திருந்தோம்.
சுமையற்றிருந்ததால்
வலியற்றிருந்தது எம் வாழ்வு.
வெளியெ தெரியவரதா வெளிச்சமாய்
அழகெழுத்திடந்தது அன்றாடம்.
இடையில் வந்தனதான்
இத்தனை இடியும் வதையும்.
காலவெள்ளம் கரைக்கக் கரைக்க
வாழ்வின் சுவர்கள் வலிமையிழந்தன.
இடிமேல் இடியிறங்க
குட்டிச்சுவரானது சிதிலமுற்ற சுவரை
பூகம்பப்பேய் பிய்த்தெறிந்தது இன்று.
'சுனாமி'
என்ற பெயர்கொண்டு அழைத்தாலும்
எமக்கிது எமன்.
வாழ்வைக் குதறிய வல்லூறு.
26.12.2004 ஞாயிற்றுக்கிழமை
அன்றும் வழமைபோற்தான் விடிந்தது.
எந்த அசுமாத்தமுமின்றிக் கிடந்தது கடல்.
மடியேறுவோரைச் சுமந்தும்
கரைவாழுவோருடன் மகிழ்ந்தும்
படகோடும் வலையோடும் கலகலத்தபடி
'கனகுதுகலம்' பாடியது கடல்.
உள்ளே மீன்களும்
வெளியே பறவைகளும்
கடலின் பாடலுக்குத் தாளமிட்டன.
எல்லாம் வழமைபோற்தான் வடிவுகாட்டின.
எவரறிவார் இப்படியும் இடிவிழலாமென்று?
வந்தது இடி.
என்ன நடக்குதென எவருக்கும் தெரியாமல்
வந்ததும் போனதுமான சில கணங்களில்
வரைபடமே மாறிவிட்டது.
இழகுமுகம் மாறி அழுகைமுகமானது கரை.
விடிந்தபொழுது இருண்டுபோனது.
கடலள்ளிப்போனது
எங்கள் காவிரிப்பூம்பட்டினங்களை.
கழிக்குள் அள்ளுண்டோரின்
அபயக்குரல்களை உள்ளேயமுக்கி
உயிர்கொண்டுபோனது அலை.
ஊர்கள்
உறவுகள்
வேர்கள்
விழுதுகள்
பூக்கள், பிஞ்சுகள், காய்கள், பழங்களென
பசியாறிப்போனது பாழ்பட்ட கடல்
எதையும் விடவில்லை எமன்.
ஓடிச்சென்று பார்த்தவர் முன்னே
ஒன்றுமிருக்கவில்லை.
முகம் சிதைந்த கரையும்
உயிர்குடித்து வீசிய உடல்களும்
இந்தா எடுத்துப்போ என்பதாய் கிடந்தன.
ஒற்றைக்குருவி தனித்திருந்து தேம்புதல்போல்
ஆயிரமாயிரம் உயிரற்ற சடலங்கள் முன்னே
ஒரு சில உயிருள்ள சடலங்கள் அழுகின்றன.
எல்லோரும் ஊமையராய்
எல்லோரும் வலுவற்றவராய்
எழுந்துலவும் மரங்களெனத் திரிகின்றனர்.
இனி என்ன வந்தென்ன?
இந்திரபுரிகள் இடிந்துவிட்டனவே
நிலவிற்குளிக்கும் சிற்றில்களும்
உள்ளிருக்கும் உயிர்களும் போயினவே.
அழகு போனது
அம்பாப்பாட்டு போனது
கூத்துப் போனது
கும்மாளம் போனது
கட்டுச்சோறு காட்டி கரைவந்து
கையசைக்கும் காதலியர் போயினர்.
மடிநிறைந்து கரைதிரும்ப ஓடிவரும்
உரிஞ்சான்குண்டிச் செல்வங்களில்லையே.
கடல்வற்றி நிலமான விந்தையும்
கறுப்பு நிறமாகி அலைவந்த அதிசயமும்
புரிவதற்கும் அறிவதற்கும் நெடுநாளாகும்.
அறியப்படாமலும் போகலாம்.
விஞ்ஞான சூத்திரங்கள் விடுவிக்கப்படும்போது
விதியா இது சாதியா என்பது விளங்கும்.
என்ன நடந்தாலும்
இனிப் போனவுயிர் வருமா
தொலைந்த வாழ்வு திரும்புமா?
முள்முடி சூடி
முதகிற் பாரச்சிலுவை சுமந்த
பாவப்பட்ட மக்களின் பயணப்பாடு முடிந்தது.
இயேசுவே!
எம்மையேன் இரட்சிக்க மறந்தீர் சுவாமி.
ஆலமுண்ட நீலகண்டனே!
எம்மைச் சாவு தின்றபோது தாங்காதிருந்ததுக்கு
அன்றுமட்டும் உமக்கென்ன அலுவலிருந்தது பிரபு.
அல்லாவே!
பிள்ளைகளைக் கைவிட்டதேனோ?
புத்தபெருமானே!
வெள்ளம் வருகுதென்றாயினும்
சொல்லவேண்டாமோ?
எல்லோரும் ஒதுங்கிக்கொண்டீர்கள்
நாங்கள்தான் தனித்துப்போனோம்.
வேண்டாம் இனியுமுகங்கள் விளையாட்டு.
துயராற்றி நாங்களே நிமிர்ந்தாலன்றி
சோகம் தீராது.
இது பூப்பறிக்கும் தேசமாயின்
பலகாலம் அழுதபடி கிடந்தாலும் பழுதில்லை.
போரிடும் தேசமல்லவா எம்பூமி.
நிச்சயம் நமிர்ந்தாகவேண்டும்
இல்லையேல் நிர்மூலமாகி விடுவோம்.
சேத நிலவரத்தை பார்வையிடுவதுபோல
தேச நிலைமைகளையும் கணக்கிட்டுப்போகலாம்.
நாடிபிடித்தறிய நல்லவேளை எனக் கணித்து
கூடிக்குலவ வரலாம்.
குண்டெங்கே வைக்கலாமேன அறிய
தொண்டரென்று துரோகிகளும் வரலாம்.
நாங்கள் நிமிர்ந்தாக வேண்டும்.
ஆழத்துயரெனினும் அதைப்புதைத்து
மீளவேண்டும் விரைவில்.
தொடரும் சோகங்களை கற்களாக்கி
ஏணிப்படியொன்று இணக்குவோம்.
வேரறுந்தாலும் முளைகொள்ளும்
அறுகம்புல்லின ஜாதி நாம்.
மேலே வேர் கொள்வோம்.
இத்தனை வேகத்தில் சோகம் மீளுவோமென்பது
கோபத்தைக்கூடத் தரலாம்.
எம் பிள்ளைகளின் வாழ்வுக்காக
இனியும் இருக்கிறதல்லவா மீதிப்பயணம்?
எனவே சோகத்தைத் மொலைப்போம்
யாகத்தீ வளர்ப்போம்.

உலைக்களம் - வியாசன்






# இயற்கை அழிவிலும் இனவாதச்சிந்தனை



தமிழ் - சிங்கள, முஸ்லிம் என்ற வேறுபாடின்றி கரையோரங்களில் வசித்த அனைவரையும் கடற்கோள் தாக்கி அழித்தபோது மக்கள் இன உணர்வு கடந்து மனிதாபிமானத்துடன் செயற்பட்டார்கள்.

தமிழ் இளைஞர்கள் முஸ்லிம் மக்களைக் காப்பாற்றி கரைசேர்ப்பித்ததும் முஸ்லிம் மக்கள் தமிழ்மக்களைப் பாதுகாத்து புகலிடம் வழங்கியதையும் சிங்கள மக்கள் தமிழர்களுக்கு உணவுப்பொதிகள் கொடுத்து உதவியதும்... (2004ம் ஆண்டில் காலத்தில்...) என்று அந்தச் சிலநாட்கள் தீவின் இன அரசியலுக்கு முரணாகவே கழிந்தன.

இந்த இயற்கை அனர்த்தம் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மனநிலையிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்த்தனர்.

சுனாமி; அழிவுக்கான புனருத்தான வேலைகளையும் - சமாதான முயற்சிகளையும் ஒன்றாக முன்னெடுத்து வெற்றிகாண முடியும் என்றும் சர்வதேச இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டனர்.

சுனாமி அழிவுகளைப் பார்வையிடுவதுடன், சமாதான முயற்சிகளையும் வலுப்படுத்தும் எண்ணத்துடன் மேற்குநாடுகளின் தலைவர்கள் இலங்கை நோக்கி அரசியற் பயணங்கள் மேற்கொண்டனர்.

எனினும், அனைத்துத் தரப்பினரும் நம்பியது போல அரசியல் நகர, சந்திரிகா அம்மையார் இடங்கொடுக்கவில்லை.

இயற்கை அழிவைச் சமாதான முயற்சிகளுடன் எல்லோரும் இணைத்துப் பார்த்து சிந்தித்துக் கொண்டிருக்க, அம்மையாரோ இனவாதரீதியிலும் - போர் முனைப்பிலும் செயற்பட ஆரம்பித்தார். உடனடி மீட்பு நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் திறம்பட நடாத்தி வருகின்றது என்பதை அறிந்திருந்தும் புலிகள் மீது சேறுபூசும் வகையில் குற்றச்சாட்டுக்களை வீசிவந்தார்.

உலகநாடுகள் உவந்தளித்த நிவாரண உதவிகளை சிங்களவர் - தமிழர் என்று இன பேதம் காட்டி விநியோகிக்க ஏற்பாடுகள் செய்தார்.

கிழக்கு மாகாணத் தமிழ்மக்களுக்கெனச் சென்ற நிவாரணப் பொருட்களை படையினரும், ஜே.வி.பியினரும் வழிமறித்து சிங்களவர்களுக்கெனத் திசைதிருப்பியபோது அம்மையாரின் அரசு அவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்ததுடன் - அவ்வாறான சம்பவங்கள் நடைபெறவில்லை என்று நியாயப்படுத்தல்களிலும் ஈடுபட்டது.




இயற்கையின் சீற்றத்தில் இறந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்தபோது நிவாரண உதவிகளின் அதிகரித்த பங்கை தெற்கிற்கு அனுப்புவதிலேயே அம்மையார் குறியாக இருந்தார். தெற்கிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்களவருக்கே உதவிகள் அளவுக்கு அதிகமாக வழங்கப்பட்டன.


புனர்நிர்மாணத்திற்கான திட்டங்களை வெளிநாட்டு அரசுகள் கோரியபோது தமிழர் பகுதிகளை முழுமையாகப் புறக்கணித்துவிட்டு சிங்களவர் பகுதிகளுக்கான திட்டங்களை உடனடியாகத் தயாரித்து, சந்திரிகா அரசு அனுப்பிவைத்தது. இலங்கை ஒருநாடு என்று இறைமைத் தத்துவம் பேசும் அம்மையார் தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துவிட்டு சிங்களவரின் தலைவியாகவே நடந்து கொண்டார்.

கடற்கோள் அழிவை ஒரு தேசியப் பேரழிவு என அறிவித்து உலக உதவி கோரிய அதே சமயம் நாட்டில் அவசரகால நிலையைப் பிறப்பித்தது வடகக்கு, கிழக்கில் தனது இராணுவ நலன்களை உறுதி செய்வதில் அம்மையார் அக்கறை காடடினாரேயொழிய, வடக்கு, கிழகக்கு மக்களின் மீட்பு மற்றும் நிவாரண விடயங்களில் அக்கறை காட்டவில்லை.

இலங்கைத்தீவில் அதிகம் பாதிப்படைந்த வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திற்கு உலகத் தலைவர்கள் வந்துவிடாதபடி பார்த்து கொள்வதில் சந்திரிக்கா அரசு, ஒரு கேவலமான இனவெறியுடன் நடந்து கொண்டது. 'தனது மக்கள்' என்று வடக்கு கிழக்கு மக்களை உலக நாடுகளுககுச் சொல்லிவந்த அம்மையார் இந்த அவலநேரத்திலும் இனவெறி உணர்வுடன் செயற்படுவது கண்டு உலகத் தலைவர்கள் திகைத்துப் போயினர்.

ஒரு பேரழிவில் இலங்கை மக்கள் அல்லல் பட்ட வேளையில் அந்த மக்களுக்கு உதவு





வுதை விட்டுவிட்டு, பெருமெடுப்பில் ஆயுதக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை வரை வதிலேயே அம்மையாரின் அரசு குறியாக இருந்தது.

ஈரானுடன் ஒரு ஆயுத ஒப்பந்தம். உலகநாடுக ளுடன் யுத்த டாங்கிகள் வாங்கும் உடன் படிக்கை. பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப் பந்தம்... என்று சிங்கள அரசு போர் முனைப் புடனேயே செயலாற்றி வருகின்றது.

வந்து குவியும் வெளிநாடுகளின் மனிதாபி மான உதவிக்கான பணத்தை சிங்கள அரசு ஆயுதக் கொள்வனவுகளுக்கு பயன்படுத்த

நிர்வாக இயந்திரத்தினூடாகவே வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் வெளிநாட்டு உதவிகள் செலவிடப்படும் என்று அரசு பிடிவாதம் பிடிக் கின்றது.

**ஆழிப்பேரலை அனர்த்தத்தின் விளைகள்....**

இந்த இயற்கை அழிவுகளைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளை வேகப்படுத்த வேணடும் என்ற உலக நாடுகளின் விருப்பத் திற்கு முற்றிலும் மாறாக ஒரு போரைத் தூண் டக்கூடிய நடவடிக்கைகளிலேயே சந்திரிக்கா அரசு ஈடுபடுகின்றது.

சுனாமி அழிவுகள் குறித்த மனிதாபிமான









முனைகின்றது என்ற அச்சம் தமிழ்மக்களிடம் எழுந்துள்ளது.

சந்திரிகா அம்மையாரின் சமாதான விரோதச் செயற்பாட்டால் முன்னர் வரவிருந்த 'டோக் கியோ நிதி' அரசிற்குக் கிடைக்கவில்லை. அதனால் இலங்கையின் அரச பொருளாதாரம் பாரிய நெருக்கடி நிலையில் இருந்தது. ஆனால் இப்போது திடீரென சிங்கள அரசு ஆயுதக்கொள்வனவில் - கப்பல் கொள்வன வில் - விமானக் கொள்வனவுகளில் அக்கறை காட்டுகின்றது. இதற்கான நிதிவளம் சிங்கள அரசுக்கு எவ்வாறு கிடைத்துள்ளது என்பது உலகறிந்த விடயமாகும்.

இந்தவகையில், இயற்கை அழிவுகளைக் கண்டு உலகம் வழங்கிய உதவிகளை சிங்கள அரசு ஆயுதக் கொள்வனவிற்கும் - தென்பகுதி அபிவிருத்திக்குமே செலவிட்டு வரு கின்றது என்ற உண்மை வெளி யாகின்றது.

தமிழர் பகுதிகளுக்கான வெளிநாட்டு உதவி களின் பங்கு சரியாகக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும், கிடைக்கும் நிதி உரிய இடங்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற கொள்கையுடனும் சிங்கள அரசும் - புலிகள் இயக்கமும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பு அமைய வேண்டும் என்று புலிகள் இயக்கம் அரசைக் கோரியிருந்தது.

ஆனால், பொதுக் கட்டமைப்பு யோசனையை சிங்கள அரசு புறக்கணித்து வருகின்றது. அதற் குப் பதிலாக ஊழலும் - இனவெறி உணர்வும் - நிர்வாகத்திறன் அற்றதுமான சிங்கள

வேலைத்திட்டங்கள் தொடர்பாக தலைமைப் பீடத்துடன் ஆலோசனை கலந்துவிட்டு மட்டக் களப்பு திரும்பிய புலிகளின் அணி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து - தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப் கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் கொல்லப்பட்டனர். இது மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டிச் செயல் என்பதுடன், புலிகள் இயக்கத்தைச் சீண்டி போருக்கிழுக்கும் ஒரு இராணுவச் செயலுமாகும்.

இவ்விதம், சமாதான முயறச்சிகளுக்குப் பதிலாக சந்திரிக்கா அரசு போர் முனைப் பிலேயே காலத்தை ஓட்டுகின்றது. அதற்கு வாய்ப்பாக சுனாமி அழிவுக்கான வெளிநாட்டு உதவிகளை இராணுவத் தேவைக்கு திசை திருபப் முயற்சிக்கின்றது. அதேசமயம், புனர் வாழ்வு மற்றும் நிவாரண விடயங்களிலும் தமிழர்களைப் புறக்கணித்து வஞ்சிக்க சிங்கள அரசு முனைகின்றது.

சிங்கள அரசின் இந்த இனவாத - இராணுவ வாத செயற்பாட்டை சர்வதேச சமூகம் உணர்ந்துகொண்டு கொண்டு அதற்கேற்ற விதமாகச் செயற்பட வேண்டும் என்பதே தமிழரின் அவாவாகும்.

விடுதலைப்புலிகள் (மார்கழி 2004 – தை, 2005)

# ஆழிப் பேரழிவின் பதிவுகள்

ஊருக்குள் கடல்புகும்... அதுவும் ஆழிப் பேரலையாக நுழைந்து உயிர்க்கொலைகள் புரியும் என்று எவரும் கற்பனை செய்திருக்க வில்லை. ஐம்பெரும் பூதங்களென நிலத்தை – நீரை – நெருப்பை – காற்றை – ஆகாயத்தை எம் முன்னோர்கள் உருவகப்படுத்தியதை நேற்று வரை நாங்கள் பெரிதுபடுத்தவில்லை. பூதம் என்று நாம் இதுவரை கருதியது இனவாதப் பூதத்தையும் தான்.


ஆனால் தனது அழிவுச்சக்தியை இயற்கை எம்மீது காட்டிவிட்டதே! 1, 500 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் நிலம் என்ற பூதம் நெளிந்து – அசைந்து – கரையில் சிறகுமுளைத்து – வாய் பிளந்து – எம்மக்களை விழுங்கிவிட்டதே.

சில நிமிட கடல் சீற்றம் தமிழீழத்தின் இருபதினாயிரம் வரையான மக்களை அழித்து விட்டது. எத்தனையோ குடும்பங்கள் முற்றாக அழிந்துவிட்டன. தாய் – தந்தையை இழந்த பிஞ்சுகள் ஏராளம். இன்னும் பல ஆண்டு களுக்கு நிலைத்து நீடிக்கப்போகும் அந்தச் சோக நினைவுகளைச் சுமந்துநிற்கும் சில விபரங்களை இங்கே காணலாம்.

### இறப்புக்கள்

வடக்கு-கிழக்கு 17,024


தெற்கு-மேற்கு 10,403




### காயங்கள்

வடக்கு-கிழக்கு 7,198


தெற்கு-மேற்கு 7,794




### இடம்பெயர்ந்தவர்கள்

வடக்கு-கிழக்கு 344,803


தெற்கு-மேற்கு 219,662




### சேதமான பாடசாலைகள்

வடக்கு-கிழக்கு 128


தெற்கு-மேற்கு 48





### சேதமான வீடுகள்

வடக்கு-கிழக்கு 85279

தெற்கு-மேற்கு 35,757



## 18 ஆம் ஆண்டு

# வீரவணக்கம்



04.03.1938 **தேசத்தின் குரல்** 14.12.2006

# அன்ரன் பாலசிங்கம்

[அன்டன் ஸ்டானிஸ்லாஸ் பாலசிங்கம் – மண்டூர், மட்டு ...கரவெட்டி, யாழ்]

*விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் மூத்த தலைமகனாக, பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.*

*-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -*



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# மிருசுவில் படுகொலை 19.12.2000

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் "படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்" என்று சொல்லப்படுகின்ற மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது. முகமாலைப் பகுதியிலிருந்து யாழ். நகர்நோக்கி மேற்குப் புறமாக மூன்று கி.மீ. தூரத்தில் மிருசுவில் கிராமம் அமைந்துளள்து.

வாழ்வியலுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தவேளை ஒன்பது பேரையும் கைது செய்த சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் கண்களை கட்டி சித்திர வதை செய்தனர். ஒன்பது பேரில் ஒருவர் தப்பி மந்திகைப் பகுதிக்கு வந்து ஏனையவர்களின் உறவினரிடம் எட்டுப்பேரின் நிலைமை










2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தென்மராட்சியின் பல பாகங்களிலும் கடுமையாக நடந்த சண்டைகளால் தென்மராட்சிப் பகுதி மக்களிற் பெரும்பாலானோர் வடமராட்சியின் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். இதில் ஒரு பகுதியினர் மிருசுவில் வடக்கு படித்த மகளில் குடியேற்றத்திட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் அமைந்துள்ள நாவலர் மடப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

19.12.2000 அன்று மிருசு விலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் தங்கியிருந்த ஒன்பது பேர் தமது வாழ் விடங்களைப் பார்வையிடச் சென்றனர். அங்கிருந்த தமது

யினையும் தெரிவித்தார்.

காணாமற்போனர்களின் உறவினர்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அச்சம்பவத்திற் தப்பிவந்த பொன்னையா மகேஸ்வரன், மற்றும் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்ட சிங்கள இராணுவ வீரர் லான்ஸ் கோர்ரல் ஆர். எம். எஸ். ரத்னாநாயக்கவும் கொடுத்த தகவின் பேரில் அப்போதைய யாழ். காவற்றுறை அத்தியட்சகர் உபாலி குணசேகர, உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் நிமல் ஸ்ரீநாத், சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிரேம் சங்கர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் அடையாளம் காட்டப்பட்ட மனிதப் புதைகுழி 25.11.2000 அன்று மாலை 3:30 மணியளவில் தோண்டப்பட்டது. புதைகுழி தோண்டும் போது இரண்டு அடி ஆழத்தில் சடலங்கள் ன்பட்டன. அப்பகுதியிற் காணாமற்போன எட்டுப் பேரது உடல்களும் பெட்டப் பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப் பட்டன.

மிருசுவில் சம்பவம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கீழ் வருமாறு (29.12. 2000 வீரகேசரி) தகவல் கொடுத்தார்.

"தப்பி வந்த பொன்னையா மகேஸ்வரனும், லான்ஸ் கோப்ரல் ஆர்.எம். எஸ் ரட்ணாயக்காவும் அடையாளம் காட்டிய எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்த மனிதப் புதைகுழியைத் தோண்டியபோது இரண்டடி ஆழத்தில் மனிதனின் முழங்கை ஒன்று தென்பட்டது. அதைச்சுற்றி மண்ணை அவதானமாக அப்புறப்படுத்தி வேளை மரக்கட்டை காணப் பட்டது. மனித சடலத்தின் தலை ஒன்றும் காணப்பட்டது. அதை அவதானமாக எடுத்த போது இருபத்தொரு வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் காணப்பட்டது. இச்சடலம் சிவப்பு வெள்ளை நிறச்சாறியினால் சுற்றப் பட்டிருந்தது. இரண்டாவதாகச் சிறுவனின் சடலம் எடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மேலும் சடலங்கள் எடுக்கப்பட்டன. சிறுவனின் சடலம் மேற்றோல் உரிந்து றோஸ் நிறமாகக் காணப்பட்டது. கூரிய ஆயுதத்தால் குரல் வளைகள் வெட்டப்பட்ட நிலையில், கால், தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும் சடலங் கள் காணப்பட்டன." எனத் தெரிவித்தார்.

**19.12.2000 அன்று மிருசுவிற் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. சின்னையா வில்வராசா (41)
2. செல்லத்துரை தெய்வகுலசிங்கம் (31)
3. வில்வராசா பிரசாத் (05)
4. வில்வராசா பிரதீபன் (15)
5. பாஸ்கர் ஞானபாஸ்கரன் (19)
6. ஜெயச்சந்திரன் நடேசு (21)
7. ஞானச்சந்திரன் கதிரன் (35)
8. ஞானச்சந்திரன் சாந்தன் (-)

# மன்னார், பேசாலைப் படுகொலை 23, 12. 2005


மன்னார் மாவட்டத்தில் சிங்கள அரசபடைகளின் மீது மேற் கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலை அடுத்து சிங்கள படையினர் தமது கொலை வெறியாட்டத்தைப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தம்மைத் தாக்குவோரை அடையாளம் காண முடியாத படையினர், வன்முறைகளை பொதுமக்கள் மீது திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல. காலங்காலமாக தமக்கேற்படும் இழப்புக்களுக்காக பொதுமக்களையே இவர்கள் பழிதீர்த்து வருகின்றனர்.

அவ்வாறே 13.12.2005 அன்றைய மன்னார்ச் சம்பவமும் அமைந்துள்ளது. அன்றையதினம் படையினர் மீது மேற்கொள் ளப்பட்ட தாக்குதலையடுத்து படையினரால் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இரு குடும்பங்களைச் சேர்ந்த நான்கு வயதுக் குழந்தை உட்பட ஐந்து பேரை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இவ்வாறு கடத்திச் செல் லப்பட்ட ஐந்துபேரும் 100 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் எரியூட்டப்பட்ட சடலங்களாகக் கண்டு பிடிக்கப் பட்டனர்.

**23.12.2005 அன்று மன்னார், பேசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. திரேசா குருஸ் (40)
2. இம்மானுவேல் குருஸ் (43)
3. குருஸ் அந்தோனியம்மா (38)
4. குருஸ் டிலக்சன் (04)

25.12.2005 நினைவுநாள்



## மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம்


மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம் இலங்கை, மட்டக்களப்பு பகுதியை சார்ந்த தமிழ் தலைவர்களில் ஒருவரான இவர் டிசம்பர் 25 2005 அன்று படுகொலை செய்யப்பட்டார். மட்டக்களப்பு தேவாலயத்தில் நடந்த நத்தார் நள்ளிரவு திருப்பலிப் பூசையின் போது அரச ஆதரவுபெற்ற துப்பாக்கிதாரிகளால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்திரிகையாளர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னின்றுழைத்தவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்த தலைவர்களுள் ஒருவர். தமிழ்த் தேசிய விடுதலைக்காக அறவழியில் போராடிய அன்னாருக்கு தமிழீழத் தேசியத் தலைவரால் மாமனிதர் விருது வழங்கப்பட்டது.







16.12.2005 படுகொலை



## பாலியல் வன்கொடுமை

இளையதம்பி தர்சினி – படையினர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை இளையதம்பி தர்சினியை 2005, டிசம்பர் 16 ஆம் நாள் இலங்கை இராணுவம் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை செய்தது. புங்குடுதீவில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் 16.12.2005 அன்று தர்சினியை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். பின்னர் அவரைக் கொலை செய்து முகாமுக்கு அருகிலிருந்த பாழடைந்த கிணறொன்றினுள் வீசினர். கொல்லப்படுவதன் முன், அவர் பலரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு இருப்பதற்கான தடயங்களையும், உடலின் பல இடங்களில் நகக்கீறல்கள், பற்கடிகளும் காணப்பட்டிருந்ததுடன், அவரது ஒரு மார்பு மிக மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்ததாகவும் வைத்தியசாலைச் சான்றிதழ் உறுதிப்படுத்தியது. ஆயினும் வழமைபோல் படையினர் எவரும் தண்டனை பெறவில்லை.





இளையதம்பி தர்சினி
(1985 - 16.12.2005)
புங்குடுதீவு)

# தென் தமிழீழப் படுகொலைகள் ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் 2006

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த திருகோணமலைப் பகுதிகளும் அதன் அருகாக இருந்த மட்டக்களப்பு பகுதிகளும் ஆறுமாத காலத்துக்கு மேலாக சிறீலங்கா சிங்கள இராணுத்தின் பெருமெடுப்பிலான தாக்குதலுக்குள்ளானது. அதன்போது பொதுமக்கள் கூட விட்டுவைக்கப்படவில்லை.



இந்தக்காலத்தில் இப்பகுதி துண்டிக்கப்பட்டிருந்தால் இதன்போது ஏற்பட்ட 210 பொதுமக்களின் இழப்புக்கள் இதுவரை சரியாக பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்த 6 மாதகாலத்து நிகழ்வுள் தொடர்பான ஒரு சுருக்கமான விபரமே இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரம் முழுமையாக இல்லாவிட்டாலும் குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் தொடர்பாக குடும்பங்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் உதவி அரச அதிபர் அலுவல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் சரியான பார்வையைத் தருகிறது.

மாவிலாற்றிலிருந்து நீர் திறந்து விடப்படும் வான் கதவை கட்டுப்பாட்டில் கொண்டுவருவ தென்ற சாட்டில் இத்தாக்குதல் ஆரம்பமானது. திருகோணமலையின் மூதூர் தமிழ் மக்கள் அந்தப் பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் குளத்திலிருந்து தங்களுக்கும் நீர் வசதிசெய்து தரப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஏக்கர் நெல் வயல்களுக்கு நீரை வழங்கும் இந்த வான் கதவைப் பூட்டியிருந்தனர். இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலையீட்டினால் இப்பிரச்சனை தீர்க்கப்பட்ட பொழுதும் சிங்கள அரசாங்கம் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றது.

முதலாவதாக ஆகஸ்ட் 06 ஆம் நாள் மாவிலாறு பிரச்சனையை வைத்து ஆகாய, தரைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நாட்களில் இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஈச்சிலப்பத்தை, நல்லூர், மற்றும் உப்பாறு உள்ளடங்கும். சம்பூருக்கு அண்மியதாக முன்பு நடாத்தப்பட்ட தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் இக்கிராமங்களுக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை இணைக்கின்ற ஒரு ஒடுங்கிய கரையோரப் பகுதியான வாகரைக்கு திருகோணமலையின் மூதூர் கிழக்கிலிருந்து மக்கள் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 19 ஆம் நாள் இரண்டாவது மிகப்பாரிய தாக்குதல் வாகரையை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. பொது மக்கள் மீது மீண்டும் நடாத்தப்பட்ட ஆகாயம், தரைத்தாக்குதலால் 100 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு முறைமையான இறுதி நிகழ்வுகளை நடாத்தக்கூட குடும்பத்தவர்களுக்கு வசதி கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வின் பின்பும் வாகரைக்கு வடக்கே மூதூர் கிழக்கில் தங்கியிருந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களெனக்கருதி ஆகஸ்ட் 28ஆம் நாள் இவர்கள் மீது கொடூரமான தாக்குதலை சிறீலங்கா சிங்கள இராணுவம் நடாத்தியது. சிறீலங்கா சிங்கள இராணுவத்தால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கைத் துறை முகத்துவாரம் பாலமூடாக வெளியேறுவதற்கு மக்கள் முயற்சித்தனர். மக்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்கமாக பாலம் சிறீலங்கா இராணுவத்தால் தகர்க்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 25 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

மூதூர் கிழக்கில் இவ்வாறு தாக்குதலை நடத்தி மக்களை வெளியேற்றிய சிறீலங்கா சிங்கள இராணுவம் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்ந்த வாகரைப் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் பிரதேசத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன் போது நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இந்நிகழ்வு இடம்பெற்ற ஆறு மாத காலத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் இலங்கை கண்காணிப்புக்குழு ஆகியன வாகரைக்குச் செல்வதை தடுத்தது. இறுதியில் குண்டு மற்றும் செல் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாக்குமாறு இலங்கை கண்ணகாணிப்புக் குழுவிடம் மக்கள் மன்றாடினார்கள். ஆறு மாதகாலத்துக்கு உணவு தொடரணி கூட வாகரைக்கு செல் வதை சிறீலங்கா சிங்கள அரசாங்கம் அனுமதிக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உணவுத் தொடரணியை எடுத்துச்செல்ல இரு தடவைகளும் மேலாக முயற்சித் ததையும் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் முறியடித்தது.

இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒரு வழியாக எல்லா மக்களையும் வாகரையிலிருந்து வெளியேற்றுவதில் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் வெற்றி கண்டது. தப்பியோடும் பொதுமக்களைத் தடுத்ததற்காகவும் வாகரையை விட்டு நேரகாலத்தோடு மக்கள் வெளியேறுவதை அனுமதிக்காததற்காகவும் சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளும் கண்டிக்கப்பட்டார்கள். பசியிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதாக சில பொதுமக்கள் நடையாகவே காடுகளை கடந்தார்கள். வள்ளத்தில் சென்று ஐந்து பொது மக்கள் வள்ளம் அமிழ்ந்ததில் நீரில் மூழ்கினர். மறு வளத்தில் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமையைச்செய்தமை பொதுமக்கள் மீதான பாரபட்சமான தாக்குதல் என்பவற்றை சர்வதேச சமூகம் கண்டிக்காமையையிட்டு தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

**உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு**

1. அ. அரசரட்ணா (42)
2. கோ. கணேசராஜா (46)
3. ஞா. சறோஜா (10)
4. ஞா. றகுமார் (06)
5. ஞா. சீவிதா (10)
6. ஞா. மஞ்சுளாதேவி (23)
7. இ. பவானி (24)
8. க. நற்குணம் (36)
9. மு. தங்கவேல் (22)
10. சீ. மகாலிங்கம் (32)
11. செ. சந்திரகலா (18)
12. சி. திரவியமலர் (55)
13. சி. முத்துலிங்கம் (45)
14. சி. ரஸ்யப்பிரியன் (01)
15. சி. சிவகுமார் (25)
16. சா. தவன்ஜா (21)
17. சு. யோகேஸ்வரன் (29)
18. சு. கணபதிப்பிள்ளை (62)
19. த.புமணி (45)
20. வே. தா்மலிங்கம் (50)
21. ந.டேவிட் (25)
22. ந. குணராசா (22)
23. ந. பாக்கியராசா (40)
24. ந. விமலேந்திரன் (35)
25. நா. யோகேஸ்வரன் (28)
26. நகுலேஸ்வரன் (32)
27. நா. திரவியமலர் (65)
28. ந. தனுசலீன் (04)
29. ந. நிசாந்தன் (20)
30. பா. நாகேந்திரன் (20)
31. பா. தயாநந்தினி (22)
32. ப. கோணேஸ்வரன் (31)
33. பி. தவனேசன் (36)
34. ற. றாமச்சத்திரன் (32)
35. இ. பிரபு (17)
36. ற. சதுர்சன் (-)
37. ற. விஜயா (30)
38. ந. தியாகராசா (48)
39. அ. செல்வறட்ணம் (-)
40. ற. கோபிநாத் (22)
41. க. பத்மா (-)
42. கு. தெய்வகரன் (-)
43. மா. நாகேஸ்வரன் (-)
44. மா. சுந்தரராஜா (-)
45. நா. இந்தரன் (46)
46. நா. பிறேமலதா (35)
47. சி. சிவசோதி (-)
48. வ. சுமநாதன் (-)
49. வெ. கோணேஸ்வரன்(-)
50. வி. றதிகலா (-)
51. யோ. சிதம்பரம் (45)
52. அ. அரசறட்ணம் (33)
53. ச. சண்முகநாதன் (29)
54. ச. சந்திரசேகரன் (22)
55. ச. கோஸ்பிரியன் (-)
56. சி. பவானி (22)
57. செ. தா்மலிங்கம் (31)
58. வ. திவ்வியா (14)
59. ஜீ. சித்திரவேல் (-)
60. கா. றாஜேஸ்வரன் (-)
61. றா. தேவராச் (25)
62. சி. சிவசங்கர் (27)
63. வெ. ஆறுமுகம் (28)
64. க. புஸ்பன் (25)
65. க. றதி (31)
66. க. றஜீன்திரன் (27)
67. க. சங்கர் (23)
68. க. சாந்தகனகம் (20)
69. கோ. நாகேந்திரன் (70)
70. கோ. தனபாக்கியம் (28)
71. கோ. தவராசா (32)
72. லோ. சசிகரன் (26)
73. ம. வரதன் (24)
74. மா. கள்ளிப்பிள்ளை (52)
75. மு. சிவமணி (58)
76. மு. பாஸ்கரன் (29)
77. ம. குணராசா (31)
78. அ. யோகநாதன் (12)
79. ஆறுமுகம் (34)
80. சு. நந்தினி (-)
81. அ. யோகநாதன் (26)
82. பா. தவமணி (27)
83. செ. ஜெயகாந்தன் (24)
84. டி. பட்மசிறி (27)
85. க. சசிக்குமார் (17)
86. T. புமணி (-)
87. T. மஞ்சுளாதேவி (-)
88. சு. கோமளாதேவி (32)
89. ச. கிளிராசா (50)
90. கு. காந்தன் (22)
91. வே. றாஜன் (35)
92. T. குமார் (07)
93. T. டயானா (15)
94. A வேல்முருகா (47)
95. ச. கிளியரசன் (50)
96. கு. சத்தியராசா (17)
97. கலாபவனம் (45)
98. சேரன் (-)
99. சி. குணமணி (25)
100. ஞா. கோபால் (19)
101. இ. தர்சினி (07)
102. ஜெ. மாணிக்கப்போடி (19)
103. ஜெ. சகுலேஸ்வரன் (21)
104. க. அஜந்தன் (15)
105. ளு. ஜெயகாந்தன் (21)
106. ளு. முகிருபறாச் (30)
107. ளு. சிவனேசன் (25)
108. ளு. தயாகரன் (29)
109. ச. மாணிக்கப்போடி (27)
110. செ.ஶ்ரீகாந்தராசா (17)
111. சி. நிறஞ்சன் (20)
112. சி. நித்தியானந்தம் (22)
113. வி. விஸ்வலிங்கம் (19)
114. விக்னேஸ்வரன் (-)
115. த. நிமலநாதன் (34)
116. வி. துரைசாமி (-)
117. த. விவேகானந்தன் (36)
118. வே. கதிர்காமத்தம்பி (55)
119. வி. யாழினி (13)
120. A. ரகுவரன் (17)
121. I. பவானி (23)
122. I டெனிஸ்சிவானந்தன் (27)
123. K. ஜெயானந்தி (16)
124. K. கிருபேஸ்வரன் (-)
125. K. நற்குணம் (33)
126. K. சரத்பாபு (18)
127. M . கழிப்பிள்ளை (52)
128. M தவராசா (34)
129. N. யோகஸ்வரன் (-)
130. N. ரவீந்திரராசா (-)
131. P. கமல் (17)
132. P. கிருஸ்ணபிள்ளை (56)
133. S. ஜீவாநந்தன் (31)
134. S. நந்தினி (13)
135. S. றஸ்யப்பிரியன் (-)
136. S. சந்திரிக்கா (17)
137. S. தவப்பிரியா (20)
138. T. தவராசா (-)
139. V. பாலகுமாரன் (19)
140. V. கதிர்காமத்தம்பி (51)
141. V. றணீஸ்வரன் (17)
142. அ. சுதர்சினி (17)
143. கா. சரஸ்வதி (17)
144. நா. றவீந்திரராசா (41)
145. றா. சாளினி (04)
146. ர. றாமச்சந்திரன் (30)
147. சு. மகேந்திரராசா (43)
148. சு. றாஜேஸ்வரன் (26)
149. தி. றேகன் (21)
150. A. பிரியா (-)
151. A. தமயந்தி (-)
152. V. தா்மலிங்கம் (-)
153. சேரன் (-)
154. சி. குணரட்ணம் (60)
155. சி. குணமணி (60)
156. வி. சுசிகரன் (10)
157. க. கோமளாதேவி (32)
158. A. வனிதா (-)
159. வே. றாஜன் (-)
160. ஆ. மேனா (10)
161. V. தா்மலிங்கம் (-)
162. சி. சந்திரன் (39)
163. சி. ச்நதிரமூர்த்தி (23)
164. சி. பாக்கியராஜா (30)
165. சி. இந்திரன் (46)
166. சி. விஜயா (34)
167. சு. கோணேஸ்வரன் (28)
168. சு. யுவந்தன் (10)
169. த. விறதறாஜ் (22)
170. த. பிள்ளையான் (51)
171. த. றஞ்சன் (24)
172. த. யோகேஸ்வரன் (27)
173. த. சுமதி (42)
174. த. சந்திரன் (20)
175. தி. தர்சிகா (11)
176. தி. தஸ்காந்தி (16)
177. வ. குணவதி (58)
178. வே. மனோகுமார் (28)
179. S. திலசிகா (09)
180. S. கோகுலவாணி (-)
181. S. சோதி (-)
182. S. கேமலதன் (09)
183. P. மயில்வாகனம் (-)
184. N. தீபன் (17)
185. M. நாகேஸ்வரன் (38)
186. கு. சத்தியராசா (17)
187. ஆனந்தஜோதி (24)
188. கலாபவனம் (450
189. T. சர்மிளா (-)
190. K. நிறுசாந்தினி (12)
191. கு. காந்தன் (22)
192. ஆனந்தஜோதி (24)
193. குணரட்ணம் (60)
194. வி. வசீகரன் (10)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# டிசம்பர் 28, 1999 அன்று மிக கொடூரமான ஒரு துன்புறுத்தல் ஈழத்து பெண் சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் என்ற பெண்ணுக்கு நிகழ்ந்தது

28.12.1999




## சாரதாம்பாள் பாலியல் வன்முறையும் படுகொலையும்

சாரதாம்பாள் மீது படையினரின் பாலியல் வன்முறையும் படுகொலையும் யாழ் புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளின் தாயுமான 29 வயதுடைய சாரதாம்பாள் சிறிலங்கா கடற்படையினரால் தனது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோதரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டுள்ளனர். சாரதாம்பாளின் இறந்த உடல் கடற்படையின் முகாமின் அருகில் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழிருந்து ஊர்மக்களால் கண்டறியப்பட்டது. உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண்ணின் உள்ளாடை அவரது வாயினுள் திணிக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்தார். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநாவின் சிறப்புப் பிரதிநிதியான ராதிகா குமாரசாமி இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு இலங்கை அரசிடம் இருந்து பெருமளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். சிங்கள அரசு விசாரணைக்குழுவை அமைத்தது. சாரதாம்பாள் மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப்படாதமையால், வழக்கைத் தொடர முடியாது என சிறிலற்கா சட்டமா அதிபர் திணைக்களம் வழமைபோல் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.

இந்த பெண் பலரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்ட தமிழ்ப் பெண் ஆவார். இவரை பாலியல் வன்புணர்வு செய்தவர்கள் சிறீலங்கா கடற்படையினர் இந்த கொடுமையை செய்தார்கள் என இந்த பகுதி மக்கள் உறுதியாக கூறுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டம், புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளின் தாயுமான 29 வயது சாரதாம்பாளின் இறந்த உடல் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழ் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் கிடந்ததை ஊர்மக்கள் கண்டு பிடித்தனர்.

இந்நிகழ்வு பலரையும் அதிர்ச்சி கொள்ள வைத்த பொழுதும் இன்றளவும் இதற்கு நீதி வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (AHRC) அறிக்கையின் படி, உள்ளூர் இந்துக் கோயில் குரக் களின் மகளான 29 வயது சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் சிறீலங்கா கடற்படையினர் எனச் சந்தேகிக்கப் படுவோரால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புங்குடுதீவு என்ற இடத்தில் அவரது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப் பட்டு சிதைக்கப்பட்டார் என கூறப்படுகின்றது.

பன்னாட்டு மன்னிப்பு அவையின் அறிக்கையின் படி, சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோதரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டது.

சாரதாம்பாளின் இறந்த உடல் வீட்டில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ள தரிசு நிலமொன்றில் அடுத்த நாள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

புங்குடுதீவிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்ற பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடுத்து சாரதாம்பாளின் உடல் மருத்துவ ஆய்வுக்காக கொண்டு செல்லப்பட்டது.

உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண்ணின் உள்ளாடை அவரது வாயினுள் அடைக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவரது அறிக்கை தெரிவித்தது.

சாரதாம்பாளின் இறுதி நிகழ்வுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து மனித உரிமை ஆர்வலர்கள் பலர் சென்று உரை நிகழ்த்தினர்.

அன்று அரசுத்தலைவராக இருந்த சந்திரிக்கா குமாரதுங்க 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநா சிறப்புப் பிரதிநிதி ராதிகா குமாரசாமி சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சிறீலங்கா அரசிடம் இருந்து பெருமளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

டிசம்பர் 1999 பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சிறிதளவு முயற்சியே மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

தமது வீட்டுக்கு வந்திருந்த கடற்படையினரின் ஆளடையாளத்தை வெளியிடக் கூடாதென சாரதாம்பாளின் தந்தையும் சகோதரரும் எச்சரிக்கப்பட்டதாக பன்னாட்டு மன்னிப்பு அவை தெரிவித்துள்ளது.

சிறீலங்கா காவல்துறையின் புலன்விசாரணைத் திணைக்களத்தின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில்,

“சகோதரர் தமது வீட்டுக்கு வந்திருந்த நால்வரின் ஆளடையாளத்தை நிரூபிக்கத் தவறி விட்டார்”. எனக் கூறினார்.

குற்றம் சுமத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் வேறு இடங்களுக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டதாக பன்னாட்டு மன்னிப்பு அவை தனது அறிக்கையில் தெரிவித்தது.

சாரதாம்பாளின் பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப் படாதமையால், வழக்கைத் தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.

இதே போல் கிருஷாந்தி குமாரசுவாமி, இளையதம்பி தர்சினி, கோணேஸ்வரி முருகேசபிள்ளை என பல தமிழ் பெண்களின் கொடூரமான படுகொலைகள் விசாரிக்கப் பட்டோ நீதி வேண்டியோ உண்மைகளை உலகுக்கு எடுத்து சொல்லாமலே மண்ணுக்குள் கொடும் துயரத்தை புதைத்து ஊமையாய் இருக்கின்றது...



# முள்ளிவாய்க்கால் பேரவல சாட்சியான மருத்துவர் வரதராஜாவின் நூல் சிட்னியில் வெளியாகியது!

– நவீனன்

08.12.2024

தமிழினப் படுகொலையின் சாட்சியும், 2009 வன்னி போர்க்களத்தில் இறுதிவரை பணியாற்றிய மருத்துவர்களில் ஒருவருமான மருத்துவர் வரதராஜா அவர்களின் **“Untold Truth Of Tamil Genocide"** பெருந்திரளான மக்களின் முன்னிலையில் சிட்னியில் வெளியிடப்பட்டது.



‘தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்’ எனும் வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் அவுஸ்திரேலியாவில் அடிலெய்ட், மெல்பேர்ண் நகர்களில் ஏற்கனவே வெளியாகியது. சிட்னியில் 8-12-24 ஞாயிற்றுக்கிழமை நூல் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இறுதிப் போரில் தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்து




வரை மதிப்பளிக்கும் வண்ணம் சிட்னியில் புத்தக வெளியீடும் நேரடி சந்திப்பு கலந்துரையாடலும் நடைபெற்றது.

இந்நூல் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை மாலை பிளாக் டவுண் நகர நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேசம் எங்கும் ஈழத்தமிழர்களின் பலத்த ஆதரவுடன் வெளியிடப்பட்ட வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் ஆங்கில மொழியில் ரஜீ பட்டீசன் எழுதிய “தமிழினப்படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்” என்பது ஈழத் தமிழர்களின் துயரமான வரலாற்றையும், அவர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்களையும் ஆவணமாக்கும் ஒரு முக்கியமான நூலாகும்.


பேரவலம் நிகழ்ந்த முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில் நடந்த இன அழிப்பு நிகழ்வுகளையும், அதன் மையத்தில் நின்று ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை காப்பாற்ற முயன்ற வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் தியாகத்தையும், இந்த நூல் ஈழத் தமிழர்களின் தனித்துவமான கலாசாரத்தையும், அவர்களின் அடையாளங்களையும் அழிக்க நடத்தப்பட்ட சதியை முழுமை யாக வெளிக்கொண்டு வருகிறது.


ஏராளமான பல்லின அரசியல் சூழ்நிலைகளின் விளைவாக ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைகள், பங்காளித்துவம், மற்றும் சுயாட்சி ஆகியவற்றுக்காக எப்படி போராடினார்கள் என்பதையும் இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

இதுவரை மறைக்கப்பட்ட வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு சொல்லித் தரும் முயற்சியாக இந்நூல் திகழ்கிறது. இது வரலாற்றை மறக்காமல் அதன் பாடங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளுமாறு இளைய தலைமுறையினருக்கு புகட்டும் ஒரு படைப்பாக இது விளங்குகிறது. ஈழத் தமிழர்களின் துயர அனுபவங்கள், அவர்களது எதிர்கால சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு அடித்தளமாக அமைந்தன என்பதையும், எந்த சூழலிலும் மனிதநேயத்தை உயர்த்தி நிறுத்தும் பொறுப்பை உணர்த்துகிறது.

வைத்தியர் துரைராஜா வரதராஜா ஈழத் தமிழர்களின் உண்மையான மனிதநேய வைத்தியராக திகழ்கிறார். அவர் காட்டிய தியாகம், உலகமெங்கும் தமிழ் இனத்தின் எதிர்கால காலப்பகுதிகளுக்கு நம்பிக்கை மற்றும் நீதி தேடும் சான்றாக உள்ளது. ஆங்கில பதிப்பு மூலம் இந்த நூல், ஈழத் தமிழர்களின் துயர வரலாற்றை உலகளாவிய அரங்கில் கொண்டு சேர்க்கும் ஓர் அரிய முயற்சியாக திகழ்கிறது.

தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவ பெருமகனை மதிப்பளிக்க இந்நிகழ்வினை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ஒழுங்கமைத்தது.











# ஜே.வி.பி.யின் மாகாணசபை முறைமையும் வெறுப்பும் அன்றும் இன்றும்!

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்

09.12.2024

இப்போது அரசியலில் பேசும் பொருளாக மாறி இருப்பது ஜே.வி.பி யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறிய மாகாணசபை முறைமையை புதிய அரசியலமைப்பு சட்டத்தில் நீக்கப்படும் என கூறிய கருத்தாகும்.

இது முதன்மை செய்தியாக பேசப்படுவது என்னைப் பொறுத்தவரை பொருத்தப்பாடானதாக நான் பார்க்கவில்லை. ரில்வின் சில்வா மாகாணசபை முறை மையை தொடர்ந்தும் நாம் ஆதரிப்போம் என கூறியிருந்தால் அதனை முதன்மை செய்தியாக ஆச்சரியத்துடன் நோக்கலாம் என்பதே எனது வாதம். ஜே.வி.பி இன்று நேற்றல்ல 1987ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் இதனை எதிர்த்து வரும் ஒரு கட்சி என்பது சிறு குழந்தைக்கும் தெரியும்.

மாகாணசபைகளின் அல்லது 13வது திருத்தத்தின் இந்த தேக்க நிலைக்கு ஜே.வி.பி.யின் சந்தர்ப்பவாத, இனவாத அரசியல் முக்கிய பொறுப்பாக அமைகிறது. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தங்களுக்கு எதிராக செயற்பட்ட சிங்கள, பௌத்த வாதிகள், அவர்களுடைய கட்சிகள் போன்றே சிவப்பு சட்டை ஜே.வி.பியும் தொடர்ச்சியாக எதிராக செயற்பட்டது என்பதே உண்மை.

ஈழவிடுதலைப்போராட்டத்தில் இந்தியாவின் பங்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலை ஆரம்பத்தில் இருந்தது அதனால் திம்புப் பேச்சுவார்த்தைகள் இந்திய அரசின் அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் தமிழீழ போராட்டத்துடன் தொடர்புடைய ஈழ விடுதலை இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்குமிடையே ஈழத்தமிழர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்குடன் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்பு வில்மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை குறிக்கும். இப்பேச்சுவார்த்தைகள் 1985 யூலை, 08, தொடக்கம் 13, வரையும் பின்னர் 1985 ஆகஷ்ட் 12,13, ம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக இடம்பெற்றன.

அதில் தமிழர் தரப்பு தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக அன்ரன் பாலசிங்கம், திலகரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாக வரதராஜப்பெருமாள், கேதீஷ்வரனும், தமிழீழ விடுதலை இயக்கம் சார்பாக சாள்ஷ் அன்ரனிதாஸ், மோகனும், ஈழம்புரட்சி அமைப்பு சார்பாக ராஜிசங்கர், இரத்தினசபாபதியும், தமிழ் மக்கள் விடுதலை கழகம் சார்பாக வாசுதேவா, சித்தாத்தனும், தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக சிவசிதம்பரம், சம்பந்தன், அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசின் தரப்பில் ஜே. ஆரின் சகோதரரும் பிரபல சட்டவாதியுமான எச்.டபிள்யூ.ஜெயவர்த்தன தலைமையிலான பத்துபேர் கலந்து கொண்டனர். இந்திய அரசு சார்பில் ரொமேஸ் பண்டாரி தலைமையிலான குழு பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்வதற்காக இணைந்திருந்தது. இதில் தமிழர் தேசியம் தமிழர் தாயகம் தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை மற்றைய தமிழ் குழுக்களும் ஏற்றுக்கொண்டன. ஆனால் இக்கோரிக்கையைச் சிங்கள அரசு நிராகரித்தது. இதனை தொடர்ந்து தான் 1987 யூலை 29 புதன்கிழமை இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியும் கையெழுத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி அதே ஆண்டு 1987 நவம்பர் 14 சனிக்கிழமை விசேட பாராளுமன்ற அமர்வை கூட்டியே இலங்கை நாடாளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது. அதன் பிரகாரம் 1988 பெப்ரவரி, 03 ம் திகதி திங்கள்கிழமை அன்று உத்தியோகபூர்வமாக ஒன்பது மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

அப்படி உருவாக்கப்பட்டாலும் எட்டு மாகாணசபையாகவே வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையாகவே இருக்கும் என எழுதப்படாத இணக்கப்பாடு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும், இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திக்கும் பேச்சளவில் இணக்கம் காணப்பட்டது. அதன் அடிப்படையில் 1988 தொடக்கம் 2006 வரை 18, வருடங்களாக இணைந்த மகாணசபையாகவே இலங்கை அரசினால் நிருவாகம், மற்றும் நிதி ஒதுக்கீடுகள் கையாளப்பட்டன.

இணைந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தல் முதன்முதலாக 1988 நவம்பர்,19ல் நடை பெற்றது. இலங்கை இந்திய ஒப்பந்தம், மாகாணசபை தேர்தல் என்பவைகளை விடுதலைப்புலிகள் ஏற்கவில்லை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சுதுமலை பிரகடனம் 1987 ஆகஷ்ட், 04 அன்று, யாழ்ப்பாணம் சுதுமலையில் இடம் பெற்றது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை சுதுமலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள், இந்திய இராணுவத் தளபதிகள், பத்திரிகையாளர்கள், முன்னிலையில் தலைவர் பிரபாகரன் தெளிவாக எடுத்துரைந்திருந்தார்.

அந்த உரையில் “இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என்பதைப் பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது. ஆகவே, இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்திய அரசுக்குத் தெள்ளத்தெளிவாக விளக்கினோம். ஆனால், நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவோம் என இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது.

இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை மட்டும் தொட்டு நிற்கவில்லை. இது, பிரதானமாக இந்திய இலங்கை உறவு பற்றியது. சிங்கள் இனவாத அரசின் மீது எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை என்பதையும், இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். என தலைவர் கூறியிருந்தார் அன்று தீர்க்க தரிசனமாக “இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன்” என கூறியது எவ்வளவு உண்மை இன்றுவரை 37, வருடங்களாக இது நிறை வேறவில்லை தலைவர் கூறியதுதானே நடந்தது, நடக்கிறது.

இணைந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தலை விடுதலைப் புலிகள் புறக்கணித்தனர். அப்போது அரசியல் கட்சியாக இருந்த தமிழர் விடுதலை கூட்டணியும் இந்த தேர்தலை புறக் கணித்தனர். ரெலோ, புளட் என்பவைகளும் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை வடகிழக்கில் இந்திய அமைதிப்படையின் துணையுடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எவ்) ஈழம் தேசிய ஜனநாயக விடு தலை முன்னணி (ஈஎன்டிஎல்எவ்), சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கியதேசியக்கட்சி ஆகிய நான்கு கட்சிகள் மட்டுமே அந்த தேர்தலில் போட்டியிட்டு ஈபிஆர்எல்எவ் கிழக்கில் 17, இடங்களையும், வடக்கில் 24, இடங்களுமாக மொத்தம் 41, ஆசனங்களையும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஷ் கிழக்கில் மட்டும் 17, ஆசனங்களையும், ஈஎன்டிஎல்எவ் வடக்கில் மட்டும் 12, ஆசனங்களையும், ஐ. தே. கட்சி கிழக்கில் மட்டும் ஒரு ஆசனத்தையும் பெற்று மொத்தமாக 71, ஆசனங்களுடன் திருகோணமலையில் முதலமைச்சராக வரதராஜப்பெருமாளை நியமித்து இணைந்த வடகிழக்கு மாகாணசபை ஆட்சி அமைக்கப்பட்டது ஆனால் 1990 மார்ச், 31, ம் திகதி வரையுமே மாகாணசபை இயங்கியது அதாவது 1. வருடம், 5, மாதம், 12, நாட்கள் வரதராஜப்பெருமாள் நாட்டை விட்டு ஓடும்போது தமிழீழத்தை திருகோணமலையில் வைத்து பிரகடனப்படுத்திவிட்டே இந்தியப்படையினருடன் கப்பலில் ஏறி இந்திய இராஜஸ்தானுக்கு சென்றார்.

இதனுடன் வடகிழக்கு மாகாணசபை இயங்கவில்லை எனினும் ஆளுநர் அதிகாரத்தில் 2006, வரை செயல்பட்டது. 2004இல் இடம்பெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் ஜே.வி.பி 34, ஆசனங்களை பெற்றிருந்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 22, ஆசனங்களை பெற்றிருந்தது, மகிந்த ராஷபக்சவின் அரசுக்கு ஜே.வி.பி பூரண ஆதரவை வழங்கி அமைச்சு பதவிகளையும் பெற்றது. அதில் தற்போதய ஜனாதிபதி அனுரா அமைச்சரவையில் விவசாயம், கால்நடைகள், நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக 2004 பெப்ரவரியில் நியமிக்கப்பட்டார். 2005 யூன் 16 இல் அவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார், ஏன் இராஜனாமா செய்தார் என்று தெரியுமா? ஜே.வி.பி. தலைவர் அமரசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடனான வட, கிழக்கு மாகாணங்களின் சுனாமி நிவாரண ஒருங்கிணைப்புப்பொறி முறையை எதிர்த்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகுவதற்கு ஜே.வி.பி தலைவர் அமரசிங்க எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து, ஏனைய ஜே.வி.பி. அமைச்சர்களுடன் சேர்ந்து அனுரவும் 2005 யூன் 16 ம் திகதி தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்த இனவாதிதான் இந்த ஜனாதிபதி அனுரா. சரி அதோடு மட்டும் விட்டார்களா? 1987 தொடக்கம் 2006 வரை 18, வருடங்களாக எந்த ஒரு ஜனாதிபதிகளோ கட்சிகளோ செய்யாததை மகிந்தவுடன் இணைந்து உயர் நீதி மன்றில் வழக்குப்போட்டவர்கள் இதே ஜே.வி.பி தான். அதனால் 2006 அக்டோபர் 16 இல் உயர் நீதிமன்றத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களை தனித்தனி மாகாணங்களாக பிரிக்கும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பை அவசர அவசரமாக செயல்படுத்தும்படியாகவே கிழக்கு மாகாணசபை தனியாக பிரிக்கப்பட்டதை தொடர்ந்து, கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் 2008 மே,10ஆம் திகதி நடாத்தப்பட்டது.

இந்த தேர்தலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு போட்டியிடக்கூடாது என்ற சதியை பிள்ளையான், கருணா ஆயுத ஒட்டுக்குழுக்களை கொண்டு அப்போதய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்களை எச்சரித்து கொலை அச்சுறுத்தலை காட்டி மகிந்த அரசும், இந்தியாவும் விரும்பிய சிவனேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையானை முதலமைச்சராக நியமித்த வரலாறு இடம் பெற்றது. முதலாவது கிழக்கு மாகாணசபை 2008லும், இரண்டாவது கிழக்கு மாகாணசபை தேர்தல் 2012 செப்டம்பர், 08ஆம் திகதியும் இடம்பெற்றது. அது போலவே வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் 2013 செப்டம்பர் 21இல் இடம்பெற்றது. அதன்பின்னர் 2024, வரை எந்த ஒரு மாகாணசபை தேர்தல்களும் இதுவரை நடை பெறவில்லை. காணி பொலிஸ் அதிகாரம் இல்லாத மாகாணசபை தேர்தலை பெயரளவிலாவது நடத்த முடியாமல் ஆளுநரை முகவர்களாக வைத்து செயல்படும் நிலை தொடர்கிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதய ஜனாதிபதி அனுரா அதிகாரப்பகிர்வு தொடர்பாக தமிழ் மக்கள் விரும்பினால் மாகாணசபை முறைமை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்பதை கூறியிருந்தார், தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மாகாணசபை 13வது அரசியல் திருத்தம் ரத்துச் செய்வதாக குறிப்பிடவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்திக்கு 159 பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தது. குறிப்பாக யாழ்மாவட்டத்தில் மூன்று ஆசனங்களும் வன்னியில் இரண்டு ஆசனங்கள் கிடைத்து இலங்கையில் 22, மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த 21, மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி திசைகாட்டி அலைக்கு செல்வாக்கு உள்ளது என்பதால் எதையும் நினைத்தபடி செய்யலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் நாமே, பாராளுமன்ற பெரும்பான்மையும் நாமே என்ற திமிருடன் அதன்பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இப்போது புதிய அரசியல் யாப்பில் மாகாணசபை முறைமை இருக்காது என கூறுகிறார்.

ஜே.வி.பி தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரை ஏனைய கட்சிகளின் செயலாளர்கள் கூறுவதைப்போல் இந்த கருத்தை தட்டிக்கழிக்க முடியாது. மாகாணசபை முறைமை இல்லை என கூறும் ரில்வின் சில்வா இனப் பிரச்சினைக்கு மாற்றீடான எந்த தீர்வை முன்வைக்கப் போகிறார், ஒற்றையாட்சிக்குள் குதிரை ஓடும் தீர்வை முன்வைப்பது என்பது தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்பதே அனைத்து தமிழ்த்தேசிய கட்சிகளின் கொள்கை.

அப்படியானால் வடக்கு கிழக்கில் இருந்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து பாராளுமன்றம் சென்ற பேசாமடந்தைகளான உறுப்பினர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அவர்களுக்கு வாக்களித்த தமிழர்கள் என்ன சொல்லப்போகிறார்கள்? குறிப்பாக யாழ்மாவட்டத்தில் திசைகாட்டி அலையில் சிக்குண்டு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை தலையாட்ட அனுப்பிய மக்கள் என்ன சொல்லப்போகிறார்கள், ஜனாதிபதி அநுராவை கடந்த (04-12-2024) சந்தித்த தமிழரசுக்கட்சி எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் புதிய அரசியல் யாப்பு ஏற்படுத்தப்படும்போது அரசியல் தீர்வை பார்ப்போம் ஆனால் மாகாணசபை தேர்தல் உள்ளூராட்சி தேர்தல் முடிந்த பின்னர் நடத்தப்படும் என கூறியுள்ளார் பார்க்கலாம். இதே வேளை இந்த வாரம் முதலாவது வெளிநாட்டு பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ளும் ஜனாதிபதி அனுராவிடம் பாரதப் பிரதமர் என்ன சொல்லப்போகிறார் என்பதை பொறுத்துப்பார்ப்போம்.



JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★Carpet★Flooring
★Hardware★Kitchen Cabinets
★Painting★Tiles★ Stairs
★Moulding★Window★Garage Door
★Spotlight★ Plumping★Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203




The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# தொல்லியல் சுவடுகள்...

# இலங்கையில் தமிழ் அரச மரபின் தோற்றத்தை அடையாளப்படுத்திக் காட்டும் பிராமிச் சாசனங்கள்!

தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. இதற்கு, கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கைக்கு அறிமுகமாகிய போது அம்மதத்தையும் அம்மதம் சார்ந்த அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்பவற்றின் வரலாற்றையும் வாய்மொழிக் கதையாகப் பேணும் மரபும் தோற்றம் பெற்றதே காரணமாகும். அவ்வாறு பேணப்பட்ட வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே தீபவம்சம், மகாவம்சம, சூளவம்சம் முதலான பாளி வரலாற்று இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவ்விலக்கியங்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து ஏறத்தாழ 15 ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் இருந்த இராசதானிகளின் வரலாற்றையும், அவற்றில் ஆட்சிபுரிந்த மன்னர்களின் வரலாற்றையும் கால அடிப்படையில் எடுத்துக் கூறுகின்றன. அவற்றுள் முதல் பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் இலங்கையில் அரச உருவாக்கம் தோன்றிய காலம் முதல் கி.பி. 4 ஆம் நூற்றாண்டுவரை அநுராதபுர அரசை தமிழ், சிங்கள மன்னர்கள் மாறிமாறி ஆட்சிபுரிந்த வரலாற்றைக் கூறுவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்நூலை ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் 200 ஆண்டு காலத்தில் 21 மன்னர்கள் அநுராதபுர அரசில் ஆட்சிபுரிந்ததையும் அதில் 10 தமிழ் மன்னர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்ததையும் அறிய முடிகின்றது. அவர்களுள் தமிழ் மன்னன் எல்லாளன் மட்டும் 44 ஆண்டுகள் நீதி தவறாது நீண்டகாலம் ஆட்சிபுரிந்த முதல் மன்னன் என இந்நூல் கூறுவது மேலும் சிறப்பாக நோக்கத்தக்கது. இருப்பினும் இந்நூல் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் வடஇந்தியாவில் இருந்து ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்வுடன் தொடங்கியதென்ற வரலாற்றுக் கதையைக் கொண்டிருந்ததால், அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களை அக்கரையில் இருந்து வர்த்தகராக, படையெடுப்பாளராக அவ்வப்போது வந்து ஆட்சி செய்த அந்நியர் என்றே குறிப்பிடுகின்றது. இதனால் பிற்காலத்தில் இந்நூலை முதன்மைச் சான்றாகக் கொண்டு அநுராதபுரகால அரசியல் வரலாற்றை ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் தமிழர்களுக்கும், தமிழ் மன்னர்களுக்கும் இந்நாட்டு மண்ணோடொட்டிய தொன்மையான வரலாறு இல்லை என்ற கருத்தையே உருவாக்கினர்.

இந்நிலையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகளும், தொல்லியற் கண்டுபிடிப்புக்களும் தமிழ் மன்னர்களின் பூர்வீகம் பற்றிய பாளி இலக்கியக் கதைகளையும், வரலாற்று அறிஞர்கள் முன்வைத்த கருத்துகளையும் மீள்வாசிப்பிற்கு உட்படுத்துவதாக உள்ளன. அவற்றை உறுதிப்படுத்துவதில் தொல்லியற் சான்றுகள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள், முத்திரைகள், கல்வெட்டுகள், நாணயங்கள் என்பன பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

### இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மையும், அரச உருவாக்கமும்

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் இருந்து வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் மேலைப் பழங்கற்காலம், நுண்கற்காலம், பெருங்கற்காலம் அல்லது ஆதியிரும்புக்காலம் ஆகிய பண்பாடுகளுக்குரிய மக்கள் இலங்கையில் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 70 இற்கு மேற்பட்ட இடங்களில் நுண்கற்காலப் பண்பாட்டுக்குரிய சின்னங்களும் 60 இற்கு மேற்பட்ட மையங்களில் ஆதியிரும்புக்கால பண்பாட்டுக்குரிய சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்கள் தொல்லியல், மானிடவியல் மற்றும் வரலாற்று மொழியியல் சான்றுகளின் அடிப்படையில் தென்னிந்திய நுண்கற்கால, ஆதியிரும்புக் கால பண்பாட்டு வட்டத்திற்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன. பேராசிரியர் இந்திரபாலா இவ்விரு பண்பாடுகளும், அவற்றிற்குரிய மக்களும் தென்தமிழகத்தில் இருந்தே இலங்கைக்கு வந்தனர் எனக் குறிப்பிடுகின்றார் (இந்திரபாலா,கா.,(2006). அவற்றுள் இற்றைக்கு 3000 ஆண்டளவிலிருந்து பரவிய ஆதியிரும்புக்காலப் பண்பாடே இலங்கையில் நாகரிகம் தோன்றுவதற்கு காரணமாக இருந்துள்ளது. இதனால் இப்பண்பாடு இலங்கை நாகரிகத்தின் ஆக்க காலம் எனவும் அழைக்கப்படுகின்றது. இப்பண்பாட்டுடன் இலங்கையில் நிலையான குடியிருப்புகள், நிரந்தர பொருளாதாரக் கட்டமைப்பு, நீர்ப்பாசனக் குளங்களை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புகள், இரும்பின் உபயோகம், மந்தை வளர்ப்பு, கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்களின் பயன்பாடு, சக்கரங் களைப் பயன்படுத்திய மட்பாண்டங்களின் உற்பத்தி, சிறு தொழில்நுட்ப வளர்ச்சி, உள்நாட்டு - வெளிநாட்டு வர்த்தகம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோற்றம் பெற்றன (Seniviratne,S.,1984:237-307).



ஆனைக்கோட்டை முத்திரை மோதிரம்

தமிழக, இலங்கை அரச உருவாக்கத்தின் தொடக்கப் புள்ளியாக ஆதியிரும்புக் காலப் பண்பாடே காணப்படுகின்றது. இப்பண்பாட்டுடன் தோன்றிய குளங்கள், நீர்பாசனக் கால்வாய்கள், பெரிய கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட ஈமச் சின்னங்கள், சிறு தொழில்நுட்பக் கூடங்கள், கடல்சார் வாணிபம் என்பவற்றில் பல மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டதற்கான சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. இதனால் அம்மக்களை வழிநடாத்தும் பல தலைவர்கள் தோன்றினர். அத்தலைவர்களின் தோற்றமே குறுநில அரசுகள் அல்லது அரச உருவாக்கத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. எல்மன் என்ற அறிஞர் இவ்வகை அரசுகளை இனக்குழு நிலையில் இருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக இருந்த சிறு அரசுகள் எனக் கூறுகின்றார். கலாநிதி பூங்குன்றன், சங்ககால மூவேந்தர் ஆட்சிக்கு முன்னர் தமிழகத்தில் ஐவகை நிலங்களிலும் ஆட்சி புரிந்தவர்கள் வேள், வேளீர் எனக் குறிப்பிடுகின்றார் (1996). இலங்கைக்குரிய ஆதியிரும்புக்காலப் பண்பாடு தமிழகத்தில் இருந்து பரவியதெனக் கூறும் பேராசிரியர் செண்பகலட்சுமி ஆதியிரும்புக்கால வேளாண்மைச் சமூகத்தில் இருந்த வேள், வேளீருடன் அரசு தோன்றியதாகக் கூறுகின்றார் (1993:70). பேராசிரியர் இராஜன், வேளீர் ஆட்சிக்கும் ஆதியிரும்புக்கால நடுகற்களுக்கும் இடையே தொடர்பு இருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றார் (1996:220). அண்மையில் இலங்கை - தமிழக அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சுதர்சன் செனிவரட்ன, அரச உருவாக்கத்தின் தொடக்கமாக ஆதியிரும்புக்காலப் பண்பாட்டைக் குறிப்பிட்டு, சங்ககால வேள் - வேளீரும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் வரும் வேளும் ஒன்று எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழக ஆதியிரும்புக்கால மட்பாண்ட எழுத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராயும் போது அது மேலும் உறுதியாகின்றது. இந்தியாவில் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் பெரும்பாலும் தமிழகத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இவை தமிழகத்திற்குரிய தனித்துவமான பண்பாடாகக் கூறப்படுகின்றது. இந்தியா சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள், மற்றும் தொல்லியல் மேலாய்வுகளில் நூற்றுக்கணக்கான பிராமி எழுத்துப் பொறிப்புடைய மட்பாண்ட ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டு வந்துள்ளன (Subbarayalu,Y., 1984, Rajan,K., 1996, 1994, 1997). அவற்றுள், அண்மையில் கொடுமணல், பொருந்தல், அழகன்குளம், ஆதிச்சநல்லூர், மாழிகைமேடு, கீழடி முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை தமிழர் நாகரிகம் பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக அமைந்துள்ளன. அவற்றுள் கீழடி அகழ்வாய்வில் பெறப்பட்ட தமிழ்ப் பிராமி எழுத்தின் காலம் இற்றைக்கு 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டிருப்பது தமிழ் மொழி, தமிழ் எழுத்து என்பவற்றுடன் தமிழ் அரசின் தோற்ற காலத்தையும் மேலும் பின்னோக்கிக் காட்டுவதாக உள்ளது.

தமிழகத்தை அடுத்து பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் பயன்பாட்டிலிருந்த ஒரு நாடாக இலங்கை காணப்படுகின்றது. இதற்கு வடஇலங்கையில் கந்தரோடை, சாட்டி, பூநகரி, ஈழவூர், கட்டுக்கரை, இரணைமடு, தென்னிலங்கையில் அநுராதபுரம், அம்பாந்தோட்டை கிழக்கிலங்கையில் மாவடிவேம்பு, பாற்சேத்துக்குடா ஆகிய ஆதியிரும்புக்கால பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம். வடஇலங்கையில் இதுவரை கிடைத்த பெரும்பாலான பிராமி எழுத்துப் பொறிப்புகளில் ஓரிரு எழுத்துக்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றின் எழுத்துக்களும், எழுத்து வடிவங்களும் பெருமளவுக்கு தமிழ்நாட்டு எழுத்துப் பொறிப்புக்களை ஒத்ததாகவே காணப்படுகின்றன. பூநகரிப் பிராந்தியத்தில் அதிக எண்ணிக்கையிலான பிராமி எழுத்துப் பொறிப்புகள் கிடைத்துள்ளன. அவற்றுள் வேள், நாக, ஈலா (ஈழம்?) முதலான பெயர்கள் சிறப்பாக நோக்கத்தக்கன. இவை கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இப்பிராந்தியத்தில் தமிழ் மொழி பேசும் மக்கள் வாழ்ந்ததற்குச் சான்றாகும். இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதியிரும்புக்கால பண்பாட்டு மக்கள் வாழ்ந்த கந்தரோடையில் 2011 இல் இலங்கைத் தொல்லியற்



திசமாறகம ஆதியிருப்புக் கால மட்பாண்டத்தில் 'புழைதி முறி'

மேற்கூறப்பட்ட தொல்லியல் ஆதாரங்களும், அவை தொடர்பான அறிஞர்களின் கருத்துகளும் இலங்கையில் ஆதியிரும்புக் காலப் பண்பாட்டுடன் அரச உருவாக்கமும் தொடங்கிவிட்டதை கோடிட்டுக் காட்டுகின்றன. அவ்வாறான அரச உருவாக்கம், முதலில் தமிழ் மொழி பேசிய மக்களிடையே தோன்றியிருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு. இதற்கு, இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் காணப்படும் தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிப்புக்கள் முக்கிய சான்றுகளாகும் (புஸ்பரட்ணம்,ப., 1993, பத்மநாதன்,சி.). இவ்வாதாரங்களை

திணைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியற் பிரிவுடன் இணைந்து இரு இடங்களில் இயற்கை மண்வரை அகழ்வாய்வுகள் மேற்கொண்டிருந்தது. இந்த அகழ்வின் போது ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுக்குரிய பலதரப்பட்ட சான்றாதாரங்களுடன் பிராமி எழுத்துப் பொறித்த பல மட்பாண்டச் சாசனங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அதன் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படாத நிலையில் அவற்றின் முக்கியத்துவத்தை இவ்விடத்தில் கூறமுடியாத நிலையில் உள்ளோம். ஆயினும் 1970 களிலும் இதற்குப் பின்னர் 1997 - 1998 காலப்பகுதியில் பேராசிரியர் கிருஸ்ணராஜா மேற்கொண்ட ஆய்வுகளிலும் அபிசிதன், ஆபதி, குணி முதலான தமிழ்ப் பெயர்களுடன் சில பிராகிருத மொழிச் சொற்களும் கலந்த மட்பாண்ட எழுத்துப் பொறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (கிருஸ்ணராசா, செ.,1998 : 72-75,).

2000 ஆண்டு காலப்பகுதியில் அம்பாந்தோட்டையில் இலங்கை - ஜேர்மன் நாட்டுத் தொல்லியல் அறிஞர்கள் இணைந்து ஆதியிரும்புக்கால குடியிருப்பு பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வின் போது பெரிய பானையொன்றின் மூடியில் தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த சாசனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தை ஆய்வு செய்த தென்னாசியாவின் முதன்மைச் சாசனவியலாளர்களில் ஒருவரான ஐராவதம், சாசனத்தின் காலத்தை கி.மு. 3 ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிட்டு, சாசனத்தின் நடுவில் காணப்படும் வடிவத்தை குறியீடாகக் கொண்டு, அதற்கு இடப்பக்கமாக உள்ள எழுத்துப் பொறிப்பை 'திரளி' எனவும் வலப்பக்கமாக உள்ள எழுத்துப் பொறிப்பை 'முறி' என்றும் வாசித்துள்ளார் (Mahadevan,I., 2010).

ஆயினும் இம் மட்பாண்டச் சாசனத்துடன் இணைந்து காணப்பட்ட பிற சின்னங்களின் காலத்தை கணித்திருந்தால் இச் சாசனத்தின் காலம் மேலும் முற்பட்டதாக இருக்க வாய்ப்புண்டு. திரளி, முறி என வாசிக்கப்பட்ட இரு சொற்களும் பொருள் அளவில் அளவு, பாத்திரம் என்பதையே குறிக்கின்றன. ஆனால் திரளி என வாசிக்கப்பட்ட சொல்லை இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கமாக வாசித்திருந்தால் அச்சொல்லை 'புழைதி' என வாசிப்பதே பொருத்தமாகத் தோன்றுகின்றது. இச்சொல் புலையன் என்பதன் பெண்பால் வடிவமாகும். இதன் பொருள் புழைதியின் அளவுப் பாத்திரம் எனப் பொருள்படும். இதற்கு ஆதாரமாக இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில், புலய(ன்) என்ற தனிநபர் பெயர் நான்கு இடத்தில் வருவதைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் இம் மட்பாண்ட எழுத்துப் பொறிப்பு தமிழ்ப் பிராமி எழுத்தில், தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளமை, இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தென்னிலங்கையில் தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந்ததற்கு முக்கிய சான்றாகக் காணப்படுகின்றது (Pushparatnam, P., 2014: 537 - 541).

1990 - 91 காலப்பகுதியில் பிரித்தானியா - அநுராதபுரத் தொல்லியல் ஆய்வுத்திட்டத்தின் கீழ் அநுராதபுரத்தில் 'ஸல்கஹவத்த' என்ற இடத்திலுள்ள ஆதியிரும்புக்காலக் குடியிருப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் அதிக எண்ணிக்கையிலான பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. ஆயினும் அவை பற்றிய புகைப்படங்கள் பெரும்பாலும் பிரசுரிக்கப்படாத நிலையிலேயே உள்ளன. இந்நிலையில் இங்கு கிடைத்த மட்பாண்ட எழுத்துக்களின் காலம் நவீன காலக்கணிப்பால் கி.மு. 650 இல் இருந்து கி.மு. 750 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவற்றின் காலம் கீழடி மட்பாண்ட எழுத்தின் காலத்தை விட முற்பட்டதாகக் காணப்படுகின்றது (Conningham, R.A.E., 1999: 73-97). ஆயினும் இக் காலக்கணிப்புகள் எதிர்காலக் கண்டுபிடிப்புகளாலும், காலக் கணிப்புகளாலும் மேலும் உறுதி செய்யப்பட வேண்டும். இருப்பினும் இக்காலக் கணிப்புகள் இலங்கைக்கு விஜயன் தலைமையிலான வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு முன்னரே, அதிலும் குறிப்பாக பௌத்த மதத்துடனே வடஇந்தியப் பிராமி எழுத்து அறிமுகமாகியது எனக் கூறும் காலத்திற்கு முன்னரே, இலங்கையில் எழுத்தின் பயன்பாடு இருந்ததற்கு முக்கிய சான்றுகளாகக் காணப்படுகின்றன.







இலங்கைப் பிராமிக் கலவெட்டுகளில் காணப்படும் தமிழ் உறவு முறைகள்

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவடிவேம்பு, பாற்சேத்துக்குடா ஆகிய இடங்களில் புராதன குடியிருப்புகளுக்குரிய சான்றுகளுடன் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழப் பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ள வண்ணக்கன், தம்பன், ணாகன் முதலான தனிநபர்ப் பெயர்கள் கிழக்கிலங்கையில் தமிழ் மொழியின் தொன்மையை அறிவதற்கு முக்கிய சான்றுகளாக உள்ளன. இவ்வெழுத்துப் பொறிப்புக்களின் முக்கியத்துவம் பற்றி பேராசிரியர் பத்மநாதனும் விரிவாக ஆராய்ந்துள்ளார். அவற்றுள் நாகன் என எழுதப்படும் பெயர் இம்மட்பாண்டங்களில் ணாகன் என எழுதப்பட்டுள்ளன. இம்மரபு இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளிலும், சமகாலத்தில் சங்க இலக்கியத்திலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. இலங்கையின் மூத்த தொல்லியல், வரலாற்று அறிஞர்களான கலாநிதி சிரான் தெரணியகல, பேராசிரியர் இந்திரபாலா முதலானோர் இலங்கைக்கு ஆதியிரும்புக்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறுகின்றனர். இதனை பொருத்தமான கருத்தாகக் கொள்ளலாம் என்பதை அண்மையில் வடஇலங்கையில் கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளும் உறுதிசெய்கின்றன (புஸ்பரட்ணம், ப., 2017: 132-140). இவ்வாய்வுகளின் போது ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் இணைந்த நிலையில் அதிக எண்ணிக்கையில் சுடுமண்ணாலான நாகச் சிலைகள், சிற்பங்கள், சமயச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நாகபடுவான் என்ற இடத்தில் நாகச் சிற்பங்களை, பாம்பு புற்று வடிவிலமைந்த பானையில் வைத்து வழிபட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பேராசிரியர் இரகுபதி இவ்வாதாரங்கள் ஆதிகால மக்கள் நாகபாம்பை புற்றில் வைத்து வழிவடுவதற்கு முன்னரே அச்சின்னத்தைப் பானையில் வைத்து வழிபடப்படும் மரபு தோன்றிவிட்டதைக் காட்டுவதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் நாகபடுவான் என்றே அழைக்கப்படுகின்றது. இப்பெயர் நாககுளம் என்பதன் இன்னொரு வடிவமாகும். ஏனெனில் 'படுவம்' என்ற பின்னொட்டுச் சொல் சங்க இலக்கியத்தில் நீர்நிலைகளைக் குறிக்கின்றது. இதிலிருந்து நாகபடுவான் என்ற இடப்பெயரின் தோற்றம், நாக வழிபாட்டுடன் தொடர்புடைய தொன்மையான இடம் என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இலங்கையில் கிடைத்து வரும் மட்பாண்டப் பொறிப்புகளிலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் நாக, ணாக, ணாகன் முதலான தமிழ் பெயர்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் இலங்கைக்கு ஆதியிரும்புக்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக மக்களுடனே தமிழ் மொழியும், தமிழ்ப் பிராமி எழுத்தும் தோன்றியிருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளன.

பாளி இலக்கியங்கள் வடஇந்தியக் குடியேற்றம் ஏற்படுவதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் எனக் குறிப்பிடுகின்றன (Mahavamsa.VII-VII 51-55). இம் மக்களை, மனிதப்பிறவிகள் அற்ற அமானுஜர் என வரலாற்று அறிஞர்களில் ஒரு சிலர் குறிப்பிட்டு வருகின்றனர். ஆனால் பேராசிரியர் சத்தமங்கல கருணாரத்தின போன்ற அறிஞர்கள் இவர்களை இலங்கையில் வாழ்ந்த ஒரு இனக்குழு எனக் குறிப்படுகின்றனர் (Karunarattne, 1984). இந்நிலையில் இம் மக்களை நினைவுபடுத்தும் பெயர்களிற்கு வரலாற்றுக் காலத்தில் இருந்து இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளிலும், பாளி இலக்கியங்களிலும், ஆதாரங்கள் காணப்படுகின்றன (Paranavithana 1970, 1983). அநுராதபுர இராசதானி காலத்தில் நாக என்ற பெயரில் பல மன்னர்கள் ஆட்யிலிருந்தது பற்றி மகாவம்சம் கூறுகின்றது. சில காலங்களில் இப்பெயருக்கு உரிய மன்னர்கள் மாறி மாறி ஆட்சி புரிந்ததற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இது, அநுராதபுர அரசில் நாகவம்ச ஆட்சி முறையும் தொடர்ந்ததைக் காட்டுவதாக உள்ளது. அவர்களில் தமிழ் மன்னர்களும் ஆட்சியிலிருந்தமை ஈழநாக(ன்) என்ற பெயரினாலும், அவன் மனைவி தமிழாதேவி (தமிழ் அரசி) என அழைக்கப்பட்டதிலிருந்தும் தெரிய வருகின்றது. கி.மு. 1 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 80 இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் 'நாக, நாஹ, ணாக' முதலான பெயர்கள் தனிநபர் பெயரின் முன்னொட்டுச் சொல்லாக, அல்லது பெயரின் பின்னொட்டுச் சொல்லாகக் காணப்படுகின்றது. இப்பெயருக்குரிய பலர் சிற்றரசர், குதிரை வணிகர், குதிரை மேற்பார்வையாளர், வரி சேகரிப்பாளர், அரச தூதுவர் முதலான அதிகாரப் பதவிகளில் இருந்ததை பிராமிக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. வடஇலங்கைக்கு உட்பட்ட வவுனியா வட்டாரத்தில் காணப்படும் நான்கு பிராமிக் கல்வெட்டுகள் நாகச் சிற்றரசுகள் பற்றிக் கூறுகின்றன (புஸ்பரட்ணம் 2003: 2-41). இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது ஆதியிரும்புக் காலப் பண்பாட்டுடன் தோன்றிய தமிழ் அரச உருவாக்கத்தை அல்லது தமிழ் சிற்றரசர்களின் தோற்றத்தை 'நாக' இனக்குழுவுடன் தொடர்புடையதெனக் கூறுவது பொருத்தமாகும்.

## ஆனைக்கோட்டை முத்திரையும் தமிழ்ச் சிற்றரசும்

இலங்கையில் தமிழ் அரச மரபு ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதை மேலும் உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய சான்றாக ஆனைக்கோட்டை முத்திரை காணப்படுகின்றது. 1980 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் இளம் தொல்லியல் ஆசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் பொ. இரகுபதியால் முதலில் இம் மையம் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் வரலாற்றுத்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் இந்திரபாலா தலமையில் ஒரு குழுவினரால் விரிவான அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வகழ்வாய்வின் போது இரு மனித எலும்புகள் பெருமளவுக்கு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்டது (Ragupathy, P., 1987). இதுவே யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது ஆதியிரும்புக்கால மனித எழும்புக்கூடுகளாகும். இவ்வெலும்புக்கூடு ஒன்றின் தலைமாட்டுப் பகுதியில்தான் கைவிரலில் அணியப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த முத்திரையும் கண்டுபிடிக்கப்பட்டது. இது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது எழுத்துப் பொறிப்புள்ள முத்திரை மோதிரம் என்ற சிறப்பிற்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புக்கு

437.345.4203





# ஆதியிரும்புக்காலப் பண்பாட்டில் நாக வழிபாடு

குரியது. 'ஸ்டிட்டைட்' எனப்படும் கல்லில் வடிவமைக்கப்பட்ட இம் முத்திரை மோதிரம் 10.2. மி.மீ நீளமும், 10.6 மி.மீ. அகலமும், 5.05 மி.மீ தடிப்பும், 1.9 கிராம் நிறையும் கொண்டது. முத்திரையின் உட்பக்கம் கைவிரலில் பொருந்தக் கூடியவாறு சற்சதுரமாகச் செய்யப்பட்டுள்ளது.

இம்முத்திரையில் இரண்டு வரிகளில் எழுத்துக்கள் உள்ளன. முதல் வரியில் சிந்துவெளி நாகரிகக் கால முத்திரைகளில் காணப்படும் குறியீடுகளை நினைவுபடுத்தும் மூன்று குறிகள் காணப்படுகின்றன. இவை பிராமி எழுத்தின் தோற்றத்திற்கு முன்னர் பயன்பாட்டிலிருந்த தொடர்பு மொழிக் குறியீடுகள் எனக் கூறப்படுகின்றது. இரண்டாவது வரியில் மூன்று பிராமி எழுத்துகள் உள்ளன. இவ்வெழுத்துகள் 'கோவேத' எனப் படிக்கப்பட்டுள்ளது (மேலது, இந்திரபாலா.கா.,2006). இப்பெயரின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாக எமது மூத்த தொல்லியல், வரலாற்று அறிஞர் பேராசிரியர் கா. இந்திரபாலா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை இவ்விடத்தில் சிறப்பாக நோக்கத்தக்கது (இந்திரபாலா.கா. 206: 328-329).

“கோவேத என்ற சொற்தொடர் பிராகிருத மொழியைச் சேர்ந்தது அன்று. இதனைக் 'கோவேத' எனப் பிரிக்கலாம். இது சமகாலத்துத் தமிழ்நாட்டுத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் சொற்றொடர்களாகிய 'கோ ஆதன்', 'கோபூதி விர' ஆகிய சொற்றொடர்களுடன் ஒப்பிடத்தக்கது. இதில் வரும் 'கோ' மன்னனைக் குறிக்கும் ஆதித் தமிழ்/திராவிடச் சொல்லாகும். முத்திரைகளிலும், நாணயங்களிலும் வரும் பெயர்கள் பொதுவாக ஆறாம் வேற்றுமை உருபுடன் (அதாவது உடைய என்ற பொருள்படும் சொல் இறுதியுடன்) காணப்படும். இதே போன்று, ஆனைக்கோட்டை முத்திரையிலும் பெயர் ஒன்று ஆறாம் வேற்றுமை உருபுடன் காணப்படுகின்றது. அந்த உருபு பழந் தமிழில் காணப்படும் 'அ' உருபு ஆகும்.”

'கோவேத' என்ற பெயருக்கு பேராசிரியர் இந்திரபாலா கொடுத் திருக்கும் விளக்கம் யாழ்ப்பாணத்தில் ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தமிழ்ச் சிற்றரசு தோன்றியதற்கு சிறந்த சான்றாகும்.

### பிராமிக் கல்வெட்டுகளும் தமிழ் அரச மரபும்

இலங்கையின் 700 ஆண்டுகால (கி.மு. 3 - கி.பி. 4) மொழி, எழுத்து, மதம், சமூகம், பொருளாதாரம் என்பன சார்ந்த வரலாற்றை அறிய உதவும் நம்பகரமான சான்றுகளில் ஒன்றாகப் பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் ஆதியிரும்புக்காலப் பண்பாட்டு மையங்களை அண்டியே காணப்படுகின்றன. இவை வடபிராமி எழுத்தில், பிராகிருத மொழியில் பௌத்த துறவிகள் மற்றும் பௌத்த சங்கத்திற்கு பலதரப்பட்ட மக்கள் வழங்கிய தானங்கள் பற்றியே பெரும்பாலும் கூறுகின்றன. இக்கல்வெட்டுகள் பற்றி ஆய்வு செய்த அறிஞர்களில் ஒரு சாரார் இக்கல்வெட்டுகளின் மொழியை பழைய சிங்களம் எனக் குறிப்பிட்டு, இலங்கையின் பூர்வீக மக்கள் வடஇந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதற்கு இது மேலும் சான்றாகும் எனக் கூறியுள்ளனர் (Paranavithana, S., 1970). ஆனால் இக்கல்வெட்டுகளின் எழுத்தும், மொழியும் இலங்கையில் மட்டுமன்றி பௌத்த மதம் பரவிய பெரும்பாலான நாடுகளில் கி.பி. 4 ஆம் நூற்றாண்டு வரை பயன்பாட்டிலிருந்துள்ளன. இவற்றிற்கு விதிவிலக்காக தமிழகத்தில் தமிழ் கல்வெட்டு மொழியாக இருந்தபோதும், அக் கல்வெட்டுகளிலும் 25 விழுக்காடு சொற்கள் பிராகிருத மொழி சார்ந்ததாகக் காணப்படுகின்றன (Subrayalu,Y., 1984). இந்நிலையில் தமிழகத்திற்கு அடுத்த நிலையில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பான எழுத்துகளும், அவற்றை ஒத்த எழுத்து வடிவங்களும் காணப்படுவதுடன் பல கல்வெட்டுகளில் தமிழ் மொழி சார்ந்த தனிநபர், சமூகம், பட்டம், உறவுமுறை, இடப்பெயர் என்பனவும் காணப்படுகின்றன (புஸ்பரட்டணம்,ப. 2003). அவற்றுள் தமிழ் மொழிக்குரிய தனித்துவமான வரிவடிவங்களை ஆதாரங்களாகக் கொண்டு, தென்னிலங்கை அறிஞர்கள் சிலர், இலங்கைக்குப் பௌத்த மதத்துடன் வடஇந்தியப் பிராமி எழுத்து முறை அறிமுகமாவதற்கு முன்னரே, தென்னகப் பிராமி (தமிழ்ப் பிராமி) வரிவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர் (Fernando, P.E.E. 1949, Ariyasingha. A., 1965, Karunaratne, S.M., 1960). இதற்கு ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தோன்றி வளர்ந்த தமிழ் பிராமி வரிவடிவம், கல்வெட்டுகளிலும் செல்வாக்கு செலுத்தியமை காரணமாகும். அண்மையில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகள் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் இந்திரபாலா வவுனியா, அநுராதபுரம், சேருவில் (திருகோணமலை) குடுவில் (அம்பாறை) ஆகிய இடங்களில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளில், தமிழ் வணிகர் பற்றிக் கூறியிருப்பது, கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்தே இலங்கைத் தமிழர் தம்மை மொழியால் தனியொரு இனமாக அடையாளப்படுத்தியதற்கு சான்றாகும் எனக் கூறுகின்றார். இத் தனித்துவமான இலங்கைத் தமிழரிடையே அரச உருவாக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்குப் பிராமிக் கல்வெட்டுகளிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

பாளி இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுகள் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இலங்கையில் தோன்றிய சிற்றரசர்கள் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் குணவர்த்தனா அவற்றில் காணப்படும் ராஜ, மகாராஜா, கமணி, குடும்பிக முதலான பட்டப்பெயர்களை குறுநில அரசுகள் மற்றும் சிற்றரசுகளுக்கு உரியவை என அடையாளப்படுத்தியுள்ளார். அப்பட்டப் பெயர்களின் அடிப்படையில், வடஇலங்கையிலும், தென்னிலங்கையிலும் ஏறத்தாழ 268 இற்கும் மேற்பட்ட சிற்றரசுகள் இருந்ததாக அவர் மேலும் கூறுகின்றார் (Gunawardana 1985:1-39). ஆனால் இவற்றின் சமகாலத்திற்குரிய கல்வெட்டுகளிலும், பாளி இலக்கியங்களிலும் பருமக, பருமகன் (பெருமகன்) பருமகள் (பெருமகள்) வேள், ஆய் முதலான பெயர்களும் காணப்படுகின்றன. இப்பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகவும், பிராகிருத மயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களாகவும் காணப்படுகின்றன. இவை பிராகிருத மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள ராஜ, மகாராஜா, கமணி, குடும்பிக முதலான பட்டங்களுக்குச் சமமாக தமிழில் பயன்படுத்தப்பட்ட பெயர்களாக உள்ளன (Sittrampalam, S.K. 1993, இந்திரபாலா.கா., 2006.). இப்பட்டப் பெயர்களுக்கு உரியவர்கள் குறுநில அரசன், பரதவ சமூகத்தின் தலைவன், குடும்பத் தலைவன், அரச தூதுவன், அரச அதிகாரி, குதிரை மேற்பார்வையாளன், வணிகன், நிதிசேகரிப்பாளன், வரி அறவிடுபவன், கிராம அதிகாரி முதலான பதவிகளில் (Paranavithana 1970, 1982) இருந்துள்ளமையை இக்கூற்றை மேலும் உறுதி செய்வதாக உள்ளது. அவற்றுள் வேள் என்ற பட்டப்பெயர் இவ்விடத்தில் சிறப்பாக நோக்கத்தக்கது.




தமிழ் நாணயம்



சிங்கள நாணயம்

இலங்கையில் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 27 பிராமிக் கல்வெட்டுகளில் வேள் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது (Veluppillai 1980:12). இப்பெயர் சமகாலப் பாளி இலக்கியங்களிலும் கணப்படுகின்றன. தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளிலும், சங்க இலக்கியத்திலும், இப்பெயர் வேள், வேளீர் எனக் குறிப்பிடப்படுகின்றன. வேளீர் என்பது வேள் என்பதன் பன்மை வடிவமாகும். பேராசிரியர் ரோமிலா தாப்பர் வடமொழியில் 'ராஜா' என்ற பட்டப் பெயர் என்ன கருத்தைக் கொண்டுள்ளதோ, அதே கருத்தையே தமிழில் 'வேள்' என்ற பட்டமும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார் (Thapar 1984:83). இலங்கை வரலாற்று மூலங்களில் இப் பட்டப் பெயர் பெரும்பாலும் அதிகாரத்தில் இருந்தவர்களைக் குறிக்கும் பெயராகவே காணப்படுகிறது. இது தமிழகத்திற்குச் சமமான காலத்திலேயே இலங்கைத் தமிழரிடம் வேள் ஆட்சி தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. அண்மையில் 'பண்டைய தமிழகத்தில் அரச உருவாக்கம்' என்ற தலைப்பில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்ட தமிழ்நாட்டு தொல்பொருள் துறையின் ஆய்வாளர் திரு. பூங்குன்றன் தமிழக அரச உருவாக்கத்தில் வேள், வேளிருக்குரிய பங்களிப்பை விரிவாக விளக்கி, இதையொத்த அரச உருவாக்கம் சமகாலத்தில் இலங்கையிலும் இருந்துள்ளது என்பதற்கு, இங்கு காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் வேள் என்ற பெயரை ஆதாரங்களாகக் காட்டியுள்ளார் (பூங்குன்றன், 1999).




## சிற்றரசர்கள் வெளியிட்ட நாணயங்கள்

நன்றி: பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம்.

# தென் கொரியா அவசரநிலை பிரகடனம்: ஆட்சியை நீடிக்க ஓர் உள்ளக சதியா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

07.12.2024

தென் கொரியாவில் அவசர அவசரமாக இராணுவ சட்டத்தை (Martial Law) அமுலுக்கு கொண்டுவந்ததாக ஜனாதிபதி யூன் சுக் யோல் கடந்த வாரம் அறிவித்தார்.



சியோலில் அவசர காலத்தில், நெருக்கடிகளைச் சமாளிக்க உருவாக்கப்பட்ட இராணுவ ஆட்சி, தற்போது கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும், அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கும், ஜனநாயகத்திற்கு தீங்கு விளைவிப்பதற்கும் ஒரு கருவியாக உபயோகப்படுத்தப்படுவதாக அடிக்கடி விமர்சிக்கப் படுகிறது.

வட கொரிய கிளர்ச்சியை முறியடிக்கவே, கம்யூனிச சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கவே இந்த நடவடிக்கை எடுத்ததாகக் கூறி அவசர நிலையை அவர் முதலில் பிரகடனம் செய்தார்.

வட கொரிய சர்வாதிகாரி கிம் ஜங்-உன்னை ஆதரிக்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் அச்சுறுத்தலை இராணுவச் சட்டம் முறியடிக்கும் என்றும் அவர் கூறினார்.




அத்துடன் வடகொரியாவின் கிம் ஜோங் உன்னால் ஈர்க்கப்பட்டதாகக் கூறப்படும் கிளர்ச்சியை முறியடிக்கவே இந்த நடவடிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் நாடாளுமன்றத்தை கைப்பற்றும் வகையில் முயற்சி மேற்கொண்ட இராணுவத்தின் நடவடிக்கையை திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் தடுத்தனர்.

## ஒன்றிணைந்த எதிர்க்கட்சி பலம்:


உடனடியாக சபாநாயகர் வூ வோன்-சிக் இராணுவச் சட்டத்தை நீக்கக் கோரும் பிரேரணையை சமர்ப்பித்தார். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 300 பேரில் 190 பேர் கலந்து கொண்ட நிலையில் அவரது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் போது கலந்து கொண்டவர்கள் அனைவரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இதனையடுத்து ஜனாதிபதி யூனின் ஆட்சி முடிவடையும் நிலையை தற்போது எட்டியுள்ளது.

ஆனால் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவசர நிலை பிரகடன நடவடிக்கையை தடுப்பதாக உறுதியளித்தனர். மேலும், இராணுவச் சட்டத்தை அறிவிக்கும் ஜனாதிபதியின் நடவடிக்கையைத் தடுக்க அந்நாட்டு நாடாளுமன்றம் வாக்களித்தது.

தென் கொரியாவின் வலதுசாரி ஜனாதிபதி எதிர்பாராத விதமாக இராணுவச் சட்டத்தை அறிவித்த பின்னர், தற்போது எதிர்க்கட்சிகளின் கடும் அழுத்தம் காரணமாக பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

## வட கொரிய ஆதரவாளர்களால்



1980 களில் இருந்து நாடு சந்தித்த மிகவும் கடுமையான சவால் இதுவென்றே கூறப்படுகிறது. எதிர்க்கட்சிகளுடனான கடும் மோதலுக்கு மத்தியில் ஜனாதிபதி யூன் சுக் யோல் இராணுவச் சட்டத்தை அறிவித்து பின் வாங்கினார்.

மட்டுமின்றி, வட கொரிய சார்பு ஆதரவாளர்கள் மற்றும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களால் ஏற்பட்ட நெருக்கடி இதுவென்றும் அவர் அப்பட்டமாக குற்றம் சாட்டினார்.

## அமெரிக்க இராணுவ தளம்:

வடகொரியாவுக்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளில் 28,500 அமெரிக்க இராணுவ வீரர்கள் தென் கொரியாவில் முகாமிட்டுள்ள நிலையிலேயே நாட்டின் நெருக்கடி குறித்து கூர்ந்து கவனித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி யூனின் அறிவிப்பைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான மக்கள் நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், நாடாளுமன்ற இராணுவச் சட்டத்தை நிராகரித்துள்ளதாக வெளியான தகவல் கூடியிருந்த மக்களிடையே மகிழ்ச்சி ஆரவாரத்தை ஏற்படுத்தியது.

பொதுவாக ஜனாதிபதி யூன் தனது அரசியல் எதிரிகளை அரசுக்கு எதிரான சக்திகள் மற்றும் போலி செய்திகள் என்று முத்திரை குத்துவதில் பெயர் பெற்றவர்.

மே 2022ல் பொறுப்பேற்ற அவரது நிர்வாகம், பத்திரிகைகளுக்கு எதிராக அவதூறு வழக்குகளைப் பயன்படுத்துவதை பெருமளவில் முடுக்கிவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வட கொரியாவின் நிலைப்பாடு என்ன?

சியோல் அரசால் அவசரநிலை பிரகடன நடவடிக்கை குறித்து வட கொரிய அரசிடமிருந்து எந்த தகவலும் இல்லை. யூன் தனது பிரகடனத்தில், வட கொரியாவை குறிவைத்து, வட கொரிய கம்யூனிஸ்ட் சக்திகளின் அச்சுறுத்தலில் இருந்து சுதந்திர கொரிய குடியரசைப் பாதுகாப்பது, எங்கள் மக்களின், சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் சூறையாடும் வெறுக்கத்தக்க வட கொரிய சார்பு அரசு எதிர்ப்பு சக்திகளை ஒழிப்பது என்றும் யூன் கூறினார்.

இது போன்ற கருத்துக்கள் பொதுவாக வட கொரியாவில் இருந்து எதிர்வினையை வெளிப்படுத்தும். ஆனால் இம்முறை நாட்டின் அரசு ஊடகங்களில் இருந்து எந்த பதிலும் இல்லை.

அதிபர் யூனின் இராணுவச் சட்ட ஒழுங்கு நடவடிக்கை கலைக்கப்பட்டதாகவும், வட கொரியாவிடமிருந்து அசாதாரண நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்றும் தென் இராணுவ தலைமை அதிகாரி கூறினார்.

வட கொரியாவிற்கு எதிரான தென் கொரியாவின் பாதுகாப்பு நிலைப்பாடு உறுதியாக உள்ளது என்று கொரிய யோன்ஹாப் செய்தி நிறுவனம் கூறியது.

வட கொரிய அச்சுறுத்தல்களை யூன் ஏன் குறிப்பிட்டார் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆனால், வட மற்றும் தென் கொரியாவுக்கு இடையே ஏற்கனவே அதிகரித்து வரும் பதட்டங்களை இது பெரிய அளவில் பாதிக்காது என்றும் பலர் நம்புகின்றனர்.

## தென் கொரியாவில் ராணுவச் சட்ட வரலாறு :

45 ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக இராணுவ ஆட்சியை தென் கொரியாவில் அறிவித்து, நாட்டை அதிர்ச்சிக் குள்ளாக்கினார்.

1948 இல், அதிபர் சிங்மேன் ரீ, ஜெஜு எழுச்சியை அடக்குவதை எதிர்க்கும் ஒரு கலகத்தைக் கட்டுப்படுத்த இராணுவச் சட்டத்தை அறிவித்தார். இதன் விளைவாக பொதுமக்கள் ஏராளமானோர் உயிரிழந்தனர்.

கடந்த 1960 இல், ஏப்ரல் புரட்சியின் போது இராணுவச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. தேர்தல் மோசடிக்கு எதிரான பேரணியின் போது உயர்நிலைப் பள்ளி மாணவர் ஒருவர் காவல்துறையினரால் கொல்லப்பட்டதையடுத்து, ரீ நிர்வாகத்திற்கு எதிரான போராட்டங்கள் பல அதிகரித்தன.

அதிபர் பார்க் சுங்-ஹீ தனது ஆட்சிக்கு எதிராக உள்ள அச்சுறுத்தல்களை அடக்குவதற்கு அடிக்கடி ராணுவ ஆட்சியை அறிவித்தார். 1980 ஆம் ஆண்டில், தென் கொரியாவின் அதிபர் பார்க் சுங்-ஹீ படுகொலை செய்யப்பட்ட பின்னர், புதிய தலைவரான சுன் டூ-ஹ்வான், நாட்டைக் கட்டுப்படுத்த இராணுவச் சட்டத்தை அறிவித்தார்.

இந்த நேரத்தில், குவாங்ஜு நகரில் மக்கள் அவரது அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். இராணுவம் எதிர்ப்பாளர்களைத் தாக்கி, அவர்களில் பலரைக் கொன்றது குவாங்ஜு படுகொலை என்று அறியப்பட்டது.

இராணுவச் சட்டத்தை பொதுப் பாதுகாப்புக்கான நடவடிக்கையாக இல்லாமல், அரசியல் அதிகாரத்திற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவதாக இந்நிகழ்வுடன் தொடர்புப் படுத்தப்பட்டது.

1987 முதல், தென் கொரியாவின் அரசியலமைப்பு இராணுவச் சட்டத்தை அறிவிப்பதற்கான நிபந்தனைகளை கடுமையாக்கியுள்ளது. இராணுவ சட்டத்தை நீட்டிப்பு செய்ய அல்லது நீக்கத்திற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவை.






## தென் கொரிய ஜனாதிபதி படுகொலை செய்யப் படலாம்?

இராணுவச் சட்டத்தை அறிவித்து, அரசியல் நெருக்கடியை உருவாக்கியுள்ள ஜனாதிபதி யூன் பதவி நீக்கத்தை எதிர் கொள்ள இருக்கிறார். இதற்கு முன்னரும் பல தலைவர்கள், நாட்டில் அரசியல் நெருக்கடியை உருவாக்கி, பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் அல்லது சிறை தண்டனையை எதிர் கொண்டுள்ளனர். அத்துடன் சிலர் படுகொலையும் செய்யப் பட்டுள்ளனர்.

தென் கொரியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக பொறுப் பேற்றவர் Park Geun-hye. இவர் கடந்த 2016ல் நாடாளு மன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் சிறை தண்டனைக்கு விதிக்கப்பட்டார்.

### கொடூரமான ஜனாதிபதி:

2003 முதல் 2008 வரையில் தென் கொரிய ஜனாதிபதியாக இருந்தவர் Roh Moo-hyun. சுமார் 6 மில்லியன் டொலர் இலஞ்சம் வாங்கியதாக விசாரணையை எதிர்கொள்ளும் நிலையில், 2009 மே மாதம் ஒரு குன்றிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

தென் கொரியாவின் மிகவும் கொடூரமான ஜனாதிபதியாக அறியப்பட்டவர் Chun Doo-hwan. இவர் புறயபெதர விவ காரத்தை மிகவும் கொடூரமாக ஒடுக்கியவர். 1987ல் நாடு தழுவிய மக்கள் போராட்டங்களால் பதவி துறந்தார்.

ஆனால் தமக்கு நெருக்கமான இராணுவ அதிகாரியான Roh Tae-woo என்பவரிடம் அதிகாரத்தை ஒப்படைத்தார். 1996 ல், சுன் மற்றும் ரோஹ் இருவரும் 1979 ஆட்சிக் கவிழ்ப்பில் தங் களின் நடவடிக்கைகளுக்காக தேசத்துரோக குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

சுனுக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டது, ஆனால் அவரது தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. ரோஹ் 22.5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது 17 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.

இருப்பினும் இரண்டு வருடங்கள் மட்டுமே சிறைவாசம் அனு பவித்த பின்னர் 1998 ல் இருவருக்கும் பொதுமன்னிப்பு வழங் கப்பட்டது. தென் கொரியாவி சர்வாதிகாரியாக அறியப்பட்டவர் ஜனாதிபதி Park Chung-hee. தனது உளவுத்துறை தலைவரால் 1979 அக்டோபர் 26ம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

Park Chung-hee படுகொலை செய்யப்பட்டதை வாய்ப்பாக பயன் படுத்திய Chun Doo-hwan மற்றும் Roh Tae-woo ஆகிய இரு இராணுவ தளபதிகளும் 1979 டிசம்பர் மாதம் சதிச் செயலுக்கு திட்டமிட்டனர்.


இது தென் கொரிய அரசியலை மேலும் நெருக்கடிக்கு தள்ளியது. 1961ல் ஜனாதிபதி Yun Po-sun என்பவரது ஆட்சியை இராணுவ தளபதியான Chun Doo-hwan என்பவர் சதியால் கவிழ்த்தார். இருப்பினும் அரசாங்கத்தின் மொத்த கட்டுப்பாட்டையும் கைப் பற்றிய Chun Doo-hwan, ஜனாதிபதியாக Yun Po-sun தொடர அனுமதித்தார்.

தென் கொரியாவின் முதல் ஜனாதிபதியான சிங்மேன் ரீ, 1960ல் மாணவர்களால் நடத்தப்பட்ட மாபெரும் எழுச்சியின் காரண மாக ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தேர்தல் மோசடியால் தனது பதவிக் காலத்தை நீட்டிக்க ரீ மேற் கொண்ட முயற்சி காரணமக மாணவர்களின் எதிர்ப்புகளுக்கு இலக்கானார். பதவி நீக்கம் செய்யப்பட்ட அவர் ஹவாய் தீவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

1965ல் அவர் இறக்கும் வரையில் ஹவாய் தீவில் வசித்து வந்தார். தற்போது ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கும் இது போன்ற ஒரு நெருக்கடி ஏற்படலாம் என்றே அரசியல் ஆய் வாளர்கள் கருதுகின்றனர்.





# இனவாத அரசியலை அம்பலப்படுத்திய சுனாமி!

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களினதும் - சிறீலங்கா சனாதிபதி திருமதி சந்திரிகா அம்மையார் அவர்களினதும் தலைமைத்துவ ஆற்றல்களையும், குணவியல்புகளையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும் ஒரு அளவுகோலாக சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னான அவர்களின் செயற்பாடுகளை சர்வதேச சமூகம் எடைபோட்டுப் பார்க்கின்றது.

அந்தப் பேரழிவில் சிக்கி உயிரிழந்த தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்கள் அனைவர்க்கும் அனுதாபம் தெரிவித்து தலைவர் பிரபாகரன் அறிக்கை விட்டதிலிருந்து, நிவாரண உதவிகள் இன பேதமில்லாமல் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று பாதிக்கப்பட்ட எல்லோர்க்கும் ஆதரவாக பொதுவாகக் குரல்கொடுத்து உன்னத மனிதாபிமான நிலைப்பாட்டை அவர் எடுத்திருந்தார்.

அலை அடித்து ஓய்ந்த உடனே, மிக விரைவாக, மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொறுப்புணர்வுடன் செயற்திறமை காட்டியது, இந்தப் பிராந்தியத்திலேயே புலிகள் இயக்கம்தான் என்பது இன்று ஒரு பொதுவான கருத்தாகிவிட்டது.

சந்திரிகா அம்மையாரும், சிங்கள உறுமய கட்சியினரும் இதை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அந்த உண்மை ஏகமனதாக உணரப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் கடற்புலி வீரர்களை, காவல்துறை உறுப்பினர்களை, போராளிகளை மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட மனிதநேய உதவி அமைப்புகளின் தொண்டர்களை உடனடியாகவே களமிறங்கி மீட்பு நடவடிக்கையில் ஈடுபட தலைவர் உத்தரவிட்டிருந்தார்.

விளைவு! வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களே வியந்து - பாராட்டும் அளவுக்கு ஒரு அற்புதமான இடர்கால மீட்புப் பணியை புலிகள் இயக்கம் செவ்வனே நிறைவேற்றியுள்ளது. உயிர் ஆபத்திற்குள்ளும் தங்களை மீட்கவந்த புலிவீரர்களை அந்த மக்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் சிங்களப் படையினர் குறுக்கிட்டு, குழப்பங்களை விளைவித்தபோதும் பொறுமைகாத்து மக்கள் பணியாற்றும்படி தலைவர் போராளிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

சில இடங்களில் அலைநீரில் சிக்கிய சிங்களப் படையாட்களை மீட்டு இராணுவத்திடமே ஒப்படைத்த சம்பவங்களும் நடந்தேறியுள்ளன. அதேசமயம், கிழக்கு மாகாணத்தில் இனபேதம் காட்டாமல் பாதிக்கப்பட்ட அனைத்துச்சமூக மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிவாரண உதவிகளை வழங்கி தலைவரின் மனிதாபிமான நிலைப்பாட்டை - நிறைவேற்றிச் செயற்பட்டது.




கிளிநொச்சி வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்ட குழுவினருடனும் இனபேதமற்ற தனது மனிதாபிமான நிலைப்பாட்டையே தலைவர் முன் வைத்திருந்தார். அத்துடன் அனர்த்த முகாமைத்துவத்துடன் சமாதான முயற்சிகளையும் இணைத் துச் செயற்படுத்துவதே சிறந்தது என்றும் ஆலோசனை கூறி யுள்ளார்.

சுனாமி அனர்த்தத்திற்குள் சிங்கள அரசைப்போன்று இன ரீதியான அரசியலைப் புகுத்தும் சிறுமைத் தனத்தை புலிகள் இயக்கம் செய்யவில்லை.

பெருந்தொகைப் படையினர் இயற்கைச் சீற்றத்தில் பலியாகியிருந்த போதும் - அதைப் பிரச்சாரப்படுத்தி குதூகலிக்கும் நாகரீகமற்ற அரசியலை புலிகள் இயக்கம் செய்யவில்லை.

அத்துடன் அழிவடைந்த பகுதிகளைப் பார்வையிடவந்த உலகத்தலைவர்களை முல்லைத்தீவு செல்லவிடாது தடுத்து அவர்களைச் சங்கடப்படுத்திய சிங்கள அரசின் இனவாதச் செயற்பாட்டை பெரிய விடயமாக எடுத்து அந்த உலகத் தலைவர்களை மேலும் சங்கடத்துக்குள்ளாக்காமல் அரசியல் நாகரீகத்துடன் புலிகள் இயக்கம் நடந்துகொண்டது.



இதேவேளை, கடந்த வருடம் தென்னிலங்கையில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு சிங்கள மக்கள் பெரும் பாதிப்படைந்தபோது அங்கே நிவாரணப் பொருட்களுடன் சென்ற புலிகள் இயக்கம் சிங்கள மக்களுக்கு உதவிய மனிதாபிமான செயற்பாட்டையும் உலகம் அவதானித்தபடியே இருந்தது.

இவ்விதமாக, தேவை ஏற்படும்போதும், தேசிய அளவில் நெருக்கடிகள் ஏற்படும்போதெல்லாம் புலிகள் இயக்கம் அரசியல் நாகரீகத்தையும் - மனிதாபிமான நிலைப்பாட்டையும் கடைப்பிடித்தபடி பண்பாக நடந்துகொண்டதை உலகசமூகம் அறியும்.

இவையெல்லாம் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் அபாரமான தலைமைத்துவ ஆளுமையினதும், சீரிய உயர் பண்புகளினதும் அரசியல் வெளிப்பாடுகளே என்பதை உலக சமூகம் எடைபோட்டிருந்தன.

ஆனால், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அம்மையாரோ இதற்கு முரணானதொரு அரசியல் செயற்பாட்டையே இந்த இடர்கால நெருக்கடி வேளையிலும் நடாத்தி வருகின்றார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உடனடி மீட்பு நடவடிக்கைகளை அரசு சரியாக நடாத்தியிருக்கவில்லை என்று ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

அரச தலைவியின் ஆளுமையின்மையும், அதன் விளைவான அரச இயந்திரத்தின் அசமந்தப்போக்குமே இந்த செயற்திறனின்மைக்கு முக்கிய காரணங்கள் என்பது உலக ஊடகங்களின் கருத்தாகும்.

அம்பாறை மாவட்டத்தின் அரச அதிபராக உள்ள சிங்கள அதிகாரி அனர்த்தம் நடந்தும் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. அம்பாறையில் சிங்கள மக்கள் பாதிக்கப்படவில்லை என்பதே அவரின் இந்த புறக்கணிப்புக்குக் காரணம். இது தொடர்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளின் கடுமையான அழுத்தத்தின் விளைவாக முஸ்லிம் அதிகாரி ஒருவர் அம்பாறையின் மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டார். அவரின் தலைமையிலேயே அம்பாறையில் அரச இயந்திரத்தின் இடர்காலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகையதொரு தேசிய அனர்த்தவேளையிலும் ஒரு சிங்கள அதிகாரி மனிதாபிமானமில்லாமல் தனது இனவெறி உணர்வை செயலில் காட்டியிருந்தபோதும் அவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் சந்திரிகா அம்மையார் எடுக்கவில்லை. இது அம்மையாரின் இனவெறி உணர்வையே வெளிப்படுத்துகின்றது என்பதே உண்மையாகும்.

திருகோணமலை மாவட்டத்திலும் இதே நிலைமைதான் இருந்தது. அரச நிவாரணங்கள் இனரீதியாக வரையறுத்து - பாகுபாடாகவே நடந்தன. தமிழ்மக்களுக்குச் சென்ற நிவாரணப் பொருட்கள் படையினராலும் - ஜே.வி.பியினராலும் - சிங்களக் காடையர்களாலும் வழிமறிக்கப்பட்டு திசைதிருப்பப்பட்டன. இத்தகைய குற்றச் செயல்களுக்கும் எந்தவித சட்ட நடவடிக்கைகளையும் அம்மையாரின் அரசு எடுக்கவில்லை.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளை அண்மித்திருந்த சிங்கள மக்கள் இந்த மீட்பு நடவடிக்கைகளிலும் - நிவாரண முயற்சிகளிலும் மனிதாபிமானமாக நடந்துகொண்டனர் என்பதும் முக்கிய செய்திகளாகும்.

இலங்கைத்தீவை சுனாமி தாக்கியபோது தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாநிலங்களே பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்த உண்மையைக்கூட ஏற்கமறுத்த அம்மையார் தென்னிலங்கைதான் அதிகம் பாதிப்படைந்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

உலகநாடுகள் வழங்கிய உதவிப் பொருட்களைக்கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமமாகப் பிரித்தளிக்க அவர் தவறிவிட்டார். இந்த இயற்கை அனர்த்தவேளையிலும் சிங்களவர் - தமிழர் என்று பிரித்துப் பார்த்து தனது இனவாதச் செயற்பாட்டையே காட்டியுள்ளார்.

முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருந்தும் - இலட்சக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்திருந்தும் - பில்லியன் ரூபா சொத்தழிவு ஏற்பட்டிருந்த இந்த துயர நேரத்திலும் அம்மையார் அவர்கள் புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை மிகைப்படுத்தி - மகிழ்ச்சி தெரிவித்து - கருத்துக்களை கூறிக்கொண்டிருந்தார்.

தலைவர் பிரபாகரன் இறந்து விட்டார் - கடற்புலிகள் அழிந்து விட்டனர் என்று தமது பேரினவாத ஆசைகளை வெளிப்படுத்தி - கேவலமான அரசியலையே சிங்கள அரசு நடாத்திக்கொண்டிருந்தது.



உலகநாடுகளின் நிதி உதவியுடன் 15 நகரங்களை புனரமைக்கப் போவதாக சந்திரிகா அம்மையார் அறிவித்திருந்தார். அதில் ஒன்றுகூட முல்லைத்தீவு மாவட்டத்திற்கோ - யாழ்ப்பாண மாவட்டத்திற்கோ ஒதுக்கப்படவில்லை.

மனிதாபிமானப் பயணம் மேற்கொண்ட உலகத் தலைவர்களை வன்னிப்பகுதிக்கு வரவிடாமல் தடுத்து அநாகரீக அரசியலையே அம்மையார் நடாத்தியுள்ளார்.

இவையெல்லாவற்றையும் உலகசமூகம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றது. இத்தகைய காட்டுமிராண்டி மனநிலையுடன் இருக்கும் ஒரு ஆட்சிப்பீடத்திடமிருந்து தமிழ் மக்கள் எவ்வாறு அரசியல் உரிமைகளை அமைதிவழியில் பெற முடியும்!? என்று உலகசமூகம் உணர்ந்திருக்கும்.

ஒருபுறத்தில் தேசிய ஆளுமையையும் - செயல்திறமையையும் கொண்ட ஒரு தலைமை செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை இன்னொரு புறத்தில் இனவெறி உணர்வையும் - சோம்பேறித் தனத்தையும் கொண்டதொரு அரைகுறைத் தலைமை இலங்கைத்தீவில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை உலகசமூகம் அவதானித்தபடி உள்ளது.

-எல்லாளன்.

விடுதலைப்புலிகள் (மார்கழி 2004 – தை, 2005)

# புதுப்பிக்கப்பட்ட ரஷ்ய அணுசக்தி கோட்பாடு: அணு ஆயுத போருக்கு ரஷ்யா தயாராகிறதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

28.11.2024



ரஷ்யாவிற்குள் ஆழமாக சென்று தாக்க அமெரிக்க நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடென் அரசு ஒப்புதல் அளித்த பிறகு, ரஷ்யாவின் அதிபர் புட்டின் அணுசக்தி கோட்பாட்டை மாற்றியுள்ளார்.

மூன்றாம் உலகப் போரைத் தடுப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பேச வேண்டிய சூழ் நிலையும் ஏற்பட்டுள்ளது. நாங்கள் இப்போது அணுசக்தி நிறைந்த மூன்றாம் உலகப் போருக்கு நெருங்க வேண்டியதாகி உள்ளது. இதற்கு முன்னைய பைடென் அரசே காரணம் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

நீண்ட காலமாக மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு உதவுவதை நிறுத்த வேண்டும் என்று புட்டின் தொடர்ந்து எச்சரித்து வந்தார். எனினும், மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்கி வந்தன. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள், தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணையை பயன்படுத்த உக்ரனைக்கு அனுமதி வழங்கினால், ரஷ்யா மற்றும் நேட்டோ இடையிலான போராக அது மாறும் என்று புட்டின் எச்சரித்திருந்தார்.

மேலும், அணு ஆயுதப் பயன்பாட்டுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப் போவதாக ரஷ்யா கூறி வந்தது. கடந்த செப்டம்பர் மாதத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்நிலையில், தற்போது உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. ரஷ்யாவின் இந்த அறிவிப்பு காரணமாக, ரஷ்யா - உக்ரைன் போர் தீவிரமடையும் சூழல் உருவாகியுள்ளது.

இதனிடையே, அமெரிக்க வழங்கிய நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை தங்கள் நாட்டின் மீது உக்ரைன் ஏவியாதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

### புதுப்பிக்கப்பட்ட ரஷ்ய அணுசக்தி கோட்பாடு:



ரஷ்ய அதிபர் புட்டின் "தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப எங்களது அணு ஆயுதக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வருவது முக்கியம். அணு ஆயுதங்களை தவிர்ப்பதற்கான வழிகளையே நாங்கள் பார்க்கிறோம். ஆனால், அவற்றைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டால், எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும்.

அணு ஆயுதம் இல்லாத நாடு அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் இணைந்து போரில் ஈடுபட்டால் அது கூட்டுத் தாக்குதலாகவே கருதப்படும்"என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவும் அதன் நட்பு நாடுகளுக்கு எதிரான எதிரியின் சாத்தியமான ஆக்கிரமிப்பை நிறுத்துவது தனது அரசாங்கத்தின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும்.

ரஷ்யா, பெலாரஸ் (Belarus) ஆகிய இரு நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டால் ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலாம்.

அத்துடன் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யாவின் தயார் நிலை மற்றும் உறுதிப்பாடு அணுசக்தி கட்டுப்பாட்டை உறுதி செய்யும். அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனைகளில் ஒன்று ரஷ்யாவில் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவுவதாகும்.

ரஷ்யாவுக்கும் நட்பு நாடுகளுக்கு எதிராக பேரழிவு ஆயதங்களைப் பயன்படுத்தினால், பதிலாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை ரஷ்யா கொண்டுள்ளது. அதன் போது ரஷ்யாவின் ஜனாதிபதி அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் முடிவெடுப்பார்.

தேவைப்பட்டால், அதைப் பயன்படுத்த ரஷ்யாவின் இந்த விஷயத்தில் அதன் முடிவைப் பற்றி மற்ற நாடுகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் தெரிவிக்க முடியும். ரஷ்ய அணுசக்தி கட்டுப்பாட்டு துறையில் அரசின் கொள்கையானது அணுசக்தி கட்டுப்பாட்டுக்கு போதுமான அளவில் அணுசக்திகளின் திறன்களை பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது தொடர்பான புதுப்பிக்கப்பட்ட ஆவணங்களில் ரஷ்ய அதிபர் புட்டின் கடந்த வாரம் 19-11-2024இல் கையெழுத்திட்டுள்ளார்.

### ரஷ்ய அணு ஆயுதங்கள் தயார்:

ரஷ்யாவிடம் தற்போது 4,380 அணு ஆயுதங்கள் செயல்பாட்டில் இருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் குழு நம்புகின்றனர். அதில், 1,700 எண்ணிக்கை தாக்குதலுக்கு தயாரான நிலையில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தரையிலும், கடலிலும், அணு ஆயுதங்களுடனும் ரஷ்யா எந்த நேரத்திலும் தாக்குதலுக்கு தயாராக உள்ளது என பல ஆண்டுகள் விளாடிமிர் புடினுடன் பணியாற்றிய மூத்த அதிகாரி ஒருவர் வெளிப்படுத்தியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு ரகசிய தளத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் தேவைப்படும் எந்த பகுதிக்கும் எப்போது வேண்டுமானாலும் அனுப்பி வைக்க தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் மீதான போர் துவங்கிய முதல் நாளிலேயே ஆயுதங்கள் அந்த ரகசிய இடத்தில் குவிக்கப்பட்டுள்ளதாகவும், இப்படியான ஒரு நெருக்கடி உருவாகும் என விளாடிமிர் புட்டினுக்கு அப்போதே தெரியும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கடல், நிலம், வான்வழி மற்றும் அணுசக்தி தாக்குதலுக்கும் கூட ரஷ்யா தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ரஷ்ய நாட்டுக்கு ஆபத்து என உணர்ந்தால் புட்டினால் உடனடியாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்த முடியும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### உக்ரைன் தளபதியின் மூன்றாம் உலகப் போர்?

மூன்றாம் உலகப் போர் அதிகாரப்பூர்வமாக துவங்கியுள்ளதாக உக்ரைன் முன்னாள் தளபதி வாலெரி ஜலுச்னி கூறியுள்ளமை பலத்த சர்ச்சையை உருவாக்கி உள்ளது. தற்போது ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரில் அமெரிக்கா நேரடியாக ஈடுபட்டுள்ளதுடன், வடகொரியா, ஈரான், சீனாவும் களத்தில் குதித்துள்ளன.

இதுகுறித்து உக்ரைன் முன்னாள் தளபதி வாலெரி ஜலுச்னி அளித்த பேட்டியில், 2024ம் ஆண்டில், ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரின் பரிமாணங்கள் மாற்றமடைந்துவிட்டன. உக்ரைன் தற்போது ரஷ்யாவுக்கு எதிராக மட்டுமல்ல, வடகொரிய சிப்பாய்களுக்கும் எதிராக போராடி வருகிறது.

உக்ரைனின் வெற்றி உறுதியானதில்லை. மேம்பட்ட தொழில்நுட்ப மற்றும் மேலதிக ஆதரவைப் பெறும்போது மட்டுமே சாத்தியமாகும். இன்றைய நிலையில் மூன்றாம் உலகப் போர் அதிகாரப்பூர்வமாக துவங்கியுள்ளது என்றே கூறலாம்.

முன்னதாக ரஷ்ய அதிபர் புட்டின், அமெரிக்க விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வெற்றிக்கரமாக பரிசோத்தித்தாக கூறியுள்ளார். இந்த ஏவுகணை ஒலியின் வேகத்தை விட பத்து மடங்கு வேகத்தில் பாயும் என்றும் கூறியுள்ளார்.

### அணு ஆயுத பாவனை?

அமெரிக்கா வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில், அந்நாட்டின் மீதான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த இருப்பதாக ரஷ்யா எச்சரித்து இருந்தது.

ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் இராணுவ உதவி வழங்கி வந்தன. அதன் அடிப்படையில், நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி இருந்தது.

எனினும், இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. தற்போது அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில் தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில் ரஷ்யாவுக்கு தீவிர பாதிப்பு ஏற்படும். இந்தச் சூழலில், உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப தன் அணு ஆயுதக் கொள்கையில் ரஷ்யா மாற்றம் கொண்டு வந்துள்ளது.

அணு ஆயுதம் இல்லாத நாடான உக்ரைனுடன், அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடான அமெரிக்கா கூட்டணி வைத்து ரஷ்யா மீது போர்த் தாக்குதல் மேற்கொண்டால், பதிலுக்கு அந்நாட்டின் மீது ரஷ்யாவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்று ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாலிஸ்டிக் ஏவுகணை உள்ளிட்ட நவீன ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மீது வான்வழித் தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பதிலுக்கு அணு ஆயதங்களைப் பயன்படுத்த நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளமை உலகளாவிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.






## REWARDING YOUR EVERYDAY




MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

And more...

## Member User Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.

And more...

## Register Now




WWW.MYEVERYDAYSHOPPING.COM




# கிராமத்தின் இரவுகள்

இரவு ஒன்பது மணி இருக்கும் நகரின் பொலிஸ் இராணுவ கூட்டு முகாமிலிருந்து இராணுவ வாகன அணி ஒன்று பிரதான வீதியினூடாக கிளம்பின. பின் இடது பக்கமாக உள்ள பாதையில் திரும்பி ஊருக்குள் நகரத் தொடங்கியது. அச்சம் குடியேறி இருந்த அந்தப் பிரதேசத்தில் அன்றைய நிலவு அவசியமற்றதாக அதேசமயம் பயங்கரமானதாக காய்ந்தது.

சுமார் பதின்நான்கு வரையிலான வாகனங்கள் இரச்சலை முடிந்த வரை கட்டுப்படுத்தி நகர்ந்து கொண்டிருந்தன. மண் பாதை ஊடாக நிலவு வெளிச்சத்தில் அந்த வாகன அணியின் நகர்வு தூரத்தில் வயல்களில் காவல் காக்கும் கமக்காரர்கள் சிலருக்கு நன்றாகவே தெரிந்தது. பனை வெளிகளினூடாக அவை உயிர் குடிக்கும் விஷப்பாம்பொன்றின் குரூரமாய் அருவருப்பாய் ஊர்ந்து கொண்டிருந்தன. வயற்சிறு குடில்களில் நின்றவர்கள் விளக்குகளை அணைத்து விட்டு ஓடினர்.

★★★

ஊருக்குள்ளிருந்த அந்த வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அடுப்பில் அந்த நேரத்தில் இடியப்பம் அவிந்துகொண்டிருந்தது. “கனகம்மாக்கா” என்று அந்த ஊரவரால் அழைக்கப்படும் கனகம்மா அடுப்படியில் இருந்து அடுப்புக்குள் மேலும் பல விறகுச் சுள்ளிகளை வைத்து எரியூட்டிக் கொண்டிருந்தாள். அவளின் பதின்நாக்கு வயது மகள் வீட்டு முற்றத்தில் காதுகளை கூர்மையாக்கிக் கொண்டிருந்தாள் வயலில் தண்ணீர்பாச்சி விட்டு படுக்க ஆயத்தமான மகன், வந்திருந்த அந்த இளைஞனோடு பாயில் உட்கார்ந்து கதைத்துக்கொண்டிருந்தான்.



வந்திருந்த இந்த இளைஞனுக்கு இருபத்தொரு வயதிருக்கும். சாரமும் சேட்டும் அணிந்திருந்தான், பசளைப் பையிற்குள் துப்பாக்கியொன்றை வைத்து கட்டியிருந்தான். புழுதிபடிந்த உடை முழங்கையில் ஒரு சிறியகாயம். கண்கள் பஞ்சடைந்து போயிருந்தன. இரண்டு மூன்று நாட்கள் சாப்பிடமால் இருந்தீரப்பானோ…? இருக்கும், இல்லாவிட்டால் அந்த இரவில் வீட்டைத்தட்டி “அம்மா சாப்பிட ஏதும் தாருங்கோ” என்று கேட்டிருக்க மாட்டான்.

அவ்வாறான இரவுகளில் கனகம்மாவின் வீட்டிற்கு இவ்வாறான இளைஞர்கள் சிற்சில நேரங்களில் வருவதும் இவர்களுக்கு அவள் சாப்பாடு கொடுப்பதும் வழக்கம் தான். அவர்கள் அறிமுகமானவர்களாக இருந்தனர் அந்த ஊரில் இருந்து இயக்கத்திற்குப் போனவர்கள். “அவர்கள் சாப்பாடு என்று வாய் விட்டுக் கேட்பதில்லை” அவர்கள் வரும் போது கனகம்மாவிற்கு விளங்கும். முகம் மலர்ந்து உணவளிப்பாள்.

ஆனால் இவன் அந்த ஊர் இளைஞனல்ல அறிமுகமில்லாதவன். அவன் வாய்திறந்து கேட்டதும் கனகம்மாவிற்கு மனதுக்குள் ஏதோ செய்தது எட்ட மணிக்கே சாப்பாடு முடிந்து சட்டி பானைகள் காலியாகி விட்டன எனினும் “தம்பி வாங்கோ ஐந்து நிமிசத்தில் இடியப்பம் அவிச்சிடுவன்” என்று சொல்லி விட்டு அவசர அவசரமாக அடுப்படியில் இயங்கினாள்.

அடியப்பத்திற்கு மேலாக ஆவி பறந்தது, மனம் திருப்தியுற்றவளாய் இரண்டு முட்டைகளை உடைத்துப் பொரிக்க ஆயத்தமாக மகள் உள்ளே ஓடிவந்தாள்.

“அம்மா தூரத்தில் ஏதோ இரைச்சல் கேட்குது” தாயின் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

வடிவா ஒருக்கா காதைகுடுத்துக் கேள் அது வேறு ஏதும் சத்தமாயிருக்கும், எனக்கெண்டால் ஒன்றும் கேக்கேல்ல. பாவம் அந்த பிள்ளை நீ சத்தம் போட்டு சாப்பாட்டை குழப்பி விட்டுடாதை இடியப்பம் அவிஞ்சிட்டுது இரண்ட நிமிசத்தில் முட்டை பொரிஞ்சுடும்.

மகள் மீண்டும் வெளியே வந்து காதுகளை கூர்மையாக்கிக் கொண்டாள். தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது, வாகன இரைச்சல்கள் ஒன்றும் கேட்கவில்லை. மகளின் மனம் அமைதியுற்றது.




★★★

வயல் வெளிகளை அண்டியிருந்த சிறு பற்றைகள் நிரம்பிய வெளியொன்றில், வாகன அணி நிறுத்தப்பட்டது. அந்த அணியின் தலைவன் சிப்பாய்களை அழைத்து கட்டளையிட்டான். அதன்படி அந்த வாகனங்கள் அந்தப்பற்றை வெளிக்குள் நிறுத்தப்பட்டன.

ஒரு குழு அந்த வாகனங்களை பாதுகாத்து நிற்க ஏனையோர் பாதையின் இரு புறமாகவும் நடந்து குடியிருப்புக்கள் அண்மிக்க இருபுறம் இன்னும் பிரிந்து வேலிகளைக் கடந்து சென்றனர். நிழலுருவங்களாக அசைந்தசைந்து நகர்ந்து பின்தவழ்ந்து முன்னேறியது.

அந்த இளைஞன் சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டு நின்ற கனகம்மாவுக்கு விழிகளில் நீர் தழும்பியது. மனம் நிரம்பிற்று. தம்பி அந்த பையை அங்கால வைச்சிட்டு ஆறுதலாகச் சாப்பிடுங்கோ பிள்ளையை மடியில வைச்சிருக்கிற மாதிரி வைச்சிருக்கிறியள்.

இளைஞன் சிரித்தான் “இது தானம்மா எங்கடை உயிர்” என்று கனகம்மாவிடம் சொல்லிவிட்டு மெலும் புன்னகைத்தான்.

நாய்களின் குரைப்பு அதிகரித்தது மிகவும் அருகே கேட்டது என்ன நாய்கள் கடுமையாகக் குரைக்குதுகள் என்றவாறு கனகம்மாவின் மகள் வெளியயே செல்ல அந்த இளைஞனும் சாப்பிடுவதை அரைவாசியோடு நிறுத்திவிட்டு வெளியே வந்து பார்த்தான் கனகம்மா முற்றத்தில் நின்று சுற்று முற்றும் பார்த்தான் அவளின் மகனும் சற்று தூரத்திற் சென்று ஒழுங்கைப் பக்கமாக பார்த்துக் கொண்டிருந்தான். கனகம்மாவின் மகள் வீட்டுக்குள் சென்று சாப்பாட்டை எடுத்து குசுனிக்குள் கொண்டு போய் வைத்தாள். பசளைப்பையை எடுத்துச் சென்று ஒரு ஓரமாக வைத்தாள். ஒரு முன்னெச்சரிக்கையுடன் தவிர அடுத்த கணம் நடக்கப்போவதை அவளோ மற்றவர்களோ எதிர்பார்த்திருக்கவில்லை.

வளவுக்குள் கரியமிருகங்கள் சுற்றிவளைத்து நின்றன.



அருகிலிருந்த எல்லா வளவுகளிலும் இராணுவம் நின்றிருந்தது. வீடுகள் யாவும் சுற்றிவளைக்கப்பட்டன.

கனகம்மா வீட்டில் புகுந்த ஐந்து சிப்பாய்கள் உள்ளே சென்று நோட்டமிட்டனர்.

கனகம்மா நடுங்கிக் கொண்டிருந்தாள். அவளின் கையை நன்றாக பற்றியவாறு மகள் அவளோடு ஒட்டிக்கொண்டிருந்தாள்.

சிப்பாய்கள் சிங்களத்திலும் அரைகுறைத் தமிழிலும் மிரட்டினார்கள். அவர்களின் முகங்களை பார்க்கவே பயமாக இருந்தது. வீட்டிற்குள் சகல பொருட்களையும் தட்டிக்கொண்டினார்கள். குசினிக்குள் சட்டி பானைகளையும் ஆராய்ந்தார்கள். ஒருவன் கனகம்மாவின் மகளின் முகத்திற்கு டோர்ச் அடித்துப் பார்த்தான். அவள் நடுங்கிய படி நின்றாள். பசளைபாக் சுற்றி வைக்கப்பட்ட பாயின் அருகே ஒருவன் போனான் அவளுக்கு இதயம் நின்றுவிடும் போலிருந்தது. உடல் ஒருகணம் வெப்பமாகி பின் குளிர்ந்து சில்லிட்டது.

வெளியே நின்று சிப்பாய் ஒருவன் சத்தமிட அவர்கள் ஐவரும் சடசடவென்று வெளியெ ஓடினார். கனகம்மாவும் மகளும் விறைத்துப் போய் கீழே சரிந்து உட்கார்ந்தனர் - வேலிக்கரையில் பூவரசமரம் ஒன்றுடன் மறைந்து நின்ற கனகம்மாவின் மகன் தன்னருகே இராணுவம் வருவதைக் கண்டான். மரத்தின் மேலே அந்தப் போராளி இளைஞன் ஏறிமறைந்து இருந்தான். அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து ஆண்கள் அனைவரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் கொண்டு கெல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். தான் ஒளித்திருப்பதைக் கண்டால் உயிராபத்து வரும். அதே நேரம் மரத்தின் மேலே இருக்கும் போராளிக்கும் ஆபத்து நேரலாம் என்பதை உணர்ந்த கனகம்மாவின் மகன் தனது சட்டையைக் கழற்றி கைகளில் கட்டப்பட்டது போல் சுற்றிக்கொண்ட இருளினூடே பதுங்கிச்சென்று கொண்டு செல்லப்படும் ஆண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டான்.

முன்பும் சில நாட்களில் பகல் நேரங்களிலும் இரவுகளிலும் இராணுவம் வீடுகளிலுள்ள ஆண்களை முகாமுக்கு கொண்டு சென்று விசாரணை செய்த பின் பிரஜைகள் குழுவினூடாக விடுதலை செய்வது வழக்கம் இதில் பழக்கப்பட்ட அந்த மக்கள் பதற்றமடைந்தனராயினும் சிறிது அமைதியாக இருந்தனர். எனினும் அன்றிரவு வாகனங்களின் சத்தமின்றி பதுங்கிப் பதுங்கி இராணுவம் வந்தமை அம்மக்களுக்கு திகிலான ஒரு அனுபவத்தைக் கொடுத்தது.

மந்தைக் கூட்டம் போல் திடுதிடுவென சிப்பாய்கள் நடந்து செல்லும் சத்தம் ஓய்ந்ததும், கனகம்மா வெளியே வந்து நோட்டமிட்டாள் பின் பாய்க்குள்ளிருந்த “பசளைப்பை” யை எடுத்துக் கொண்ட வளவிற்குவெளியே வந்தாள். ஒரு உருவம் அருகே வந்தது திடுக்கிட்டாள் அது போராளி இளைஞன். அவன் அதனை வாங்கிக்கொண்டு பதில் சொல்லக்கூட நேரமின்றி இருளோடு இருளாக மறைந்து சென்றான்.

★★★

பற்றை வெளியில் நின்ற வாகன அணியின் சில வாகனங்கள் முகாமை நோக்கி நகர ஏனையவை சிப்பாய்களின் வருகைக்காகக் காத்து நின்றன. கவச வாகனம் ஒன்று சற்று முன்னே சென்றுகொண்டிருந்தது.

நடந்து கொண்டிருந்த சிப்பாய்கள் ஏதோ திடீரென சுறுசுறுப்பாயினார் “சடக் சடக்” என அவர்களின் துப்பாக்கிகள் ஆயுத்தமாகின. வாக்கிரோக்கி செய்தி அவர்களுக்கு வந்து சேர்ந்ததும் ஆவேசமுற்றனர். அவர்களின் துப்பாக்கிகள் பிடித்துச் சென்றவர்களின் பக்கம் திரும்பின. அந்த மனிதர்களது விழிகள் வியப்பால் விரிந்தன. குரல் வெளிக்கிட மறுத்து சிக்கின. ஏன்? ஏன்...? இனப்படுகொலைக்கு காரணங்கள் தேவையில்லை.

அந்தப் பின்னிரவில் வேட்டொலிகள் கேட்டு அந்தக் கணத்தில் அந்தக் கிராமம் நடுங்கிற்று. அந்த ஊரில் பல குழந்தைகள் தங்கள் தந்தைமாரை இழந்தன. பல பெண்கள் விதவைகள் ஆயினர், பல பெற்றோர்கள் ஆண் குழந்தைகளை பறிகொடுத்தனர். ஆனால், அந் நேரம் அது அவர்களுக்கு தெரியவரவில்லை.

அவர்கள் எப்போது விடியும் என எதிர்பார்த்திருந்தனர். விடிந்ததும் பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு கொடுக்க வேண்டும். கொண்டு செல்லப்பட்டவர்களை மீட்டு வரவேண்டும் என இரவு முழுவதும் கொட்டக் கொட்ட விழித்தவாறு இருந்தனர். சிறு பிள்ளைகளும் காத்திருந்தனர். இருள் விலகாத அதிகாலை அடுத்த ஊர் ஆட்கள் கனகம்மாவின் ஊருக்கு வந்து கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே கைகள் கட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் உயிரற்றுக் கிடந்த அந்த உடல்களின் உறவனருக்கு தகவல் சொல்வதற்காக அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

கனகம்மாவின் வீட்டிற்கும்தான். துயரம் இவ்வாறான துயரம் அக்கிராமத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆயினும் கிராமம் இறந்து போகவில்லை. அது உயிர்ப்புடனேயே வாழ்ந்து இரவுகளில் விழித்திருந்தது அடுப்புகள் எரிந்து கொண்டிருந்தன.

# மண்ணின் தாய்மை

விடுதலைக் குழந்தைக்கு ஏங்கி
தவித்தது மண் மடி.
மண்ணின் ஏக்கம் உணர்ந்து
நெகிழ்ந்தார்கள் மண்ணின் மனிதர்கள்.

குருதியிறைத்துக் குருதியிறைத்து
உயிரனுக்களானார்கள் மண்ணின்
மனிதர்கள்.
மண்ணின் மடி கனக்க
அதன் கருப்பையில்
உயிரனுக்கள் பள்ளிகொண்டன.
விடுதலைச் சிசுவை
சருஷ்டிக்கும்
உயிரனுக்கள்!
உயிரனுக்களை ஏந்தி ஏந்தி
விடுதலையைக் கருத்தரித்தது மண்.
சினையுற்ற விடுதலைக்கு உரமூட்ட
விடுதலையின் தருவறைக்கு
ஓயாமல் விரைகின்றன உயிரனுக்கள்.

மண்ணின் வாளிப்பான தேகம்
விடுதலை சூல்கொண்ட பூரிப்பில்
சிவக்கிறது.
மண்ணின் கருப்பையில்
விடுதலையில் சிசு அசைகிறது.
தாய்மையில் புளகித்த சிலிர்க்கிறது
மண்.

மலர்களின் நறுமணத்தையும்
தீபங்களின் சுடரொலியையும்
ஆலயமணிகளின் நாத ஒலியையும்
காற்றில் செலுத்தி
உயிரனுக்களின் கருணையைப்
பாடுகிறார்கள்.
மண்ணின் மனிதர்கள்.

–எஸ். உமாஜிப்ரன் –



# 2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# உலக மனித உரிமை பிரகடனமும் ஐ.நா.வில் ஈழத்தமிழர்க்கான தீர்மானமும்!

– நவீனன்

09.12.2024

**(ஐ.நா.பொதுச்சபை 1948ஆம் ஆண்டு முதல் உலக மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10ஆம் திகதியாக பிரகடனப் படுத்தியது)**






உலகளாவிய ரீதியில் மனிதர்களை சாதி, மதம், இனம், நிறம், மொழி, நாடு என்கிற பாகுபாடு காட்டி வேறுபடுத்தக்கூடாது. தனி மனிதன் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வகை செய்வதே மனித உரிமையாகும். இத் தினமே மனித உரிமை தினமாக 1948ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது.

இன்றைய மனித உரிமை தினத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மன்றத்தில் ஈழத்தமிழர்களுக்காக நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களை பலரும் மறந்து விட்டனர்.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் ஈழத்தமிழர்கள் மீது நடத் தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்கு விசாரணை நடத்தவேண்டும் என்ற தீர்மானத்தை இங் கிலாந்து, ஜெர்மனி, கனடா உள்ளிட்ட 6 நாடுகள் கொண்டு வந்தன.

உலகமே உற்று நோக்கிய இந்த தீர்மானம் 21 நாடுகள் ஆதரவுடன் நிறைவேறியது. இத்தீர்மானத்தை சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, வங்கதேசம், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 11 நாடுகள் எதிர்த்தன. இந்தியா, நேபாளம், ஜப்பான், இந்தோனேசியா உள்ளிட்ட 14 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக, 22 வாக்குகளும், எதிராக, சீனா உட்பட, 11 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா உட்பட, 14 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

உலகத்தமிழர்கள் அனைவரும் உற்று நோக்கிய இலங்கைக்கு எதிரான ஐ.நா சபையின் மனித உரிமை மீறல் தீர்மானம் நிறைவேறியிருந்தாலும், இத்தீர்மானத்தின் தாக்கம் என்ன என்பதும், இதனால் என்ன எதிர்காலத்தில் நடக்கும் என் பதையும் தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

## உலக மனித உரிமை பிரகடனம்

தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ள தீர்மானங்கள் உருவாவதற் குரிய, உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனமானது என்பது பற்றிய ஓர் பார்வையை இக்கட்டுரை தருகிறது.



## உலக மனித உரிமைகள் தினம்:

உலக மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10ஆம் திகதி கடைபிடிக்கப்படுகிறது. ஐ.நா.பொதுச்சபை 1948ஆம் ஆண்டு இத்தினத்தை பிரகடனப்படுத்தியது. இத்தினத்திலும் இலங்கை யில் தொடர்ந்து மனித உரிமை மீறல் நடந்து வருவதாக குற்றச்சாட்டு உள்ளது.

2009ல் நடந்த இறுதிக்கட்ட போரின்போது, அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் குற்றச்சாட்டு உள்ளது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முன்வைத்து, ஐ.நா., மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில், முதலில் 2013ல் தீர்மானம் தாக்கல் செய் யப்பட்டது. சர்வதேச விசாரணைக் குழுவின் விசாரணைக்கு இலங்கை அரசு மறுத்தது.

இதுபோல, 2015லும் இன்னோர் தீர்மானம் தாக்கல் செய்யப் பட்டது. அப்போது சுயமாக விசாரணை நடத்துவதாக, இலங்கை அரசு அறிவித்தது. இதை நிராகரித்து, ஐ.நா.மனித உரிமை கவுன்சிலில் 2021ல் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனமானது (UDHR) மனித அடிப்படை உரிமைகளின் வரலாற்றில் பாரிய தாக் கங்களை கொண்டுவந்த ஒரு ஐ.நா சாசனமாகும். 1948 செப்டெம்பர் மாதம் 10ம் திகதி ஐ.நா பொதுச்சபையிம் தீர்மான இலக்கம் 217 A மூலம் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

தமிழ் பேசும் மக்கள் உலக மனித உரிமை பிரகடனம் பற்றி தெரிந்து கொள்வது அவசியமாகும். இந்த உரிமை பிரகடனம் பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

தனிமனித கௌரவமும் ஊறுபடுத்தப்படமுடியாத அடிப்படை உரிமைகளும் உலகிற் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பன நிலவுதற்கு அடிப்படையாகவுள்ளதாலும், மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்தலும், மனுக்குலத் தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தியுள்ள காட்டுமிராண்டித் தனமான செயல்களுக்கு இடமளிக்க முடியாது.

பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், அச்சத்திலிருந்தம், வறுமையிலிருந்தும் விடுதலை ஆகியவற்றை மனிதன் பூரண மாக துய்க்கத்தக்க இலட்சிய வாழ்வொன்றின் உருவாக்கமே மனிதகுலத்தின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்தியம்பப் பட்டுள்ளது.

## மனிதவுரிமை பாதுகாக்கப்படுவது அவசியம்:

கொடுங்கோன்மைக்கும், அடக்குமுறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்யும் நிலைக்குத் தனிமனிதன் தள்ளப்படாமலிருக்க, வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சி மூலம் மனிதவுரிமைகள் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியமாகும்.

நாடுகளிடையேயான நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதும் வளம் படுத்தப்படுவதும் மேலியம்பிய இவ்வடிப்படையிலமைதல் இன்றியமையாததாகும். ஐக்கிய நாடுகள் சபையும் அதனிற் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ள மக்களும், அடிப்படை மனித உரிமைகள் பற்றிய அனைவரின் நம்பிக்கையையும் தனி மனித கௌரவம், அவ்வாழ்வின் பெறுமதி, ஆண்கள்- பெண்க ளிடையேயான சமத்துவம் ஆகியவற்றினை மீளவலியுறுத்தி அதிசுதந்திரச் சூழலிற், சமூதாய முன்னேற்றம், வாழ்க்கைத் தரஉயர்வு ஆதியவற்றை பட்டயம் ஒன்றின் மூலம் உருவாக்க வேண்டும்.


மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களுக்கான உலக மதிப்பையும், அனுட்டானத்தையும் மேம்படுத்தலை, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முழுமையாகச் செயற் படுத்தவென அங்கத்துவநாடுகள் உறுதி கொண்டுள்ளன.

இச்சூளுறுதியைப் பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு, இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய புரிந்துணர்விருத்தல் முக்கியமுடைத்தென்பதாலும், இவண் இவ் ஐநா பொதுச்சபை யானது பிரகடனப்படுத்துகிறது.

சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு ஏற்பாட் டமைப்பும், இவ்விலட்சியங்களை இடையறாது மனத்திருத்தி, இவ்வுரிமைகள் சுதந்திரங்களுக்கான மதிப்பினை மேம் படுத்துதற்குக் கற்பித்தல் மூலமும், கற்றுணர வேண்டும்.

தேசிய மற்றும் சர்வதேசிய வகையில் நிலைகொண்ட நடவடிக் கைகள் மூலமும் முயலும் தேவையை நோக்கி, அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும், தத்தம் குடிமக்களிடையேயும், தங்கள் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் ஆட்புலத்து மக்களிடையேயும், இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் முழுமையாகவும் வலிவும் பயனுறுதிப்பாடும் கொண்ட முறையிலும் ஏற்கப்பட்டு அனுட் டிக்கப் படுவதை நிலைநிறுத்த வேண்டும்.

சகல மக்களும் நாட்டினங்களும் தத்தமது சாதனையிலக்கின் ஏற்புடை அளவாகக் கொள்ளப்பட வேண்டியதென வகையி லமைந்த இம் மனித உரிமைகளுக்கான உலகப் பொதுப் பிரகடனத்தைப் ஐ.நா பொதுச் சபையானது பரிந்துரைக்கின்றது.



# மாவீரர் நாள் 2024: மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம்!

03.12.2024



நான்கு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் திண்ணை விருந்தினர் விடுதியில் ஒரு தூதரகத்தின் இரவு விருந்தில் கலந்து கொண்டேன். எனது மேசையில் மூத்த ஊடகவியலாளர்கள் இருவரும் ஊடக முதலாளி ஒருவரும் அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் கட்சி ஒன்றின் முக்கியஸ்தரும் அமர்ந்திருந்தார்கள். எங்களோடு இருந்து கதைத்துக்கொண்டிருந்த ஒரு ராஜதந்திரி என்னைப் பார்த்துச் சொன்னார் “எல்லா ஈழத் தமிழர்களின் மனதிலும் ஒரு நாடு என்ற கனவு உண்டு” இப்படிக் கூறிவிட்டு அருகில் இருந்த அந்தக் கட்சிப் பிரமுகரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு சொன்னார் “இதோ இவருடைய தலைவர் அமைச்சராக இருக்கலாம். ஆனால் அவரிடமும் அந்தக் கனவு உண்டு”

ஆம். அந்தக் கனவு எல்லா ஈழத் தமிழர்களிடமும் இருப்பதால்தான் அந்தக் கனவைக் கட்டியெழுப்பிய தியாகிகளை அவர்கள் எல்லா இடர்களின் மத்தியிலும் நினைவு கூர்கிறார்கள்.

இம்முறை மாவீரர் நாளையொட்டி போலீசார் கடந்த ஆண்டுகளில் செய்வதைப் போல நீதிமன்றத்திற்கு போய் தடை உத்தரவுகளை பெற்றுக் கொண்டு வரவில்லை. எனினும் அம்பாறையில் போலீசார் சில நெருக்கடிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவுப் பொருட்களுக்குத் தடை என்று அறிவித்திருந்த போதிலும், பெரும்பாலான சிறிய மற்றும் பெரிய தமிழ்ப் பட்டினங்களில் மாவீரர்களின் பாடல்கள் அனைத்தும் ஒலிக்கவிடப்பட்டன. உட்கிராமங்களில் மக்கள் கூடும் இடங்களிலும் பாடல்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது. அடர் மழை பொழிந்தது. வெள்ளம் பெருகி சில இடங்களில் பாதைகளை மூடியது. புயல் வரக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டது. எனினும் மழை விட்டிருந்த இடையூட்டுக்குள் மக்கள் துயிலுமில்லங்களை நோக்கிக் குவிந்தார்கள். குடைகளின் கீழே சுடர்களை ஏற்றினார்கள். ஆம். அவர்கள் தமது தேசக் கனவைக் கட்டியெழுப்பப் புறப்பட்டவர்களை ஒரு தேசமாக நினைவு கூர்ந்தார்கள்.

“அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம்தான்” என்று மிலன் குந்ரோ- Milan Kundera- கூறுவார். நினைவுகளின் போராட்டம் அல்லது மறதிக்கு எதிரான போராட்டம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசமாகத் திரள்வதன் ஒரு பகுதி. நீதிக்கான போராட்டத்தின் ஒரு பகுதி.

தமிழ் மக்கள் எதை எதை மறக்கவில்லை? அல்லது மறக்கக் கூடாது?

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தங்களைத் தியாகம் செய்தவர்களை மறக்கக்கூடாது. அதேசமயம் அந்த தியாகியின் இழப்பால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர்களையும் மறந்துவிடாதிருக்க வேண்டும். தியாகிகளின் வீட்டில் அடுப்பு எரிகின்றதா? அந்தத் தியாகியின் வீட்டுக்கூரை மழைக்கு ஒழுகுகின்றதா? அந்த தியாகியின் முதிய பெற்றோர் இப்பொழுது யாரோடு இருக்கிறார்கள்? அவர்களை யார் பராமரிக்கிறார்கள்? அந்த தியாகியின் மனைவி இப்பொழுது எங்கே? அவருடைய வருமான வழி என்ன? அந்த தியாகியின் பிள்ளைகள் ஒழுங்காக படிக்கிறார்களா? போன்ற எல்லா விடயங்களையும் மறந்து விடாமல் கவனிக்க வேண்டும்.

இரண்டாவதாக, அந்தத் தியாகியோடு போர்க்களத்தில் நின்றவர்கள், கையைக் காலைக் கொடுத்தவர்கள், கண்ணைக் கொடுத்தவர்கள், இடுப்புக்குக் கீழ் இயங்காதவர்கள், சக்கர நாற்காலிகளில் வாழ்பவர்கள், இப்பொழுதும் படுக்கையில் கிடப்பவர்கள், இப்பொழுதும் உடல் முழுவதும் சன்னங்களைக் காவிக்கொண்டு திரிபவர்கள், என்னவென்று தெரியாத நோய்களைக் காவிக்கொண்டு திரிபவர்கள்... ஆகிய முன்னால் இயக்கத்தவர்களையும் மறக்கக்கூடாது. இந்த நாட்டிலேயே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய தரப்பு - Most Vulnerable - அவர்கள்தான். அவர்களிற் சிலர் கடந்த 15 ஆண்டுகளாக தேர்தல் கேட்கிறார்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆறு பேர் வெவ்வேறு கட்சிகளில் தேர்தல் கேட்டார்கள். ஒருவரும் வெற்றி பெறவில்லை. காலை இழந்த ஒரு பெண்ணுக்கும் வெற்றி கிடைக்கவில்லை.

அந்த முன்னாள் இயக்கத்தவர்களில் யாருக்குமே தமிழ் மக்கள் வெற்றியைக் கொடுக்கவில்லை. ஏன்? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கம் தேர்தல் கேட்கக்கூடாது என்று தமிழ் மக்கள் நம்புகிறார்களா? அல்லது, இந்த விடயத்தில் தமிழ் மக்களுக்கு மறதி அதிகமா? அல்லது முன்னாள் இயக்கத்தவர்கள் தேர்தல் அரசியலின் கள்ளச் சூத்திரங்களைக் கற்றுத் தேறவில்லையா? ஒவ்வொரு ஆண்டும் துயிலும் இல்லங்களில் சிந்தப்படும் கண்ணீர் யாருக்கு வாக்காக மாறுகிறது?

தியாகிகளை நினைவு கூர்வது என்பது, அந்த தியாகிகளோடு போர்க்களத்தில் நின்றவர்களை, போராட்டத்தில் தமது இளமையை, தமது வயதுகளை, தமது கல்வியை, அவயவங்களை இழந்தவர்களையும் மறந்து விடாமல் இருப்பதுதான்.

மூன்றாவது, போராடப்போய் சிறை வைக்கப்பட்டவர்களை, காணாமல் ஆக்கப்பட்டவர்களை, அவர்களுக்காகப் போராடும் முதிய அம்மாக்கள் அப்பாக்களை, போரினால் விதவைகளாக்கப்பட்டவர்களை மறந்துவிடாதிருக்க வேண்டும். போர் விதவைகள் கிட்டத்தட்ட 90000பேர் உண்டு. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது போரினால் யார் யாருடைய தனிப்பட்ட வாழ்க்கை தூர்ந்துபோனதோ, யாரெல்லாம் மீண்டெழ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடைய வாழ்க்கையை, வாழ வேண்டும் என்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுந்தான்.

நாலாவது, 2009ஐ உடனடுத்த ஆண்டுகளில் நினைவு நாட்களை ஒழுங்குபடுத்தியது அரசியல் கட்சிகள்தான். அவர்களால்தான் அப்பொழுது அதைத் துணிந்து செய்ய முடிந்தது. இப்பொழுதும் நினைவு கூரும் களங்களின் பின் கட்சிகள் உண்டு. நினைவிடங்களில் கூடும் மக்களின் கூட்டுத் துக்கத்தை கொத்து வாக்காக எப்படித் திரட்டுவது என்பது அவர்களுடைய பிரச்சினை. ஆனாலும் மறதிக்கு எதிரான போராட்டத்தில் அவர்களுக்கு ஒரு பங்கு உண்டு. அதே சமயம் அவர்களுடைய அரசியல் முதலீடும் தமிழ் மகாஜனங்களின் மறதிதான்.

2009க்கு முன்பு தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபடுவதற்கான அடிப்படைத் தகுதி தியாகத்துக்குத் தயாராக இருப்பது. ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக அடிப்படைத் தகுதி பிழைக்கத் தெரிந்திருப்பது. இந்தத் தகைமை வேறுபாட்டுக்குப் பின்னால் உள்ள சீரழிவை தமிழ் மக்கள் மறந்து விடாமல் இருக்க வேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கு தமிழ் மக்களின் நினைவும் தேவை; மறதியும் தேவை.

தமிழ் மக்களின் மறதியின் மீது அதிகம் வெற்றிகரமாக அரசியல் செய்வது தமிழரசுக் கட்சிதான். கடந்த 15 ஆண்டுகளாக தலைவராக இருந்த சம்பந்தர் ஒவ்வொரு பெருநாள் திருநாளின் போதும் குடுகுடுப்பைச் சாத்திரக்காரனைப் போல அல்லது சுயாதீன திருச்சபையின் போதகரைப் போல அருள் வாக்குக் கூறிக்கொண்டிருந்தார். தீபாவளிக்கு தீர்வு வந்துவிடும் என்றெல்லாம் கூறினார். எதுவும் வரவில்லை. சம்பந்தரும் இப்பொழுது இல்லை. ஆனால் தமிழ் மக்கள் அதையெல்லாம் மறந்துபோய் இந்த முறை தமிழரசுக் கட்சிக்கே அதிகம் வாக்குகளைக் கொடுத்தார்கள்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் மறதியை வைத்து விளையாடுகிறது என்பதனை எப்பொழுதும் சுட்டிக்காட்டுவது, பிரதானமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களின் மறதிக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்பது அந்தக் கட்சிதான். அதே சமயம் அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏகபோக வாரிசாக தன்னைக் காட்டிக்கொள்ளப் பார்க்கின்றது. நினைவு நாட்களைத் தத்தெடுக்கப் பார்க்கின்றது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது அந்த கட்சியின் செயலாளர் கஜேந்திரன் ஒரு காணொளியில் கூறுகிறார்... ஏனைய எல்லா கட்சிகளையும் விடவும் சாகத் தயாரான கட்சி தாங்கள்தான் என்று. ஒரு கட்சி தனது மக்களுக்காக சாகத் தயாராக இருக்கிறது என்பதனை யாராவது அந்த கட்சியின் உறுப்பினர் செத்துத்தான் நிரூபிக்க வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்காகப் போராடி யாரும் அப்படி உயிரைத் துறந்ததாகத் தெரியவில்லை. தன்னை ஏனைய கட்சிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, தான் மட்டும் சாகத் தயாரான கட்சி என்று முன்னணி கூறிக்கொள்கிறது. ஆனால் 3 இலட்சத்துக்கும் குறையாத போராளிகளும் மக்களும் உயிரைக் கொடுத்த ஒரு போராட்டத்தை கடந்து வந்த இனம் இது என்பதை அந்தக் கட்சி மறந்து விட்டது. இதுவும் தமிழ் மக்களின் மறதியின் மீது செய்யப்படும் அரசியலே.

இவ்வாறு தமிழ் மக்களின் மறதியின் மீது அரசியல் செய்யும் தமிழ்த் தேசிய கட்சிகள், நினைவு நாட்களை வைத்துச் சூதாடுவதைத் தடுப்பதற்கு தமிழ் மக்கள் மறதிக்கு எதிராகப் போராட வேண்டும்.

எனவே மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசத்தைக் கட்டியெழுப்பிய நினைவுகளைத் தொடர்ந்தும் தேசத்தை பிணைக்கும் நினைவுகளாகப் பேணுவதுதான். நினைவின் பசை கொண்டு ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது.

மேலும், இறந்த காலத்தை மறந்து விடாமல் இருப்பது என்பது, இறந்த காலத்திலேயே வாழ்வது அல்ல. காயங்களோடு வாழ்வது அல்ல. துக்கத்தில் உறைந்து கிடப்பதும் அல்ல. மாறாக, இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்வது. மகத்தான வீரமும் மகத்தான தியாகமும் எங்கே எப்படித் தோல்வியுற்றன என்பதைக் கற்றுக்கொள்வது. கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் காயங்களை, கூட்டு மனவடுக்களை, கூட்டுத் தோல்வியை, கூட்டு அவமானத்தை கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவது. அந்த அரசியல் ஆக்க சக்தியை நீதிக்கான போராட்டத்தின் உந்து விசையாக மாற்றுவது.



நன்றி: நிலாந்தன்

# "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின் அங்குரார்ப்பன வைபவம்!

08.12.2024




"அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின் அங்குரார்ப்பன வைபவம் ரொரான்ரோ மாநகரில் கடந்த 8ஆம் திகதி (டிசம்பர் 8 2024) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. தாயகத்தை நேசிக் கின்ற கனடா வாழ் மக்கள் மாத்திரமன்றி உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இணைய வழியாகவும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்புடன் இணைந்து பணியாற்றவும் உறுதியளித்தனர்.




புலம்பெயர் தமிழர்களின் மத்தியில் நூற்றுக்கணக்கான அமைப்புகள் தாயகத்தை நோக்கிய அரவணைப்புக் கரங் களுடன் தமிழ் மக்களின் விடுதலை மற்றும் தாயகத்தின் பொருளாதாரத்தைக் கட்டமைப்பதிலும் மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் பணிகளிலும் அரசியல் கட்டமைப் புக்களை முன்னோக்கி நகர்த்துவதிலும் பணியாற்றி வரு கின்றன. இந்த ஒரு பின்னணியில் இன்னும் ஒரு அமைப்பு தேவையா என்ற கேள்விகள் எழும்பலாம்.

2009 ஆம் ஆண்டில் தாயக மண்ணில் யுத்தம் மௌனிக்கப் பட்டதன் பின் தமிழ் மக்களின் ஒட்டு மொத்த இருப்பையும் கேள் விக்குள்ளாக்கும் நகர்வுகள் மிக வேகமாக முடுக்கி விடப்பட் டுள்ள நிலையில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய அவசிய அவசரத் தேவைகளுக் கூடே தமிழ் மக்களின் இனப் பரம்பலை மீளக் கட்டி எழுப்ப வேண்டிய தேவை புலம்பெயர் தமிழ் மக்களிடையே விஷ்வரூபம் எடுத்து நிற்கின்றது. இதற்கும் அப்பால் தாயக "தமிழர் அரசியல்"; என்பது திசை மாறியதன் விளைவு இந்த அரசியல் மீது தாயக மக்களை நம்பிக்கை இழக்கச்செய்துள்ளது. இதனால் தென் னிலங்கை அரசியல் கட்சிகள் தாயக மண்ணில் நேரடியாக நிலைகொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது. இதனை அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்த ஒரு பின்னணியில் "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின் வருகை முக் கியத்துவம் பெறுகின்றது என்பதுதான் ரொரான்ரோ மாநகரில் நடைபெற்ற "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின் அங்குரார்ப்பன வைபவத்தில் கலந்து கொண்டோரினதும் வாழ்த்துக்களைத் தெரிவித்தவர்களினதும் ஏகோபித்த முடிவாக அமைந்தது.

"அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ள நிமால் விநாயகமூர்த்தி கருத்துரைக் கையில் 2009க்குப் பின் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் அண்மை யில் நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும் சிவப்பு எச்சரிக்கையாகும். "தாயகம்"; என்பது தாயகத்தில் உள்ள மக்களுக்கு மாத்திரமல்ல புலம்பெயர் மக்க ளுக்கும் அத்திவாரமாகும். தாயக மண்ணின் அத்திவாரம் அசைக்கப்படுவதையும் தகர்க்கப்படுவதையும் நாம் அனு மதிக்க முடியாது. குறிப்பாக புலம்பெயர் சமூகம் இதனை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இதனை இலக்காகக் கொண்டே "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பு உரு வாக்கம் பெற்றுள்ளது. இதனை முன்னோக்கி நகர்த்த புலம் பெயர் தமிழர்களின் ஒன்றிணைந்த செயற்பாடுகள் அவசியம் என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் இருந்து வருகைதந்நத சட்டத்தரணி விக்னேஸ் வரா தனது வாழ்த்துரையில் "போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ் மக்கள் தலைமை இன்றி அரசியல் அநாதைகளாக உள்ளனர். தாயக மக்களில் பெரும்பாலானவர்களின் வாழ்வாதாரம் கேள் விக்குறியதாக மாறி விட்டது. கடந்தகால தியாகங்கள; மறக்கப் பட்டுள்ளன. தியாகங்கள் செய்தவர்களும் அதற்கு உறுதுணை யாக இருந்து தியாகங்களைச் செய்த தாயக மக்களும் புறந்தள் ளப்பட்ட நிலையில் தமிழ்த் தேசியமே கேள்விக்குள்ளாக்பட்டு விட்டது. இதற்கும் அப்பால் தமிழ்த் தேசியம் என்பது "நாடாளு மன்ற மாகாணசபைகளுக்கான கதிரைகளுக்கான" தேசிய மாக" மாறிவிட்டது. இத்தகைய அபாயகரமான போக்கில் இருந்து தாயகமும் தமிழ்த் தேசியமும் காப்பாற்றப்பட்டாக வேண்டும். இதற்கு "அனைத்துலகத் தமிழ் பேரவை" அமைப் பின் வருகை அவசியமாகுகின்றது என்று குறிப்பிட்டார்.

**இணையவழி வாழ்த்து**

இணைய வழியூடாகக் கலந்து கொண்டவர்களில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தனது வாழ்த்துரையில் ஈழத் தமிழர்கள் ஒன்றிணைய வேண்டியது அவசர அவசியத் தேவையாக இருக்கின்றது. தமிழ் மக்களின் குறிப்பாக தாயக மண்ணின் பொருளாதார சமூக மேம்பாடு பண்பாடு மேம்படுத்தப்படல் வேண்டும். தாயக அரசியல் கபளீ காரம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஈழத் தமிழர் என்ற வகை யில் புலத்திலும் தாயகத்திலும் ஒன்றிணைய வேண்டும். இதனை முன்னெடுக்க "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின்" வருகை அவசியமானது எனக் குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து கலந்து கொண்ட பேராசிரியர் செல்வநாதன் இளையதம்பி கருத்துரைக்கையில் தமிழர் போராட்டத்தை முன் நோக்கி நகர்த்த ஐந்து முக்கிய விடயங் களைக் குறிப்பிட்டார்.

1. தாயகத்தில் மக்கள் தொகை குறைவடைந்து கொண்டு போகின்றது. மறுபுறம் தமிழர்களின் இனப்பரம்பல் பறி போய்க் கொண்டிருக்கின்றது. மக்கள் தொகை இன்றி போராட்டத்தை நகர்த்த இயலாது. கூடுதலான பிள்ளைகளைப் பெற்றால் பரா மரிப்பது கடினம் என்ற நிலையில் தாயக மக்களில் பெரும் பாலானவர்கள் ஒன்று இரண்டு பிள்ளைகளுடன் நிறுத்திக் கொள்கின்றனர். எனவே கூடுதல் பிள்ளைகளைப் பெறுபவர் களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் முன்னெடுக் கப்படல் வேண்டும். இல்லையேல் இன்னும் இரண்டொரு வருடங்களில் தாயகத் தமிழர் இனவிகிதாசாரத்தில் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்படுவர்.

2.பெரும்பாலான இளைஞர்கள் யுவதிகள் வெளிநாடு போக விரும்புகின்றனர். தாயகத்தில் பொருளாதாரம் கட்டி எழுப் பப்படல் வேண்டும். வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படல் வேண்டும். பொதுத் தொழில் கட்டமைப்பு தனியார் தொழிற் துறை என்பன கட்டி எழுப்பப்பட வேண்டும். தாயக விவசாயம் மேம்படுத்தப்பட வேண்டும்.

3.தாயகக் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சில பாடசாலைகள் கூடுதலான வளங்களை புலம் பெயர் அமைப் புக்களிடம் இருந்து பெறுகின்றன. பெரும்பாலான பாட சாலைகள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி காணப் படுகின்றன. இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஆரம்பக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை தமிழ் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதை உறுதி செய்ய வேண்டும்.

4.தாயகத்தில் பண்பாடு கலாசாரம் என்பன சீரழிந்து கொண்டு போகின்றது. மதுபாணம் மற்றும் போதைவஸ்த்து பாவணை அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த சீரழிவிற்கு தமிழ் அரசியல்வாதிகளும் ஒரு காரணம். தாயக மண் போதை வஸ்த்து மதுபாண பாவணையில் இருந்து மீட்டெடுக்கப்படல் வேண்டும்.

5. தாயக மக்களின் வாழ்வாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டும். வதிவிட வசதியை உறுதிப்படுத்துவதுடன் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளை உருவாக் குவதுடன் மக்கள் நிம்மதியாக வாழ உதவி செய்ய வேண்டும். தாயகத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புக்களிடம் இருந்து உதவிகள் கிடைக்கின்றன அவை ஒருங்கிணைக் கப்பட வேண்டும். யூதர்கள் போன்று தாயக பொருளாதாரத் தைக் கட்டி எழுப்ப வேண்டும். தாயகப் பொருளாதாரத்தைக் கட்டி முப்பினால் மக்கள் தாமாக அரசியல் செய்வர்.

ராமு மணிவண்ணன் தமது வாழ்த்துரையில் "2009 க்குப் பின் தமிழர்களின் தலைமையில் ஒரு வெற்றிடம் உள்ளது. வரலாறு கற்றுத்தந்த பாடம் என்ன? இன்றும் ஈழத் தமிழர்கள் தேசிய அடையாளத்தையும் வாழ்வாதாரத்தையும் தேட வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இணைந்து செல்ல வேண்டியுள்ளது" என்று குறிப்பிட்டார்.

லோகன் லோகேந்திரலிங்கம் வாழ்த்துரை வழங்கியதுடன் "அனைத்துலகத் தமிழர் பேரவை" அமைப்பின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தையும் ஆரம்பித்து வைத்தார்.


லிங்கஜோதி வினாசித்தம்பி ரஜீவ் முத்துராமன்பிரசன்னா பாலச்ந்திரன் பாலச்சந்திரன் நாகலிங்கம் மற்றும் பலரும் கருத்துரை வழங்கினர்.வாழ்த்துரைகளை வழங்கினர். இந் நிகழ்ச்சியை கென் கிருபா ஒறுங்கிணைத்து வழிநடத்தினார். இறுதியில் மரியராசா மரியாம்பிள்ளை நன்றியுரை வழங் கினார்.











"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோல்விகளில் இருந்தே தோற்றம் கொள்கின்றன!

## நிமால் விநாயகமூர்த்தி – அனைத்துலகத் தமிழர் பேரவை

08.12.2024




வரலாற்றில் புதிய அமைப்புக்கள் தோற்றம் பெறுவதும், அவ்வாறு தோற்றம் பெறும் அமைப்புக்கள் காலவோட்டத்தில் நிலைக்க முடியாமல் சிதைந்து போவதும் அரசியல், சமூக இயங்குநிலையில் தவிர்க்க முடியாதவையாகும். நமது ஈழ அரசியல் வரலாற்றில் பல கட்சிகள் உருவாகியிருக்கின்றன – பல இயக்கங்கள் தோற்றம்பெற்றிருக்கின்றன – அதே போன்று, காலத்திற்கு காலம் பல அமைப்புக்கள் முகம் காட்டியிருக்கின்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற கட்சிகள், இயக்கங்கள், அமைப்புக்களில் சிலது நிலைக்க, பலதோ, காலவோட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதைவுற்றிருக்கின்றன.

அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்றபோது, குறிப்பிட்ட சூழ்நிலையின் சவால்களை எதிர்கொள்ள முடியாத அமைப்புக்கள் சிதைவடைவது வரலாற்றில் தவிர்க்க முடியாதது. சூழ்நிலைகளே ஒரு ஸ்தாபனத்தின் தேவையை இல்லாமலாக்குகின்றது – அதே சூழ்நிலைதான், புதிய அமைப்புக்களின் தேவையையும் நிர்பந்திக்கின்றது – இந்த யதார்த்தத்தை நாம் புறம்தள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் வரலாற்றில் பின்தங்கியவர்களாகவே இருப்போம்.

ஈழப் போர் முடிவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்த பதினைந்து வருடங்களில் நாம் எதிர்பார்த்த விடயங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்தவொரு முன்னேற்றத்தையும் எங்களால் நிரூபிக்க முடியவில்லை. பலர் அமைப்புக்களாகவும், குழுக்களாகவும், தனிநபர்களாகவும் பலவாறான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர் என்பது உண்மைதான் ஆனாலும் நாம் தொடர்ந்தும் பின்னடைவுகளையே சந்தித்துவருகின்றோம். பதினைந்து வருடங்களில் தாயக அரசியல் சூழலும் மாறிவிட்டது. நடந்து முடிந்த சிறீலங்காவின் பொதுத் தேர்தலில் வடக்கில் தமிழ்த் தேசிய கட்சிகள் பின்னடைவை சந்தித்திருப்பதானது, தாயக மக்கள் தொடர்ந்தும் செயலற்ற தமிழ்த் தேசிய அரசியலின் பக்கமாக அணிதிரள்வதற்குத் தாயாரில்லை என்னும் செய்தியையே வெளிப்படுத்திநிற்கின்றது. இது நம் அனைவருக்குமான சிகப்பு எச்சரிக்கையாகும்.

முள்ளியாவாய்க்காலுக்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழ் புலம்பெயர் சமூகம்தான், தாயகத்திற்கான அரசியல் பின்தளமாக விளங்கியது. ஆனால் நடைமுறையில் தமிழ் புலம்பெயர் சமூகம் உண்மையிலேயே ஒரு அரசியல் பின்தளமாகத் தொழிற்படுகின்றதா என்னும் கேள்வியை, நாம் நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் ஆரம்பத்தில் புலம்பெயர் சமூகம் தொடர்பில் தாயகத்தில் காணப்பட்ட நம்பிக்கை தற்போது இருப்பதாகக் கூற முடியாது. நிலைமைகள் வேகமாக மாறிவருகின்றன. பதினைந்து வருடகால ஏமாற்றங்களே இதற்கான பிரதான காரணமாகும்.




ஒரு இனப்படுகொலைக்கு ஆளான மக்கள் கூட்டத்தை பிரதிநித்துவம் செய்யும் புலம்பெயர் சமூகம் என்னும் வகையில், நாம் கடந்த பதினைந்து வருடங்களாக எமக்கான நீதியை கோரி வருகின்றோம். ஆனால் இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதற்காகவே நீதியை பெற்றுவிட முடியாது. புவிசார் அரசியல் நலன்களுக்கு கட்டுப்பட்டிருக்கும் உலக அரசியல் சுழற்சியில் நீதி இலகுவாக கிடைத்துவிடும் என்று நம்பினால், நாம்தான் தவறாக சிந்திக்கின்றோம் என்று பொருளாகும்.

கடந்த பதினைந்து வருட கால அனுபவங்கள் இதனைத்தான், நமக்கு தெளிவாக உணர்த்தியிருக்கின்றன. எனவே நமது பயணம் என்பது பல தலைமுறைகளை இணைக்கும் அஞ்சல் ஓட்டம் போன்றது. இந்தத் தலைமுறையின் பயணத்தை நாம் தூர நோக்குடனும் அறிவுபூர்வமாகவும் மேற்கொண்டால்தான், தாயகமும் புலம்பெயர் சமூகமும் ஒரு நேர்கோட்டில் பயணிக்க முடியும். தாயக மக்கள் புலம்பெயர் சமூகத்தின் மீதான நம்பிக்கையை கைவிடுவார்களாயின், அதன் பின்னர் நாம் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் அவற்றுக்கு எவ்வித பயனும் இருக்கப்போவதில்லை.

தாயகம்தான் நமது அஸ்திபாரம். இந்த புரிதலிருந்தே நமது ஒவ்வொரு விடயங்களையும் திட்டமிட வேண்டும், முன்னெக்க வேண்டும். அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில், தாயகத்தின் மேம்பாட்டுக்காக அனைத்து வழிகளிலும் நாம் செயலாற்ற வேண்டும். நீதிக்கான எமது பயணத்தை முன்னெடுக்கும் அதே வேளை, சமூக, பொருளாதார முன்னேற்றங்களை கருத்தில்கொண்டு, தாயகத்தின், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், நலிவுற்ற சமூகப் பிரிவினர் என அனைத்து தரப்பினரதும் மேம்பாட்டை கருத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தேசியம் என்பதை செயற்பாட்டு தளத்தின் ஊடாக முன்னெடுக்கும் உபாயங்கள் தொடர்பில்தான் நாம் கவனம் கொள்ள வேண்டும். அதே வேளை, ஐரோப்பிய நாடுகளில் வேர்கொண்டிருக்கும் நாம், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க மைய, சர்வதேச முகவர் அமைப்புக்கள், உலகளாவிய சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றுவற்கான வாய்ப்பையும், அதற்கான புலமைத்துவ ஆற்றலையும் கொண்டிருக்கின்றோம் ஆனால் அவற்றை நாம் முறையாக கையாண்டிருக்கின்றோமா என்னும் கேள்விக்கு பதில் தேட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கடந்த பதினைந்து வருடகால அனுபவங்களை உற்றுநோக்கினால், எமது செயற்பாடுகள் அதிகம் எமக்குள் உரையாடுவதாகவே மட்டுப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டும். புலம்பெயர் சமூகத்திடம் பல ஆற்றல்கள் இருக்கின்றன. ஒரு அரசிற்குரிய வாய்ப்புக்கள் எமக்கு இல்லாவிட்டாலும் கூட, மேற்குலக தாராளவாத ஜனநாயக செல்நெறிக்குள் அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த வாய்ப்புக்களை நாம் முறையாக பயன்படுத்தினால், சிறீலங்கா அரசும் எங்களை நோக்கி வரக் கூடிய சூழலை ஏற்படுத்த முடியும்.

தாயகத்துடன் தடையற்ற வகையில் ஊடாடக் கூடிய ஆற்றலுடன் நாம் இருக்க வேண்டிய கட்டாயமானதாகும். தாயகத்திலுள்ள அரசியலாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், புத்திஜீவிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றோடு தடைகளற்ற வகையில், இணைந்து பணியாற்றக் கூடிய சூழலை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும். அவ்வாறானதொரு அமைப்புசார் செயற்பாடு எங்களுக்கு கட்டாயம் தேவை. ஏனெனில், தாயகத்திற்கும் புலம்பெயர் சூழலுக்குள் இடையிலான செயற்பாட்டுரீதியான தொடர்புகள்தான் நமது இயங்குநிலைக்கான அஸ்திபாரமாகும். அந்த அஸ்திபாரத்தை பேணிப்பாதுகாத்தால்தான், தாயகம் நம்முடன் நம்பிக்கைமிக்க உறவில் நீடிக்கும். இந்த உறவில் தொய்வுநிலை ஏற்பட்டால் அதன் பின்னர் புலம்பெயர் செயற்பாடுகளுக்குப் பெறுமதியில்லாது போய்விடும்.

கடந்த பதினைந்து வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு விடயங்களை ஆராய்ந்ததன் அடிப்படையிலும் – அதே வேளை, தனிப்பட்டரீதியில் தாயகத்திலும் புலத்திலும் எங்களுக்குள்ள செயற்பாட்டுத் தொடர்புகளின் விளைவாகவுமே இந்த விடயங்களை உங்கள் முன்வைக்கின்றேன்.

இங்கு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் கடின உழைப்பால் மட்டுமே சாத்தியப்படும். அதே வேளை புலம்பெயர் சூழலிலுள்ள பல்வேறு துறைசார் நிபுனர்கள், செயற்பாட்டாளர்கள், அரசியலாளர்கள் அனைவரும் ஒன்றிணையும் போதுதான் நாம் குறிப்பிடும் இலக்கு நோக்கிப் பயணிக்க முடியும். இந்தப் புதிய அமைப்பானது, அவ்வாறானதொரு பயணத்தை நோக்கிச் செல்வதற்கான ஒரு முதல் நகர்வாகும். சிறுதுளி பெரு வெள்ளம் என்பது போல்ரூபவ் இந்த புதிய அமைப்பின் இலக்குடன் தாயகத்தின் மீட்சிக்கான அர்ப்பணிப்புள்ளவர்கள் அனைவரும் கரம் கோர்க்கும் போது, எங்கள் எண்ணம் நிச்சயம் ஈடேறும்.

நாம் தொடர்ந்தும் முயற்சிப்போம். விழ, விழ முயற்சிப்போம். நமது தேச விடுதலைக்காகரூபவ் தங்களை ஆகுதியாக்கியவர்களின் தியாகம் எங்களுக்கு பக்கபலமாக இருக்கும்.

நிமால் விநாயகமூர்த்தி
தலைவர் இடைகால நிர்வாகசபை
அனைத்துலகத் தமிழர் பேரவை
டிசம்பர் 8, 2024

# தமிழீழ விடுதலை வரலாற்றில் டிசம்பர்

## கிழக்கு மாகாணத்தில் முதல் கரும்புலித் தாக்குதல்:

புத்தூர், நவக்கிரி பகுதியிலிருந்து சூரியக்கதிர் என்ற மிகப்பெருமெடுப்பிலான படையெடுப்பை வலிகாமத்தில் மேற்கொண்ட சிங்களப்படையினர் 50 நாட்கள் நடத்திய உக்கிரசமரின் முடிவில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.



ஏறக்குறைய 5.5 இலட்சம் பேரைக் கொண்ட வலிகாமத்தில் ஒட்டுமொத்தமான சனத்தொகையும் முற்று முழுதாக வெளியேறிய நிலையில் வெறும் கட்டிடங்களுக்கு மத்தியில் 05.12.1995 அன்று சிங்களப்படை அமைச்சர் அநுருத்த ரத்வத்தை சிங்கக் கொடியை ஏற்றிய ஒரு சில மணிநேரத்தில் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் சிங்களச் சிறப்பு அதிரடிப் படையின் முகாம் மீது மேஜர் ரங்கன் கரும்புலித் தாக்குதலை நிகழ்த்தி சிங்களத்தின் ஆக்கிரமிப்பிற்கு பதிலடி கொடுத்தார்.




## தியாகி அப்துல் ரவூ.:.ப் நினைவு நாள்:



ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் 24வயது தமிழ் இளைஞர் அப்துல் ரவூஃப் 15.12.1995 அன்று தீக்குளித்து ஈகைச்சாவடைந்தார். சூரியக்கதிர் யாழ்ப்பாணப் படையெடுப் பின்போது வலிகாமத்தின் ஒட்டுமொத்தமான சனத்தொகையும் முற்று முழுதாக இடம்பெயர்ந்து வெளியேறிய ஒரு முக்கியமா கலத்தில் அவர் இவ் ஈகைச்சாவடைந்தார்.

## எம். ஜி. இராமச்சந்திரன் நினைவு நாள்:

தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த எம்.ஜி இராமசந்திரன் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மீது அன்பும் மதிப்பும் வைத்தருந்த ஒரு சிறந்த மனிதர். இவர் புலிகள் இயக்கத்திற்கு பெருந்தொகை நிதியை அளித்து போராட்டத்தை முன்னோக்கித் தள்ள உதவியவர். இவர் 24.12.1987 அன்று உடல்நலக்குறைவு காரணமாக சாவடைந்தார். இவர் நினைவுநாள் தமிழ்நாட்டு மக்களாலும், தமிழீழ மக்களாலும் நினைவுகூரப்படுகின்றது.



## ஜெயசிக்குறுய் எதிர்ச்சமர்:

அனைத்து இராணுவ வளங்களையும் ஒரு முகப்படுத்தி பெரும் நம்பிக்கையுடன் சிங்களம் தொடுத்த பாரிய இராணுவ நடவடிக்கையான ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை 04.12.1998 அன்று கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட யாழ். குடாநாட்டுக்கு தரைப்பாதை அமைக்க 13.05.1997 அன்று ஆரம்பிக்கப்பட்ட இப்பாரிய படையெடுப்பு விடுதலைப் புலிகளின் புயலையொத்த எதிர்த்தாக்குதல்களால் நிலைகுலைந்தது சிங்களப்படைக்கு பலத்த இழப்பையும் வரலாற்றில் பொருந்த இராணுவ அவமானத்தையும் ஜெயசிக்குறுய் பெற்றுக்கொடுத்தது.



## குருநகர், பாசையூர் மகக்ள் படுகொலை:



டீ.பி. விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டம் குருநகர் பாசையூர் மக்கள் குடியிருப்புக்கள் மீது 05.12.1993 அன்று சிறீலங்கா விமாப்படையின் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் சிறுவர்கள் பெண்கள் உட்பட 25 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 70ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

## சாவகச்சேரிப் படுகொலை:

டீ.பி. விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டம் சாவகச்சேரி நகரில் 30.12.1993 அன்று குழுமியிருந்த மக்கள் மீது சிறீலங்கா விமானப்படையின் புக்கார குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் 10ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 50ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.



## மிருசுவில் படுகொலை:

19.12.2001 அன்று சந்திரிகா ஆட்சிக்காலத்தில் தென்மராட்சியின் வடக்குப் பகுதிக்கு தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற ஒன்பது தமிழர்களில் சிறுவன் உட்பட 8ப் பேர் சிங்கள இராணவத்தால் பிடித்துச் செல்லப்பட்டு அடித்தும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 25.12.2001 அன்று இவர்கள் புதைகுழியிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டனர்.





## ஆழிப் பேரழிவு 26.12.2004:



இந்தோனேசிய சுமாத்திராத் தீவின் வடமேல் ஆழ் கடலில் ஏற்பட்ட புவிநடுக்கத்தால் பொங்கியெழுந்த பேரலை இந்து சமுத்திரத்தின் கரையோரப் பிர தேசங்களை தாக்கியது. தென்கிழக்காசிய நாடுகளை தாக்கிய இப்பேரலை 250.676 இற்கு மேற் பட்டோரைக் காவு கொண்டதோடு மிகப்பெரும் பொருள் அழிவையும் ஏற்படுத்தியது. இந்தோனே சியாவில் 184,135 இற்கு மேற்பட்ட உயிரழிவுகள் ஏற்பட்டன. இலங்கைத்தீவில் தமிழீழப் பிரதேசங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத் தியது. உயிரிழந்தோர் 38,195 இற்கு மேற்பட்டோர். உலகையே உலுக்கிய இச்சோக வரலாற்றால் 100க்கும் மேற்பட்ட நாடுகள் நிவாரணங்களை நேரடியா அனுப்பி வைத்தன. சிங்களப் பேரினவாதம் இச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களுக்கு நிவாரணங்கள் முழுமையாகக் கிடைக்காமல் தடை ஏற்படுத்தியதோடு, உலகத் தலைவர்களை நேரடியாகச் சென்று பார்ப்பதற்கும் தடை விதித்தது.


நெய்தல் குடியில் இடியாக வந்த
ஆழிப்பேரலை நினைவுப்பகிர்வு
டிசம்பர் 26, 2004
அலையே...
உன்னைப்போல்
மீண்டும் நாங்கள்
மலையாய் எழுவோம்
அழிப்பதற்காய் அல்ல
அழியாது தழைப்பதற்காய்.